# பிரதிமா
# ஸ்வப்ன வாசவதத்தம்

வடமொழி மூலம் : பாஸ மகாகவி

தமிழாக்கம் : ஜி. ஹரிஹரசாஸ்திரியார்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.ஐ.டி. வளாகம், தரமணி,
சென்னை - 600 113.

# பிரதிமா
# ஸ்வப்ன வாசவதத்தம்

வடமொழி மூலம் : பாஸ மகாகவி

தமிழாக்கம் : ஜி. ஹரிஹரசாஸ்திரியார்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.ஐ.டி. வளாகம், தரமணி,
சென்னை - 600 113.

## BIBLIOGRAPHICAL DATA

| | | |
|---|---|---|
| Title | : | **Prathima**<br>**Swapna Vasavatatham** |
| Author | : | **Pasa Mahakavi** |
| Tamil Translator | : | **Harihara Sasthiriyar** |
| Publisher | : | International Institute of Tamil Studies,<br>C.I.T. Campus, Tharamani,<br>Chennai - 600 113. |
| Publication No. | : | 339 |
| Language | : | Tamil |
| Date of Publication | : | 1999 |
| Edition | : | First |
| Paper Used | : | TNPL 70 GSM Super Printing |
| Size of the book | : | 1/8 Demy |
| Printing types | : | 10 Points |
| No. of pages | : | viii + 249 |
| Price | : | Rs. 55/- |
| No. of Copies | : | 1,200 |
| Printed by | : | Pavai Printers (P) Ltd.,<br>142, J.J.K. Road,<br>Royapettah, Chennai - 600 014. |
| Subject | : | Drama |

தமிழ் வளர்ச்சி இயக்ககத்தின் சிறந்த மொழி பெயர்ப்பு நூல்கள் வெளியிடும் திட்டத்தின்கீழ் நிதியுதவி பெற்று இந்நூல் வெளிவருகிறது.

**முனைவர் ச.சு. இராமர் இளங்கோ**
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600113.

# அணிந்துரை

தொன்மையான வடமொழி நாடக ஆசிரியர்களுள் பாச மகாகவி குறிப்பிடத்தக்கவர். வடமொழி இலக்கியப் படைப்பாளர்கள் மூன்று நாடகங்களை எழுதுவதை மரபாகக் கொண்டிருந்தனர். அம்மரபை முறித்து மிகுதியாக நாடகங்களை எழுதியவர் பாச மகாகவி. அசுவ கோசுக்குப் பிற்பட்டவர். காளிதாசருக்கு முற்பட்டவர்.

மகாகவி காளிதாசர், பாணப்பட்டர், சாரதானயர், போஜர் முதலிய வடமொழி இலக்கியப் படைப்பாளர்கள் பாசமகாகவியைப் போற்றி எழுதியுள்ளனர்.

இங்ஙனம் வடமொழி இலக்கியப் படைப்பாளர்களால் போற்றிப் புகழப்படும் பாச மகாகவியின் நாடகங்கள் 1911 வரை கிடைக்கவில்லை. திருவனந்தபுரத்தில் உள்ள சுவடிப்புலத்தில் பணி யாற்றிய கணபதி சாத்திரியார் பாச மகாகவி எழுதிய 13 நாடகங்களை முதன் முதலாக 1912-இல் பதிப்பித்தார்.

ஆய்வாளர்களுள் ஒருசாரார் இவர் பதிப்பித்த 13 நாடகங்களும் பாச மகாகவியால் எழுதப்பட்டவை என்றும் பிறிதொருசாரார் இல்லை என்றும் வாதிடுவர்.

ஆயினும் இந்நாடகங்களில் அமைந்துள்ள மொழிநடை, சொல் வளம், கற்பனைத் திறன், நாடக ஆக்கம் முதலியவற்றைக் கொண்டு இப்பதின்மூன்று நாடகங்களையும் பாச மகாகவி எழுதினார் என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

கி.பி. 10ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வடமொழி நாடக ஆசிரியரான ராஜசேகர் இந்நாடகச் சிறப்பினை, ''பாஸ மகா கவியின் நாடகங்களை நெருப்பில் இட்டபோது 'ஸ்வப்ன வாசவதத்தம்' என்ற நாடகம் மட்டும் நெருப்பில் எரியாமல் இருந்தது'' என்று புகழ்ந்துள்ளார்.

பாச மகாகவி எழுதிய பதின்மூன்று நாடகங்களையும் நாடக ஆய்வாளர்கள் ஏழுவகையாகப் பிரிப்பர். அவை வருமாறு:

**1) பரிபூரணம்**

குறைந்தது ஐந்து அங்கங்களைக் கொண்ட நாடகம் 'பரிபூரணம்' எனப்படும். அபிசேகம், பாலசரிதம், அவிமாரகம், சொப்னவாசவதத்தம், பிரதிமா ஆகியன.

**2) பிரகரணம்**

சாருதத்தம்

**3) ஸமவாகரம்**

**4) சிஹமிருகம்**

பிரதிஜ்ஞா யெகந்தராயணம்

**5) உத்ஸ்ரிஷ்டி காங்கங்கள்**

கர்ணபாரம், துதககடாத்கஜம், ஊருபங்கம்

**6) வீதி**

தூது வாக்கியம்

**7) வியா யோகம்**

மத்தியம வியாயோகம்

**I) பிரதிமா**

தொன்மைக் காலம் முதல் இக்காலம் வரை இந்தியாவில் தோன்றிய மாபாரதம், இராமாயணம் ஆகிய இரு இதிகாசங்களும் இலக்கிய வாணர்களைக் கவர்ந்து புதிய நூல்களைப் படைக்க வழி வகுத்துள்ளன.

பாச மகாகவி இராமாயணத்தைத் தழுவி அபிசேகம், பிரதிமா எனும் இரு நாடகங்களை எழுதினார். இந்நூலில் இடம்பெற்றுள்ள 'பிரதிமா' எனும் நாடகத்தின் கதைப் போக்கு வருமாறு:

தசரதன் ஆணைக்கிணங்க இராமன் காட்டுக்குச் செல்கிறான். கேகய நாட்டில் இருந்து மீண்ட பரதன் அயோத்தி நகருக்கு நுழைவதற்கு முன் அவனுடைய முன்னோர்களைப் போற்றுகின்ற வகையில் உருவாக்கப்பட்ட நினைவு மண்டபத்திற்குச் சென்றான். நினைவு மண்டபத்தில் நுழைந்த பரதன் தன் தந்தை தசரதன் பதுமையைக் கண்டு அதிர்ச்சி அடைகிறான். இதுவே இந்நாடகத்திற்குத் தலைப்பாக்கப்பட்டுள்ளது.

பாச மகாகவி வால்மீகி இராமாயணத்தில் உள்ள அயோத்தியா காண்டம், ஆரண்ய காண்டம் ஆகியவற்றில் கூறியுள்ள செய்திகளில் சில திருத்தங்கள் செய்து நாடகமாக்கியுள்ளார்.

இராமன் தன்னுடைய தந்தையின் நினைவு நாளையொட்டி வழிபாடு செய்யவேண்டும் என்று விரும்புகிறான். அப்போது துறவி வேடம்புனைந்த இராவணன் வருகிறான். இறந்தாரை வழிபாடு செய்யத் 'தங்கமான் சிறந்தது' என்று இராவணன் இராமனிடம் கூற அவ்வாறே இராமன் தங்கமானைப் பிடிக்கச் செல்கிறான். அப்போது இராவணன் சீதையைக்கவர்ந்து செல்கிறான்.

இராவணனும் இராமனும் போருக்கு முன்னரே சந்திக்கின்ற நிகழ்ச்சியை பாச மகாகவி இந்நாடகத்தில் படைத்துள்ளார். கைகேயி இராமனைக் காட்டுக்கு அனுப்பிய தீயவள் என்று இன்றும் கருதுகின்றனர். ஆனால் இந்நாடகத்தில் கைகேயியை நல்லவளாகப் பாச மகாகவி படைத்துள்ளார்.

கைகேயி தசரதன் மீது முனிவர் இட்ட சாபத்தைப் போக்குவதற்காக இராமனைக் காட்டுக்கு அனுப்பியதாகவும் 14 நாட்கள் என்பதற்குப் பதிலாக 14 ஆண்டுகள் என்று தவறுதலாகக் கூறியதாகவும் பரதனிடம் கூறுகிறாள். அன்னை கைகேயியின் கூற்றைக் கேட்ட பரதன் மகிழ்கிறான். அவன் அன்னை கைகேயி நல்லவள் என்று பாராட்டுகின்றான். பரதன் தன் அன்னையர் புடைசூழக் காட்டுக்குச் சென்று இராமனுக்கு அங்கேயே மணிமுடி சூட்டுகிறான். இந்நாடகத்தில் கைகேயி மாசற்றவள் என்பதைப் பாச மகாகவி வலியுறுத்துகிறார்.

## II) ஸ்வப்ன வாசவதத்தம்

பாச மகாகவி எழுதிய பதின்மூன்று நாடகங்களுள் ஸ்வப்ன வாசவதத்தம் ஆறு அங்கங்களைக் கொண்ட நாடகமாகும். உதயணன் வாசவதத்தையின் மேல் கொண்ட அளவற்ற காதலால் அவன் ஆளுகைக்கு உட்பட்ட நாடுகளை இழந்தான். ''இழந்த நாடுகளை உதயணன் மீண்டும் பெற வேண்டும்'' என்ற எண்ணத்தில் அவனுடைய அமைச்சர் யௌகந்தராயணர் ஒரு திட்டத்தை வகுத்தார். வாசவதத்தை, யௌகந்தராயணர் ஆகிய இருவரும் நெருப்பில் கருகி இறந்துவிட்டனர் என்ற பொய்ச் செய்தியினை உதயணனை நம்பச் செய்தார். வாசவதத்தையை இழந்த உதயணன் மகதராசன் மகளான பத்மாவதியை மறுமணம் செய்து கொண்டான். யௌகந்தராயணர் பத்மாவதியிடம் வாசவதத்தை தன்னுடைய தங்கை என்று கூறி அவளிடம் சேர்ப்பித்தார். உதயணன் நாடுகளை மீட்ட பின்னர் நெருப்பில் இறந்துவிட்டதாகக் கருதப்பட்ட வாசவதத்தையும் யௌகந்தராயணரும் உதயணன் முன் வந்தனர். அவர்களைக் கண்ட உதயணன் மகிழ்ந்தான். இவ்வாறு இந்நாடகம் இன்பியலாக முடிவடைகிறது.

இவ்விரு நாடகங்களையும் வடமொழியில் இருந்து தமிழில் மொழி பெயர்ப்புச் செய்தவர் ஹரிகர சாத்திரியார். வடமொழியிலும், தமிழிலும் மிகுந்த புலமையுடைய சிறந்த மொழிபெயர்ப்பாளர் ஹரிகர சாத்திரியார் என்பதை இந்நூலைப் படிப்போர் உணர்வர்.

கலைமகள் காரியாலயம் 1946-இல் இவ்விரு நூல்களையும் வெளியிட்டது. கலைமகள் மொழிபெயர்ப்புப் பணிகள் பாராட்டுக் குரியன. இவ்விரு நாடகங்களையும் மறுபதிப்புச் செய்து வெளியிட அனுமதி அளித்த கலைமகள் காரியாலயத்திற்கு நன்றி.

ஏ.எஸ். பஞ்சாபகேச அய்யர் ஆங்கிலத்தில் எழுதிய "Two Plays of Bhasa" எனும் நூலை 1944-இல் 'குப்புசாமி நாயுடு சன்ஸ்' எனும் வெளியீட்டகம் முதன் முதலில் 'பாசமகாகவியின் இரட்டை நாடகங் கள்' என்ற தலைப்பில் தமிழில் மொழிபெயர்ப்புச் செய்து வெளி யிட்டது. இம்மொழிபெயர்ப்பினைச் செய்தவர் தி.சு. சுவாமிநாத ஐயர். அந்நூலின் முதற் பதிப்பில் ஏ.எஸ். பஞ்சாபகேச ஐயர் பாச மகாகவியைப் பற்றி எழுதிய விரிவான ஆய்வுரை இடம் பெற்றுள்ளது. ஆயின் 1949-இல் ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம் வெளியிட்ட இரண்டா வது பதிப்பில் விரிவான அவ்வாய்வுரை இடம்பெறவில்லை. நாடக ஆய்வாளர்களுக்குப் பயன்தரும் எனக் கருதி இந்நூலின் பின்னிணைப் பில் அவ்வாய்வுரை தரப்பட்டுள்ளது. முதல் பதிப்பைத் தந்துதவிய நாடக ஆய்வறிஞர் கலைமாமணி முனைவர் இரா. குமரவேலன் அவர்களுக்கு நன்றி.

இந்நிறுவன வளர்ச்சியில் ஆக்கமும், ஊக்கமும், காட்டி வரு கின்ற நிறுவனத் தலைவர் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி - பண் பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி - பண் பாடு மற்றும் அறநிலையத் துறைச் செயலாளர் திருமிகு. சு. இராம கிருட்டிணன் இ.ஆ.ப. அவர்களுக்கும் எங்கள் நன்றி.

சிறந்த மொழிபெயர்ப்பு நூல்களுக்கு நிதி உதவி வழங்கும் திட்டத்தில் இந்நூலுக்கு நிதி நல்கிய தமிழ் வளர்ச்சி முன்னாள் இயக் குநர் முனைவர் ச. நாகராசன் அவவர்களுக்கும், இந்நாள் இயக்குநர் முனைவர் ம. இராசேந்திரன் அவர்களுக்கும் நன்றி. இந்நூலினைச் சிறந்த முறையில் அச்சிட்டுத்தந்த பாவை அச்சகத்தார்க்கும், மெய்ப்புத் திருத்திய திருமதி இ. பகவதி அவர்களுக்கும் நன்றி.

**இயக்குநர்**

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | அணிந்துரை | iii |
| 2. | பிரதிமா | 1 |
| 3. | ஸ்வப்ன வாசவதத்தம் | 71 |
| 4. | பாச மகாகவியின் இரட்டை நாடகங்கள் | 119 |

# பிரதிமா நாடகம்

## முதல் அங்கம்

(நாந்தியின் முடிவில் சூத்திரதாரன் பிரவேசிக்கிறான்)

சூத்திர: *(திரைப் பக்கம் திரும்பி)* ஆர்யே, இங்கே வா.

*(நடி வருகிறாள்)*

நடி: ஐயா, இதோ இருக்கிறேன்.

சூத்திர: ஆர்யே, இந்த சரத்காலத்தைப் பற்றியே பாட வேண்டும்.

நடி: ஐயா, அப்படியே ஆகட்டும். *(பாடுகிறாள்)*

சூத்திர: இந்தக் காலத்தில்தான் அன்னப் பறவை நாணல் பூ ஆடை உடுத்தி மணல் திட்டுக்களில் களிப்புடன் ஓடுகிறது.

*(திரைக்குள்)* ஐயா! ஐயா!

சூத்திர: *(காது கொடுத்துக் கேட்டு)* சரி, தெரிந்தது. அரண் மனையில் களிப்புடன் தன் காரியத்தில் விரையும் துவாரபாலிகை போலும்.

*(போகிறார்கள்)*

***(ஸ்தாபனை முற்றிற்று)***

(துவாரபாலிகை வருகிறாள்)

துவார: யார் ஐயா கஞ்சுகி இங்கே இருப்பது?

*(கஞ்சுகி வருகிறான்)*

கஞ்சுகி: அம்மா, இதோ நான் இருக்கிறேன். என்ன வேண்டும்?

துவார: ஐயா, தேவாசுர யுத்தங்களிலும் ரதத்தில் தடையின்றிச் செல்லும் தசரத மன்னர் உத்தரவிடுகிறார். தம் குமாரன் ராமனுக்கு முடிசூட்டி அரசனாக்குவதற்குரிய சாதனங்களை யெல்லாம் விரைவில் சித்தம் செய்ய வேண்டுமென்று கட்டளை யிடுகிறார்.

கஞ்சுகி: அம்மா, மஹாராஜாவின் கட்டளைப்படி எல்லாம் சித்தமாய் விட்டனவே. இதோ பார்: வெண்குடை, சாமரம், வெற்றி முரசு, சிங்காதனம் முதலியவை யெல்லாம் சித்தமாயிருக்கின்றன; தர்ப்பைகளாலும் மலர்களாலும் அலங்கரிக்கப்பெற்ற பொற்குடங்களை நறுநீரால் நிரப்பியுள்ளன. பொற்றேரில் குதிரைகள் பூட்டப்பட்டிருக்கின்றன; மந்திரிகளும் நகரவாசிகளும் வந்துவிட்டனர்; இவ்வெல்லா மங்களத்திற்கும் மங்களம்போல் விளங்கும் வசிஷ்ட பகவானும் வேதியில் அமர்ந்திருக்கின்றனர்.

துவார: அப்படியானால் எல்லாம் நன்றாயிருக்கிறது.

கஞ்சுகி: நிரம்பச் சந்தோஷம்! நம் மன்னர்பிரான் சந்திரனைப்போல் பூமியில் விளங்கும் ராமனை அரசனாக முடிசூட்டி ஜனங்களை மகிழச் செய்தார்.

துவார: ஐயா, ஆனால் மேல் வேண்டுவதை விரைவில் செய்யும்.

கஞ்சுகி: இதோ, வெகு சீக்கிரம் செய்கிறேன்.

*(போகிறான்)*

துவார: *(சுற்றிப் பார்த்து)* ஸம்பவகா, ஸம்பவகா, நீ போய் மஹாராஜாவின் கட்டளைப் புரோகிதரிடம் தெரிவித்து முறைப்படி அவரை அழைத்து வா. *(வேறோரிடம் சென்று)* ஸாரஸிகா, ஸாரஸிகா, நீ நாடக சாலையிற் சென்று சந்தர்ப்பத்துக்கு இசைந்த ஒரு நாடகம் ஆடத் தயாராக இருக்க வேண்டுமென்று நடர்களிடம் சொல். நானும் எல்லாம் செய்தாகிவிட்டதென்று மகாராஜாவிடம் தெரிவிக்கிறேன்.

*(போகிறாள்)*

*(மரவுரியை எடுத்துக்கொண்டு அவதாதிகை வருகிறாள்)*

அவதா: ஆ! கஷ்டம்! விளையாட்டாக இந்த மரவுரியைக் கொண்டு வரும்போதே இவ்வளவு பயமாக இருக்கிறதே. பேராசையால்

பிறர் பொருளைத் திருடுபவர்களுக்கு எவ்வளவு பயம் உண்டாகாது? எனக்கே சிரிப்பு வருகிறது. ஆனால் தனியே இருந்து சிரிப்பதில்லையே இது!

*(பரிவாரங்களுடன் சீதை வருகிறாள்)*

சீதை: (சேடியை நோக்கி) அடி, அவதாதிகையைப் பார்த் தாயா? ஏதோ பயந்தவள்போல் இருக்கிறாள். என்ன காரணமாக இருக்கலாம்?

சேடி: அரசி, வேலைக்காரர் குற்றம் செய்வது சாதாரணம். அவள் ஏதோ தவறு செய்திருக்க வேண்டும்.

சீதை: இல்லை, இல்லை. சிரிக்க விரும்புபவள் போல் இருக்கிறாள்.

அவதா: (அருகிற் சென்று) அரசிக்கு ஜயமுண்டாகட்டும்! ராணி, நான் ஒரு குற்றமும் செய்யவில்லையே.

சீதை: நீ குற்றம் செய்தாய் என்று யார் சொன்னது? அதிருக் கட்டும். அவதாதிகா, உன் இடது கையில் என்ன வைத்துக் கொண் டிருக்கிறாய்?

சேடி: இது மரவுரி.

சீதை: இது எங்கேயிருந்து கிடைத்தது?

அவதா: நாடகசாலையில் அலங்காரப் பொருள்களைக் காக்கும் ஆர்யரேகையிடம், அணிந்து களைந்த அசோகந் தளிர் ஒன்று வேண்டு மென்று கேட்டேன்; அவள் கொடுக்கவில்லை. அவளை ஏமாற்ற இந்த மரவுரியை அவள் அறியாமல் கொண்டுவந்து விட்டேன்.

சீதை: நீ செய்தது பிழையல்லவா? போ; திருப்பிக் கொடுத்துவிடு.

அவதா: விளையாட்டாக அல்லவா கொண்டு வந்தேன்?

சீதை: அடி பேதாய்! இப்படித்தான் கேடு வளர்கிறது. உடனே கொண்டுபோய்க் கொடுத்துவிடு.

அவதா: தங்கள் ஆணைப்படியே செய்கிறேன்.

*(போகத் தொடங்குகிறாள்.)*

**சீதை:** தோழி, வேண்டாம். இங்கே வா.

அவதா: அரசி, இதோ இருக்கிறேன்.

**சீதை:** இந்த மரவுரியை நான் உடுத்துக் கொண்டால் நன்றாக இருக்குமோ?

அவதா: அழகுக்கு எதுவும் இசையும். அரசி, நீங்கள் உடுத்துப் பாருங்கள்.

**சீதை:** அப்படியானால் கொண்டு வா. *(வாங்கி உடுத்துக் கொண்டு)* சகி, நன்றாயிருக்கிறதா? பார்.

அவதா: தங்களுக்கு நன்றாகத்தான் இருக்கிறது. மரவுரி பொன்னாடையாகிவிட்டது.

**சீதை:** *(சேடியைப் பார்த்து)* அடி, நீ ஏன் ஒன்றும் சொல்லவில்லை?

சேடி: நான் சொல்லுவது எதற்கு? இதோ என் மயிர்க் கூச்சல் சொல்லுகிறதே. *(உடம்பு புல்லரிப்பதைக் காட்டுகிறாள்)*

**சீதை:** அடி, கண்ணாடி கொண்டு வா.

**சேடி:** உத்தரவு. *(வெளியிற் சென்று மீண்டு வந்து)* அரசி, இதோ கண்ணாடி.

**சீதை:** *(சேடியின் முகத்தைப் பார்த்து)* கண்ணாடி இருக்கட்டும். நீ ஏதோ சொல்ல விரும்புகிறாய் என்று தோன்றுகிறதே.

சேடி: அரசி, ஆமாம். நான் ஒன்று கேள்விப்பட்டேன். கஞ்சுகி பாலாகி ஐயர், 'அபிஷேகம் அபிஷேகம்' என்று சொல்லுகிறாராம்.

**சீதை:** யாராவது நாட்டிற்கு அரசராகலாம்.

*(வேறொரு சேடி வருகிறாள்.)*

சேடி: அரசி, ஒரு சந்தோஷச் செய்தி.

சீதை: நீ தெரிந்து கொண்டது என்ன?

சேடி: இளவரசருக்குத்தான் பட்டாபிஷேகம்.

சீதை: பிதா சௌக்கியந்தானே?

சேடி: மகாராஜா பட்டாபிஷேகத்தை நடத்தப் போகிறார்.

சீதை: அப்படியா! இரட்டிப்புச் சந்தோஷம். காட்டு மடியை.

சேடி: இதோ பாருங்கள். (மடியைக் காட்டுகிறாள்)

(சீதை தன் அணிகளைக் கழற்றிக் கொடுக்கிறாள்)

சேடி: அரசி, முரசொலி கேட்கிறதல்லவா?

சீதை: ஆமாம், அதுதான்.

சேடி: திடீரென்று ஓசை நின்றுவிட்டதே!

சீதை: பட்டாபிஷேகத்திற்கு வந்த தடை என்ன? ஆமாம். அரண்மனையில் எத்தனையோ காரியங்கள் நேரிடலாம்.

சேடி: அரசி, இளவரசருக்கு அபிஷேகம் செய்துவிட்டு மகாராஜா வனம் போவார் என்று கேள்விப்பட்டேன்.

சீதை: அப்படியானால் அது அபிஷேக நீரன்று; கண்ணீர்தான்.

(ராமர் வருகிறார்.)

ராமன்: பேரிகை முழங்க, பெரியோர்கள் சூழ்ந்து நிற்க, நான் சிங்காதனத்தில் அமர்ந்திருந்தேன். தோளில் வைத்திருந்த குடம் சாய்ந்து தண்ணீர் என் தலையில் விழும் தறுவாயில் மகாராஜா என்னை அழைத்து வேண்டாம் என்று விடுவித்தார். அப்போது ஜனங்கள் என் மனோ தைரியத்தைக் கண்டு திகைத்தார்கள். தந்தையின் சொல்லை மகன் கேட்பதில் ஆச்சரியம் என்ன?

'குழந்தாய்! சற்று இளைப்பாறு' என்று சொல்லி மகாராஜா

என்னை விடுவித்ததால் பெரும்பாரம் நீங்கியதுபோல் என் மனம் ஆறுதல் அடைந்தது. தெய்வச் செயலாக நான் அந்த ராமனாகவே இருக்கிறேன். மகாராஜாவே மகாராஜா; இனிமேல் சீதையைப் போய்ப் பார்க்கிறேன்.

அவதா: அரசி, இளவரசர் வருகிறார்போல் இருக்கிறதே, மரவுரியை மாற்ற வேண்டாமா?

ராமன்: மைதிலி, என்ன செய்கிறாய்?

சீதை: பிராணநாதா, தங்களுக்கு ஜயம் உண்டாகட்டும்.

ராமன்: மைதிலி, உட்கார். (ராமர் உட்காருகிறார்.)

சீதை: என் அன்பர் இஷ்டப்படியே. (உட்காருகிறாள்.)

அவதா: (மெதுவாக) அரசி, இளவரசரின் வேஷம் முன் போலவேதான் இருக்கிறது. நாம் கேள்விப்பட்டது பொய்யாக இருக்க லாமோ?

சீதை: அத்தகையோர் பொய் சொல்லார். அரண்மனையில் எத்தனையோ காரியங்கள் நேரிடலாம்.

ராமன்: மைதிலி, நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?

சீதை: ஒன்றும் இல்லை: இந்தப் பேதை பட்டாபிஷேகம், பட்டாபிஷேகம் என்று சொல்கிறாள்.

ராமன்: உன் ஆசை இன்னதென்று தெரிந்தது. பட்டாபி ஷேகம் உண்மைதான். இன்று மகாராஜா கோசல நாடனைத்தையும் ஒரு குடை கீழாக்கிப் புரோகிதர், அமைச்சர், நகரத்தார் முதலானவர் முன்பாக நான் இளமையிற் பழகிய தமது மடியில் என்னை இருத்தி, 'கோசலையின் கண்மணி ராமா!' என்று தாயின் பேருடன் என்னை அழைத்து 'ராஜ்யத்தை ஏற்றுக்கொள்' என்று கட்டளையிட்டருளினார்.

சீதை: அப்போது தாங்கள் என்ன சொன்னீர்கள்?

ராமன்: மைதிலி, நீ என்ன நினைக்கிறாய்?

*சீதை:* ஒன்றும் பேசாமல் பெருமூச்செறிந்து மகாராஜாவின் பாதங்களில் பணிந்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன்.

ராமன்: நீ நினைத்தது சரி. தம்பதிகள் இப்படி ஒரே மனமுடையவராக வாய்ப்பது அருமை. அப்போது நான் அவர் பாதங்களில் பணியவே பணிந்தேன். பிதா மேலும் நான் கீழுமாக இருவரும் கண்ணீரை வடித்தோம். என் கண்ணீரால் அவர் பாதங்களும், அவர் கண்ணீரால் என் சிரமும் ஒருங்கே நனைந்தன.

*சீதை:* பிறகு?

ராமன்: பிறகு அவருடைய நயமொழிகளுக்கு நான் இணங்காததைக் கண்டு கிழத்தன்மையால் சிதைவுண்ட தமது பிராணன் மேல் ஆணையிட்டார்.

*சீதை:* அப்போது?

ராமன்: உடனே லக்ஷ்மணனும் சத்துருக்னனும் அபிஷேகத்திற்காகக் குடத்தை எடுத்தனர். மகாராஜா தாமே ஆனந்தக் கண்ணீர் ததும்ப வெண்குடை பிடித்தார். சரேல் என்று மந்தரை ஓடிவந்து அவர் காதில் ஏதோ மெல்ல உரைத்தாள். - இப்பொழுது நான் அரசன் அல்லன்; இப்பொழுது நான் அரசன் அல்லன்.

*சீதை:* எனக்கு மிகுந்த சந்தோஷம். மகாராஜா மகாராஜாவே! தாங்கள் என் பிராணநாதரே.

ராமன்: மைதிலி, ஏன் உன் மேனியில் ஆபரணம் ஒன்றையும் காணவில்லை.

*சீதை:* ஒன்றும் இல்லை; அணிந்துகொள்ளவில்லை; அவ்வளவுதான்.

ராமன்: அப்படியல்ல; ஆபரணங்களை நீ இப்பொழுது தான் கழற்றியிருக்கிறாய். ஏனென்றால் காதணிகள் கழற்றப்பட்டதால் அங்குள்ள சுருக்குகள் இன்னும் நீங்கவில்லை. வளைகள் கழற்றப்பட்டதால் கைகள் வெளிறியிருக்கின்றன. அணிகளின் கனத்தால் உன் அங்கங்களிற் பதிந்த தடங்கள் இன்னும் மறைந்து சமமாகவில்லை.

**சீதை:** இல்லனவற்றை உள்ளனபோல் வருணிக்க என் அன்பருக்கு மிக்க திறமையுண்டு.

**ராமன்:** அவ்வாறானால் ஆபரணங்களை அணிந்து கொள். நான் கண்ணாடியைக் காட்டுகிறேன். (கண்ணாடியில் சீதையின் பிரதி பிம்பத்தைக் கண்டு) நில்லு! கண்ணாடியிற் காண்பது மரவுரியோ அல்லது சூரிய கிரணங்களோ? உனது இந்த விரதம் விளையாட்டு என்று நீ சிரிப்பதால் தெரிந்தது. (அவதாதிகையை நோக்கி) அவதாதிகா, இது என்ன?

**அவதா:** ஸ்வாமி, ஒன்றும் இல்லை. இசைந்திருக்கிறதா என்று பார்ப்பதற்காக அணிந்து கொண்டதே.

**ராமன்:** மைதிலி, என்ன இது? இக்ஷ்வாகு வமிசத்தரசர் முதுமையில் அணிந்துகொள்ளும் அலங்காரத்தை நீ இப்பொழுதே அணிந்துகொண்டாயே? அது எனக்கு வேண்டும், கொடு.

**சீதை:** போதும், என் பிராணநாதர் அமங்களமாகப் பேசுவது.

**ராமன்:** மைதிலி, ஏன் தடை செய்கிறாய்?

**சீதை:** என் பிராணநாதருக்கு அபிஷேகம் தடைப்பட்டிருக்கும் இந்த வேளையில் இது ஒரு நிமித்தம்போல் தோன்றுகிறது.

**ராமன்:** பரிகாசமாக இந்த மரவுரியைக் கேட்கும்போது, கொடுக்க மறுத்து எனக்குத் துக்கத்தை உண்டு பண்ணாதே. என் உடம்பில் பாதியான நீயே முதலில் அதை உடுத்துக்கொள்ளவில்லையா?

(திரைக்குள்) ''ஐயோ! ஐயோ! மகாராஜா...''

**சீதை:** பிராணநாதா, என்ன இது?

**ராமன்:** (காது கொடுத்துக் கேட்டு) ஆணும் பெண்ணும் ஒரே கூக்குரலாக இருப்பதால் தானே வலியன் என்று நினைத்துத் தெய்வம் வேரைப் பறித்துவிட்டது என்று நினைக்கிறேன். யார் இங்கே? இதென்ன சப்தம் என்று விரைவில் அறிந்து வா.

(கஞ்சுகி வருகிறான்)

கஞ்சுகி: ராஜகுமார, காப்பாற்ற வேண்டும், காப்பாற்ற வேண்டும்!

ராமன்: ஐயா, யாரைக் காப்பாற்ற வேண்டும்?

கஞ்சுகி: மகாராஜாவை.

ராமன்: மகாராஜாவையா! ஒருவர் தோளிலே ஏந்திய இந்தப் பூமியைக் காப்பாற்ற வேண்டுமென்றல்லவோ சொல்லவேண்டும்? இருக்கட்டும், இந்தத் துன்பம் எங்கிருந்து வந்தது?

கஞ்சுகி: உறவினரிடமிருந்துதான்.

ராமன்: உறவினரிடம் இருந்தா? கஷ்டம்! ஆனால் அதற்குப் பரிகாரமே இல்லை. பகைவர் உடலில் மட்டும் அடிப்பர். இனத்தார் உள்ளத்தையே பிளப்பார். உறவினர் என்ற சொல்லால் எனக்கு வெட்கத்தை உண்டுபண்ணுபவர் யார்?

கஞ்சுகி: ராணி கைகேயி!

ராமன்: என் தாயா? ஆனால் இதன் முடிவு நன்மையாகவே இருக்கும்.

கஞ்சுகி: எப்படி?

ராமன்: கேளும். தேவேந்திரனுக்கு ஒப்பான கணவரும், புத்திரனாகிய நானும் இருக்கும்போது என்ன பயன் கருதி அவர் தீங்கு செய்வார்?

கஞ்சுகி: குமார, பெண்ணின் கெடுமதியில் உமது களங்கமற்ற மனத்தைப் புகுத்தப்படாது. அவள் சொல்லால் அன்றோ உமது பட்டாபிஷேகம் தடைப்பட்டது?

ராமன்: ஐயா, அதில் நன்மை உள்ளது.

கஞ்சுகி: எப்படி?

ராமன்: கேளும். முதலாவது, ராஜ்யத்தைத் துறந்து மகாராஜா காட்டிற்குப் போகமாட்டார். பிறகு நான் பிதாவின் சொற்படி நடந்து

முன்போல் குழந்தையாகவே இருப்பேன். புது அரசன் எப்படி இருப் பானோ என்று உலகத்தார் சந்தேகிப்பதற்கு இடமும் இல்லை. மேலும் என் உடன்பிறந்தார்க்கில்லாத பாக்கியத்தை நான் மட்டும் அனுபவித் தேன் என்ற சொல்லும் நிகழாது.

கஞ்சுகி: அவள் தானாகவே ஓடிவந்து, பரதனுக்கு முடிசூட்ட வேண்டும் என்றாள். இது பேராசை ஆகாதோ?

ராமன்: ஐயா, என் மீதுள்ள பக்ஷபாதத்தால் உமக்கு உண்மை விளங்கவில்லை. ஸ்திரீதனமாக வாக்களித்த ராஜ்யத்தை அவர் தம் மகன் பொருட்டு யாசிப்பது பேராசையா? தம்பியின் ராஜ்யத்தை நான் அபகரித்துக் கொள்வது பேராசை இல்லை என்கிறீரா?

கஞ்சுகி: மேலும்...

ராமன்: இனிமேல் என் அன்னையைப் பற்றிக் தூஷணை யைக் கேட்க நான் விரும்பவில்லை. மகாராஜாவின் செய்தியை மட்டும் சொல்லும்.

கஞ்சுகி: அதன்பிறகு மகாராஜா சோகத்தால் பேச முடியாமல் கையால் சைகை காட்டி என்னை இங்கே அனுப்பி மூர்ச்சையானார். அவர் உடனே மூர்ச்சையடைந்தது ஒருவிதம் நல்லதாயிற்றென்றே நினைக்கின்றேன்.

ராமன்: ஆ! மூர்ச்சையாகிவிட்டாரா?

(திரைக்குள்) 'ஆ! மூர்ச்சையாகி விட்டாரா' என்கிறீரா? அரசர் மயக்கமுற்றதைப் பொறுக்க முடியவில்லையானால் தாக்ஷிண்யத்தை விட்டு வில்லைக் கையில் எடும்.

ராமன்: (செவிகொடுத்துக் கேட்டு, எதிரே பார்த்து) அசை வற்ற, தைரியக்கடலான லக்ஷ்மணனைக் கோபமூட்டினது யார்? அவன் கோபாவேசத்தால் என் முன்னே நூறு உருவம் கொண்டவன் போல் வருகிறானே!

(வில்லும் அம்பும் எடுத்துக்கொண்டு லக்ஷ்மணன் வருகிறான்.)

லக்ஷ்மணன்: அரசன் மூர்ச்சையானதைப் பொறுக்க முடியா விட்டால், தாக்ஷிண்யத்தை விட்டு வில்லைக் கையில் எடுங்கள்.

உறவினரிடம் சாந்தமாகவும் பொறுமையுடனும் நடப்பவர் எல்லாம் இப்படித்தான் அவமதிப்படைகின்றனர். உங்களுக்கு இஷ்டமில்லையானால் என்னை விடுங்கள். நாம் பெண்ணால் மோசம் போனோம். அதனால் உலகத்தில் பெண்ணினம் என்பதே இல்லாமல் செய்ய நான் நிச்சயித்திருக்கிறேன்.

**சீதை:** பிராணநாதா! இதென்ன? துக்கித்தற்குரிய வேளையில் லக்ஷ்மணன் வில்லைக் கையில் எடுத்தான்? இவன் துணிவு உலக ஒழுக்கத்துக்கே விரோதமாக இருக்கிறதே.

ராமன்: ஸௌமித்திரி, இதென்ன?

**லக்ஷ்மணன்:** என்ன 'இதென்ன?' என்கிறீர்கள்? முறையாய் வந்த ராஜ்யமும் நமக்கில்லை; அரசரோ சோகத்தில் ஆழ்ந்துவிட்டார். உங்களுக்கு இன்னும் சந்தேகமானால் அது உங்கள் பொறுமையோ, அல்லது மதியீனமோ?

**ராமன்:** ஸௌமித்திரி, ராஜ்யம் நமக்கு இல்லை என்றா போருக்குப் புறப்படுகிறாய்? நான் அரசனானால் என்ன, பரதன் ஆனால் என்ன? உனக்கு இருவரும் சமந்தானே? வில்லாளி என்ற அகந்தை இருக்குமானால் அரசனான பரதனுக்கே வேண்டிய அளவு துணைசெய்.

**லக்ஷ்மணன்:** என்னால் கோபத்தை அடக்க முடியவில்லை. நான் போகிறேன். (புறப்படுகிறான்.)

ராமன்: திரிலோகத்தையும் எரிக்க விரும்புபவன் போலப் புருவங்களைச் சுளித்துக்கொண்டு லக்ஷ்மணன் நீங்கா விதிபோல் நிற்கிறான். ஸௌமித்ரி, இங்கே வா.

**லக்ஷ்மணன்:** அண்ணா, இதோ இருக்கிறேன்.

**ராமன்:** உனக்கு அமைதி உண்டாக வேண்டுமென்று நான் இப்படிச் சொன்னேன். அதிருக்கட்டும். நீ இப்பொழுது சொல்லு: சத்தியத்தைக் காக்கும் தந்தையை நோக்கி வில்லை வளைக்க வேண்டுமா? இல்லை, தன் உரிமைப் பொருளைக் கேட்கும் தாயின் மேல் அம்பு தொடுக்க வேண்டுமா? நிரபராதியான தம்பி பரதனைக் கொலைபுரிய வேண்டுமா? இம்மூன்று பாதகங்களில் உனக்கு எது பிடித்தது?

**லக்ஷ்மணன்:** (கண்ணீர் பெருக) அந்தோ! அறியாமல் அன்றோ என்னைப் பழிக்கிறீர்கள்? நீங்கள் பதினான்கு வருஷம் வனவாசம் செய்யவேண்டுமாம்! அந்தப் பெருந்துயரை நினைக்கும்போது எனக்கு ராஜ்யத்தில் சிந்தையே இல்லை.

**ராமன்:** சரி. இதனால்தான் என் பிதா மயக்கமுற்றார். கஷ்டம்! அவரது அதைரியம் வெளிப்பட்டது. மைதிலி, மங்களத்தைக் கருதி அவதாதிகை கொடுத்த மரவுரியைக் கொண்டுவா. எந்த அரசனும் செய்யாத தவத்தை நான் இப்பொழுது செய்கிறேன்.

**சீதை:** பிராணநாதா, ஏற்றுக்கொள்ளுங்கள்.

ராமன்: மைதிலி, நீ என்ன தீர்மானித்தாய்?

**சீதை:** இல்லறத் துணையன்றோ நான்?

ராமன்: நான் தனியாகவே போக நினைக்கிறேன்.

**சீதை:** அதனால்தான் நான் பின்தொடரப் போகிறேன்.

ராமன்: வனத்திலன்றோ வசிக்கவேண்டும்?

**சீதை:** அதுதான் எனக்கு அரண்மனை.

ராமன்: தாய் தந்தையர்க்குப் பணிவிடை செய்ய வேண்டும்.

**சீதை:** அவர்கள் பொருட்டன்றோ நான் கடவுளை வழிபடுகிறேன்.

ராமன்: லக்ஷ்மணா, இவளை வராமல் தடுத்துவிடு.

**லக்ஷ்மணன்:** அண்ணா, இது இப்பெரியாளைப் புகழ்தற்குரிய சமயமாயிருக்க, நான் தடுக்க விரும்பவில்லை. சந்திரன் ராகுவால் துன்புறும்போது தாரை என்னும் மனைவி அவனைப் பின்தொடருகிறாள். காட்டு மரம் விழும்போது கொடியும் கூடவே பூமியில் விழுகிறது. சேற்றில் ஆழ்ந்த களிற்றைப் பிடி கை விடுவதில்லை. அதனால் இப்பெரியாள் உம்முடன் வந்து தவம் புரியட்டுமே! பெண்களுக்குக் கணவனன்றி வேறு துணை ஏது?

(சேடி வருகிறாள்.)

சேடி: அரசிக்கு ஜயமுண்டாகட்டும், நாடகசாலையில் அணிகலன்கள் காக்கும் ஆர்யரேகை தொழுது, ''அவதாதிகை நாடக சாலையிலிருந்து ஒரு மரவுரியைப் பலாத்காரமாய் எடுத்துக்கொண்டு போய்விட்டாள். இது புதிதான மரவுரி; யாரும் உடுத்தாதது. அவசிய மாயின் இதைப் பெற்றுக்கொள்ள வேணும்'' என்று தொழுது விஞ்ஞா பனம் செய்கிறாள்.

***ராமன்:*** அம்மா, என்னிடம் கொடு. இவளுக்கு மரவுரி கிடைத்தாய் விட்டது.

சேடி: ஸ்வாமி, பெற்றுக்கொள்ள வேணும்.

(கொடுத்துவிட்டுப் போகிறாள். ராமர் வாங்கி உடுத்துக் கொள்ளுகிறார்.)

**லக்ஷ்மணன்:** அண்ணா, உடுப்பன, அணிவன முதலிய எல்லா வற்றிலும் எனக்குப் பாதி கொடுத்து வரும் தாங்கள் இந்த மரவுரி விஷ யத்தில் மட்டும் என்னுடன் ஏன் மாறுபடுகிறீர்கள்?

**ராமன்:** மைதிலி! இவனை விலக்கு.

**சீதை:** ஸௌமித்திரி! சும்மா இரேன்.

**லக்ஷ்மணன்:** அன்னையே, அண்ணாவின் பாத சேவையை நீங்கள் மட்டும் செய்ய விரும்புகிறீர்களோ? அதற்கு நான் சம்மதியேன். தொண்டு செய்ய உங்களுக்கு அவரது வலது காலும், எனக்கு அவரது இடது காலும் ஆகட்டும்.

**சீதை:** பிராணநாதா, தயை புரியவேண்டும். லக்ஷ்மணன் மிகவும் வருந்துகிறானே.

**ராமன்:** லக்ஷ்மணா, மரவுரி என்பது தவப்போருக்கு அணியும் கவசம்; ஒழுக்கமாகிய யானையை அடக்கியாளும் அங்குசம்; பொறி களாகிற குதிரைகளை நெறியில் நிறுத்தும் கடிவாளம்; தர்மமாகிற ரதத்தை நடத்தும் சாரதி. இதோ பெற்றுக் கொள்.

***லக்ஷ்மணன்:*** அண்ணா, தங்கள் அநுக்கிரகம்.

(வாங்கி உடுத்துக் கொள்கிறான்.)

**ராமன்:** *ஆ! நகரத்தார் செய்தி அறிந்து வீதியில் வந்து நெருங்கி விட்டார்களே. விலகுங்கள், ஐயோ, விலகுங்கள்.*

**லக்ஷ்மணன்:** *அண்ணா, நான் முந்தி நடக்கிறேன். விலகுங்கள்!*

**ராமன்:** மைதிலி, முகமூடியை நீக்கிவிடு.

**சீதை:** *அன்பர் உத்தரவு! (நீக்குகிறாள்.)*

**ராமன்:** *ஓ நகரவாசிகளே! கேளுங்கள்: கண்களில் நீர் ததும்பும் நீங்கள் இப்பொழுது அச்சமின்றி என் மனைவியைப் பார்க்கலாம். ஏனெனில் வேள்வியிலும் விவாகத்திலும் துக்கத்திலும் காட்டிலும் பிறர் மனைவியைப் புருஷர் பார்ப்பது குற்றமன்று.*

*(கஞ்சுகி வருகிறான்.)*

**கஞ்சுகி:** குமார, கூடாது. போகக்கூடாது. நீ மனைவியுடன் காட்டிற்குச் செல்வதையும், சோதர வாஞ்சையால் லக்ஷ்மணன் உன்னைப் பின்பற்றுவதையும் மகாராஜா கேள்வியுற்றுச் சோகத்தால் தரையில் புரண்டு உடம்பெல்லாம் புழுதிபடியத் தளர்ந்த காட்டானை போல இதோ எழுந்து வருகிறார்.

**லக்ஷ்மணன்:** *அண்ணா, மரவுரி உடுத்து வனவாசம் செய்யும் நாம் யாரைப் பார்க்கவேணும்?*

**ராமன்:** இங்கே அவரைத் தலைவணங்கிய சுவட்டை, நாம் வனம் சென்ற பிறகு அவர் பார்த்துக்கொள்ளட்டும்.

*(எல்லோரும் போகிறார்கள்.)*

முதல் அங்கம் முற்றிற்று.

# இரண்டாம் அங்கம்

(கஞ்சுகி வருகிறான்)

கஞ்சுகி: வாயில் காப்பவர்களே, நீங்கள் அவரவர்களுடைய இடங்களில் உஷாராய் நின்று கொள்ளுங்கள்.

(துவாரபாலிகை வருகிறாள்.)

துவார: ஐயா, என்ன இது?

கஞ்சுகி: தாம் அளித்த வாக்கைக் காப்பதில் கருத்துடைய இந்த அரசர் வனம் செல்லும் ராமனைத் தடுப்பதற்கு இயலாதவராய், மகனைப் பிரிந்த சோகாக்கினியால் மனம் புழுங்கி, பித்தர்போல் வாயில் வந்தபடி புலம்பிக்கொண்டு சமுத்திர கிருகத்தில் படுத்திருக் கிறார். இவர் பிரளயகாலம் அணுகும்போது அசையும் மேருமலை போலும், வறண்டு உலரும் எல்லையில்லாக் கடல்போலும், மாலை வேளையில் விம்பத்தால் மட்டும் காணப்படும் கதிரவன் போலும் கடுந்துயரால் உள்ளமும் உடம்பும் உடைந்திருக்கிறார்.

துவார: ஐயோ! அரசரும் இந்த நிலைமையை அடைந்து விட்டாரே!

கஞ்சுகி: சரி, நீ போ.

துவார: ஐயா, அப்படியே.

(போகிறாள்.)

கஞ்சுகி: (எங்கும் பார்த்து) என்ன கஷ்டகாலம்! ராமன் சென்ற நாள் முதல் இந்த அயோத்தி நகரம் பாழடைந்ததுபோல் தோன்று கிறதே. யானைகள் உணவில் ஆசை ஒழிந்து அசைவற்றிருக்கின்றன. குதிரைகள் கனைத்தலை மறைந்து கண்ணீர் வடிக்கின்றன. குழந்தை களும் முதியோரும் பெண்டிருமான நகரவாசிகள் அனைவரும் உணவை மறந்து வாடிய முகத்துடன் ஓலமிட்டு அரற்றிக்கொண்டு, ராமன் தம்பியோடும் மனைவியோடும் வனம் சென்ற வழியையே நோக்கி நிற்கிறார்கள்.

நான் அரசரிடம் போகிறேன். (சுற்றி நடந்து, நோக்கி) இதோ மகாராணி கோசலையும் சுமித்திரையும் புதல்வரைப் பிரிந்த பெருஞ் சோகத்தை அடக்கிக் கொண்டு அரசருக்கு ஆறுதல் கூறுகிறார்கள். இந்த மன்னர் நிலைமை எத்தனை பரிதாபமாயிருக்கிறது! எழுந்து எழுந்து கீழே விழுகிறார். ஆ! ஆ! என்று உரைத்து அலறிக்கொண்டு ராமன் சென்ற வழியையே மீண்டும் மீண்டும் பார்க்கிறார். (போகிறான்.)

(முன் கூறியபடி அரசனும் அரசிகளும் வருகிறார்கள்.)

அரசன்: ஆ! அன்பே! ராமா! உலகத்தின் கண்மணியே! ஆ! அன்பார்ந்த லக்ஷ்மணா! என் அழகனே! ஆ! ஜானகி! கற்புடை மாதர்க்கணியே! ஆ! என்ன துன்பம்! என் குழந்தைகள் வனம் சென்று விட்டார்களே!

ஆச்சரியம்! தமையன் மேலுள்ள அன்பினால் தந்தையின் பக்ஷத்தையும் மறந்த லக்ஷ்மணனை நான் பார்க்க விரும்புகிறேன். கண்ணே வைதேகி! ராமன் என்னை உபேக்ஷித்தான். லக்ஷ்மணனும் வெறுத்தான். உலகத்தில் அபகீர்த்திக்கு இருப்பிடமான என்னை நீயும் தள்ளிவிட்டாயோ!

குமாரா! ராமா! அன்புள்ள லக்ஷ்மணா! கண்ணே! ஜானகி! மைந்தர்களே! எனக்கு விடை கூறுங்கள். ஐயோ! எல்லாம் சூனியமாக இருக்கிறதே! ஒருவரும் ஏன் என்று கேட்கவில்லையே!

கோசலையின் செல்வமே! நீ எங்கே சென்றாய்? மெய்யனே! சினத்தை வென்றோனே! பொறுமை நிலையே! புவனத்தின் களிப்பே! தாய் தந்தையரின் பணிவிடையில் ஆர்வமுடையோய்! எனக்கு மறுமொழி சொல்லாய்.

ஆ! எல்லோர் கண்ணும் உள்ளமும் களிப்படையும் ராமன் எங்கே? என் கருத்தறிந்து நடக்கும் ராமன் எங்கே? துன்புற்றோருக்கு இரங்குபவன் எங்கே? ராஜ பதவியையும் புல்லென மதித்தவன் எங்கே? குழந்தாய் ராமா! வயசு முதிர்ந்த தந்தையைக் கைவிட்டு உனக்குப் பொருந்தாத தவத்தை மேற்கொள்ளுவதால் என்ன பயனை அடையப்போகிறாய்.

அந்தோ! என்ன துன்பம்! சூரியனைப்போல் ராமன் போய் விட்டான். சூரியனுடனே செல்லும் பகல்போல் லக்ஷ்மணனும் ராமனைப் பின் தொடர்ந்தான். சூரியனும் பகலும் மறையுங்கால் காணாத

நிழல்போல் சீதையும் மறைந்துவிட்டாள். (ஆகாயத்தை நோக்கி) ஓ! கொடிய தெய்வமே! நீ என்னை மலடனாகவும், ராமனை வேறொரு மன்னன் புதல்வனாகவும், கைகேயியைக் காட்டுப் புலியாகவும் ஏன் படைத்தாயில்லை.

கோசலை: (அழுதுகொண்டு) நாதா, இப்படி மிக நொந்து மனத்தைப் புண்படுத்தியது போதும். உங்கள் வாய்மை நிறைவேறிய வுடன் குழந்தைகள் வந்து விடுவார்கள்.

அரசன்: யார் அம்மா நீ? தெரியவில்லையே!

கோசலை: நான்தான், அன்பிற்கு இடமாகாத பிள்ளையைப் பெற்றவள்.

அரசன்: என்ன, என்ன! எல்லோர் கண்களும் மனமும் களிப்படையும் ராமனைப் பெற்ற கோசலையா?

கோசலை: அதிருஷ்டம் கெட்ட அவள்தான்.

அரசன்: கோசலா, நீ சாரமுடையவளே, நீயல்லவா ராமனைக் கர்ப்பத்தில் தரித்தவள்? வயசு முதிர்ந்து, புலன்கள் தளர்ந்த எனக்குத் தீப்போல் படர்ந்தெரியும் சோகம் தாங்க முடியவில்லை. (சுமித்திரையை நோக்கி) இவள் யார்?

கோசலை: நாதா, குழந்தை லக்ஷ்மணன்... (என்று பாதி சொல்லும்போது)

அரசன்: (சரேலென்று எழுந்து) எங்கே லக்ஷ்மணன்? அவனைக் காணவில்லையே! ஐயோ! கஷ்டம்!

(அரசிகள் பரபரப்புடன் எழுந்து
அரசனைத் தாங்குகிறார்கள்.)

கோசலை: நாதா, இவள், குழந்தை லக்ஷ்மணனுடைய தாய் சுமித்திரையென்று சொல்ல வந்தேன்.

அரசன்: சுமித்திரையே, உன் பிள்ளை ஒருவன்தான் நல்ல பிள்ளை. அவனன்றோ ரகுவம்சத்திற்குச் சிறந்த ராமனைக் காட்டில் இரவும் பகலும் நிழல் போல் தொடருகிறான்?

(கஞ்சுகி வருகிறான்.)

கஞ்சுகி: அரசருக்கு ஜயமுண்டாகட்டும்! இதோ சுமந்திரர் வந்திருக்கிறார்.

அரசன்: (திடீரென்று எழுந்து சந்தோஷத்துடன்) ராமனுடனா?

கஞ்சுகி: இல்லை; தேருடன்

அரசன்: எப்படி? தேருடன் மட்டுமா?

(மயக்கமுற்று விழுகிறார்.)

அரசிகள்: நாதா, ஆறுதல் அடையுங்கள். ஆறுதல் அடையுங்கள். (உடம்பைத் தடவுகிறார்கள்.)

கஞ்சுகி: இவரைப் போன்ற பெரியோர்களுக்கும் இவ்விதம் துன்பம் நேரிடுவதால் தலைவிதி தடுக்கத்தக்கதன்று என்பது தெளிவு. அரசர் பெரும! ஆறுதல் அடையுங்கள். ஆறுதல் அடையுங்கள்.

அரசன்: (சற்று மூர்ச்சை தெளிந்து) பாலாகி, சுமந்திரர் தனியாகவா வந்திருக்கிறார்?

கஞ்சுகி: ஸ்வாமி, ஆமாம்.

அரசன்: கஷ்டம்! ரதம் சூன்யமாய் வந்ததாயின் என் ஆசையும் உடைந்தது. என்னை அழைத்து வரக் காலன் அனுப்பிய ரதமே இது. அவ்வாறாயின் அவரை விரைவில் அழைத்து வா.

கஞ்சுகி: உத்தரவு.

(போகிறான்.)

அரசன்: காட்டில் தடாகத்திற் படிந்து வீசும் காற்றும் அங்கே சஞ்சரிக்கும் ராமனை இஷ்டம்போல் பரிசித்துப் பேறடைகின்றது.

(சுமந்திரர் வருகிறார்.)

சுமந்திரர்: (எங்கும் நோக்கி துக்கத்துடன்) ராமன் மீதுள்ள அன்பால் இந்த ஏவலாளர் கண்ணீர் வடித்துக் கண்கலங்கி, கவலையால் நெஞ்சு நைந்து, சோகத்தால் உடல் தளர்ந்து, தம் கடமைகளை மறந்து, வருந்தி அரற்றும் அரசனைப் பழிக்கின்றனர். (அருகிற் சென்று) அரசருக்கு ஜயமுண்டாகட்டும்.

அரசன்: என் சோதரர் போன்ற சுமந்திரரே, என் மூத்த மகன் ராமன் எங்கே? இல்லை. நான் சொன்னதும் சரியில்லை. அன்பிற்குரிய வரே, உங்கள் மூத்த மகன் ராமன் எங்கே? பெரியோரிடத்து நிலைத்த அன்புடைய விதேக அரசன் மகள் சீதை எங்கே? மகன் லக்ஷ்மணன் எங்கே? உலகனைத்தையும் அளப்பரிய துக்கத்தில் ஆழ்த்திச் சாகும் தறுவாயில் இருக்கும் இந்தப் பாவியான தந்தையிடம் தெரிவிக்க அவர்கள் ஒன்றும் சொல்லவில்லையா?

சுமந்திரர்: அரசர் பெருமானே, இப்படி அமங்களமாகப் பேசுவது போதும். அவர்கள் இதோ தாமதமின்றி வந்து விடுவார்கள்.

அரசன்: உண்மைதான். நான் சொன்னது சரியன்று. இது அத்தவசி களுக்கு இசைந்த வார்த்தையன்று. அப்படியானால் சொல்லும். தவசி களின் தவம் குறைவின்றி நிறைவேறுகிறதா? வைதேகி கானகத்தில் விரும்பியபடி உலாவித் துன்பமின்றி இருக்கிறாளா?

சுமந்திரர்: இருக்கிறாள்.

அரசர்: சுமந்திரரே, சிறு பெண்ணாயினும் மரவுரியுடுத்து முதிர்ந்த சீலத்துடன் கணவனுக்கு இல்லறத்தில் துணை புரியும் சீதை எங்களுக்கும் அரசருக்கும் தெரிவிக்கும்படி ஒன்றும் சொல்லவில்லையா?

சுமந்திரர்: இல்லை, இல்லை.

அரசன்: செவிக்கு இன்னமுதாய், என் மனநோய்க்கு மருந்து மான அவர்கள் நாமங்களை உரைத்துச் செய்தி சொல்லும்.

சுமந்திரர்: உத்தரவு. சிரஞ்சீவி ராமன்.

அரசன்: இதோ ராமன், பெயரைக் கேட்டதும் அவனைப் பரிசித்தது போலாயிற்று. பிறகு?

சுமந்திரர்: சிரஞ்சீவி லக்ஷ்மணன்.

அரசன்: இதோ லக்ஷ்மணன்; பிறகு?

சுமந்திரர்: ஜனக மகாராஜன் மகள் சௌபாக்கியவதி சீதை.

**அரசன்:** இதோ வைதேகி! ராமன், லக்ஷ்மணன், வைதேகி என்ற முறை சரியில்லையே!

**சுமந்திரர்:** அவ்வாறாயின் எது சரியானது?

**அரசன்:** ராமன், வைதேகி - லக்ஷ்மணன் என்று சொல்லும். பேர் சொல்லும்போதும் ராம லக்ஷ்மணர்களுடைய நடுவிலேயே சீதை இருக்கட்டும். அபாயம் நிறைந்தது அரணியம். அவர்கள் நடுவில் இருந்தாலன்றோ அவள் காக்கப்படுவாள்?

**சுமந்திரர்:** உத்தரவு; சிரஞ்சீவி ராமன்.

**அரசன்:** இதோ ராமன்!

**சுமந்திரர்:** சௌபாக்கியவதி ஜானகி.

**அரசன்:** இதோ வைதேகி!

**சுமந்திரர்:** சிரஞ்சீவி லக்ஷ்மணன்.

**அரசன்:** இதோ லக்ஷ்மணன். ராமா! வைதேகி! லக்ஷ்மணா! குழந்தைகளே! என்னைத் தழுவிக் கொள்ளுங்கள். ராமனை ஒருமுறை நேரில் கண்டால் அல்லது மெய்யுறத் தீண்டினால், இறந்தவன் அமுதால் ஜீவிப்பதுபோல் நான் உயிர்தரிப்பேன் என்று நினைக்கிறேன்.

**சுமந்திரர்:** சிருங்கிபேரம் சென்றவுடன் தேரிலிருந்து இறங்கி அயோத்தியை நோக்கி அரசர் பெருமானைத் தலைகுனிந்து வணங்கி விஞ்ஞாபனம் செய்யத் தொடங்கினார்கள். ஆனால் ஏதோ ஒன்றை வெகுநேரம் எண்ணிச் சொல்வதற்கு உதடசையவே கண்களில் கண்ணீர் பெருகித் துக்கத்தால் தொண்டை தடையுற, ஒன்றும் சொல்லாமல் வனம் சென்றார்கள்.

**அரசன்:** ஒன்றும் சொல்லாமலா வனம் சென்றார்கள்?

(முன்னிலும் இருமடங்கு துயரத்துடன் மூர்ச்சித்து விழுகிறார்.)

**சுமந்திரர்:** (பரபரப்புடன்) பாலாகி, அரசர் செயலற்ற நிலையில் இருக்கிறார் என்று அமைச்சர்களிடம் சொல்.

கஞ்சுகி: அப்படியே.

(போகிறான்.)

அரசிகள்: பிராணநாதா! ஆறுதல் அடையுங்கள். ஆறுதல் அடையுங்கள்.

அரசன்: (சற்று மூர்ச்சை தெளிந்து) கோசலையே, என்னை அணைத்துக்கொள். ஒளியிழந்த கண்களால் என்னால் பார்க்க முடிய வில்லை. ராமனிடம் சென்ற என் மனம் இனித் திரும்பாது.

குழந்தாய் ராமா! உத்தம குணசீலனான உன்னை அரசனாக முடிசூட்டிக் குடிகளை மகிழ்வித்து, உன்னைப் போல் உன் சகோதரர் களையும் பாக்கியவான்களாகச் செய் என்று உன்னிடம் சொல்லித் தவ வனம் செல்ல வேண்டுமென்று நான் வெகுநாளாய் எதிர்பார்த்திருந் தேன். ஐயோ! கைகேயியால் என் விருப்பம் எல்லாம் அரைநொடியில் மாறிவிட்டதே.

சுமந்திரரே! கைகேயியிடம் சொல்லும்: ''அடி, ராமன் போய்விட்டான். இனிமேல் சுகமாயிரு. என் பிராணனும் போகிறது. மகனை விரைவில் அழைத்து வா. உன் தீவினை பயன்படட்டும்'' என்று சொல்லும்.

சுமந்திரர்: உத்தரவு.

அரசன்: (ஆகாயத்தை நோக்கி) ஆ! ராமன் செய்தியைக் கேட்டு மனத்தை நீறாக்கிய என்னை ஆறுதல் செய்யப் பிதுருக்கள் வந்திருக் கிறார்கள். யார் அங்கே?

(கஞ்சுகி வருகிறான்.)

கஞ்சுகி: அரசனுக்கு ஜயமுண்டாகுக!

அரசன்: ஜலம் கொண்டு வா.

கஞ்சுகி: உத்தரவு. (வெளியே சென்று மீண்டு வந்து) அரசருக்கு ஜயமுண்டாகுக! இதோ ஜலம்.

அரசன்: (ஆசமனம் செய்து பார்த்து) இதோ இந்திரன் நண்பன் திலீபன். இதோ ரகு மகாராஜர்; இவர்தாம் பூஜ்யரான என் தந்தை

அஜமகாராஜர். நீங்கள் எதற்காக வந்தீர்கள்? ஆமாம். உங்கள் உறை விடத்தில் வாசம் செய்யும் காலம் எனக்கும் வந்துவிட்டது.

ராமா! வைதேகி! லக்ஷ்மணா! நான் இங்கிருந்து பித்ருக் களிடம் போகிறேன். ஓ பிதுருக்களே, இதோ நானும் வந்துவிட்டேன்.

*(மூர்ச்சையுற்று விழுகிறான்.)*

*(கஞ்சுகி திரையை இழுத்து மறைக்கிறான்.)*

எல்லோரும்: ஐயோ மகாராஜா! ஐயோ மகாராஜா!

*(எல்லோரும் போகிறார்கள்.)*

இரண்டாம் அங்கம் முற்றிற்று.

# மூன்றாம் அங்கம்

(சுதாகரன் வருகிறான்.)

சுதா: (பெருக்கித் துடைத்துத் துப்புரவு வேலைகள் எல்லாம் செய்து) அப்பாடா! எஜமான் சம்பவகர் கட்டளைப்படி எல்லா வேலைகளையும் செய்துவிட்டேன். இனிமேல் கொஞ்சம் தலை சாய்க்கிறேன். (உறங்குகிறான்.)

(சம்பவகன் வருகிறான்.)

சம்ப: (சுதாகரனை அணுகி அடித்து) அடா! தடிப்பயலே! ஏன் வேலை ஒன்றும் செய்யவில்லை? (மீண்டும் அடிக்கிறான்.)

சுதா: (எழுந்திருந்து) அடியும்; என்னை அடியும்.

சம்ப: அடித்தால் நீ என்ன செய்வாய்?

சுதா: அதிருஷ்டம் கெட்ட எனக்குக் கார்த்தவீரியனைப் போல் ஆயிரம் கை இல்லையே!

சம்ப: ஆயிரம் கை இருந்தால் என்ன செய்வாய்?

சுதா: உம்மைக் கொல்லுவேன்.

சம்ப: அடா தடிப்பயலே! இனிமேல் உன்னைக் கொன்று தான் விடுவேன். (மீண்டும் மோதுகிறான்.)

சுதா: (அழுதுகொண்டு) எஜமானே, நான் செய்த குற்றம் இன்னதென்று சொல்லக்கூடாதா?

சம்ப: இல்லையா? குற்றம் ஒன்றும் இல்லையா? ராஜகுமாரன் ராமன் அரசு துறந்து வனம் சென்ற துக்கம் ஆற்றாமல் விண்ணுல கெய்திய அரசருடைய பிரதிமையைத் தரிசிக்க இன்று கோசலை மகா

ராணி முதலான அந்தப்புர ஸ்திரீகள் எல்லோரும் இங்கே வருவார்கள் என்று நான் உன்னிடம் சொல்லவில்லையா? இப்போது நீ இங்கே என்ன செய்திருக்கிறாய்?

சுதா: ஐயா, பாருங்கள். மூலஸ்தானத்தில் தூசி பெருக்கித் துடைத்திருக்கிறேன். சுவர்களில் வெள்ளையடித்து ஐந்து விரலாலும் சந்தனம் பதித்திருக்கிறேன். வாயில்களில் பூமாலைகளால் தோரணம் கட்டியிருக்கிறேன். மணல் பரப்பியாகிவிட்டது. இங்கே நான் செய்யாதது என்ன?

சம்ப: அப்படியா! ஆனால் நீ அச்சமின்றிச் செல்லலாம். நான் எல்லாம் செய்தாகி விட்டதென்று அமைச்சரிடம் தெரிவிக்கிறேன்.

(போகிறான்.)

(தேரில் பரதனும் சாரதியும் வருகிறார்கள்.)

பரதன்: (பரபரப்புடன்) சாரதி! நான் மாமனிடம் போய் வெகுநாளாய் விட்டதால் செய்தியொன்றும் தெரியவில்லை. மகாராஜா நோயால் மிகவும் வருந்துகிறார் என்று கேள்விப்பட்டேன். அவருடைய நோய் இன்னதென்று தெரியுமா?

சாரதி: மிக்க மனவருத்தமாகிய நோய்தான்.

பரதன்: வைத்தியர்கள் என்ன சொல்லுகிறார்கள்?

சாரதி: அதைத் தணிக்க வைத்தியர்களா வல்லவர்கள்?

பரதன்: உணவு அருந்துகிறாரா?

சாரதி: ஒன்றும் உண்ணாமல் தரையில் கிடக்கிறார்.

பரதன்: நம்பிக்கைக்கு இடமுண்டா?

சாரதி: கடவுளுக்குத்தான் வெளிச்சம்.

பரதன்: என் நெஞ்சு பதைக்கிறது. தேரை விரைவாக விடு.

சாரதி: உத்தரவு (தேரை ஓட்டுகிறான்.)

பரதன்: (தேர் விரைந்து போவதை நோக்கி) ஆ! தேர் எவ்வளவு விரைந்து ஓடுகிறது? தேர் ஓட்டத்தால் மரங்கள் வேறுபாடின்றி ஓடு கின்றனபோல் தோன்றுகிறது. சுழன்று ஒழுகும் ஆறுபோல் தேரின் உருளையில் மண் பாய்ந்தோடி விழுகிறது. ஆர்க்கால்களைப் பகுத்தறிய முடியவில்லை. சக்கரங்கள் அசைவற்றனபோல் உள்ளன. குதிரையின் குளம்பினின்று எழும் தூள் உயரத் தோன்றுவதன்றிப் பின் தொடர வில்லை.

சாரதி: ஸ்வாமி, மரங்கள் அடர்ந்து காணப்படுகின்றன; அயோத்தி அருகில் வந்துவிட்டது.

பரதன்: உறவினரைக் காண விரும்பும் என் மனத்துக்கு என்ன பரபரப்பு! இப்போதே தந்தையின் பாதங்களில் விழுந்து நான் பணிவ தாகவும், அன்பார்ந்த பிதா என்னைத் தழுவி எடுப்பதாகவும், சகோதரர் என்னை விரைந்து அணுகுவதாகவும், அன்னையர் கண்ணீரால் என்னை நனைப்பதாகவும், சான்றோர், பெரியவர், உயர்ந்தவர் என் றெல்லாம் ஏவலாளர் என்னைச் சேவித்துப் புகழ்வதாகவும், என் வேஷத்தையும் பேச்சையும் லக்ஷ்மணன் பரிகசிப்பதாகவும் நினைக் கிறேன்.

சாரதி: என்ன கஷ்டம்! அரசன் இறந்ததை அறியாமல் பய னற்ற ஆசையுடன் குமாரன் அயோத்திக்குள் செல்லப் போகிறான். நான் உண்மையை அறிந்தும் தெரிவிக்கிறேனில்லை. ஏனெனில், தந்தை உயிர் இழந்ததும், தாய் அரசச் செல்வத்தில் பேராசை கொண் டதும், தமையன் வனம் சென்றதுமான கொடுமைகளை யார்தாம் சொல்லத் துணிவர்?

(சேவகன் வருகிறான்.)

சேவகன்: குமாரனுக்கு ஜயமுண்டாகட்டும்!

பரதன்: பத்ர, சத்துருக்னன் அருகில் வந்தானா?

சேவகன்: ஸ்வாமி, அருகில் வந்துவிட்டார். குமாரர், புரோ கிதர் தெரிவிக்கிறார்...

பரதன்: என்ன தெரிவிக்கிறார்?

சேவகன்: கார்த்திகை இன்னும் ஒரு நாழிகை இருக்கிறது. ரோகிணி வந்தவுடன் தாங்கள் அயோத்திக்குள் வரலாமென்று தெரிவிக்கிறார்.

பரதன்: அப்படியே செய்கிறேன். பெரியோர் சொல்லை நான் ஒருபொழுதும் தட்டியதில்லை. சரி. நீ போ.

சேவகன்: உத்தரவு. (போகிறான்.)

பரதன்: இனி எங்கே சற்று இளைப்பாறலாம்? ஆகட்டும், தெரிந்தது. இதோ மரங்களுக்கிடையில் இருக்கும் தேவாலயத்தில் தங்குகிறேன். இங்கே இளைப்பாறுவதுடன் கடவுளையும் வணங்கலாம். வேறு இடத்தில் சற்று இருந்த பிறகு நகரத்துள் புகவேண்டுமென்பது பெரியோர் வழக்கு. அதனால் தேரை நிறுத்து.

சாரதி: உத்தரவு.

(தேரை நிறுத்துகிறான்)

பரதன் : (தேரினின்று இறங்கி) சாரதி, ஜன நடமாட்டமற்ற இடத்தில் குதிரைகளைக் காலாற விடு.

சாரதி: உத்தரவு. (போகிறான்.)

பரதன்: (சிறிது நடந்து பார்த்து) பூக்களும் பொரியும் சிதறிக் கிடப்பதால் அர்ச்சகர் பூஜை செய்திருப்பது தெரிகிறது. சுவர்களில் ஐந்து விரலாலும் சந்தனம் பதிக்கப்பட்டிருக்கின்றது. வாயில்களில் பூமாலைகளால் தோரணம் கட்டப்பட்டுள்ளன. மணல் பரப்பப்பட்டிருக்கிறது. இதென்ன உவாநாளை ஒட்டிய சிறப்பா? அல்லது ஆஸ்திகத்தின் மிகுதியால் தினந்தோறும் நடைபெறுவதா? எந்தக் கடவுள் இங்கே கோயில்கொண்டிருக்கிறார்? உள்ளே எழுந்தருளியிருக்கும் மூர்த்தியின் அடையாளமான ஆயுதமோ கொடியோ வெளியில் காணப்படவில்லையே. எதுவாயினும் உள்ளே சென்று பார்க்கிறேன். (உட்புகுந்து நோக்கி) ஆ! கற்களில் என்ன ஆச்சரியமான சிற்பப் பணி! உருவங்களில் மெய்ப்பாடுகள் எவ்வளவு அழகாய்த் தோன்றுகின்றன! தெய்வங்களாக இயற்றப்பட்டிருப்பினும் இந்தப் பதுமைகள் மானிட உருவங்கள் என்று நம்பும்படியுள்ளன. இது யாதோ மூர்த்திகளின் கூட்டமாகக் காணப்படுகிறது. யாதாயினும் ஆகட்டும். இந்தப் படிமைகளைக் கண்டவுடன் என் உள்ளம் மகிழ்கின்றது. இவற்றைத் தெய்வங்கள் என்று தலைவணங்கலாம். கிழோர்போல் மந்திரம் சொல்லாது வணங்குவதும் தவறாகாது.

(அர்ச்சகன் வருகிறான்.)

அர்ச்சகன்: நித்திய பூசனை செய்துவிட்டு நான் உண்ணப் போகும் தறுவாயில் இவர் யார், இந்தப் பிரதிமைகளைப் போன்ற உருவுடையவராகக் கோயிலுக்குள்ளே போகிறார்? இருக்கட்டும். உள்ளே சென்று பார்க்கிறேன்.

(உள்ளே செல்லுகிறான்.)

பரதன்: (பிரதிமைகளை நோக்கி) நமஸ்காரம்.

அர்ச்சகன்: தொழக்கூடாது.

பரதன்: கூடாதா? ஏன்? என்னிடத்தில் யாதாயினும் குறைகண்டீரா? அல்லது என்னிலும் உயர்ந்தோர் தொழ வருவதை எதிர்பார்க்கிறீரா? அல்லது உமது பூசை முறையிலுள்ள ஏற்பாடு தானா? ஐயா, எதற்காக விலக்குகிறீர்?

அர்ச்சகன்: நான் உம்மைத் தடுப்பது இந்தக் காரணங்களால் அன்று. இவற்றைத் தெய்வம் என்று நினைத்துப் பிராமணன் வணங்கக் கூடாது என்றுதான். க்ஷத்திரிய அரசருடைய பிரதிமைகள் இவை.

பரதன்: அப்படியா! க்ஷத்திரியர்களா இப்பெரியோர்கள்? இவர்கள் யாவர்?

அர்ச்சகன்: இக்ஷ்வாகு வமிசத்தினர்.

பரதன்: (சந்தோஷத்துடன்) இக்ஷ்வாகு வமிசத்தினரா? அவ்வாறாயின் இவர்கள் அயோத்தி மன்னர்கள்; அசுரர்களை வெல்வதில் தேவர்களுக்குத் துணைபுரிந்தவர்கள்; அளப்பரிய சுகிர்தங்கள் செய்த பிறகு, நாட்டாரும் நகரத்தாரும் புடைசூழ விண்ணுலகம் எய்தியவர்கள்; தோள் வலியால் நிலமுழுதும் ஆண்டவர்கள்! காலன் காத்திருந்து விருப்பத்தை எதிர்பார்த்து நிற்க, பூமியில் நீடுழி காலம் வாழ்ந்தவர்கள்.

சரி, எதிர்பாராமலே எனக்குப் பெறும் பேறு கிடைத்தது. (பிரதிமைகளுள் ஒன்றைக் காட்டி) ஐயா சொல்லும்: இவர் யார்?

அர்ச்சகன்: இவர்தாம் உலகத்திலுள்ள அரும்பொருள் அத்தனையும் தொகுத்து 'விசுவஜித்' என்ற வேள்வி இயற்றி அறச் சுடரை விளங்கச் செய்த திலீபர்.

பரதன்: அறத்தில் ஆர்வமுடைய இப்பெரியோருக்கு நமஸ்காரம். இவர் யார்?

அர்ச்சகன்: இவர் உறங்குமுன்னும், உணர்ந்தவுடனும் பல்லாயிரம் அந்தணர்களைக் கொண்டு 'புண்யாஹ' மந்திரம் ஓதுவித்த ரகு மன்னர்.

பரதன்: அந்தோ! இத்தகைய காவலையும் பொருட்படுத்தாத காலன் வலியன்தான்.* ராஜ்யத்தின் பலனைப் பிராமணருக்கு அளித்த வள்ளலுக்கு நமஸ்காரம். இவர் யார்? சொல்லும்.

அர்ச்சகன்: இவர்தாம் தினந்தோறும் அவபிருத ஸ்நானம் செய்த நிர்மலர். தம் ஆருயிர்க் காதலியைப் பிரிந்த துக்கத்தால் அரச இன்பத்தைத் துறந்த அஜ மகாராஜர்.

பரதன்: உலகெல்லாம் மெச்சும்படி அனுதாபம் கொண்ட இவருக்கு நடஸ்காரம். (தசரதருடைய பிரதிமையை நோக்கிக் கவலையில் ஆழ்ந்து) ஐயா! இப்பெரியார் மீதுள்ள நன்மதிப்பால் மதிமறந்த எனக்கு நீர் சொன்னது நன்றாக விளங்கவில்லை. இன்னும் ஒருமுறை சொல்லும். இவர் யார்?

அர்ச்சகன்: இவர் திலீபர்.

பரதன்: ஆமாம். மஹாராஜாவின் கொள்பாட்டனார். பிறகு?

அர்ச்சகன்: இவர் ரகு.

பரதன்: சரி, மஹாராஜாவின் பாட்டனார். பிறகு?

அர்ச்சகன்: இவர் அஜ மகாராஜர்.

பரதன்: மஹாராஜாவின் பிதா எங்கே? பின்னும் ஒரு தரம் சொல்லும்?

---

★ புண்யாஹ மந்திரம் சொல்வதால் காலன் வாரான் என்பது கருத்துப் போலும்.

அர்ச்சகன்: இவர் திலீபர், இவர் ரகு, இவர் அஜ மகாராஜர்.

பரதன்: ஐயா, தங்களிடம் கேட்க வேண்டுவது ஒன்று உண்டு. ஜீவித்திருப்பவர்களுக்குப் பிரதிமை நடுவதுண்டா?

அர்ச்சகன்: இல்லை, இறந்தவருக்குத்தான்.

பரதன்: சரி. நான் உம்மிடம் விடைபெற்றுக் கொள்கிறேன்.

அர்ச்சகன்: நில்லும்; கன்னியா சுல்கமாக அளித்த வாக்கு நிமித்தம் நாட்டையும் உயிரையும் இழந்த தசரதர் பிரதிமையைக் குறித்து நீர் ஏன் கேட்கவில்லை?

பரதன்: ஐயோ! என் தந்தையே! (பிரக்ஞையற்று விழுகிறான்; பிறகு பிரக்ஞை தெளிந்து) ஆ! நெஞ்சமே! நீ எதை நினைத்துக் கவலைப் பட்டனையோ, அது மெய்யாகவே முடிந்தது. இனி, தந்தை இறந்த செய்தி கேட்டுத் திடமாயிரு. சுல்கம் என்ற இந்த இழிசொல் மெய்யாகி, என்னையும் அது தொடுமாயின், அந்த மறுவைப் போக்க இறப்பதும் சிறந்ததாம். (அர்ச்சகனை நோக்கி) ஐயா!

அர்ச்சகன்: ஐயா என்று இவர் இக்ஷ்வாகு வமிசத்தினரைப் போலவே பேசுகிறார்! ஸ்வாமி தாங்கள் கைகேயின் புத்திரர் பரதர் அல்லவோ?

பரதன்: ஆமாம், நான் தசரதர் புத்திரன் பரதன்; கைகேயின் புத்திரன் அல்லன்.

அர்ச்சகன்: தங்களிடம் விடைபெற்றுக் கொள்கிறேன்.

பரதன்: நில்லும்; எஞ்சியதையும் சொல்லும்.

அர்ச்சகன்: வேறு வழியில்லை; சொல்லுகிறேன் கேளும்; தசரதர் மரணமடைந்தார். ராமர் சீதையோடும் லக்ஷ்மணனோடும் வனம் சென்றது எதற்காக என்று தெரியவில்லை.

பரதன்: எப்படி? அண்ணலும் வனம் சென்றாரா? (மூர்ச்சையாகிறான்.)

**அர்ச்சகன்**: ஸ்வாமி! ஆறுதல் அடையும்.

**பரதன்**: *(மூர்ச்சை தெளிந்து)* அந்தோ! என் தந்தையும் தமையனுமின்றிக் காடுபோல் பாழான இந்த அயோத்திக்கு நான் செல்வது, தாகத்தால் தவிப்போன் நீரற்ற ஆற்றை நோக்கி ஓடுவதுபோல் இருக்கிறது.

ஐயா! விரிவாகக் கேட்டால் என் மனம் தைரியம் அடையும். செய்தியெல்லாம் விடாமல் சொல்லும்.

**அர்ச்சகன்**: ஸ்வாமி! கேளுங்கள்: மகாராஜா ராமரை இளவரசராக முடிசூட்டும்போது, தங்கள் தாய் கைகேயி கூறினாள்....

பரதன்: நில்லும். அந்தத் தீய சுல்கத்தை நினைத்துத் தனது மகன் அரசனாக வேண்டும் என்றாள்; அது கிடைத்த தைரியத்தால் துணிவுற்று, 'மகனே, ராமா, வனம் செல்' என்றாள். மகன் மரவுரி உடுத்ததைக் காணப் பொறாத அரசர் இழிவான சாவுற்றனர். அமைச்சரும் ஏனையோரும் 'சி' என்று என்னைப் பழிக்கின்றனர். அவ்விதந்தான் அன்றோ! *(மயக்கமுற்று விழுகிறான்.)*

*(திரைக்குள்)* விலகுங்கள்!

அர்ச்சகன்: *(பார்த்து)* நல்லவேளை! மகன் மயங்கிக் கிடக்க, ராணிமார் இங்கே வருகின்றனர். தாயின்கை மகனைத் தண்ணீரின்றியே தணிப்பிக்கும் இயல்புடையது.

*(ராணிகளும் சுமந்திரனும் வருகிறார்கள்.)*

சுமந்திரர்: அம்மா! இப்படி வரவேண்டும். இதுதான் இப்போது பிரதிமையாக விளங்கும் நமது அரசரின் உறைவிடம். இது அரண்மனையிலும் காணாத மேன்மையுடன் விளங்குகிறது. பிரயாணிகள் இங்கே ஏவலாளரின் தடையின்றி வந்து தலைவணங்காமல் பார்த்துச் செல்கின்றனர். *(உட்புகுந்து நோக்கி)* அம்மா! நீங்கள் உள்ளே வர வேண்டும். நமது அரசரே இளம் பிராயம் அடைந்தனரோ என்று தோன்றும் ஒருவர் இங்கே படுத்திருக்கிறார்.

அர்ச்சகன்: அன்னியர் என்ற ஐயப்பாடு வேண்டா. இவர் குமாரர் பரதரே. இவரை எடுத்துத் தேற்றுங்கள். *(போகிறான்.)*

ராணிகள்: *(விரைந்தணுகி)* ஆ! குழந்தாய் பரதா!

பரதன்: (மயக்கந் தெளிந்து சுமந்திரரை நோக்கி) ஐயா!

சுமந்திரர்: ஜயம் உண்டாகட்டும். மகா...... (பாதி சொல்லும் போது துக்கத்தால் நைந்து) ஆ! குரலின் ஒற்றுமை! பிரதிமையாக இருக்கும் மகாராஜாவே பேசுகிறாரோ என்று தோன்றுகிறதே!

பரதன்: இப்போது அன்னையரின் நிலைமை எப்படி இருக்கிறது?

ராணிகள்: குழந்தாய், எங்கள் நிலைமை இதுதான்.

(முகமூடியை நீக்குகின்றனர்.)

சுமந்திரர்: ஆமாம். குமாரா, நான் சுமந்திரன்தான்; நெடுங் கால வாழ்வால் விளையும் குற்றமெல்லாம் நிறைந்து, நன்றி மறந்த வனைப்போல் இழிவுற்று அரசர் இறந்த பின்னரும் சூனியமான ரதத் தின் சாரதிபோல் உயிர் வாழ்கிறேன்.

பரதன்: (எழுந்து) தாதா, அன்னைகளைத் தொழுமுறை யைத் தெரிவியுங்கள்.

சுமந்திரர்: அப்படியே; இவர் ராமனுடைய தாய் தேவி கோசலை.

பரதன்: அம்மா, நிரபராதியான நான் வணங்குகிறேன்.

கோசலை: குழந்தாய், மனநோயின்றி இரு.

பரதன்: (தனக்குள்) இந்த ஆசி எனக்கு வசைபோல் தோன்று கிறது. (வெளிப்படையாக) அம்மா, தங்கள் அனுக்கிரகம். பிறகு?

சுமந்திரர்: இவர் லக்ஷ்மணனுடைய தாய், தேவி சுமித்திரை.

பரதன்: அம்மா, லக்ஷ்மணனால் வஞ்சிக்கப்பட்ட நான் வணங்குகிறேன்.

சுமித்திரை: குழந்தாய், புகழ் பெற்றிரு.

பரதன்: அம்மா, அதற்கு முயல்கிறேன். தங்கள் அனுக் கிரகம். பிறகு?

சுமந்திரர்: இவர்தாம் உம்முடைய அன்னை.

பரதன்: (கோபத்துடன் கிளம்பி) ஆ! பாவி! என் அன்னை மார்க்கு நடுவில் நீயும் இருப்பது கங்கைக்கும் யமுனைக்கும் நடுவில் காட்டாறு புறப்பட்டாற்போல் அழகாயிருக்கவில்லை.

கைகேயி: குழந்தாய், நான் என்ன செய்தேன்?

பரதன்: என்ன செய்தேன் என்றா கேட்கிறாய்? எனக்குப் பழி உண்டாயிற்று; அண்ணன் ராமன் மரவுரி உடுத்தான்; லக்ஷ்மணன் காட்டு மிருகங்களோடு சேர்ந்தான்; மக்களிடம் அன்புடைய அன்னை மாரும் சோகத்தில் மூழ்கினர்; சீதை வழி நடந்து களைப்புறுகிறாள்; உன் ஆத்மாவும் தீராப் பழிக்கு இடமாயிற்று. இத்தனை கேடுகளையும் உண்டாக்கியவள் நீயன்றோ?

கோசலை: குழந்தாய், உலக வழக்கை நன்கு அறிந்த நீ ஏன் உன் தாயை வணங்கவில்லை?

பரதன்: தாயையா! அம்மா, நீங்களே என் தாய்; வணங்குகிறேன்.

கோசலை: இல்லை, இல்லை; இவள்தான் உன் தாய்.

பரதன்: முன்பு தாயாக இருந்தாள்; இப்பொழுது இல்லை. அம்மா, பாருங்கள்; நட்பு ஒழிந்து தீய ஒழுக்கத்தைப் பின்பற்றும் புதல் வரை உலகம் புதல்வராக நினைப்பதில்லை. தன் கணவனுக்குக் கேடிழைத்தவள் மகனுக்குத் தாயும் ஆகாள் என்ற ஒரு நியாயத்தை நான் புதிதாக உலகத்தில் நாட்டுகிறேன்.

கைகேயி: குழந்தாய், அரசரது வாய்மையைக் காப்பாற்ற விரும்பி நான் அவ்விதம் கூறினேன்.

பரதன்: எப்படி? எப்படி?

கைகேயி: என் மகன் அரசனாக வேண்டுமென்று.

பரதன்: ஆனால் அந்த என் தமையன் உமக்கு யார்? அவன் என் தந்தையின் ஔரஸ புத்திரனல்லவா? முறைதவறி முடிசூட்டுவது தான் குல வழக்கமோ? அவன் சகோதரர் நேசமற்றவனா? அல்லது ராமன் அரசாள்வதை அமைச்சரும் ஏனையோரும் விரும்பவில்லையா?

கைகேயி: குழந்தாய், சுல்கத்தை விரும்பியவரிடமன்றோ இதைக் கேட்க வேண்டும்?

பரதன்: அரசு துறந்து, மரவுரி உடுத்து, மனைவியுடன் கால்நடையாய் வனம் செல்ல வேண்டுமென்று என் தமையனை ஆக்ஞாபித்தீரே; இதுவும் சுல்கத்தில் கூறப்பட்டுள்ளதோ?

கைகேயி: குழந்தாய், தக்கவிடத்தில் தகுந்த காலத்தில் தெரிவிக்கிறேன்.

பரதன்: அம்மா, நீங்களே கூறுங்கள். உங்களுக்கு அபகீர்த்தி வேண்டுமென்ற விருப்பம் இருந்தால் என் பெயரை ஏன் கூறுகிறீர்? அரச இன்பத்தில் ஆர்வமாயின் அதை அரசரை அளியாரோ? அல்லது அரசன் தாய் என்ற பெயரில் ஆசையானால் ராமனும் உம் மகன் அல்லவா?

அம்மா, என்ன துன்பம் விளைத்தீர்! ராஜ்யம் வேண்டுமென்ற அவாவால் கணவன் உயிரையும் நீர் பொருட்படுத்தவில்லை. தலைவன் ராமனையும் வனத்திற்குத் துரத்திவிட்டீர். ஜனகராஜன் புதல்வி மரவுரி புனைந்ததைக் கண்டு பிளவாத உமது நெஞ்சத்தைப் பிரமன் கல்லினும் கடினமாகப் படைத்தானோ?

சுமந்திரர்: குமார, இதோ வசிஷ்ட வாமதேவர்கள் அமைச்சருடன் அபிஷேகத்தை முன்னிட்டு உம்மைப் பார்க்க வந்து விஞ்ஞாபனம் செய்கிறார்கள்; 'அரசனால் காப்பாற்றப்படாத குடிகள், இடையனால் காக்கப்படாத மந்தைபோல் நாசம் அடைகின்றனர்' என்கிறார்கள்.

பரதன்: அமைச்சரும் ஏனையோரும் என்னைப் பின்தொடரட்டும்.

சுமந்திரர்: அரசுரிமையை ஏற்றுக்கொள்ளாமல் நீர் எங்கே போகிறீர்?

பரதன்: அரசுரிமையா! அதை அரசி கைகேயிக்குக் கொடுங்கள்.

சுமந்திரர்: நீர் எங்கே போகிறீர்?

பரதன்: ராமன், அன்பார்ந்த லக்ஷ்மணனுடன் இருக்கும் இடந்தேடிச் செல்கிறேன். ராமன் இருக்கும் இடமே எனக்கு அயோத்தி. அவன் இல்லாத இடத்தை நான் அயோத்தியாகக் கருதேன்.

(எல்லோரும் போகிறார்கள்.)

மூன்றாம் அங்கம் முற்றிற்று.

## நான்காம் அங்கம்

(இரண்டு சேடிகள் வருகிறார்கள்.)

**விஜயை:** ஸகி நந்தினி, என்ன செய்தி? இன்று கோசலாதேவி முதலான ராணிகள் எல்லோரும் பிரதிமா கிருகத்தைத் தரிசிக்கச் சென்றபொழுது அங்கே ராஜகுமாரர் பரதரைக் கண்டார்களாம். அதிருஷ்டம் கெட்ட நான் வாசலில் நின்றேன்.

**நந்தினி:** தோழி, நாங்கள் ராஜகுமாரரை ஆவலோடு பார்த்தோம்.

**விஜயை:** கைகேயி தேவியிடம் குமாரன் என்ன சொன்னான்?

**நந்தினி:** என்ன சொன்னாரா? தேவியைக் கண்கொண்டு காணவும் விரும்பவில்லை.

**விஜயை:** என்ன கஷ்டம்! கைகேயி ராணி அரசச் செல்வத்தின் மேல் கொண்ட பேராசையால் இளவரசர் ராமரை நாட்டைவிட்டுத் துரத்தியதுடன் தனக்கு வைதவ்யத்தையும் தேடிக்கொண்டாள். நகரெல்லாம் பாழாயிற்று. எத்தனை கொடியவள்! எவ்வளவு துயர் விளைத்தாள்!

நந்தினி: இன்னும் கேள், தோழி: அமைச்சரும் குடிகளும் கொடுத்த முடியை மறுத்துவிட்டு, அவர் இளவரசர் தங்கும் தவவனத்திற்கே சென்றாராம்.

**விஜயை:** (துக்கம் தோன்ற) அப்படியா! குமாரரும் வனம் சென்றாரா? நந்தினி, வா. நாம் ராணியைப் பார்ப்போம். (இருவரும் போகிறார்கள்.)

(தேரில் பரதனும் சுமந்திரனும்
சாரதியுடன் வருகிறார்கள்.)

பரதன்: அரசர் தம் சுகிருதங்களோடு விண்ணுலகம் செல்ல, நான் நாட்டாரது கண்ணீர்ப் பெருக்குடன் சந்திரனைப்போல் விளங்கும் ராமனை அழகிய தவ வனம் சென்று காணப் போகிறேன்.

சுமந்திரர்: இதோ சிரஞ்சீவி பரதன்; அரசர் செருக்கை அறவே அழித்த தசரத மன்னரின் புத்திரன்; தன் பொருளெல்லாம் வேள்விக்கு

அளித்த வள்ளலான அஜனுடைய பௌத்திரன்; தந்தையின் சொற்படி நடந்து உலகனைத்தையும் மகிழ்விக்கும் ராமனுடைய சகோதரன்; இவன் ராமன் சென்ற நன்னெறியைத் தானும் பின்பற்றுகிறான்.

பரதன்: *தாதா!*

சுமந்திரர்: குழந்தாய், என்ன வேண்டும்?

பரதன்: பூஜ்யரான என் தமையனார் ராமபிரான் எங்கே? மன்னர்பிரான் பிரதிநிதி எங்கே? குணமுடையோருக்குச் சிறந்த உதாரணமாக விளங்குபவர் எங்கே? அரசச் செல்வத்தில் பேராசை கொண்ட கைகேயியைத் தமது தியாகத்தால் அவமதித்தவர் எங்கே? அரசருடைய செல்வக் குமாரர் எங்கே? என் தாயின் பிரியத்தைக் கருதி எவர் அரசுரிமையைப் புல்லாக எண்ணித் தள்ளினாரோ, அவரே எனக்குப் பரதெய்வம். அவரை நான் காண விரும்புகிறேன்.

சுமந்திரர்: குமார, இந்த ஆசிரமத்தில் ராமன் சீதை லக்ஷ்மணன் ஆகிய மூவரும் வாய்மை, சீலம், பக்தி என்னும் மூன்றும் முறையே உருவெடுத்தாற் போல் அமர்ந்திருக்கின்றனர்.

பரதன்: அப்படியா! தேரை நிறுத்து.

சாரதி: உத்தரவு. (தேரை நிறுத்துகிறான்.)

பரதன்: (தேரினின்று இறங்கி) சாரதி, ஜனநடமாட்டமற்ற இடத்தில் குதிரைகளைக் காலாற விடு.

சாரதி: உத்தரவு. (போகிறான்.)

பரதன்: தாதா, தெரிவியுங்கள்.

சுமந்திரர்: குமார, எப்படித் தெரிவிக்க வேண்டும்?

பரதன்: அரசச் செல்வத்தில் பேராசைக் கொண்ட கைகேயியின் மகன் பரதன் வந்திருக்கிறான் என்று சொல்லும்.

சுமந்திரர்: என்னால் இவ்விதமெல்லாம் சொல்ல முடியாது. வேண்டுமானால் பரதன் வந்திருக்கிறான் என்று சொல்லுகிறேன்.

பரதன்: அது போதாது. பெயர் மாத்திரம் சொல்லும்போது செய்த பிழைக்குப் பரிகாரம் செய்ததாகத் தோன்றாது. பிரம்மஹத்தி போன்ற குற்றம் செய்தோரையும் பிறர் தெரிவிப்பதுண்டா? அதனால், தாதா, நில்லுங்கள். நானே சென்று தெரிவித்துக் கொள்கிறேன் - யார் ஐயா இங்கே? தந்தையின் சொற்படி நடக்கும் ராகவனிடம் தெரி வியுங்கள்: 'நன்றி மறந்து, கொடியவர்க்கு இணங்கும் இரக்கமில்லா ஈனன் ஒருத்தன் வந்திருக்கிறான்; அவன் நிற்கலாமா, அல்லது போகட் டுமா?' என்று சொல்லுங்கள்.

(ராமனும் சீதையும் லக்ஷ்மணனும் வருகிறார்கள்.)

ராமன்: (செவிகொடுத்து கேட்டு மனமுவந்து) லக்ஷ்மணா, கேட்கிறாயா? யாருடைய குரல் இது? வைதேகி, உனக்கும் கேட்கிறதா? யாருடைய குரல் இது? என் பிதாவின் குரல்போல் இருக்கிறதே? கம்பீரத்தால் மேகநாதத்தையும் அவமதிக்கின்றது. என் செவிக்குள் அன்போடு புகும் இவ்வோசை, உறவினர் குரலோ இது என்று ஐயுறும் என் உள்ளத்தை மகிழ்விக்கிறது.

லக்ஷ்மணன்: அண்ணா, நானும் இக்குரல் இனத்தினரிடத்தி னின்று வந்ததென்று நினைக்கிறேன். கொழுத்த காளையின் ஒலிபோல் வசீகரமானதும், நெஞ்சத்தில் தடையின்றி உலாவுவதால் இனியதும், உரிய இடத்தில் தக்க முயற்சியுடன் தோற்றலால் உரத்துத் தெளிந்து கம்பீரமானதுமான இக்குரல் நான்கு வருணத்தாருக்கும் அபயமளிக்க உடன்பட்டது போல் தோன்றுகிறது.

ராமன்: எவ்வாறாயினும் இக்குரல் என் உறவினருடைய தன்றி வேறல்ல. இது என் மனத்தைக் கசிவுறச் செய்கின்றது. லக்ஷ்மணா, யார் என்று பார்த்து வா.

லக்ஷ்மணன்: உத்தரவு (போகிறான்.)

பரதன்: ஆ! ஏன் ஒருவரும் மறுமொழி கூறவில்லை? ஒருவேளை கைகேயியின் மகன் வந்திருக்கிறானென்று அறிந்து விட்டார்களா?

லக்ஷ்மணன்: (பார்த்து) இவன் யார்? அண்ணன் ராமனா? இல்லை; இல்லை. உருவத்தின் ஒற்றுமைதான். மதிபோல் மனத்தை மகிழ்விக்கும் இவனது அழகிய முகம் என் அண்ணன் முகம்போல் ஒப்பிலா ஒளியுடையது; இவனது அகன்ற பருத்த மார்பு அசுரர் பாணங் களால் தழும்புற்ற என் பிதாவின் மார்பை ஒத்திருக்கிறது. எங்கும்

ஒளி வீசும் சுடர்த்திரள் போன்ற இவன், உலகெலாம் களிப்புறவந்த ஓர் அரசனோ? தேவர்கோனோ? அல்லது தானாக வந்தருளிய திருமாலோ? (சுமந்திரனை நோக்கி) ஆ! இதோ தாதா வந்திருக்கிறார்?

சுமந்திரர்: இதோ குமாரன் லக்ஷ்மணன்.

பரதன்: சரி. இவர் என் தமையனாரே. அண்ணா, நமஸ்காரம்.

லக்ஷ்மணன்: வா வா, சிரஞ்சீவியாயிரு. (சுமந்திரனைப் பார்த்து) தாதா, இவர் யார், தெரியவில்லையே.

சுமந்திரர்: குமார, இவன் ரகுவிலிருந்து நான்காவதும், அஜனிலிருந்து மூன்றாவதும் கீர்த்திமானான உன் பிதாவிலிருந்து இரண்டாவதுமான தலைமுறையில் பிறந்து, உங்கள் குலமணியான ராமனுக்கு உன் போன்ற தம்பி; குமாரன் பரதன்.

லக்ஷ்மணன்: வா வா, தம்பி. என் அன்பே, உனக்கு மங்களம் உண்டாகட்டும்! சிரஞ்சீவியாயிரு! வஜ்ராயுதம் போன்ற பாணங்களால் அசுரரைப் போரில் வென்று இணையற்ற வீரனெனக் கியாதி பெற்ற நம் முன்னோர்போல் வீரனாகவும், தனது பொருள் அனைத்தையும் வேள்விக்கு அளித்த ரகு மஹாராஜனைப் போல் சிறந்த குணங்களுக்கு உறைவிடமாகவும் இந்நிலத்தில் வாழ்வாயாக!

பரதன்: உமது அனுக்கிரகம்.

லக்ஷ்மணன்: தம்பி, சற்று நில்; அண்ணனிடம் உன் வரவைத் தெரிவிக்கிறேன்.

பரதன்: அண்ணா, நான் அவரை இப்பொழுதே கண்டு வணங்க வேண்டும். அதனால் உடனே தெரிவியுங்கள்.

லக்ஷ்மணன்: அப்படியே. (ராமனை அணுகி) ஆரியனுக்கு ஜயமுண்டாகட்டும்! அண்ணா, உமது அன்புள்ள தம்பி சகோதரரிடம் மிகுந்த பட்சமுடையவன், உமது வடிவமே கண்ணாடியில் தோன்றுவது போல் இதோ நிற்கிறான்.

ராமன்: லக்ஷ்மணா, என்ன, பரதன் வந்திருக்கிறானா?

லக்ஷ்மணன்: அண்ணா, ஆமாம்.

ராமன்: மைதிலி, பரதனைக் காண உன் கண்களை விசாலப் படுத்திக்கொள்.

சீதை: நாதா, பரதன் வந்திருக்கிறானா?

ராமன்: மைதிலி, ஆமாம். என் பிதா எவ்வளவு கடுந்துயர் அனுபவித்திருப்பார் என்பது இப்பொழுதன்றோ தெரிகிறது? சகோதர நேசமே இவ்வளவு ஆழ்ந்ததாயின், புத்திர வாஞ்சை எவ்வளவு பெரிதாக இருக்க வேண்டும்?

லக்ஷ்மணன்: அண்ணா பரதன் இங்கே வரட்டுமா?

ராமன்: லக்ஷ்மணா, இதற்கும் என்னைக் கேட்க வேண்டுமா? சென்று உபசார மொழி கூறி விரைவில் அழைத்து வா.

லக்ஷ்மணன்: உத்தரவு.

ராமன்: இல்லையெனில், நீ போகவேண்டாம். பனிநீர் நிறைந்த நீல நெடுங்குவளை இதழ்போன்ற கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் பெய்யும் சீதை, மகன்மீது வாஞ்சையுற்ற தாய்போல் தானே சென்று பரதனை முகமன்கூறி அழைக்கட்டும்.

சீதை: என் அன்பரின் இஷ்டப்படியே ஆகுக. (எழுந்துசென்று பரதனைப் பார்த்து) என்ன, நான் வருவதற்கு முன்னே என் காதலர் இங்கு வந்து விட்டாரா? இல்லை, வடிவின் ஒற்றுமைதானா?

சுமந்திரர்: இதோ மருமகள் சீதை.

பரதன்: ஆமாம், ஜனக அரசர் புதல்வி. இவள் கலப்பையால் உழும்போது தரையினின்றெழுந்த ஒளியாம் பெண்ணுருவம். ராஜரிஷி யான ஜனகர் செய்த தவத்தின் நற்பயன். அம்மா, பரதன் வணங்கு கிறேன்.

சீதை: (தனக்குள்) உருவம் மட்டுமன்று, குரலும் அப்படியே. (வெளிப்படையாக) குழந்தாய், சிரஞ்சீவியாக இரு.

பரதன்: அம்மா, உமது அனுக்கிரகம்.

சீதை: குழந்தாய், வா, உன் சகோதரர் விருப்பத்தை நிறைவேற்று.

சுமந்திரர்: குமார, உள்ளே செல்.

பரதன்: தாதா, தாங்கள் இப்போது என்ன செய்யப் போகிறீர்கள்?

சுமந்திரர்: அரசர் சுவர்க்கம் சென்றபிறகு, நான் ராமனை இப்பொழுதுதான் பார்க்கப்போகிறேன். அதனால் சற்றுப் பொறுத்து வருகிறேன்.

பரதன்: அப்படியே ஆகட்டும். (ராமனை அணுகி) அண்ணா, பரதன் வணங்குகிறேன்.

ராமன்: (மனமுவந்து) இக்ஷ்வாகு மன்னர் குலக்கொழுந்தே, வா வா. உனக்கு மங்களம் உண்டாகுக! நீண்டு உருண்ட உன் கைகளால் கதவுபோல் விரிந்த உன் மார்பில் என்னை அணைத்துக் கொள். சரத்காலத்து விளங்கும் மதிபோன்ற உன் முகத்தை உயர்த்திச் சோகத்தால் தவிக்கும் என் உடம்பைக் குளிரச்செய்.

பரதன்: தங்கள் அனுக்கிரகம்.

சுமந்திரர்: (அணுகி) இளவரசருக்கு வெற்றி உண்டாகட்டும்!

ராமன்: ஆ! தாதா! பண்டு, தேவாசுரயுத்தம் நடக்கும்போது விமானம் ஏறித் தேவலோகம் சென்று அசுரர்களை வென்று வீரரெனப் புகழ்பெற்ற மன்னர், தம் அன்பரான உம்மைத் தள்ளிவிட்டுச் சுவர்க்கம் சென்று, அங்கே தம் பிதுருக்களான அரசர்களுடன் வாழ்கின்றார் போலும்!

சுமந்திரர்: (துக்கத்துடன்) அரசர் உயிர் துறந்தார்; நீங்கள் மூவரும் வனம் அடைந்தீர்கள்; பரதன் அளப்பரிய சோகமுற்றான்; பெயர்பெற்ற உங்கள் குலமும் தஞ்சமற்றதாயிற்று. இப்படிப் பலவிதமான துன்பங்களைக் கண்டு வருந்தும்படி நீடித்த என் உயிர் எத்தனை பெருங்குற்றம் செய்திருக்குமோ!

சீதை: முன்னமே கண்ணீர் சொரிந்துகொண்டிருக்கும் என் அன்பரைத் தாதா மேலும் கண்ணீர் விடச் செய்கிறார்.

ராமன்: மைதிலி, இதோ என்னை நான் தேற்றிக் கொள்ளுகிறேன். லக்ஷ்மணா, ஜலம் கொண்டு வா.

பரதன்: அண்ணா, அது சரியன்று. நான் பணிவிடை செய்வதே முறை. நானே செல்கிறேன். (குடத்துடன் வெளியே சென்று திரும்பி வந்து) இதோ ஜலம்.

ராமன்: (ஆசமனம் செய்து) மைதிலி! லக்ஷ்மணன் வேலை தடைப்படுகின்றதே.

சீதை: நாதா, பரதனும் தொண்டு செய்வதற்கு உரியவன்தான்.

ராமன்: சரி. அவ்வாறாயின் லக்ஷ்மணன் இங்கே இருந்து தொண்டு புரியட்டும்; பரதன் அங்கே (அயோத்தியில்) இருந்து கொண்டு தொண்டு செய்யட்டும்.

பரதன்: அண்ணா, நான் உடம்பால் உம்மிடத்திலும் செய்கையால் அயோத்தியிலும் இருக்கும்படி அருளவேண்டும். உமது திருநாமத்தாலே ராஜ்யம் நன்றாகக் காப்பாற்றப்படும்.

ராமன்: குழந்தாய், அங்ஙனம் அன்று. நான் பிதாவின் கட்டளையால் வனம் வந்தேன்; செருக்காலாவது அச்சத்தாலாவது மதியீனத்தாலாவது வரவில்லை. சத்தியமே செல்வமாக உடையது நமது தொல் குலம் என்பதை அறிந்தும், நீ ஏன் வழிதவறிச் செல்லத் துணிகின்றாய்?

சுமந்திரர்: அவ்வாறாயின், ஆட்சியை யார் ஏற்றுக்கொள்ளப் போகிறீர்கள்?

ராமன்: அது எவருக்கு உரியதென்று என் தாய் கூறினாளோ, அவரே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

பரதன்: அண்ணா, தயவு புரிய வேண்டும். நொந்த புண்ணில் கோலிடலாகாது. நீங்கள் பிறந்த தூய வமிசத்திலே நானும் தோன்றியவனாயின், தீரரும் அறிவுடையவருமான உமது தந்தையே எனக்கும் தந்தையாயின், தாயின் குற்றங்கள் மகனைத் தொடராவாயின், நற்குணமுடைய பெருமானே, துன்புற்ற பரதனைக் கருணையுடன் நோக்கி வேண்டுவதைச் செய்யுங்கள்.

சீதை: நாதா, பரதன் நிரம்ப வருந்திக் கூறுகிறான். தாங்கள் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?

ராமன்: மைதிலி, தம் புத்திரர்களுல், குணங்களால் மேம்பட்டு விளங்கும் பரதனைக் கண்டு களியாமல் உயிர்விட்ட என் பிதாவைத் தான் நினைக்கிறேன். இத்தகைய குணக்கடலாம் குமாரனைப் பெற்ற பெரியோரிடத்தும் ஊழ்வினை தன் வலியைக் காட்டியது வருந்தத் தக்கதே!

தம்பி, கைகேயின் செல்வமே, உன்னைக் கண்டு நான் உண்மையாக மனமுவந்தேன். உன் குணங்களில் ஈடுபட்டேன். உன் வேண்டுகோளுக்கு இணங்கினேன். ஆனால் ராஜ்யம் உனக்கு உரிய தென்று அரசர் கூறியதை வீணாக்குவது சரியன்று; உன்னைப் போன்ற புத்திரனைப் பெற்ற பிதாவும் பொய்யராவது தகுமா?

பரதன்: மன்னர்பெரும, பிதாவின் வாய்மை நிறைவேறுமளவும் நான் தங்கள் பாதமூலத்தில் தங்குவதற்கு அருள் புரியுங்கள்.

ராமன்: கூடாது. தந்தையின் நற்செயல்கள் எல்லாம் பய னடைய வேண்டும். அதனால் நீயே நாட்டை ஆள வேண்டும் என்று நான் என்மேல் ஆணை வைத்துக் கூறுகிறேன்.

பரதன்: கஷ்டம்! மறுத்துரைக்க முடியாமல் கூறிவிட்டீர்கள். ஆகட்டும், ஓர் நிபந்தனையின்மேல் தங்கள் ராஜ்யத்தைக் காப்பாற்று கிறேன்.

ராமன்: குழந்தாய், என்ன நிபந்தனை?

பரதன்: ராஜ்யத்தை இப்போது அடைக்கலமாக என்னிடம் ஒப்பித்துப் பிறகு பதினான்கு வருஷம் சென்றதும் தாங்கள் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

ராமன்: அப்படியே.

பரதன்: அண்ணா, கேட்டீங்களா? அம்மா, தாங்களும் கேட் டீர்கள். தாதா, தாங்களும் கேட்டீர்கள்.

எல்லோரும்: நாங்கள் எல்லோரும் சாக்ஷி.

பரதன்: அண்ணா, வேறொரு வரமும் பெற விரும்புகிறேன்.

ராமன்: தம்பி, உன் விருப்பம் என்ன? எதைப் பெற விரும்பு கிறாய்? என்ன செய்ய வேண்டும்?

பரதன்: அண்ணா, தங்கள் திருவடியில் அணியும் பாதுகை களைத் தலை வணங்கி கேட்கும் எனக்குக் கொடுத்தருளுங்கள். பிர திக்ஞை நிறைவேறித் தாங்கள் திரும்பி வரும்வரையில் நான் அந்தப் பாதுகைகளின் தொண்டனாக இருக்கப் போகிறேன்.

ராமன்: *(தனக்குள்)* ஆ! நான் நெடுநாள் முயன்று சிறிது புகழ் ஈட்டினேன்; பரதனோ, இப்பொழுது நொடிக்குள் பெரும் புகழ் பெற்றான்.

சீதை: நாதா, பரதனது சிறந்த வேண்டுகோளை நிறைவேற் றுங்கள்.

ராமன்: ஆகட்டும் தம்பி, பெற்றுக்கொள்.

பரதன்: தங்கள் அனுக்கிரகம். *(பெற்றுக் கொண்டு)* அண்ணா, இந்தப் பாதுகைகளுக்கு அபிஷேகம் செய்ய விரும்புகிறேன்.

ராமன்: *(சுமந்திரனை நோக்கி)* தாதா, பரதன் விரும்புவ தெல்லாம் செய்யுங்கள்.

சுமந்திரர்: உத்தரவு.

பரதன்: *(தனக்குள்)* அப்பாடா! இனி நான் என் உறவினர் நம்பிக்கைக்கும் நகரத்தார் நேசத்திற்கும் உரியவனாவேன். ஜனங்கள் என்னை நன்கு மதிப்பர். நான் விண்ணுலகெய்திய பிதாவுக்கு அன்பும் நல்லொழுக்கமும் வாய்ந்த மகனாவேன். குணசாலிகளான சகோதரர் கள் என்னைக் கௌரவிப்பர். நான் புகழுக்குக் கொள்கலமாவேன். குணமுடையோர் தம் சம்பாஷணைகளில் நான் நினைக்கத் தக்கவன். காரிய சித்தி பெற்ற பெரியோர்களுக்கெல்லாம் நான் பிரியமானவன்.

ராமன்: குழந்தாய், பரதா, அரசாட்சி என்பது அரைக்கணமும் அசட்டை செய்யத் தக்கதன்று. அதனால் உன் மேம்பாட்டிற்காக இப்பொழுதே நீ திரும்பவேண்டும்.

சீதை: ஆ! குமாரன் இப்பொழுதே போக வேண்டுமா?

ராமன்: அளவுக்கு மிஞ்சி அன்பு பாராட்டக் கூடாது. அரசாட்சியை ஏற்றுக்கொள்ள இன்றே பரதன் போகவேண்டும்.

பரதன்: நான் இப்பொழுதே போகிறேன். தங்களைப் பார்க்க வேண்டுமென்ற அவாவுடன் நகரமாந்தர் அயோத்தியில் எதிர்பார்த்து நிற்பார்கள். தங்கள் பாதுகைகளைக் காண்பித்து அவர்களை மகிழ்வுறச் செய்வேன்.

சுமந்திரர்: குழந்தாய், ராமா, நான் இனி என்ன செய்ய வேண்டும்?

ராமன்: மகாராஜாவைக் காப்பாற்றியது போல் பரதனையும் காப்பாற்றுங்கள்.

சுமந்திரர்: நான் உயிரோடிருக்கும் வரையில் அப்படியே செய்வேன்.

ராமன்: குழந்தாய்; பரதா, என் முன்னே நீ தேரில் ஏறிக்கொள்.

பரதன்: உத்தரவு.

*(சுமந்திரனும் பரதனும் தேரில் ஏறுகிறார்கள்.)*

ராமன்: மைதிலி, வா; லக்ஷ்மணா, வா. இந்த ஆசிரமத்தின் வாயில்வரையிலாவது நாம் பரதனை வழியனுப்பி வைப்போம்.

*(எல்லோரும் போகிறார்கள்.)*

நான்காம் அங்கம் முற்றிற்று.

# ஐந்தாம் அங்கம்

(சீதையும் ஒரு தவமாதும் வருகிறார்கள்.)

**சீதை:** அம்மா, ஆசிரமத்தில் சிதறிக்கிடந்த நிர்மாலியப் பூக்களைப் பெருக்கித் துப்புரவு செய்தாகிவிட்டது. ஆசிரமத்திற்குரிய பொருள்களால் தெய்வங்களையும் வணங்கியாகி விட்டது. இனி என் நாதர் வருமுன்னரே தண்ணீர் வார்த்து இந்த இளஞ்செடிகளிடத்தில் அன்பு பாராட்டுகிறேன்.

தவமாது: குழந்தாய், அது குறைவின்றி நடைபெறட்டும்.

*(ராமன் வருகிறான்.)*

ராமன்: *(துக்கத்துடன்)* அரசனையும் என்னையும் இழந்த அயோத்தியைத் துறந்து, அரசாட்சியை என்னிடம் ஒப்பிப்பதற்குக் குணக்கடலான பரதன் இங்கு வந்தான். நானோ நாட்டைக் காப்பதன் பொருட்டு அவனை அயோத்திக்கே திரும்ப அனுப்பி விட்டேன். அந்தோ! என்ன துன்பம்! என்ன துன்பம்! அவன் கனத்த அரசுரிமையைத் தனியே சுமக்கப்போகிறான். *(யோசித்து)* அது, அதன் இயல்பு தானே? இந்தக் கவலை நீங்கி என் மனம் ஆறுதல் அடைவதற்கு என் இல்லறத் துணைவியான மைதிலியிடம் செல்வேன். வைதேகி எங்கே போனாள்? காணவில்லையே! *(நடந்து சென்று பார்த்து)* இதோ இந்தச் செடிகளின் பாத்திகளில் இப்போதுதான் தண்ணீர் விடப்பட்டுள்ளது. அவள் அருகில்தான் இருப்பாள். ஏனெனில், செடிகளின் பாத்திகளில் தண்ணீர் நுரையுடன் சுற்றுகிறது; தாகத்துடன் வந்த பறவைகள் கலங்கிய நீரைப் பருகவில்லை; தண்ணீர் நிறைந்த பொந்துகளிலிருந்து நனைந்த பூச்சிகள் தரையில் குதிக்கின்றன; தண்ணீர் வற்றும்போது விழும் வரைகளால் பாத்திகளில் புதிய வட்டங்கள் தெரிகின்றன. *(பார்த்து)* இதோ வைதேகி! என்ன துயர்! கண்ணாடியைத் தாங்கவும் பொறாது வருந்தும் இவள் கை இப்போது குடம் சுமந்தும் துன்புறவில்லை. கஷ்டம்! காடானது கொடிகளின் மென்மையைப் போல் பெண்களின் மென்மையையும் கடினமாக்குகின்றதுபோலும்! *(அடுத்து)* மைதிலி, தவம் குறைவின்றி நடைபெறுகிறதா?

**சீதை:** ஆ! என் அன்பரா? என் அன்பருக்கு ஜயமுண்டாகட்டும்.

ராமன்: மைதிலி, தவத்திற்கு இடையூறில்லையானால் உட்கார்.

**சீதை:** அன்பர் விரும்புகிறபடி.

*(இருவரும் உட்காருகிறார்கள்.)*

ராமன்: மைதிலி, உன்னைப் பார்த்தால் ஏதோ கேட்க விரும்புகிறவள்போல் இருக்கிறதே; விரும்புவது என்ன?

**சீதை:** நாதா, தங்கள் முகத் தோற்றம் உள்ளத்தில் கவலை இருப்பதுபோல் காட்டுகிறதே; ஏன்?

ராமன்: மைதிலி, நீ சந்தேகித்தது சரிதான். ஊழ்வினையால் நான் தாக்கப்பட்டுள்ளேன். என் மனமும் அப்படித்தான். சோகமாகிற அம்புகளால் என் மனமும் உயிரும் மீண்டும் பலவிதங்களாகத் தாக்கப்படுகின்றன.

**சீதை:** நாதா, தங்கள் மனவருத்தம் யாது?

ராமன்: நாளைத்தினம் பிதாவின் வருஷ சிராத்தமாம். விதிப்படி கொடுப்பதையே பிதிருக்கள் விரும்புவார்கள். அது எவ்விதம் நிறைவேறப் போகிறதோ என்றுதான் கவலைப்படுகிறேன். ஒருவேளை எனது இத்தகைய நிலையை அறியும் பிதிருக்கள் நான் எதைக் கொடுத்தாலும் பெற்றுக் கொள்வார்கள். ஆனால் ராமனது ஆண்மைக்கு இயைந்தவாறு பிதாவை பூசிக்க வேண்டும் என்பது என் விருப்பம்.

**சீதை:** நாதா, பரதன் மிகுந்த செல்வத்துடன் சிராத்தம் செய்வான். தங்கள் நிலைமைக்கு ஏற்றபடி கனிகள், தண்ணீர் முதலான பொருள்களால் வழிபடுங்கள். அது பிதாவுக்கு நிரம்பத் திருப்தியை அளிக்குமே.

ராமன்: மைதிலி, நம் கைகளால் கனிகளைக் கொணர்ந்து தர்ப்பைப் புல்மீது வைப்பதைப் பிதா பார்த்து நமது வனவாசத்தை நினைத்து விண்ணிலிருந்து கண்ணீர் விடப்போகிறார்.

*(ராவணன் துறவி வேஷம் பூண்டு
ஆகாயத்தில் வருகிறான்.)*

**ராவணன்:** உள்ளத்தின் அமைதியென்பதை ஒரு பொழுதும் அறியாத நான் இப்போது துறவிவேஷம் பூண்டு, கரனைக் கொன்று என்னைப் பகைத்துக் கொண்ட ராமனைப் பொன்மானால் ஏமாற்றி, ஸ்வரத்தாலும் பதத்தாலும் பிழைபட்ட மந்திரத்துடன் கொடுக்கும் அவிசைப்போல் ஜனகராஜன் மகளைக் கவர்ந்து செல்வேன். *(சுற்றி நடந்து கீழே பார்த்து)* இதுவே ராமனது ஆசிரமத்தின் வாயில்; இறங்கு கிறேன். *(இறங்கி)* விருந்தினர்போல் நடப்பேன். யார் ஐயா இங்கே? நான் ஓர் அதிதி.

**ராமன்:** *(கேட்டு)* அதிதி வரவு நல்வரவாகுக!

**ராவணன்:** இவனது அழகிய உருவம் குரலாலும் சிறந்து விளங்குகிறது.

**ராமன்:** *(பார்த்து)* இதோ சந்நியாசி; சுவாமி, வந்தனம் செய்கிறேன்.

**ராவணன்:** வாழ்க!

**ராமன்:** சுவாமி, இந்த ஆசனத்தில் அமர்ந்தருளுங்கள்.

**ராவணன்:** *(மனத்துள்)* என்ன! இவன் பேச்சு எனக்குக் கட்டளையிடுவது போல் இருக்கிறதே? *(வெளிப்படை)* அப்படியே ஆகட்டும்.

*(உட்காருகிறான்.)*

**ராமன்:** மைதிலி, சுவாமிகளின் திருவடியைச் சுத்திசெய்ய ஜலம் கொண்டுவா.

**சீதை:** உத்தரவுப்படி. *(வெளியே சென்று திரும்பி வந்து)* இதோ ஜலம்.

**ராமன்:** மைதிலி, சுவாமிக்குப் பணிவிடை செய்.

**சீதை:** உத்தரவு.

**ராவணன்:** *(கபடம் வெளிப்படும் என்று திகைத்து)* வேண்டுவ தில்லை, வேண்டுவதில்லை. இந்த நிலமீதுள்ள பெண்களுள் இவள்

ஒருத்தியே அருந்ததி. இவள் கணவராக இருப்பதனாலன்றோ பெண் ணுலகம் உம்மைப் புகழ்ந்துரைக்கின்றது?

ராமன்: அவ்வாறாயின் என்னிடம் கொடு. நானே பணி விடை செய்கிறேன்.

ராவணன்: ஐயா, நிழலே என் உடம்பில் படக்கூடாது என்பே னானால் உடல் என்னைத் தொடலாகுமா? இன்சொல்லே விருந்தின ருக்குச் செய்யும் உபசாரம். உங்களால் பூசிக்கப் பெற்றேன், உட் காருங்கள்.

ராமன்: ஆகட்டும்.

(உட்காருகிறான்.)

ராவணன்: (மனத்துள்) இப்போது பிராமணனைப் போல் நடிப்பேன். (வெளிப்படை) ஐயா, நான் காசிப கோத்திரத்திலே பிறந் தவன். அங்க உபாங்கத்துடன் வேதம் ஓதியுள்ளேன். மனுவின் அற நூலும், மஹேசுவரன் யோக நூலும், பிருகஸ்பதியின் பொருள் நூலும், மேதாதிதியின் நியாய நூலும், பிரசேதசின் சிராத்த கல்பமும் கற்றி ருக்கிறேன்.

ராமன்: எப்படி? எப்படி? சிராத்த கல்பமா?

ராவணன்: எல்லாச் சாஸ்திரங்களையும் விட்டுச் சிராத்த கல்பத்தை மட்டும் எடுத்துக்கொண்டீரே; அதென்ன?

ராமன்: சுவாமி, பிதாவை இழந்த இத்தறுவாயில் வேண்டுவது இந்தச் சாஸ்திரமே.

ராவணன்: அவ்வாறாயின் தடையின்றிக் கேளும்.

ராமன்: சிராத்தம் செய்யுங்கால் எந்தப் பொருள்களால் பிதிருக் களைத் திருப்தி செய்யலாம்?

ராவணன்: சிரத்தையுடன் கொடுப்பதெல்லாம் சிராத்தந்தான்.

ராமன்: சுவாமி, அன்பின்றிக் கொடுப்பதில் பயனில்லைதான். சிறந்த பொருள்கள் எவையென்று அறிய விரும்புகிறேன்.

ராவணன்: கேளும்: புற்களில் தர்ப்பை, ஓஷதிகளில் எள், தானியங்களில் கடலை, மீன்களில் பெருங்கயல், பறவைகளில் வாள்மான், விலங்குகளில் பசு, காண்டாமிருகம் முதலியவை மனிதர் களுக்கு விதிக்கப்பட்டுள்ளன.

ராமன்: முதலியவை என்பதால் இன்னும் உண்டு என்று தெரிகிறது.

ராவணன்: ஆமாம். ஆனால் அவை ஆற்றலால் மட்டும் கிட்டத்தக்கவை.

ராமன்: சுவாமி, அவற்றைக் கொடுக்க வேண்டும் என்பது என் துணிபு. அவற்றைப் பெறுவதற்கு இரண்டு கருவிகள் என்னிடம் உள்ளன; தவம் தளர்ந்தால் வில்; வில் தளர்ந்தால் தவம்.

ராவணன்: அவை இமயமலையில் இருக்கின்றன.

ராமன்: இமவானிலா? எங்கே, கேட்கலாம்.

ராவணன்: இமயகிரியின் ஏழாவது சிகரத்தில், கண்கூடாய் எழுந்தருளிய சிவபிரான் தலையினின்று ஒழுகும் கங்கையில் நீர் குடிப்பனவும், வைடூரியம்போல் கருநீலமான முதுகுடையனவும், விரைந்து செல்வதில் காற்றுப்போன்றனவும், காஞ்சனபார்சுவங்கள் (இருபுறமும் பொன்னிறமானவை) என்று பெயர் பெற்றனவும் ஆன மான்கள் உலாவுகின்றன. வைகானஸர், வாலகில்யர், நைமிசீயர் முதலான மகரிஷிகள் தாம் நினைத்த மாத்திரத்தில் தம் அருகில் வந்து உயிர்விடும் இம்மான்களால் சிராத்த கருமங்களை நிறைவேற்றுகின் றனர்.

மேலும், இவைகளால் பூசிக்கப்பெற்ற பிதிருக்கள் மக்களைப் பெற்றதனால் அடையும் பயனை அடைகின்றனர்; அந்தப் பிதிருக்கள் கிழத்தன்மை ஒழிந்து மிக்க ஒளியுடன் சுவர்க்கம் சென்று தேவர்களைப் போல் விமானம் ஏறி உலாவுகின்றனர். மீண்டும் பிறவியில் ஆழ்த்தும் இன்பங்களால் அவர்கள் வலிந்து இழுக்கவும் படார்.

ராமன்: மைதிலி, நீ பிள்ளைகளாகப் பாவித்து வந்த மான் களிடமும், மரங்களிடமும் இவ்விந்திய வனத்திடமும், உன் நேச முற்ற தோழிகள் போன்ற கொடிகளிடமும் விடைபெற்றுக்கொள். நான் இமயமலை சென்று அங்கே தீப்போல் ஒளிவீசும் அழகிய மருந்துக் காடுகளில் தங்கப் போகிறேன்.

சீதை: அன்பர் இஷ்டப்படியே.

ராவணன்: கோசலை புதல்வ, அதிக ஆசை வேண்டாம். அவை மனிதர் கண்ணுக்குப் புலப்படா.

ராமன்: சுவாமி, இமயமலையில்தானே அவை இருக்கின்றன?

ராவணன்: ஆமாம்.

ராமன்: அவ்வாறாயின் இதோ பாரும். இமவான் ஒருவேளை அந்தத் தங்கமான்களை என்னிடம் காட்டலாம்; அல்லது என் அம்பால் அடிபட்டுக் கிரௌஞ்சம் போல் பிளவுபடலாம்.

ராவணன்: (மனத்துள்) என்ன இவனது செருக்கு? சகிக்கக் கூடவில்லையே!

ராமன்: (திசைகளை நோக்கி) ஏதோ மின்னல் கொடிவீசுகிறதே.

ராவணன்: கோசலையின் புதல்வா, இமவானே இங்கே வந்து உம்மை வணங்குகிறார். இதோ காஞ்சன பார்சுவம் என்ற மான்.

ராமன்: சுவாமி, இது தங்களால் உண்டான பாக்கியந்தான்.

சீதை: என் அன்பரது பாக்கியம், தெய்வாதீனம்.

ராமன்: இல்லை, இல்லை; முயற்சி செய்யாமல் மான் இங்கே வந்தது பிதாவின் பாக்கியத்தால்தான் மைதிலி. இது சிராத்தத் திற்குச் சிறந்ததென்று லக்ஷ்மணனிடம் சொல்.

சீதை: நாதா, தீர்த்த யாத்திரை செய்து திரும்பிவரும் குல பதியை எதிரேற்று அழைக்க லக்ஷ்மணனைத் தாங்கள் அனுப்ப வில்லையா?

ராமன்: ஆனால் நானே போகிறேன்.

சீதை: நாதா, நான் செய்ய வேண்டுவது என்ன?

ராமன்: சுவாமிக்குப் பணிவிடை செய்.

சீதை: உத்தரவு.

(ராமன் போகிறான்.)

ராவணன்: இதோ ராமன், குடிக்கும் நீர் எடுத்துக்கொண்டு அருகில் செல்கிறான்; பூசனையைப் பொருட்படுத்தாமல் ஓடும் மானை நோக்கி அவன் அம்பைத் தொடுக்கிறான். ஆ! என்ன வலிமை! என்ன வீரம்! என்ன ஆண்மை! என்ன விரைவு! ராமன் என்ற இச்சிறு சொல் உலகெங்கும் பரவியிருப்பது சரிதான்.

அந்த மான் ஒரு பாய்ச்சலில் அம்புக்கு எட்டாமல் உட் செல்லக் கூடாத காட்டில் நுழைந்துவிட்டது.

சீதை: என் நாதர் இல்லாத இவ்வேளையில் எனக்குப் பயம் தோன்றுகிறதே.

ராவணன்: (மனத்துள்) ராமனை வஞ்சனையால் துரத்தி விட்டேன். இனி, திக்கற்றுக் கண்ணீர் விடும் இவ்விளம் பெண்ணை, மந்திரம் சொல்லாமல் கொடுக்கும் அவிசைப் போல் தூக்கிக்கொண்டு போவேன்.

சீதை: நான் பர்ணசாலைக்குள் போய்விடுகிறேன்.

ராவணன்: (தன் உருவத்தைக் காட்டி) சீதையே நில் நில்.

சீதை: (பயந்து) ஐயோ! யார் இவன்!

ராவணன்: தெரியவில்லையா? அகன்ற கண்ணுடையவளே, நான்தான் இந்திரன் முதலான தேவர்களையும் அசுரர்களையும் வென்ற ராவணன்; இப்பொழுது மதிகெட்டவனும் அளப்பரிய வலிமையால் செருக்குற்றவனுமான ராமன், சூர்ப்பணகையை விரூபம் செய்து சகோ தரர்களையும் கொன்றான் என்று அறிந்து, அவனை வஞ்சனையால் ஏமாற்றி உன்னைக் கவர்ந்து செல்ல வந்திருக்கிறேன்.

சீதை: ஐயோ! ராவணனா!

(புறப்படுகிறாள்.)

ராவணன்: *ஆ! ராவணன் கண்ணிற் கண்டுவிட்ட பிறகு நீ எங்கே போவாய்?*

சீதை: *பிராணநாதா, என்னைக் காப்பாற்றுங்கள். லக்ஷ்மணா! என்னைக் காப்பாற்று.*

ராவணன்: *சீதா, கேள் என் பராக்கிரமத்தை: நான் இந்திரனைத் தோல்வியுறச் செய்தேன். குபேரனை நடுங்கச் செய்தேன். பிரமனை இழுத்தேன். யமனை உதைத்தேன். பேடிகளான தேவர்கள் தங்கும் சுவர்க்கத்தை எவர் தீண்டுகின்றனர்? சீதை இருக்கும் பூமிதான் மிகச் சிறப்புடையது.*

சீதை: *நாதா! காப்பாற்ற வேண்டும். லக்ஷ்மணா! என்னைக் காப்பாற்று.*

ராவணன்: *ராமனையாயினும் லக்ஷ்மணனையாயினும் சுவர்க்கத்திலிருக்கும் தசரத மன்னனையாயினும் நீ புகலடை. இந்தக் கெட்ட மனிதர்கள் என்னை யாது செய்யப் போகின்றனர்? மான் கன்றுகளா புலியை எதிர்க்கத் தகுந்தவை?*

சீதை: *நாதா! காப்பாற்றுங்கள். லக்ஷ்மணா! காப்பாற்று.*

ராவணன்: *சீதா, நீ கண்ணீர் விடுவதேன்? உன் கணவனைப் போலவே என்னையும் நினை. ராமன் மிகுந்த பராக்கிரமசாலியாயினும், தேவர் குழாத்துடன் வரினும் என்னுடன் பொரவல்லன் அல்லன்.*

சீதை: *(கோபத்துடன்) உன்னைச் சபிக்கிறேன்.*

ராவணன்: *ஆ! கற்புடைய மாதரின் ஒளி வியக்கத்தக்கது: நான் விரைந்து ஆகாயத்தில் பாய்ந்தபொழுது சூரியகிரணங்களும் என்னைச் சுடாமல் இருக்க, 'சபிக்கிறேன்' என்ற இவளுடைய இச்சிறு சொல் என்னைச் சுடுகின்றதே.*

சீதை: *பிராணநாதா! காத்தருளுங்கள்.*

ராவணன்: *(சீதையைத் தூக்கிக் கொண்டு) ஜனஸ்தானத்தில் தங்கும் ஓ தவசிகளே! இதோ ராவணனாகிய நான் சீதையைப் பலாத்*

காரமாகத் தூக்கிக் கொண்டு போகிறேன். ராமன் க்ஷத்திரியத் தன்மையில் ஆர்வமுடையவனாயின் தன் வீரச் செயல்களைக் காட்டட்டும்.

சீதை: நாதா! என்னைக் காப்பாற்றுங்கள்.

ராவணன்: (சுற்றி நடந்து பார்த்து) இதோ சிறகினின்று எழும் காற்றால் காடுகளைத் தகர்த்துக் கொண்டு பயங்கரமான அலகுடன் பாய்ந்து வருகிறான் சடாயு.

அடே! நில் அங்கே. உன் சிறகுகளை என் வாளால் வெட்டி யெறிந்து, உடலெல்லாம் உதிரம் பெருக உன்னை யமனிடம் அனுப்புகிறேன்.

ஐந்தாம் அங்கம் முற்றிற்று.

## ஆறாம் அங்கம்

(இரண்டு கிழத் தவசிகள் வருகிறார்கள்.)

**முதல் தவசி:** *வனவாசிகளே, சீதையைக் காப்பாற்றுங்கள்! காப்பாற்றுங்கள்!*

*இதோ, நீலத் தாமரை மாலை போல் இருண்ட ராவணன் தாமரை நூல் போல் வெள்ளிய வீரப் பற்கள் தெரியும் சிரிப்புடன் மானைக் கவருவது போல் சீதையைக் கொண்டு போகிறானே.*

**இரண்டாம் தவசி:** இதோ கொடிய ராவணன், துடிக்கும் பாம்பு போன்றும் நடுங்கும் பூங்கொடி போன்றும் வருந்தும் வைதேகியை, தவ வனத்தினின்றும், பலாத்காரமாகத் தவப் பயனை அபகரிப்பது போல் எடுத்துக் கவர்ந்துகொண்டு போகிறான்.

**இருவரும்:** *வனவாசிகளே! சீதையைக் காப்பாற்றுங்கள்! காப்பாற்றுங்கள்!*

**முதல் தவசி:** (மேலே நோக்கி) இதோ நாம் பேசி முடியு முன்னமே ஜடாயு, ''நான் இருக்கும்போது எங்கே போகிறாய்'' என்று கூறி ராவணனைப் போருக்கு அழைத்துத் தசரதரின் நிமித்தம் தன் கடமையைச் செலுத்த ஆகாயத்தில் பாய்ந்து கிளம்புகிறான்.

**இரண்டாம் தவசி:** இதோ ராவணன் கோபத்துடன் கண்களை உருட்டி விழித்துக்கொண்டு திரும்புகிறான்.

**முதல் தவசி:** *இதோ ராவணன்!*

**இரண்டாம் தவசி:** *இதோ ஜடாயு!*

**இருவரும்:** *ஆ! இருவரும் ஆகாயத்தில் போர் புரிகின்றனர்.*

**முதல் தவசி:** *காசிப, காசிப. இதோ பார் பக்ஷியரசன் பராக்கிரமத்தை. சிறகுகளால் பகைவனை ஓங்கி அறைந்து போராடுகிறான்; கோரமான அலகுகளால் சுற்றிச் சுற்றி வந்து குத்துகிறான்; இரும்பாணி*

போன்ற கூரிய நகங்களால் பகைவன் மார்பினின்றும் மாமிசங்களை, வஜ்ராயுதத்தால் பிளவுண்ட மலையினின்று பாறைகளைப் பெயர்ப்பது போல் பெயர்த்தெடுக்கிறான்.

இரண்டாம் தவசி: ஆ! என்ன கஷ்டம்! ராவணன் கடுஞ் சினம் கொண்டு வாளால் ஜடாயுவின் வலது தோளை வெட்டி எறிந்து விட்டான்.

இருவரும்: ஐயோ! பெருமை வாய்ந்த சடாயு பூமியில் விழுந்து விட்டான்.

முதல் தவசி: என்ன துன்பம்! ஜடாயு அரக்கர் கோனை விளை யாட்டு மயிலாக மதித்து, தனது வீரத்திற்கு இயைந்தபடி முயன்று பகைவன் செருக்கை அறுத்து, முடிவில் காட்டு யானையால் தாக்குண்ட மரம்போல் விழுந்து மாண்டான்.

இருவரும்: இவன் சுவர்க்கத்துக்கு உரியனாகட்டும்!

முதல் தவசி: காசிப, வா. இந்தச் செய்தியை ராமனிடம் போய்ச் சொல்வோம்.

இரண்டாம் தவசி: ஆகட்டும்! உடனே போய்ச் சொல்வோம்.

(போகிறார்கள். கஞ்சுகி வருகிறார்.)

கஞ்சுகி: இங்கே பொற்றோரணவாயிலைக் காப்பது யார்?

(துவாரபாலிகை வருகிறாள்.)

துவார: ஐயா, நான்தான் விஜயை. என்ன செய்ய வேண்டும்?

கஞ்சுகி: விஜயே, ராமரைக் காணும்பொருட்டு ஜனஸ்தானத் திற்குச் சென்ற சுமந்திரர் திரும்பி வந்திருக்கிறார் என்று இளவரசர் பரத ரிடம் உடனே தெரிவிக்க வேண்டும்.

துவார: ஐயா, சுமந்திரர் காரியம் நிறைவேறப் பெற்றுத்தானே வந்திருக்கிறார்?

கஞ்சுகி: அம்மா, எனக்கு அது தெரியாது. அவர் மனத்தில்

குமுறும் சோகத் தீயால் வாடிய முகத்துடன் வந்திருக்கிறார். அவரைப் பார்த்தால் என் உள்ளம் பதைக்கின்றது.

துவார: ஐயா இதைக் கேட்டால் என் மனமும் நடுங்குகிறது.

கஞ்சுகி: அம்மா! ஏன் நிற்கிறாய்? உடனே சென்று தெரிவி.

துவார: ஐயா, இதோ தெரிவிக்கிறேன்.

(போகிறாள்.)

கஞ்சுகி: (நோக்கி) இதோ மரவுரி உடுத்துப் பல வர்ணச் சடை புனைந்த இளவரசர், சுமந்திரர் வந்த செய்தியறிந்து மனமுவந்து இங்கே வருகிறார்.

இவர் சிறந்த குணங்கள் எல்லாம் நிறைந்தவர்; பகைவருக்குக் காலனைப் போன்றவர்; சீர்பெற்ற சூரிய குலத்திற்குத் திலகமாய் விளங்குபவர்; தேவேந்திரனைப் போன்ற பெருமை வாய்ந்தவர்; தமது ஆணையால் பூமி முழுவதும் ஆளுபவர்; இவர் சிறந்த யானை போன்ற நடையுடையவர்.

(பரதனும் துவாரபாலிகையும் வருகிறார்கள்.)

பரதன்: விஜயே, அப்படியா! பூஜ்யரான சுமந்திரர் வந்திருக்கிறாரா? நான் அண்ணன் திருவடிகளையும் உடன்படிக்கையின்படி அரசாட்சியையும் பெற்று வந்த பிறகு, சுமந்திரர் அவரைக் காணச் சென்றார். உலகத்தார் கண்ணையும் உள்ளத்தையும் மகிழ்விக்கும் என் முனைவரை அவர் பார்த்து வந்தாரா?

கஞ்சுகி: (அணுகி) குமாரருக்கு ஜயமுண்டாகட்டும்.

பரதன்: சுமந்திரர் எங்கே இருக்கிறார்?

கஞ்சுகி: பொற்றோரணவாயிலில்.

பரதன்: அவரை விரைவில் அழைத்துவர வேண்டும்.

கஞ்சுகி: உத்தரவு.

(போகிறான். சுமந்திரர் வருகிறார்.)

சுமந்திரர்: (துக்கம் தோன்ற) ஆ! என்ன துன்பம்! நான் அரசர் உயிர் துறந்ததைக் கண்டு துக்கித்தேன்; பிறகு, அரசிளங்குமரர் வனம் சென்றதைப் பார்த்து வருந்தினேன்; இப்போது சீதையை அரக்கன் கவர்ந்து சென்றான் என்று அறிந்து துன்புறுகிறேன். இப்படிப் பல விதமான ஆபத்துக்களைக் கண்டு வருந்தும்படி, நீடித்த என் உயிர் எத்தனை பெருங்குற்றம் செய்திருக்குமோ!

துவார: (சுமந்திரரை நோக்கி) ஐயா, வர வேண்டும். இளவரசர் இதோ இருக்கிறார், அருகில் செல்லுங்கள்.

சுமந்திரர்: (அணுகி) குமாரருக்கு ஜயமுண்டாகட்டும்!

பரதன்: தாதா தந்தைமீதுள்ள நேசத்திற்குச் சிறந்த உதாரண மாக விளங்குபவரைக் கண்டீரா? அருந்ததியின் கற்பு இரண்டாகப் பிரிந்தாற் போன்றவளைக் கண்டீரா? ஏதுவின்றியே வனவாசத்தை மேற்கொண்ட என் நல்லுடன்பிறப்பைப் பார்த்தீரா?

(சுமந்திரர் கவலையில் ஆழ்ந்திருக்கிறார்.)

துவார: ஐயா, இளவரசர் தங்களிடமன்றோ கேட்கிறார்?

சுமந்திரர்: அம்மா! என்னிடமா?

பரதன்: (மனத்துள்) இவர் துக்கத்தால் மதிமயங்கி உடல் மிக மெலிவுற்றிருக்கிறார். (வெளிப்படை) தாதா, தாங்கள் பாதி வழி சென்றவுடன் திரும்பிவிட்டீர்களோ?

சுமந்திரர்: குமார, உமது ஆணைப்படி ராமனைக் காணும் பொருட்டு ஜனஸ்தானத்திற்குப் பிரயாணமான நான் எப்படிப் பாதி வழி சென்று திரும்புவேன்?

பரதன்: அவர்கள் கோபத்தாலாயினும் வெட்கத்தாலாயினும் தங்களைப் பார்க்க விரும்பவில்லையா?

சுமந்திரர்: குமார, பணிவுடையோருக்குக் கோபம் ஏது? அறிவு முதிர்ந்தோருக்கு வெட்கம் ஏது? அவர்கள் இல்லாமற் பாழடைந்த தவ வனத்தை நான் கண்டேன்.

பரதன்: அவர்கள் எங்கே போனார்கள் என்று தெரிகின்றது?

சுமந்திரர்: குரங்குகள் வசிக்கும் கிஷ்கிந்தைக்குச் சென்றார் கள் என்று கேள்விப்பட்டேன்.

பரதன்: ஆ! மனிதரது குணாகுணங்களை அறியக் கூடாதவர் அல்லரோ வானரர்கள்? அங்கே மிகவும் வருந்துவார்களே!

சுமந்திரர்: குமார, விலங்குகளும் நன்றியறிகின்றனவே.

பரதன்: தாதா, எப்படி?

சுமந்திரர்: சுக்கிரீவனுடைய மனைவியை அபகரித்து அவனையும் நாட்டைவிட்டு வாலி துரத்தவே, காட்டில் வசித்து வந்த சுக்கிரீவனது சங்கடத்தை அவன்போன்ற துன்பமுடைய ராமன் நீக்கினான்.

பரதன்: தாதா, எப்படி? அவன் போன்ற துன்பமுடையவன் என்கிறீர்களே?

சுமந்திரர்: (மனத்துள்) ஆ! எல்லாவற்றையும் வெளிப்படுத்தி விட்டேனே! (வெளிப்படை) குமார, ஒன்றும் இல்லை. இருவரும் அரசுரிமை இழந்தவர் என்று சொன்னேன்.

பரதன்: தாதா, ஏன் ஒளிக்கிறீர்கள்? சுவர்க்கம் சென்ற தந்தை யின் திருவடிகளில் ஆணையிட்டுச் சொல்கிறேன். நீங்கள் உண்மை யைக் கூறவேண்டும்.

சுமந்திரர்: வேறு கதியில்லை. சொல்கிறேன். கேளும்: முனிவர் களுக்குத் துணைபுரிந்தது காரணமாக அரக்கருடன் பெரும் பகை நேர்ந்தது. பிறகு ராவணன் சீதையை வஞ்சனையால் கவர்ந்து சென்றான்.

பரதன்: எப்படி? கவர்ந்து சென்றானா?

(மூர்ச்சையாகிறான்.)

சுமந்திரர்: குமார, ஆறுதல் அடையும்.

பரதன்: (மூர்ச்சை தெளிந்து) ஆ! என்ன துன்பம! தந்தையை இழந்து, உறவினரைப் பிரிந்து காடெல்லாம் திரிந்து துன்புறும் என் தமையனார் இப்போது மனைவியும் பறிகொடுத்து மேகத்தில் மறைந்த

மதிபோல் ஒளி இழந்தார். ஆ! நான் என்ன செய்வேன்! இருக்கட்டும். தெரிந்தது. தாதா, என்னைப் பின்தொடருங்கள்.

சுமந்திரர்: உத்தரவு.

(இருவரும் சுற்றிலும் நடக்கிறார்கள்.)

சுமந்திரர்: குமார, அங்கே செல்லக்கூடாது. ராணிமார் தங்கும் 'நாலுகட்டு' அது.

பரதன்: எனக்கு அங்கேதான் காரியம். யார் ஐயா இங்கே முறைகாப்பது?

(துவாரபாலிகை வருகிறாள்.)

துவார: இளவரசருக்கு ஜயமுண்டாகட்டும்! இதோ நான் விஜயை.

பரதன்: விஜயே, நான் வந்திருக்கிறேன் என்று ராணியிடம் சொல்.

துவார: எந்த மகாராணியிடம் தெரிவிக்க வேண்டும்?

பரதன்: யார் நான் அரசனாக வேண்டுமென்று விரும்பினாளோ அவளிடம்.

துவார: (மனத்துள்) என்னவென்று தெரியவில்லையே! (வெளிப்படை) உத்தரவு. (போகிறாள்.)

(கைகேயும் துவாரபாலிகையும் வருகிறார்கள்.)

கைகேயி: விஜயே, பரதன் என்னைப் பார்க்க வந்திருக்கிறானா?

துவார: அரசி, ஆமாம். ஜனஸ்தானம் சென்ற சுமந்திரர் திரும்பி வந்திருக்கிறார். இளவரசர் அவருடன் தங்களைப் பார்க்க விரும்புகிறார்.

கைகேயி: பரதன் என்ன காரணத்தை முன்னிட்டு என்னைத் திட்டப் போகிறானோ?

துவார: அரசி, இளவரசர் இங்கே வரலாமா?

கைகேயி: போய் அழைத்து வா.

துவார: உத்தரவு. (அணுகி) இளவரசருக்கு ஜயமுண்டாகட்டும்! உள்ளே வரலாம்.

பரதன்: விஜயே, தெரிவித்தாயா?

துவார: ஆமாம்.

பரதன்: (சுமந்திரரை நோக்கி) தாதா நாம் உள்ளே செல்வோம்.

(கைகேயியிடம் செல்கிறார்கள்.)

கைகேயி: குழந்தாய், ராமனிடமிருந்து சுமந்திரர் வந்திருக்கிறார் என்று விஜயை சொல்லுகிறாள்.

பரதன்: அதைவிட உமக்குப் பிரியமான செய்தி ஒன்று சொல்லப் போகிறேன்.

கைகேயி: குழந்தாய். கோசலையும் சுமித்திரையையும் அழைத்து வரட்டுமா?

பரதன்: வேண்டாம். அவர்கள் கேட்கவேண்டிய சமாசாரம் அன்று.

கைகேயி: (மனத்துள்) என்ன சொல்வானோ தெரியவில்லையே! (வெளிப்படை) அப்பனே சொல்.

பரதன்: கேளும்: எவன் உமது ஆணையால் அரசுரிமையை இழந்து காட்டில் அலைகிறானோ, அவன் தன் மனைவியையும் பறிகொடுத்தான். இப்போது உமது விருப்பம் நிறைவேறிற்றா?

கைகேயி: ஆ!

பரதன்: ஐயோ! தீரர்களும் பலசாலிகளுமான இக்ஷ்வாகு மன்னருக்கு, மருமகளைப் பலர் அவமதித்தல் என்ற இழிவு கைகேயி மருமகளான காரணத்தால் நேர்ந்தது.

கைகேயி: *(மனத்துள்)* சொல்வதற்கு இதுதான் தக்க வேளை. *(வெளிப்படை)* குழந்தாய், மகாராஜாவுக்கு நேரிட்ட சாபம் உனக்குத் தெரியாது.

பரதன்: மகாராஜாவுக்கு எவர் சாபமிட்டார்?

கைகேயி: சுமந்திரரே, விரிவாகச் சொல்லும்.

சுமந்திரர்: அம்மா, உத்தரவு. குமார, கேட்க வேண்டும்: பண்டொருநாள், மகாராஜா வேட்டைக்குச் சென்றபொழுது இளந் தவசியொருவர் குளத்தில் இறங்கிக் குடத்தில் நீர் மொள்ளுகையில் உண்டான ஒலியைக் கேட்டுக் காட்டு யானையின் கர்ச்சனை என்று எண்ணி, அவ்விடம் நோக்கிச் சத்தத்தைக் கொண்டே குறியறியும் அம்பை எய்து, ஒரு முழுக் குருடரான மகரிஷியின் கண்ணைப் போன்றிருந்த முனிகுமாரனைக் கொன்றார்.

பரதன்: கொன்றாரா? சிவ! சிவ! பிறகு?

சுமந்திரர்: தம் குமாரன், இப்படிக் கொல்லப்பட்டதை அறிந்து, கண்ணீர் வடித்துப் பொய்யா மொழியான அம் மகரிஷி, 'என்னைப்போல் நீயும் புத்திர சோகத்தால் உயிரை இழப்பாய்' என்று சாபமிட்டார்.

பரதன்: இது தீராத் துன்பமாயிற்றே!

கைகேயி: குழந்தாய், இந்தச் சாபம் நிறைவேறும் பொருட்டே குற்றத்தை என்மேலிட்டுக் குழந்தை ராமனை வனத்திற்கு அனுப்பி னேன். தவிர்க்கக்கூடாத மகரிஷி சாபம் புத்திரன் பிரிவாலன்றி நீங்காது.

பரதன்: புதல்வன் பிரிவு சமமாயிருக்க, என்னை ஏன் வனத் திற்கு அனுப்பி இருக்கக்கூடாது?

கைகேயி: நீ மாமன் வீட்டில் தங்கியதால் உன் பிரிவு முன்பே இருந்ததே.

பரதன்: பதினான்கு வருஷம் என்று நிச்சயித்ததற்குக் காரணம் என்ன?

கைகேயி: பதினான்கு நாள் என்று சொல்ல எண்ணினேன்; மதிமயக்கத்தால் பதினான்கு வருஷம் என்று வந்துவிட்டது.

பரதன்: யோசித்துப் பேசுவதில் மிகுந்த திறமை! (சுமந்திரரை நோக்கி) இது வசிஷ்டர் முதலான பெரியோர்களுக்குத் தெரியுமா?

சுமந்திரர்: வசிஷ்டர், வாமதேவர் முதலான அனைவரும் அறிந்து சம்மதித்ததே இது.

பரதன்: ஆ! மூவுலகுக்கும் சாக்ஷிகளாய் விளங்குபவரல்லரோ இப்பெரியோர்கள்! தெய்வாதீனம், என் தாய் குற்றமற்றவள். அம்மா, சோதர வாஞ்சையால் கோபமூண்டு செய்த பிழையெல்லாம் பொறுத் தருளுங்கள் அம்மா, வந்தனம் செய்கிறேன்.

கைகேயி: என் அன்பே, குழந்தையின் பிழையைப் பொறாத தாயும் உண்டோ? எழுந்திரு. இதில் என்ன பிழை உள்ளது.

பரதன்: அம்மா, உமது அநுக்கிரகம். தங்களிடம் விடை பெற்றுக் கொள்கிறேன்.

நான் இப்பொழுதே தமையனாருக்குத் துணைபுரிதற்குச் சிற்றரசர் அனைவரையும் ஒருப்படுத்துகிறேன். இப்போதே சேனை யெல்லாம் தங்குவதற்குக் கடற்கரையில் பாசறையமைத்து மதயானை களால் இருளுறச் செய்கிறேன். குதித்தெழும் சேனைகளை இறக்கிக் கடலையும் ராவணன் மதத்தையும் ஒருங்கே கலக்குகிறேன்.

விஜயே, ஏதோ சப்தம் கேட்கிறதே, என்னவென்று தெரிந்து வா.

துவார: இளவரசருக்கு ஜயமுண்டாகட்டும்! கோசலை மகாராணி இச்செய்தியைக் கேட்டு மயக்கமுற்றாள்.

கைகேயி: ஆ!

பரதன்: என்ன! என் தாய் மயக்கமுற்றாளா?

கைகேயி: குழந்தாய், வா. கோப்பெருந்தேவியைத் தேற்றுவோம்.

பரதன்: உத்தரவு.

(எல்லோரும் போகிறார்கள்.)

ஆறாம் அங்கம் முற்றிற்று.

## ஏழாம் அங்கம்

(ஒரு முனிவர் வருகிறார்.)

முனிவர்: நந்திலக, நந்திலக.

(நந்திலகன் வருகிறான்.)

நந்திலகன்: ஐயா, என்ன வேண்டும்?

முனிவர்: குலபதி தெரிவிக்கிறார்; ''ராமபிரான் தம் மனைவியைக் கவர்ந்து சென்று உலக மூன்றையும் அழிக்க முயன்ற ராவணனை வதம்செய்து, அரக்கரது தீயவழிக்கு எதிராய்ச் சற்குணங்கள் எல்லாம் நிறைந்து விளங்கும் விபீஷணரை இலங்கைக்கு அரசாக முடிசூட்டி, தேவரும் முனிவரும் பரிசுத்தமானவள் என்று புகழ்ந்து போற்றும் சீதையுடன், அரக்கர் தலைவரும் வானர வீரரும் புடைசூழச் சரத் காலத்துச் சந்திரன்போல் இங்கே தோன்றப் போகிறார். அதனால் இவ்வாசிரமத்திற்குரிய சிறப்புக்களால் அவரை உபசரிப்பதற்கு வேண்டுவனவெல்லாம் சித்தமாகட்டும்'' என்று சொல்கிறார்.

நந்திலகன்: ஐயா, எல்லாம் சித்தமாகிவிட்டன; ஆனால்....

முனிவர்: ஆனால் என்ன?

நந்திலகன்: விபீஷணருடன் வருபவர்கள் ராட்சதர்கள். அவர்களுடைய உணவைப் பற்றிக் குலபதிதான் தீர்மானிக்க வேண்டும்.

முனிவர்: ஏன்?

நந்திலகன்: அவர்கள் கடித்துத் தின்பார்கள்.

முனிவர்: இவ்வளவுதானா? கவலைப்பட வேண்டாம். அரக்கர்கள் விபீஷணர் சொற்படியே நிற்பார்கள்.

நந்திலகன்: குணசீலனான அரக்கனுக்கு நமஸ்காரம்.

(போகிறான்.)

முனிவர்: *(பார்த்து)* இதோ பெருமைவாய்ந்த ராமர்! மக்களிற் சிறந்தோய் வாழ்க! நின் பகைவராய் வருவோர் மாள்க! நிலமுழுவதும் நின் ஒரு குடைக்கீழ்த் தங்குக!

*இவ்வாறு முனிவர் பலர் மனமுவந்து புகழ, விமானத்தினின்று கீழே இவர் இறங்குகிறார். சுவாமி, தங்களுக்கு ஜயமுண்டாகட்டும்!*

*(போகிறார்.)*

*(ராமர் வருகிறார்.)*

ராமன்: நான் வலியாலும் வீரத்தாலும் செருக்குற்ற ராவணனைக் கொன்று, குணங்கள் நிரம்பிப் புனிதையாக விளங்கும் சீதையை மீண்டும் பெற்று, தந்தையின் வாக்கையும் குறைவற நிறைவேற்றி, முனிஜனங்கள் தங்கும் வனத்தை மீண்டும் அடைந்தேன்.

தவமாதரை வணங்க உள்ளே சென்ற ஜானகி ஏன் இன்னும் வரவில்லை? *(பார்த்து)* இதோ! ''வைதேகி! தோழி! சீதே! ஜானகி! குழந்தாய்!'' என்று இவ்வாறு முனிபத்தினிகள் தமது வயதுக்கு இசைந்தபடி அன்புடன் அழைக்க, அவர்களுடன் இவள் சல்லாபம் செய்து கொண்டு மெல்ல நடந்து வருகிறாள்.

*(சீதையும் ஒரு தவமாதும் வருகிறார்கள்.)*

தவமாது: சகி, இதோ இருக்கிறார் உன் நாதர். நீ அவர் அருகிலே இரு. எங்களுக்கு உன்னைத் தனிமையாகப் பார்க்க முடியவில்லை.

சீதை: என்ன? என் நாதர் அருகில் இருக்கும் போதும் நான் நம்பிக்கை அற்றவளாக இருக்கிறேன். *(ராமனை யணுகி)* என் நாதருக்கு ஜயம் உண்டாகட்டும்!

ராமன்: மைதிலி, இது நாம் முன்பு தங்கியிருந்த ஜனஸ்தானம் என்று ஞாபகம் இருக்கிறதா? இங்கு நம் குழந்தைகளாகப் பாவித்து வந்த மரங்கள் இன்னவை என்று தெரிகின்றனவா?

சீதை: தெரிகின்றன. முன்பு நாம் எவைகளைக் குனிந்து பார்த்தோமோ, அவைகளே இப்போது நிமிர்ந்து பார்க்கும்படி உயர்ந்து வளர்ந்திருக்கின்றன.

ராமன்: அது இயல்புதானே? பள்ளம் மேடாவதும் மேடு பள்ளமாவதும் காலத்தின் போக்கு. மைதிலி, இந்த ஏழிலைப்பாலையின் அடியில் வெள்ளாடை உடுத்த பரதனைக் கண்டு, மான்கூட்டம் பயந்தோடியது நினைவில் இருக்கிறதா?

சீதை: நாதா, நினைவு நன்றாக இருக்கிறது.

ராமன்: இதுவே நமது தவத்திற்குச் சாக்ஷியாயிருந்த பெரிய ஏரி. பிதாவின் சிராத்த கருமத்தைப் பற்றி இங்கிருந்து நாம் யோசிக்கும் போதுதான் காஞ்சனபார்சுவம் என்ற மான் காணப்பட்டது.

சீதை: நாதா, போதும் அதைப் பற்றி பேசியது.

(பயந்து நடுங்குகிறாள்.)

ராமன்: மைதிலி, அச்சப்படாதே. அந்தக் காலம் எப்பொழுதோ போய்விட்டது. (நாற்புறமும் நோக்கி) இருப்பைப் பூப்போல் வெண்ணிறமான பொடி எங்கிருந்து உயரக் கிளம்பிக் காற்றடிபட்டு நாலு திசைகளையும் மறைக்கின்றது? கம்பீரமான முரசொலியும் சங்கநாதமும் ஒன்றுசேர்ந்து இந்த வனாந்தரத்தையும் ஒரு நாட்டுப்புறமாகச் செய்கின்றன?

(லக்ஷ்மணன் வருகிறான்.)

லக்ஷ்மணன்: ஆர்யருக்கு ஜயமுண்டாகட்டும்! அண்ணா, சகோதரர் மீது நேசமுற்ற பரதன் பெரிய சேனையையும் தாய்மார் மூவரையும் அழைத்துக் கொண்டு மிகுந்த ஆவலுடன் உம்மைத் தரிசிக்க வந்திருக்கிறான்.

ராமன்: லக்ஷ்மணா, என்ன? பரதன் வந்திருக்கிறானா?

லக்ஷ்மணன்: அண்ணா, ஆமாம்.

ராமன்: மைதிலி, உன் மாமியார் மூவரையும் அழைத்துக் கொண்டு பரதன் வந்திருக்கிறான். அவர்களைக் காண உன் கண்களை விசாலப்படுத்திக்கொள்.

சீதை: நாதா, தக்க வேளையில்தான் பரதன் வந்திருக்கிறான்.

(பரதனும் ராணிகளும் வருகிறார்கள்.)

பரதன்: துயர் அனைத்தும் நீக்கிப் பெரிய காரியங்கள் பல நிறைவேற்றி, மேகத்தினின்று வெளிவந்த சரத் காலத்துச் சந்திரன்போல் விளங்கும் என் தமையனார் அன்னை ஜானகியுடன் திரும்பி வந்தார் என்று கேள்வியுற்று மனமுவந்து நான் தாய்மாருடன் அவரைக் காண இங்கே வந்தேன்.

ராமன்: அன்னைமார்களே, உங்கள் அனைவரையும் நான் வணங்குகிறேன்.

ராணிகள்: குழந்தாய், சிரஞ்சீவியாயிரு. தந்தை வாக்கை நிறைவேற்றி எங்கள் மருமகளுடன் நீ க்ஷேமமாகத் திரும்பிவந்ததைக் காணக் கிடைத்தது எங்கள் பாக்கியம்.

ராமன்: உங்கள் அனுக்கிரகம்.

லக்ஷ்மணன்: என் தாய்மாருக்கு நமஸ்காரம்.

ராணிகள்: குழந்தாய், நீடுழி வாழ்க!

சீதை: என் மாமியர் அனைவரையும் நான் வணங்குகிறேன்.

ராணிகள்: குழந்தாய், தீர்க்க சுமங்கலியாயிரு.

சீதை: உங்கள் அனுக்கிரகம்.

பரதன்: அண்ணா, பரதன் வணங்குகிறேன்.

ராமன்: இக்ஷ்வாகு மன்னர் குலக்கொழுந்தே, வா, வா; உனக்கு மங்களம் உண்டாகட்டும்! நீண்டு திரண்ட உன் கைகளால் கதவுபோல் விரிந்த உன் மார்பில் என்னை அணைத்துக்கொள். சரத் காலத்தில் விளங்கும் மதிபோன்ற உன்முகத்தை உயர்த்திச் சோகத்தால் தவிக்கும் என் உடம்பைக் குளிரச்செய்.

பரதன்: தங்கள் அனுக்கிரகம். (சீதையை நோக்கி) அம்மா, பரதன் வணங்குகிறேன்.

சீதை: என் நாதருக்கு உற்ற துணையாக நீ வெகுகாலம் வாழ்வாயாக!

பரதன்: உமது அனுக்கிரகம். (லக்ஷ்மணனை நோக்கி) அண்ணா, வணங்குகிறேன்.

லக்ஷ்மணன்: என் அன்பே, வா, வா; சிரஞ்சீவியாயிரு. என்னைத் தழுவிக்கொள்.

(தழுவுகிறான்.)

பரதன்: அனுக்கிரகம். (ராமனை நோக்கி) அண்ணா, அரசாட்சியைத் திரும்ப ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ராமன்: குழந்தாய், அதென்ன?

கைகேயி: என் அன்பே, இது நாங்கள் வெகுகாலமாகக் காப்பாற்றி வரும் விருப்பம்.

(சத்துருக்னன் வருகிறான்.)

சத்துருக்னன்: பலவிதத் துன்பங்களால் அடிபட்டும் குணமும் ஒளியும் குன்றாமல் விளங்கும் என் தமையனாரைக் காண என் மனம் விரைகின்றது. (அணுகி) அண்ணா, சத்துருக்னன் வணங்குகிறேன்.

ராமன்: குழந்தாய், சிரஞ்சீவியாயிரு.

சத்துருக்னன்: அனுக்கிரகம். (சீதையை நோக்கி) அம்மா வணங்குகிறேன்.

சீதை: குழந்தாய், சிரஞ்சீவியாய் இரு.

சத்துருக்னன்: அண்ணா, இதோ வசிட்டர், வாமதேவர் முதலியவர்கள் அமைச்சருடன் அபிஷேகத்தை முன்னிட்டுத் தங்களைக் காண விரும்புகிறார்கள். பற்பல நதிகளிலிருந்தும் தீர்த்தங்களிலிருந்தும் முனிசிரேஷ்டர், தாமே கொணர்ந்த புனித நீரால் முதலில் உங்களுக்கு அபிஷேகம் செய்து தண்ணீர் தெளித்த தாமரை போன்ற உங்களது திருமுகத்தைக் காண விரும்புகின்றனர்.

கைகேயி: குழந்தாய், சென்று அபிஷேகத்தை ஏற்றுக்கொள்.

ராமன்: அம்மா, தங்கள் ஆணைப்படி செய்கிறேன்.

(போகிறான்.)

*(திரைக்குள்) ஜய! விஜயீபவ! மகாராஜா!*

கைகேயி: புரோகிதர், நகரவாசிகள் முதலியோர் வெற்றி ஆர வாரத்துடன் என் புதல்வனை வாழ்த்துகின்றனர்.

*(திரைக்குள்) ஜனஸ்தானத்தில் வசிக்கும் முனிவர்களே, கேளுங்கள்.*

சூரியன் கிரணங்களால் இருளை நீக்குவதுபோல் ராமர் அரக்கர் அனைவரையும் வீரத்தால் அழித்து, மங்களமே உருவாய் வந்த சீதையையும் பெற்று, உலகமெல்லாம் மகிழும்படி பூமியில் மேன்மையுற்று விளங்குகிறார்.

கைகேயி: ஆச்சரியம்! என் புதல்வனது பட்டாபிஷேகத் திருவிழாவில் ஜயகோஷம் வளர்கின்றது.

*(ராமர் அபிஷேகம் செய்யப்பெற்றுப் பரிவாரத்துடன் வருகிறார்.)*

ராமன்: (ஆகாயத்தை நோக்கி) என் தந்தையே, தாங்கள் இப்போது சுவர்க்கத்திலாயினும் கவலையொழிந்து சந்தோஷத்துடன் இருங்கள். என்னை அரசனாக்கி முடிசூட்ட வேண்டுமென்ற தங்கள் விருப்பம் இதோ நிறைவேறிவிட்டது. அரசாட்சி என்ற பெருஞ் சுமையை நான் சிரமேற்கொண்டு அறநெறியில் நின்று உலகைக் காக்க ஆயத்தமாயிருக்கிறேன்.

பரதன்: என் தமையனார் இப்பொழுது அரசர் என்று பெயர் பெற்றனர்; குடைபிடித்து மகுடம் சூட்டிப் புனித நீரால் அபிஷேகம் செய்து ஜனங்கள் யாவரும் தொழுது நிற்க, அரச பதவிக்குரிய அழ குடன் புது மதிபோல் விளங்கும் ஆரியரைக் காணக் காண என் கண் களின் ஆசை அடங்கவில்லை.

சத்துருக்கனன்: சந்திரன் உதிக்கும்போது உலகம் விளங்குவது போல, எம் முன்னவர் முடிசூட்டப் பெற்றதால் எங்கள் குலம் மாசற்ற தாயிற்று.

ராமன்: தம்பி, லக்ஷ்மணா, நான் அரசாட்சியைப் பெற்றுக் கொண்டேன்.

லக்ஷ்மணன்: தெய்வாதீனம், உமது பாக்கியம்.

(கஞ்சுகி வருகிறான்.)

கஞ்சுகி: அரசர் பெருமான் வெற்றிபெறுக! இதோ சிறப்புற்ற விபீஷணரும், சுக்கிரீவன், நீலன், மைந்தன், ஜாம்பவான், அனுமான் முதலான வானர வீரரும் தங்கள் பாக்கியத்தை வாழ்த்துகின்றனர்.

ராமன்: எல்லாம் நண்பர்களின் பேருதவியால் என்று சொல்

கஞ்சுகி: உத்தரவு.

கைகேயி: குழந்தாய், என் ஆசைகள் நிறைவேறின. ஆனால் இந்தத் திருவிழாவை நான் அயோத்தியில் பார்க்க விரும்புகிறேன்.

ராமன்: அவ்விதமே ஆகட்டும். (பார்த்து) இதென்ன? இவ்வனம் சூரியன்போல் எங்கும் பிரகாசிக்கின்றது. (யோசித்து) ஆமாம். தெரிந்தது. ராவணனது புஷ்பக விமானம் ஆகாயத்தில் வந்து விட்டது. நினைத்த வுடன் அது வரவேண்டுமென்பது உடன்படிக்கை. இப்போது எல் லோரும் விமானத்தில் ஏறிக்கொள்ளுங்கள்.

(எல்லோரும் ஏறுகின்றனர்.)

ராமன்: உற்றாரும் உறவினரும் உடன்வர இன்றே நான் அயோத்திக்குச்செல்கிறேன்.

லக்ஷ்மணன்: நகரவாசிகள், உதயகிரியில் நட்சத்திரங் களுடன் தோன்றும் சந்திரனைக் கண்டு களிப்பதுபோல் இன்றே தங்களைக் கண்டு களிக்கட்டும்.

(நடிகர் கூற்று)

ராமர் ஜானகியோடும் உறவினரோடும் கூடியது போல். எங்கள் அரசன் திருவுடன் கூடிப் பூமியை ஆளட்டும்!

(எல்லோரும் போகிறார்கள்.)

நாடகம் முற்றிற்று.

★ ★

# ஸ்வப்ன வாசவதத்தம்

# ஸ்வப்ன வாசவதத்தம்

அல்லது

# கனவில் கண்ட வாசவதத்தை

## அங்கம் - 1

(நாந்தியின் முடிவில் சூத்திரதாரன் வருகிறான்.)

சூத்திர: பெரியோர்களிடம் ஓர் விஞ்ஞாபனம் செய்துகொள்கிறேன். ஆ, இதென்ன? நான் தெரிவிக்கப் புறப்படும்போதே சப்தம் கேட்கிறதே. இருக்கட்டும்; என்னவென்று அறிகிறேன்.

(திரைக்குள்)

விலகுங்கள் ஐயா! விலகுங்கள்!

சூத்திர: சரிதான், தெரிந்தது. இதோ மகத அரசனது கன்னிகை வருகிறாள். அவளுடன் சேவகர்கள் தவ வனத்திலுள்ள சாதுக்கள் அனைவரையும் துணிவோடு விலக்குகிறார்கள். (போகிறான்.)

(ஸ்தாபனை முற்றிற்று.)
(இரண்டு சேவகர்கள் வருகிறார்கள்.)

சேவகர்: விலகுங்கள் ஐயா! விலகுங்கள்!

(துறவி வேஷம் பூண்ட யௌகந்தராயணனும் அவந்தி நாட்டு மாது வேஷம் பூண்ட வாசவதத்தையும் வருகிறார்கள்.)

யௌக: (காது கொடுத்துக்கேட்டு) என்ன! இங்கேயும் விலக்குகிறார்களே! இவ்வாசிரமத்தில் வசிப்பவர் தீரராம் முனிவர்; மரவுரி உடுப்பவர்; காட்டிலுள்ள காய்கனிகளைத் தின்று காலம் கழிப்பவர்; யாவராலும் போற்றத் தகுந்தவர்; இந்தத் தபோதனர்களையும் நடுங்கச் செய்கிறார்களே! யார் இவன்? நிலையற்ற செல்வத்தால் செருக்குற்று, மதிமயங்கி, முரடர்களான சேவகர்களால் தன் ஆக்ஞையைச் செலுத்திச் சாந்தமான இந்தத் தவ வனத்தையும் ஓர் நாட்டுப்புறமாகச் செய்கிறானே!

வாச: ஐயா, யார் நம்மை விலக்குகிறது?

யௌக: அறநெறியினின்றும் தன்னை விலக்கிக் கொள்ளும் ஒருவன்தான்.

வாச: ஐயா, அதுவல்ல நான் சொல்லவந்தது. நானும் விலக்கப்படும்படி ஆயிற்றே என்றுதான்.

யௌக: அம்மா, இன்னார் என்று தெரியாதபோது தேவதை களுக்கும் இப்படி அவமானம் நேரிடுகிறது.

வாச: ஐயா, இந்த அவமானந்தான் என்னைத் துன்பப் படுத்துகிறது. வழி நடக்கும் சிரமங்கூட எனக்கு அவ்வளவு இல்லை.

யௌக: அம்மா, இந்தப் பாக்கியங்களெல்லாம் நீ அநுபவித்துத் துறந்தவைதாமே! கிலேசப்படுதற்குரிய காரியமல்லவே. முன் நீயும் பரிவாரத்துடன் களிப்புற்று நடந்தது உண்டு. நம் அரசர் வெற்றிபெற்ற பிறகு, யாவரும் புகழும்படி மீண்டும் இந்தப் பதவியை அடைவாய்; ஏனெனில் இவ்வுலகில் பாக்கியமென்பது சகடக் கால்போல் கீழ்மேலாய், மேல்கீழாய்ச் சுழன்றே செல்வதாகும்.

சேவ: விலகுங்கள் ஐயா, விலகுங்கள்.

(கஞ்சுகி வருகிறான்.)

கஞ்சுகி: சம்பழகா, விலக்காதே, விலக்காதே! அரசர் பெருமா னுக்கு வீணாகப் பழியை விளைக்காதே. ஆசிரமவாசிகளிடம் கடுஞ் சொல் பேசுதல் தகாது. நகரத்தில் வழங்கும் இத்தகைய அவமதிப்பை ஒழித்தற்கன்றோ நன்மனமுடைய இப்பெரியோர்கள் காட்டில் வந்து காலம் கழிக்கிறார்கள்.

சேவ: அப்படியே, ஐயா! (போகிறார்கள்.)

யௌக: நல்ல வேளை; இவன் அறிவுள்ளவனாகத் தோன்று கிறான். அம்மா, நாம் இவன் அருகே செல்வோம்.

வாச: ஐயா, அப்படியே.

யௌக: (அடுத்துச் சென்று) ஏன் ஐயா, ஜனங்களை இப்படி விலக்குகிறார்கள்.

கஞ்சுகி: தவமுனிவரே!

யௌக: (தனக்குள்) தவமுனிவர் என்பது நல்ல சொல்தான். ஆனாலும் இப்போது புதிதாகக் கேட்பதால் என் மனத்துக்குப் பொருந்த வில்லை.

கஞ்: கேளும் ஐயா, இவள் எங்கள் இளவரசி பத்மாவதி. பெரியோர்களால் தர்சகன் என்று அழைக்கப்படும் எங்கள் மகாராஜா வின் சகோதரி. இந்த ஆசிரமத்தில் எழுந்தருளியிருக்கும் தன் தாயாகிய பெருந்தேவியை வணங்கிவிட்டு, அவரிடம் விடைபெற்று, மீண்டும் ராஜகிருகத்துக்குப் போவாள். இன்று அவள் இங்கே தங்கியிருக்க விரும்புகிறாள். அதனால் நீங்கள் தீர்த்தம், சமித்து, மலர், தருப்பை முதலான தவச் செல்வங்களை இங்கிருந்து தடையின்றிப் பெற்றுக் கொள்ளலாம். ராஜகுமாரி, தருமத்தில் விருப்பமுடையவள். அதற்கு இடையூறு வரப் பொறுக்கமாட்டாள். இது அவள் குல தருமம்.

யௌக: (தனக்குள்) அப்படியா? இவள்தானா மகத ராஜகுமாரி பத்மாவதி? எங்கள் அரசரது தேவியாக அமைவாள் என்று புஷ்பக பத்ரகர் முதலான சித்தர்கள் கூறியது இவளைத்தானா? அரசனுடைய ராணியாக விரும்பும்போதே எனக்கு இவளிடம் மிக்க உரிமை தோன்றுகிறது; விருப்பும் வெறுப்பும் உண்டாவதற்கு மனமே காரணம்.

வாச: (தனக்குள்) இளவரசி என்றதும் எனக்கு இவளிடம் சகோதர வாஞ்சை உண்டாகிறது.

(பரிவாரத்துடன் பத்மாவதியும் சேடியும் வருகிறார்கள்)

சேடி: வரவேண்டும் இளவரசி, இதோ ஆசிரமம். உள்ளே போங்கள்.

(வாசலருகே ஒரு தவமாது உட்கார்ந்திருக்கிறாள்.)

தவ: வா, ராஜகுமாரி! உனக்கு நல்வரவாகட்டும்!

வாச: (தனக்குள்) இவள்தானா அந்த ராஜகுமாரி! குலத்துக் கிசைந்த அழகு.

பத்மா: ஆர்யே, வந்தனம் செய்கிறேன்.

தவ: சிரஞ்சீவியாக இரு, குழந்தாய்! உள்ளே வா. தவ வனம் என்பது விருந்தினருடைய சொந்த வீடுதான்.

பத்மா: ஆமாம், ஆர்யே; எனக்குக் கூச்சம் ஒன்றும் இல்லை. உமது உபசார மொழியினாலேயே அநுக்கிரகம் ஆயிற்று.

வாச: (தனக்குள்) உருவம் மட்டும் அல்ல; இவளது பேச்சும் மிக இனிது.

தவ: (சேடியை நோக்கி) ராஜகுமாரியை மணம் புரிய ஓர் அரசனும் வரவில்லையா?

சேடி: உஜ்ஜயினியில் பிரத்யோதனன் என்று ஓர் அரசர் இருக்கிறார். அவர் தம் புதல்வனுக்காகத் தூது அனுப்பியிருக்கிறார்.

வாச: (தனக்குள்) நல்லது; இவள் இப்போது எனக்கு உறவாகி விட்டாள்.

தவ: இந்தச் சம்பந்தம் இவளுக்குத் தக்கதே. இரண்டு அரசர் குலங்களும் பெருமையால் பெயர் பெற்றவைகள்.

பத்மா: (கஞ்சுகியை நோக்கி) ஐயா, எனக்கு அருள்புரிய முனிவர் யாரேனும் இருக்கிறார்களா? அவர்களுக்கு யாது விருப்ப மென்று அன்போடு வினவி, அதைப் பெற்றுக்கொள்ளும்படி பிரார்த்தியும்.

கஞ்: அம்மா ஆக்கினைப்படி செய்கிறேன். (முனிவர்களை நோக்கி) இந்த ஆசிரமத்தில் இருக்கும் முனிவர்களே, கேட்டருளுங்கள். மகத ராஜகுமாரி பத்மாவதி, அன்பார்ந்த தங்கள்பால் அன்புடைய வளாய்த் தவத்துக்குரிய சாதனங்களைத் தாங்கள் பெற்று, அவளுக்குப் புண்ணியம் அளிக்கும்படி தங்களை வழிபடுகிறாள். யாருக்கு கலசம் வேண்டும்! யாருக்கு வஸ்திரம் வேண்டும்? கல்வி முடிந்தபின் குரு தக்ஷிணை கொடுக்க, யாருக்குப் பொருள் வேண்டும்? அறத்தில் விருப்ப முடைய எங்கள் ராஜகுமாரி தங்கள் திருவருளை நாடுகிறாள். ஆதலால் விருப்பத்தைத் தெரிவித்தருள்வீராக.

யௌக: (தனக்குள்) நல்லவேளை! எனக்கு ஒரு வழி கிடைத்தது. (வெளிப்பட) ஐயா, நான் ஒரு யாசகன்.

பத்மா: நல்லது. நான் இந்தத் தவ வனத்துக்கு வந்ததன் பயன் கைகூடிற்று.

தவ: இந்த ஆசிரமத்தில் உள்ளவர்கள் ஒன்றிலும் பற்றற்ற வர்கள். இவர் இங்கே புதிதாக வந்தவராக இருத்தல் வேண்டும்.

கஞ்: ஐயா, தங்களுக்கு என்ன தேவை?

யௌக: (வாசவதத்தையைக் காட்டி) இவள் என் சகோதரி. கணவனைப் பிரிந்தவள். ராஜகுமாரி இவளைச் சில காலம் காப்பாற்ற வேண்டுகிறேன். இதுவன்றி எனக்குப் பொருள், வஸ்திரம் முதலிய வற்றால் ஆவது ஒன்றும் இல்லை. நான் ஜீவனத்தின் பொருட்டுத் துறவி வேஷம் பூண்டவனும் அல்ல. மன உறுதியுடைய இந்த அரச குமாரி அறநெறி அறிந்தவள்; என் சகோதரியின் கற்பைக் காக்க வல்லவள்.

வாச: (தனக்குள்) ஆகா, மந்திரி! இவளை எனக்குப் புகலிட மாக்க விரும்புகிறார். இருக்கட்டும், ஆராயாமல் ஒன்றும் செய்ய மாட்டார்.

கஞ்: (பத்மாவதியை நோக்கி) இறைவி, இவரது வேண்டுகோள் கடுமையாக இருக்கிறதே! எவ்வாறு இணங்குவது? பொருள் கொடுக்க லாம்; உயிர் கொடுக்கலாம்; தவம் கொடுக்கலாம்; பிற யாவும் கொடுத்து விடலாம். ஆனால் அடைக்கலப் பொருளைக் காப்பாற்றிக் கொடுப்பது மிகக் கடினமாகுமே!

பத்மா: யாருக்கு என்ன வேண்டுமென்று ஆடம்பரமாகக் கேட்டுவிட்டுப் பிறகு அதைப்பற்றி யோசித்தல் உசிதமல்ல. அவர் விருப்பப்படி செய்ய வேண்டியதுதான்.

கஞ்: பெருமைக்குப் பொருந்திய சொல்!

சேடி: இப்படித் தன் வாக்கைக் காப்பாற்றுகிற இளவரசி நீடுழி வாழட்டும்!

தவ: செல்வமே, சிரஞ்சீவியாக இரு.

கஞ்: (பத்மாவதியை நோக்கி) அம்மா, அப்படியே செய் கிறேன். (யௌகந்தராயணனை நெருங்கி) ஐயா, உமது சகோதரியைப் பாதுகாக்க இளவரசி உடன்பட்டாள்.

யௌக: ராஜகுமாரியின் அநுக்கிரகம். (வாசவதத்தையை நோக்கி) அம்மா, அரசியிடம் சொல்.

வாச: வேறென்ன செய்வேன்? ஏழை, நான் போகிறேன்.

பத்மா: வரவேண்டும் அம்மா, இப்போது நீ நம்மவள் ஆகி விட்டாய்.

தவ: இவ்வழகிய உருவத்தைக் கண்டு இவளும் ஓர் ராஜகுமாரி என்றே நினைக்கிறேன்.

சேடி: தாங்கள் சொல்வது சரிதான். இவள் சுகமாக வளர்ந் தவள் என்று எனக்கும் தோன்றுகிறது.

யௌக: (தனக்குள்) அப்பாடா! பாரத்தில் பாதி குறைந்தது. மந்திரிகள் ஊகித்தபடியே நமது காரியம் கைகூடி வருகிறது. இழந்த நாட்டை நமது மன்னர் மீண்டும் பெற்றவுடன் அவரிடம் நான் வாசவ தத்தையை ஒப்பிக்கும்போது அவள் கற்புக்கு அம் மகதவரசன் புதல்வி ஒரு சிறந்த சாட்சியாவாள். ஏனெனில் அரசருக்குத் துன்பம் விளையு மென்று மொழிந்த சித்தர்கள், பத்மாவதி அவரது தேவியாவாள் என்றும் கூறினார்கள். சித்தர் மொழியை நம்பியே நான் இவ்விதம் செய் கிறேன். ஏனென்றால் அம்மொழி ஒருநாளும் பொய்த்ததில்லை; ஊழ்வினையும் அதற்கு எதிராகப் போனதில்லை.

(ஒரு பிரம்மசாரி வருகிறான்)

பிரம்மசாரி: (ஆகாயத்தை நோக்கி) உச்சிப்பொழுது ஆய் விட்டது. மிகவும் களைப்பாக இருக்கிறது. எங்கே இளைப்பாறுவேன்? (உலாவி) இதோ காணப்படுவது ஒரு தவ வனமாக இருத்தல் வேண்டும். மான்கள் அவைகளுடைய சொந்த இருப்பிடம் என்ற நம்பிக்கையால் பயமின்றி யதேச்சையாகத் திரிகின்றன. மலர்களும் கனிகளும் நிரம்பிய மரங்கள் அன்போடு, காக்கப்படுகின்றன. கபில நிறமான பசுக் கூட்டங் கள் ஏராளமாக உலாவுகின்றன. நாற்புறத்தும் விளைநிலம் காணப்பட வில்லை. பல இடத்தினின்றும் புகை எழும்புகிறது. ஆதலால் சந்தேக மின்றி இது தவ வனந்தான். நான் இதற்குள்ளே செல்கிறேன். (உட் சென்று கஞ்சுகியை நோக்கி) ஆ, இங்கே இருப்பவர் ஆசிரமவாசிகள் அல்லவே! (மற்றோரிடம் நோக்கி) இதோ தவசிகளும் இருக்கிறார்கள். பயமின்றிச் செல்லலாம். ஆ, இங்கே பெண்கள் இருக்கிறார்களே!

கஞ்சுகி: ஐயா, அச்சமின்றி உள்ளே வரலாம். ஆசிரமம் என்பது எல்லோருக்கும் பொதுவான இடந்தான்.

வாச: ஹூம்.

பத்மா: ஆ, இவள் பரபுருஷரைப் பார்க்க மாட்டாளா? இருக்கட்டும். நான் என் அடைக்கலத்தை ஜாக்கிரதையாகக் காப்பாற்ற வேண்டும்.

கஞ்சுகி: *(பிரம்மசாரியை நோக்கி)* ஐயா, நாங்கள் உமக்கு முன் இங்கே வந்தவர்கள். ஆதலால் எங்கள் அதிதி பூஜையை ஏற்றுக் கொள்ளும்.

பிரம்மசாரி: *(ஆசமனம் செய்து)* போதும், இருக்கட்டும். களைப்புத் தீர்ந்துவிட்டது.

யௌக: ஐயா, தாங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்? எங்கே செல்ல வேண்டும்? தங்கள் இருப்பிடம் யாதோ?

பிரம்ம: கேளுங்கள். ராஜகிருகம் என்ற நகரத்தினின்றும் வருகிறேன். வத்ச நாட்டில் லாவாணகம் என்று ஒரு கிராமம். அங்கே கல்வி நிமித்தம் தங்கியிருந்தேன்.

வாச: *(தனக்குள்)* ஆ, கஷ்டம். லாவாணகமா? லாவாணகம் என்ற பெயரைக் கேட்டதும் என் துயரம் மீண்டும் புதுப்பித்ததுபோல் ஆயிற்று.

யௌக: கல்வி கற்றாய் விட்டதா?

பிரம்ம: இல்லையே!

யௌக: கல்வி, முற்றுப் பெறுமுன் இங்கே வந்த காரணம் என்ன?

பிரம்ம: அங்கே பயங்கரமான ஒரு விபத்து நேர்ந்தது.

யௌக: என்ன விபத்து?

பிரம்ம: அங்கே உதயணன் என்று ஓர் அரசர் இருக்கிறார்.

யௌக: ஆமாம், உதயணன் என்ற அரசர் பெருமானைப் பற்றிக் கேள்விப்பட்டதுண்டு, அவருக்கென்ன?

பிரம்ம: அவர் தமது பத்தினியான அவந்தியரசன் புதல்வி, வாசவதத்தையிடம் மிகுந்த காதலுடையவர் அல்லவா?

யௌக: இருக்கலாம், அதனால் என்ன?

பிரம்ம: ஒரு நாள் அவர் வேட்டையாடச் சென்றிருந்தபோது கிராமம் தீப்பற்றி எரிந்தது. அதில் அவள் இறந்து போனாள்.

வாச: (தனக்குள்) இது நல்ல பொய், பாவி நான் உயிரோ டிருக்கிறேனே!

யௌக: பிறகு என்ன நடந்தது?

பிரம்ம: அவளைக் காப்பாற்ற முயன்ற யௌகந்தராயணன் என்ற மந்திரியும் அந்தத் தீயில் அகப்பட்டு மடிந்தார்.

யௌக: உண்மையாகவா? அதன் பிறகு?

பிரம்ம: வேட்டையாடி மீண்ட அரசர், அந்தச் செய்தியைக் கேட்டு, அவ்விருவரது பிரிவையும் ஆற்றாது துன்புற்று, அத்தீயில் தம் உயிரையும் துறக்கச் சென்றார். ஆனால் மற்ற மந்திரிகள் பெருமுயற்சி செய்து தடுத்துவிட்டார்கள்.

வாச: (தனக்குள்) தெரியும், தெரியும், என் காதலர் என்மீது கொண்ட அன்பு.

யௌக: பிற்பாடு?

பிரம்ம: அவள் சரீரத்தில் அணிந்திருந்த ஆபரணங்கள் பாதி கருகி உருகியிருந்தன. அவைகளைத் தழுவிக் கொண்டு, மன்னவர் மூர்ச்சையடைந்தார்.

எல்லோ: ஆ! அப்படியா?

வாச: (துக்கம் தோன்ற, தனக்குள்) இப்போது யௌகந்தராயண ருடைய விருப்பம் நிறைவேறிற்று!

சேடி: இளவரசி, தங்கள் தோழி அழுகிறாளே!

பத்மா: இளகிய மனமுடையவளாக இருக்கலாம்.

யௌக: ஆமாம்; இயல்பாகவே இரக்கமுடையவள் என் சகோதரி. பிறகு?

பிரம்ம: பிறகு அரசர் மெல்ல மூர்ச்சை தெளிந்தார்.

பத்மா: நல்ல காலம். அவர் மூர்ச்சையடைந்தார் என்ற வுடனே எனக்கும் ஏக்கம் பிடித்துவிட்டது.

யௌக: பின்பு?

பிரம்ம: அவ்வரசர் உருண்டு, புரண்டு, உடம்பெல்லாம் செம்புழுதி பற்றியவராய்த் திடீரென்று எழுந்து, 'ஆ, வாசவதத்தே! ஆ, அவந்தியரசன் செல்வப் புதல்வி! ஆ, என் அன்பே! ஆ, என் அன்பார்ந்த மாணாக்கி!' என்று இப்படிப் பலவாறு புலம்பினார். அதிகமாகச் சொல்வானேன்? அன்றில் பறவையும் இவ்வளவு துன்புற் றிருப்பதில்லை. சிறந்த மனைவியை இழந்தவர்களில் இவரைப் போல் வருந்தியவர் ஒருவரையும் நான் கண்டதில்லை. தன் கணவனது இத்தனை அன்புக்குப் பாத்திரமான அந்த மாது பாக்கியவதிதான்! இறந்தவளாயினும் அம்மாதரசி கணவனது அன்பால் உயிர் வாழ் கின்றவளே!

யௌக: ஏன்? அரசனுக்கு ஆறுதல் சொல்ல மந்திரி ஒருவரும் இல்லையா?

பிரம்ம: இருக்கிறார்; உருமண்ணுவா என்று ஒரு மந்திரி. அவர் அரசரைத் தேற்றுவதில் மிக்க முயற்சியுடையவர். அல்லும் பகலும் மன்னவனுக்குத் தொண்டு செய்கிறார். அரசர் உண்ணாராயின் அவரும் உண்ணுவதில்லை. எப்போதும் கண்ணீர் சொரிந்து, மெலிந்த முகத்தினராய், அரசரைப்போல் தாமும் உடம்பைப் பேணாதிருக் கிறார். அரசர் உயிர் துறப்பாராயின் அவரும் உயிர் துறப்பது நிச்சயம்.

வாச: (தனக்குள்) என் நல் விதியால் காதலர் நல்ல இடத்தில் தங்கினார்.

யௌக: *(தனக்குள்)* அந்தோ! உருமண்ணுவா சுமக்கிறது கனத்த பாரமாயிற்றே! என் பாரம் சற்றுக் குறைந்தது. ஏனெனில் எங்கே அரசர் இருக்கிறாரோ அங்கேதான் காரியம் யாவும் இருக்கின்றன. (வெளிப்பட) ஏனையா, அவ்வேந்தர் இப்போது ஆறுதல் உற்றாரா?

பிரம்ம: எனக்கு அது தெரியாது. 'இங்கே அவளுடன் சிரித்தேன்; இங்கே அவளுடன் பேசினேன்; இங்கே அவளுடன் இருந்தேன்; இங்கே அவளுடன் சினந்தேன்; இங்கே அவளுடன் துயின்றேன்' என்று இவ்வாறு அரற்றும் அரசரை மந்திரிகள் மிக முயன்று, அந்தக் கிராமத்தினின்றும் வெளியே அழைத்துச் சென்றனர். அரசர் சென்றதும் நக்ஷத்திரம் இல்லாத வானம்போன்றும் சந்திரன் இல்லாத இரவுபோன்றும் ஒளியிழந்தது அவ்வூர். பிறகு நானும் வெளிவந்து விட்டேன்.

தவ: அவ்வரசர் சிறந்த குணமுடையவர் ஆதல் வேண்டும். அவரை அறிமுகம் இல்லாதவரும் இப்படிப் புகழ்கிறாரே!

செடி: இளவரசி, வேறொரு பெண் அவரை அடைதல் கூடுமா?

பத்மா: *(தனக்குள்)* என் கருத்தோடு இசைந்து மொழிந்தாள்.

பிரம்ம: உங்களிடம் விடை பெற்றுக் கொள்கிறேன்.

கஞ்சுகி: போய் வாரும்; உமது காரியம் கைகூடட்டும்.

பிரம்ம: ஆகட்டும். *(போகிறான்.)*

யௌக: சரி; நானும் ராஜகுமாரியிடம் விடை பெற்றுப் போக விரும்புகிறேன்.

கஞ்சுகி: *(பத்மாவை நோக்கி)* அம்மா, இவர் உம்மிடம் விடை பெற விரும்புகிறார்.

பத்மா: ஐயா, உமது சகோதரி பிரிவாற்றாமல் கிலேசப் படுவாளே!

யௌக: சாதுக்களைச் சார்ந்த இவள் ஒருபோதும் துன்பப்பட மாட்டாள்.

கஞ்சுகி: போய் வாரும். பின்னால் பார்த்துக் கொள்வோம்.

யௌக: அப்படியே, *(போகிறான்.)*

கஞ்சுகி: நமக்கும் ஆசிரமத்துக்குள் செல்ல நேரம் ஆயிற்று.

பத்மா: ஆர்யே, வணங்குகிறேன்.

தவ: குழந்தாய், உனக்கேற்ற கணவனை அடைவாய்!

வாச: ஆர்யே, நானும் வணங்குகிறேன்.

தவ: நீயும் விரைவில் உன் பர்த்தாவை அடைவாய்!

வாச: அநுக்கிரகம் எய்தினேன்.

கஞ்சுகி: நாமும் செல்வோம். இப்போது பறவைகள் தத்தம் கூட்டுக்குச் செல்கின்றன. முனிவர்கள் அந்திநீர் ஆடுகிறார்கள். ஓமத்தீ ஓங்கி எரிந்து, தவவனம் எங்கும் புகை பரவுகிறது. வானத்தின் நடு உச்சியினின்று இறங்கி வரும் சூரியனும் கிரணங்களை உள்ளே அடக்கித் தேரை அஸ்தமனகிரியை நோக்கித் திருப்புகிறான்.

*(எல்லோரும் போகிறார்கள்.)*

# அங்கம் 2

*(ஒரு சேடி வருகிறாள்.)*

சேடி: குஞ்சரி! குஞ்சரி, இளவரசி எங்கே? என்ன சொல்லு கிறாய்? மாதவிக்கொடி மண்டபத்தின் பக்கத்தில் பந்து விளையாடு கிறாள் என்றா? ஆனால் அவளிடம் போகிறேன். (உலாவி) இதோ இளவரசி, காதணித் தொங்கலை மேலே தூக்கி மாட்டிக்கொண்டு, சிரமத்தால் வேர்வைத் துளி அரும்பி நிற்க, சோர்வுற்ற சுந்தரமுகத் துடன் பந்து விளையாடிக்கொண்டு வருகிறாள். அடுத்துச் செல்கிறேன்.

*(போகிறாள்.)*

*(பரிவாரத்துடன் பந்து விளையாடிக்கொண்டு பத்மாவதியும் வாசவதத்தையும் வருகிறார்கள்.)*

வாச: ஸகீ, இந்தா உன் பந்து.

பத்மா: அம்மா! இவ்வளவு ஆடினது போதும்.

வாச: ஸகீ, நெடுநேரம் விளையாடியதால் உன் கைகள் மிகச் சிவந்து வேறொருவருடையவை போலத் தோன்றுகின்றன.

சேடி: விளையாடட்டும்; இளவரசி தன் இனிய கன்னிப் பருவத்தை நன்கு விளையாடிக் கழிக்கட்டும்.

பத்மா: (வாசவதத்தையைப் பார்த்து) அம்மா, என்னை ஏன் கேலி செய்பவள்போல் உற்றுப் பார்க்கிறாய்?

வாச: இல்லை, இல்லை. இப்போது நீ ரொம்ப அழகாக இருக்கிறாய். உனக்கு வரன் சீக்கிரம் வருவான் என்று நினைக்கிறேன்.

பத்மா: போங்கள், என்னைப் பரிகாசம் செய்தது போதும்.

வாச: மகாசேனன் மருமகளே, நான் சும்மா இருக்கிறேன்.

பத்மா: மகாசேனன் என்பது யாரை?

வாச: பிரத்தியோதனன் என்ற பெயருடன் உஜ்ஜயினி அரசர் ஒருவர் இருக்கிறார்; சேனைச் சிறப்புப் பற்றி அவரை மகாசேனன் என்பார்கள்.

சேடி: அவ்வரசன் மகனை மணக்க இளவரசி விரும்பவில்லை.

வாச: ஆனால் யாரை விரும்புகிறாள்?

சேடி: உதயணன் என்று வத்சநாட்டு அரசர் ஒருவர் இருக்கிறார்; அவரது குணங்களில் இளவரசி ஈடுபட்டிருக்கிறாள்.

வாச: (தனக்குள்) என் காதலரையா கணவனாக விரும்புகிறாள்! (வெளிப்பட) என்ன காரணத்தால்?

சேடி: இளவரசி, அவ்வரசர் அழகற்றவரானாலோ?

வாச: இல்லை, இல்லை. அவர் அழகுள்ளவர்தாம்.

பத்மா: அமமா, உமக்கு எப்படித் தெரியும்?

வாச: (தனக்குள்) (காதலர் மீதுள்ள அன்பினால் என் நிலைமையை மறந்துவிட்டேன். என்ன செய்வேன்? இருக்கட்டும். தெரிந்தது). (வெளிப்பட) உஜ்ஜயினியில் ஜனங்கள் இப்படிச் சொல்வதுண்டு.

பத்மா: சரிதான்; உஜ்ஜயினியில் அவரை எளிதில் காணக் கூடும். தவிரவும் வடிவழகென்பது எல்லோர் மனத்தையும் கவரத் தக்கது.

(செவிலித்தாய் வருகிறாள்.)

செவிலி: இளவரசிக்கு மங்களம் உண்டாகுக. அம்மா, உனக்கு வரன் நிச்சயமாயிற்று.

வாச: யாரம்மா அந்த வரன்?

செவிலி: வத்ச நாட்டரசன் உதயணன்.

வாச: அவ்வரசர் சௌக்கியமாயிருக்கிறாரா?

செவிலி: சௌக்கியமாக இங்கே வந்திருக்கிறார். இளவரசியை மணம்புரிய இசைந்தும் இருக்கிறார்.

வாச: என்ன அநியாயம்!

செவிலி: இதில் என்ன அநியாயம்?

வாச: ஒன்றும் இல்லை. வாசவதத்தையின் பொருட்டு அத்தனை துக்கப்பட்டவர் உடனே உதாசீனர் ஆகிவிட்டாரா என்பது தான்.

செவிலி: அம்மா, கழிந்ததை நினையாது வருவதைக் கருது வதும், எளிதில் மனம் தேறுவதும் பெரியோர் இயல்பு.

வாச: அம்மா, அவர் தாமாகவே வேண்டிக்கொண்டாரா?

செவிலி: இல்லை, இல்லை. அவர் வேறு காரியமாக இங்கே வந்தார். அவரது குலமும், அறிவும், பருவமும், உருவமும் கண்டு, மகாராஜா தாமாகவே கொடுத்தார்.

வாச: (தனக்குள்) அப்படியானால் என் அன்பர் குற்ற மற்றவர்தாம்.

(வேறொரு சேடி வருகிறாள்.)

சேடி: அம்மா, விரைவில் விரைவில். இன்று நல்ல நட்சத் திரமாம். இன்றே மங்கல நாண் கட்ட வேண்டும் என்று மகாராணி சொல்லுகிறார்.

வாச: இவர்கள் விரையுந்தோறும் என் மனம் இருளடை கிறது.

செவிலி: இளவரசி, வா வா, போவோம்.

(எல்லோரும் போகிறார்கள்.)

# அங்கம் 3

*(வாசவதத்தை கவலையில் ஆழ்ந்து வருகிறாள்.)*

வாச: கல்யாண ஆரவாரம் நிரம்பிய அந்தப்புரத்திலிருந்து பத்மாவதியைப் பிரிந்து, இந்தப் பூங்காவனத்துக்கு வந்தேன். என் விதியால் நேர்ந்த துக்கத்தை இப்போது ஆற்றிக்கொள்கிறேன். (உலாவி) இதென்ன? பெருந்துன்பம் வந்து விடிந்ததே! என் அருமைக் காதலரும் வேறொருத்திக்குச் சொந்தமாகி விட்டாரே. சற்று உட்காருகிறேன். (உட்கார்ந்து) அன்றில் பேடை பெரும் பாக்கியமுடையது. அது தன் சேவலைப் பிரிந்து உயிர் வாழ்வதில்லை. பாக்கியம் கெட்ட நானோ என் காதலரைக் காண்பேன் என்னும் ஆசையால் உயிர் வாழ்கிறேன்.

*(மலர்களைக் கொய்து கொண்டு, ஒரு சேடி வருகிறாள்.)*

சேடி: ஆவந்திகை எங்கே போனாள்? (உலாவிப் பார்த்து) இதோ மனக் கவலையால் முகமலர்ச்சிக் குன்றிப் பனியால் மறைந்த பிறை மதிபோல் இயற்கை அழகு கெடாத கோலத்துடன் பிரியங்கு மரத் தடியிலுள்ள கல் மேடையில் உட்கார்ந்திருக்கிறாள். அருகில் செல் கிறேன். (அருகில் சென்று) அம்மா, எவ்வளவு நேரமாக உம்மைத் தேடுகிறேன்!

வாச: எதற்காக?

சேடி: எங்கள் மகாராணி, குடிப்பிறப்பு, அன்பு, ஆற்றல் இவற்றில் சிறந்தவராக உம்மை மதிக்கிறார். ஆதலால் இந்த மண மாலையைத் தொடுத்தருளுங்கள்.

வாச: யாருக்கு இந்த மாலை தொடுக்க வேண்டும்?

சேடி: நமது இளவரசிக்கு.

வாச: (தனக்குள்) இதுவும் நான் செய்யவேண்டியதாயிற்றே; ஐயோ தெய்வமே!

சேடி: அம்மா, இந்த வேளையில் வேறொன்றையும் பற்றிச் சிந்தனை செய்யாதேயுங்கள். மாப்பிள்ளை, பளிங்குப் பந்தரில் ஸ்நானம் செய்கிறார். விரைவாக மாலை கட்ட வேண்டும்.

வாச: (தனக்குள்) ஆமாம்; இப்போது வேறொன்றையும் சிந்திக்க முடியாது. (வெளிப்பட) ஸகி, மாப்பிள்ளையைப் பார்த்தாயா?

சேடி: ஆமாம். எனது அவாவும் இளவரசியின் மீதுள்ள அன்பும் தூண்ட, பார்த்தேன்.

வாச: மாப்பிள்ளை எப்படி இருக்கிறார்?

சேடி: கேளுங்கள் அம்மா! இவரைப் போன்ற எவரையும் நான் இதுவரையில் பார்த்ததில்லை.

வாச: ஸகீ, சொல்லு, சொல்லு! மிக்க அழகுடையவரோ?

சேடி: மன்மதன் என்றே சொல்வேன்! அம்பும் வில்லுந்தான் குறை.

வாச: சரி, போதும் இவ்வளவு.

சேடி: ஏன் போதுமென்று தடுக்கிறீர்கள்!

வாச: அந்நிய புருஷரைப் புகழ்ந்து பேசுவது சரியன்று.

சேடி: ஆனால் மாலையைச் சீக்கிரம் தொடுங்கள்.

வாச: கொண்டு வா, தொடுக்கிறேன். (பூக்களை எடுத்துப் பார்த்து) இதோ ஓர் பச்சிலை இருக்கிறதே; இதன் பெயர் என்ன?

சேடி: ஸெளமங்கலீ கரணம் என்பது.

வாச: அப்படியா? (தனக்குள்) என் பொருட்டும் பத்மாவதி யின் பொருட்டுமாக இதை நிரம்பத் தொடுக்க வேண்டும். (வேறொரு பச்சிலையைப் பார்த்து, வெளிப்படையாக) இந்தப் பச்சிலையின் பெயர் என்ன?

சேடி: ஸபத்நீமர்த்தனம் என்பது.

வாச: இது தொடுக்கத் தக்கதன்று.

சேடி: ஏன்?

வாச: அவர் முதல் மனைவி இறந்துவிட்டாள். ஆதலால் இது பயன்படாது.

(வேறொரு சேடி வருகிறாள்.)

சேடி: அம்மா விரைவில், விரைவில். இதோ கற்பரசிகள் மாப்பிள்ளையை அந்தப்புர நாலு கட்டுக்கு அழைத்துச் செல்லு கிறார்கள்.

வாச: இதோ தொடுத்தாயிற்று; மாலையைப் பெற்றுக் கொள்.

சேடி: மாலை, வெகு மனோகரமாக இருக்கிறது! நான் போய் வருகிறேன்.

(இரண்டு சேடிகளும் போகிறார்கள்.)

வாச: இவள் போய்விட்டாள். ஆ, என்ன துன்பம்! என் ஆருயிர்த் தோழரும் வேறொருத்திக்குச் சொந்தமாகி விட்டாரே! என்ன செய்வேன்? என் துக்கத்தைத் தூங்கித் தணிக்கிறேன்; ஆனால் தூக்கம் வர வேண்டுமே.

(போகிறாள்.)

# அங்கம் 4

*(விதூஷகன் வசந்தகன் வருகிறான்.)*

விதூ: *(உத்ஸாகத்துடன்)* தெய்வச் செயலால், மகிமை வாய்ந்த எங்கள் அரசர் பெருமானுக்கு விரும்பியபடி சந்தோஷமான கல்யாண மகோத்சவம் வரக் கண்டேன். ஆ! அந்தத் துன்பப் பெருஞ்சுழியில் அழுந்தின பிறகு, நாங்கள் மீண்டும் கரையேறுவோம் என்று எவன் தான் எண்ணியிருந்தான்? இப்போதோ நாங்கள் அரண்மனைகளில் வசிக்கிறோம். அந்தப்புரத் தடாகங்களில் குளிக்கிறோம். நிரம்ப மதுரமான சிறந்த மோதகங்களைப் புசிக்கிறோம். இப்போது நான்அநுபவிப்பது உத்தர குருவென்ற சுவர்க்கம் எனலாம்; அரம்பையர் மட்டுந்தான் குறை. ஆனால் ஒரு பெரிய கஷ்டம் இருக்கிறது. நான் உண்பது நன்றாக ஜீரணமாகிறதில்லை. மெல்லிய விரிப்பு விரித்த படுக்கையிலும் தூக்கம் வருவதில்லை. வாதநோய் என்னைப் பற்றிக் கொண்டதோ என்று தோன்றுகிறது. மித போஜனமும் ஆரோக்கியமும் அற்ற இடத்தில் என்ன சுகம் இருக்கிறதப்பா?

*(ஒரு சேடி வருகிறாள்.)*

சேடி: எங்கேதான் போனார் வசந்தகர்! *(உலாவிப் பார்த்து)* ஆ, இதோ இருக்கிறார். *(அடுத்துச் சென்று)* ஐயா, வசந்தகரே! எவ்வளவு காலமாக உம்மைத் தேடுகிறேன்.

விதூ: *(சேடியைப் பார்த்து)* எதற்காக அம்மா, என்னைத் தேடுகிறாய்?

சேடி: மகாராணி கேட்கிறார்; மாப்பிள்ளை ஸ்நானம் செய்தாயிற்றா என்று?

விதூ: எதற்காக அம்மா கேட்கிறார்?

சேடி: வேறு எதற்கு? அவருக்குப் பூவும் சாந்தும் கொண்டு வர வேண்டும் என்றுதான்.

விதூ: அவர் குளித்தாய்விட்டது. நீ போய், உணவு தவிர எல்லாம் கொண்டுவா.

சேடி: ஏன், உணவு வேண்டாம் என்கிறீர்?

விதூ: நான் அதிருஷ்டம் கெட்டவன். குயில்களின் கண் பிறழ்வதுபோல் எனக்கு வயிற்றுப் பிறழ்ச்சி வந்திருக்கிறது.

சேடி: அப்படியே நெடுநாள் இருந்து தொலையும்.

விதூ: போ அம்மா நீ! நான் அரசரிடம் போகிறேன்.

(இருவரும் போகிறார்கள்.)

(பரிவாரத்துடன் பத்மாவதியும், அவந்திகை வேஷம் தாங்கிய வாசவதத்தையும் வருகிறார்கள்.)

சேடி: இளவரசி, என்ன காரணமாக இந்தப் பூந்தோட்டத்துக்கு வந்தீர்கள்?

பத்மா: அடீ, அந்தச் சேபாலிகைக் கொடிகள் பூத்தனவா என்று பார்க்க வந்தேன்.

சேடி: இளவரசி, அவை பூத்திருக்கின்றன; இடையிடையே பவழங் கோத்த முத்துத் தொங்கல்கள் போல் பூக்கள் நிரம்பியிருக்கின்றன.

பத்மா: ஆனால் ஏன் தாமதிக்கிறாய்?

சேடி: இளவரசி, சற்று இந்தக் கல் மேடையில் உட்காருங்கள். இதோ நான் பூக்கொய்கிறேன்.

பத்மா: (வாசவதத்தையை நோக்கி) அம்மா, நாம் இங்கே இருப்போமா?

வாச: அப்படியே.

(இருவரும் உட்காருகிறார்கள்.)

சேடி: இளவரசி, இதோ பாருங்கள்! மனோசிலை மீது கொத்திச் செதுக்கியவைபோல் சேபாலிகைப் பூக்கள் உன் இரு கைகளிலும் நிறைந்திருக்கின்றன.

பத்மா: ஸகீ, பூக்கள் எத்தனை விசித்திரமாயிருக்கின்றன, பார்.

வாச: ஆமாம், கண்ணைக் கவரும் மலர்கள்.

சேடி: இளவரசி, இன்னும் பறிக்க வேண்டுமா?

பத்மா: அடி, வேண்டாம். போதும் கொய்தது.

வாச: ஏன் போதும் என்கிறாய்?

பத்மா: என் காதலர் இங்கே வந்து, பூக்களின் செழிப்பைக் கண்டு என்னை மெச்சுவார்.

வாச: ஸகீ, உன் காதலர் மனத்துக்குப் பிடித்தவர்தாமா?

பத்மா: அம்மா, அது என்னவோ? அவரைப் பிரிந்தால் எனக்கு மன அமைதியே இல்லை.

வாச: (தனக்குள்) இவள்கூட இப்படிச் சொல்லுகிறாளே! நான் பிரிந்திருப்பது எத்தனை கடினம்!

சேடி: எனக்குப் பிடித்தவர் என் காதலர் என்று இளவரசி சொன்னது எத்தனை பெருமையான சொல்.

பத்மா: ஆனால் எனக்கு ஒரு சந்தேகம் உண்டு.

வாச: என்ன, என்ன?

பத்மா: என் காதலரை வாசவதத்தையும் என்னைப் போல் நேசித்தாளோ என்று.

வாச: உன்னைவிட அதிகமாக.....

பத்மா: உமக்கு எப்படித் தெரியும்?

வாச: (தனக்குள்) என் பிராணநாதர் மீதுள்ள அன்பினால் என் நிலைமையை மறந்துவிட்டேன். இருக்கட்டும்; இப்படிச் சொல்லுகிறேன். (வெளிப்பட) அவள் அன்பு அற்பமானால் தன் உறவினரைத் துறந்து, அவருடன் ஓடிப்போயிருக்க மாட்டாள்.

பத்மா: இருக்கலாம்.

சேடி: இளவரசி, 'நானும் வீணை கற்றுக்கொள்கிறேன்' என்று அரசனிடம் கேளுங்கள்.

பத்மா: நான் கேட்டாயிற்று.

வாச: என்ன பதில் சொன்னார்.

பத்மா: ஒன்றும் சொல்லவில்லை. பெருமூச்சுவிட்டுப் பேசாமல் இருந்தார்.

வாச: அதிலிருந்து என்ன ஊகிக்கிறாய்?

பத்மா: நான் நினைக்கிறேன்; வாசவதத்தையின் சிறந்த குணங்களை நினைத்து, தாக்ஷிண்யத்தால் தம் கண்ணீரை என்முன் அடக்கிக்கொண்டார் என்று.

வாச: (தனக்குள்) இது உண்மையானால் நான் அதிருஷ்ட சாலிதான்.

(அரசனும் விதூஷகனும் வருகிறார்கள்.)

விதூ: ஹீ, ஹீ! (சிரித்து) செம்பரத்தை மலர்கள் அங்கு மிங்கும் விழுந்து, இந்தப் பூந்தோட்டம் அழகாக இருக்கிறது. ஸ்வாமி இங்கே வரவேண்டும்.

அரசன்: நண்பனே வசந்தகா, இதோ வருகிறேன். நான் உஜ்ஜ யினி சென்று, அவந்தி வேந்தன் செல்வியைக் கண்டு, சொல்வதற்கரிய தோர் அவஸ்தை அடைந்தேன்; உடனே மன்மதன், தனது ஐங்கணை களையும் என்மேல் எய்து தீர்த்தான். அவை இன்னும் என் நெஞ்சத்தைச் செல்லாக அரியா நிற்க, மீண்டும் அவன் பாணத்தால் தாக்குகிறான். அவன் பஞ்சபாணனானால் ஆறாவது பாணம் எய்வதற்கு எவ்வாறு கிடைத்தது?

விதூ: பத்மாவதி ராணி எங்கேதான் சென்றிருப்பாள்! அசனப்பூ விழுந்து, புலித்தோல் போர்த்ததுபோல் விளங்கும் பர்வத திலகம் என்ற கல்மேடைக்குச் சென்றார்களா? அல்லது கடிமணம் மிக வீசும் ஏழிலைப்பாலை வனத்துக்குப் போனார்களா? அல்லது மிருகங் களையும் பட்சிகளையும் சித்திரமெழுதிச் சிங்காரித்திருக்கும் தாரு பர்வதத்துக்குச் சென்றார்களா? (வானை நோக்கி) ஹா, ஹா! மன்னர் பெரும, நிர்மலமான சரத்காலத்து வானத்தில் பல தேவனது நீண்ட

புஜங்களைப் போன்ற ஸாரஸப் புள்ளினத்தின் வரிசை அமைதியாகப் பறந்து போவதைப் பாரும்.

அரசன்: ஆமாம், நண்பனே! இதோ பார்க்கிறேன். இந்தப் புள்ளினம் ஒரு சமயம் ஒழுங்காய் நீண்டும், உடனே சிதறியும், பின்பு தாழ்ந்தும், உயர்ந்தும், திரும்பும்போது ஸப்தரிக்ஷி நட்சத்திரங்கள் போல் வளைந்தும் பறக்கின்றன. அவை சட்டை கழற்றிய பாம்பின் வயிறுபோல் நிர்மலமான ஆகாசத்தைக் கூறிட்டு, வகுத்தது போல் தோன்றுகின்றன.

★ ★ ★

சேடி: இளவரசி, இதோ பாருங்கள்! வெண்தாமரை மாலை போல் மனத்தைக் கவரும் ஸாரஸப் பறவைகள் அமைதியாகப் பறந்து போகின்றன. ஆ! இதோ வேந்தர் வந்துவிட்டாரே!

பத்மா: ஆ, என் பிராணநாதரா! ஸகி, உன் நிமித்தம் நானும் என் காதலர் பாராதபடி மறைகிறேன். இதோ இந்த மாதவிப் பந்தருக் குள்ளே போவோம்.

வாச: அப்படியே செய்வோம்.

*(பந்தருக்குள் செல்கிறார்கள்.)*

அரசன்: நண்ப, மலர்கள் கால்களால் மிதிபட்டிருக்கின்றன. இந்தக் கல் மேடையும் சூடாயிருக்கிறது. ஆதலால் யாரோ இங்கே உட்கார்ந்திருந்தவர் என்னைக் கண்டு, விரைவாக போயிருக்க வேண்டும்.

விதூ: ஸ்வாமி, அரசி பத்மாவதி இங்கே வந்து போயிருக்க வேண்டும்.

அரசன்: உனக்கு எப்படித் தெரிந்தது?

விதூ: இந்தச் சேபாலிகைக் கொத்திலிருந்து பூக்கொய் திருப்பதைப் பாரும்.

அரசன்: ஆ, புஷ்பங்கள் எவ்வளவு அழகாக இருக்கின்றன, வசந்தகா!

வாசவ: *(தனக்குள்)* வசந்தகன் என்ற பேரைக் கேட்டதும் நான் உஜ்ஜயினியில்தான் இருக்கிறேனோ என்று நினைக்கிறேன்.

அரசன்: வசந்தகா, இந்த கல் மேடையில் அமர்ந்து, பத்மாவதி யின் வரவை எதிர்பார்ப்போம்.

விதூ: அப்படியே! *(உட்கார்ந்து, உடன் எழுந்துநின்று)* சரத்காலத்து வெயிலின் கடுமை தாங்க முடியவில்லை. இந்த மாதவிப் பந்தருக்குள்ளே செல்வோம்.

அரசன்: ஆகட்டும்; நீ முன்னே செல்.

விதூ: உத்தரவு.

*(இருவரும் உலாவுகிறார்கள்.)*

பத்மா: இந்த வசந்தகர் எல்லாவற்றையும் கெடுத்துவிடப் போகிறாரே! இப்போது நாம் என்ன செய்யலாம்?

சேடி: இளவரசி, தேனீக்கள் மொய்த்திருக்கும் இந்தக் கொடி யின் அடிப்பாகத்தை அசைத்துத் தலைவர் இங்கே வராமல் செய்து விடுகிறேன்.

பத்மா: ஆனால் அப்படிச் செய்.

*(சேடி கொடியை அசைக்கிறாள்.)*

விதூ: ஐயையோ! பெருமானே! நில்லும், நில்லும்.

அரசன்: ஏன்?

விதூ: இந்தக் கெட்ட தேனீக்கள் என்னைக் கொட்ட வருகின்றன.

*(தேனீக்களை வெருட்டுகிறான்.)*

அரசன்: வசந்தகா, விடு, விடு. தேனீக்களை வெருட்டாதே. மதுவுண்டு மயங்கி, இனிது ரீங்காரம் செய்யும் இந்த தேனீக்கள், காமத் தால் வருந்தும் தம் தம் காதலிகளைத் தழுவி நிற்கின்றன. காலடி வைத்து, அவைகளைக் கலைத்தால் காதலியைப் பிரிந்த நம்மைப்

போல் அவைகளும் பிரிவாற்றாமல் துன்பமடையும். அதனால் நாம் இங்கேயே இருப்போம்.

விதூ: ஆகா! அப்படியே!

*(இருவரும் உட்காருகிறார்கள்.)*

பத்மா: நல்ல காலம். என் காதலர் உட்கார்ந்துவிட்டார்.

வாச: *(தனக்குள்)* நல்ல காலம். என் பிராணநாதர் ஆரோக் கியமாக இருக்கிறார்.

சேடி: இளவரசி நாம் ஒரு சிறையில் அகப்பட்டோமே! *(வாசவதத்தையைச் சுட்டிக்காட்டி)* இவ்வம்மையின் கண்களிலிருந்து கண்ணீர் வடிகிறதே.

வாச: ஒன்றுமில்லை. இந்தத் தேனீக்களின் குழப்பத்தால் பூந்துகள் கண்களில் விழுந்து, கண்ணீர் வருகிறது.

பத்மா: சரிதான்.

விதூ: ஸ்வாமி, இந்தப் பூந்தோட்டம் ஏகாந்தமாக இருக் கிறது. தங்களிடம் நான் கேட்க வேண்டியதொன்று உண்டு. கேட்கலாமா?

அரசன்: ஆகா, இஷ்டம்போல்.

விதூ: உமக்குப் பிரியமானவள் யார்? முன்னிருந்த வாசவ தத்தையா? அல்லது இப்போது வந்திருக்கும் பத்மாவதியா?

அரசன்: ஏன் என்னை இந்தப் பெரிய தர்மசங்கடத்தில் கொண்டுபோய் விடுகிறாய்?

பத்மா: ஸகீ, என் காதலர் எத்தனை சங்கடத்தில் அகப்பட்டுக் கொண்டார்!

வாச: *(தனக்குள்)* பாக்கியங்கெட்ட நானும் இதைக் கேட்கும் படி ஆயிற்றே!

விதூ: ஸ்வாமி, தைரியமாகச் சொல்லும். ஒருத்தி இறந்து விட்டாள்; மற்றவள் அருகில் இல்லை.

அரசன்: நீ ஒரு வாயாடி; நான் சொல்ல மாட்டேன்.

பத்மா: இதனாலேயே என் அன்பர் சித்தம் வெளியாயிற்று.

விதூ: ஸ்வாமி நான் சத்தியம் செய்து ஆணையிடுகிறேன்; ஒருவரிடமும் சொல்லமாட்டேன். இதோ என் நாக்கைக் கடித்துக் கொண்டேன்.

அரசன்: ஆனாலும் நண்ப, உன்னிடம் சொல்லத் துணிய வில்லை.

பத்மா: என்னே இவனது பேதைமை! இவ்வளவு சொல்லி யும் அவரது உள்ளத்தை அறியவில்லையே!

விதூ: என்ன, என்னிடம் சொல்ல மாட்டீரா? சொல்லா விட்டால் இந்தக் கல் மேடையிலிருந்து உம்மால் ஓர் அடிகூட நகர முடியாது. உம்மை நான் இங்கே கட்டுப்படுத்தியிருக்கிறேன்.

அரசன்: பலாத்காரமாகத்தானா?

விதூ: ஆமாம், பலாத்காரமாகவே!

அரசன்: ஆனால் ஒரு கை பார்ப்போம்.

விதூ: பொறுத்தருள வேண்டும், பெருமானே, உண்மை யைச் சொல்லாவிட்டால் உம்மைத் தோழமையால் ஆணையிட்டுக் கட்டுப்படுத்துவேன்.

அரசன்: இப்போது வேறு கதியில்லை. சொல்லுகிறேன், கேள். வடிவழகு, நல்லொழுக்கம், இன்சொல் என்ற குணங்களால் பத்மாவதியை வெகுவாக மதிக்கிறேன். ஆனால் வாசவதத்தையிடம் ஈடுபட்ட என் உள்ளத்தைக் கவர, அவள் வல்லவள் அல்ல.

வாச: (தனக்குள்) நல்லது; நான் படும் துயரத்துக்குக் கைம்மாறு கிடைத்தது. இந்த அஞ்ஞாத வாசமும் எனக்குப் பெரு நன்மை தருகிறது!

சேடி: இளவரசி, அரசர் தாக்ஷிண்யமே இல்லாதவர்.

பத்மா: அடி, அப்படி இல்லை. என் அன்பர் தாக்ஷிண்யம் உள்ளவரே! அவர் பெருமை வாய்ந்த வாசவதத்தையின் சிறந்த குணங் களை இன்னும் நினைக்கிறாரே!

வாச: என் செல்வியே! உன் குலப் பெருமைக்கு ஒத்தபடி சொன்னாய்.

அரசன்: நான் சொல்லிவிட்டேன். இனி நீ சொல். யார் உனக்குப் பிரியமானவள்? அப்போதிருந்த வாசவதத்தையா? அல்லது இப்போதிருக்கும் பத்மாவதியா?

பத்மா: என் காதலரும் இப்போது வசந்தகராய் விட்டார்.

விதூ: வீண் பேச்சு எதற்கு? அவர்கள் இருவரும் எனக்குப் பிரியமானவர்களே!

அரசன்: மூடா, என்னிடமிருந்து பலவந்தமாகத் தெரிந்து கொண்டு, இப்போது நீ சொல்லமாட்டேன் என்கிறாயா?

விதூ: என்ன, என்னிடமும் பலாத்காரமா?

அரசன்: ஆமாம், பலாத்காரமே.

விதூ: ஆனால் என்னிடமிருந்து கேட்க முடியாது.

அரசன்: மகாப் பிராமணரே! மன்னிக்க வேண்டும்; உமது சித்தம்போலச் சொல்லும்.

விதூ: இப்போது சொல்கிறேன், கேளும். வாசவதத்தையிடம் எனக்கு வெகுமானந்தான். ஆனால் பத்மாவதி, யௌவனம் சௌந் தரியம் சாந்தம் வணக்கம் இனிய சொல் தாக்ஷிண்யம் என்ற குணங்கள் நிறைந்தவள். தவிர வேறொரு சிறந்த குணமும் அவளிடம் உள்ளது. அதாவது, 'வசந்தகர் எங்கே போனார்?' என்று சொல்லி, இனிய போசனத்துக்கு என்னை எதிர்கொண்டழைக்கிறாள்.

வாச: (தனக்குள்) இருக்கட்டும்; வசந்தக, இப்போது கூறி யதை நினைவில் வைத்துக்கொள்.

அரசன்: வசந்தக, ஆகட்டும். இவற்றையெல்லாம் தேவி வாசவதத்தையிடம் சொல்கிறேன்.

விதூ: ஓ, வாசவதத்தையா! எங்கே வாசவதத்தை? அவள் இறந்து வெகுகாலம் ஆய்விட்டதே!

அரசன்: (துக்கம் தோன்ற) ஆமாம், வாசவதத்தை இறந்து விட்டாள். இந்த உன் பரிகாசத்தால் என் மனம் தடுமாறவே, பண்டைப் பழக்கத்தால் தழும்பேறிய நாவினின்றும் இச்சொல் வந்துவிட்டது.

பத்மா: இது ஒரு ரசமான பேச்சு; இந்த மடையன் கெடுத்து விட்டான்.

வாச: (தனக்குள்) நல்லது. என் மனம் திடமாயிற்று. இத்தகைய சொற்களை மறைவில் கேட்பதில் ஆ, என்ன ஆனந்தம்!

அரசன்: (கண்ணீர் சோர) நண்ப, நான் படும்பாடு உனக்குத் தெரியாது. வேரூன்றின காதலை மனத்தினின்றும் களைந்தெறிய முடியவில்லை. துக்கமோ, நினைக்க நினைக்கப் புதிது புதிதாக வளரு கிறது. அதனால் கண்ணீர் வடிக்கும் கடனைக் கழித்த பிறகுதான் மனம் தேறுதலடையும். இது உலக இயல்பு.

விதூ: ஸ்வாமி, முகம் கண்ணீரால் நனைந்துவிட்டதே! அலம்ப நீர் கொண்டு வருகிறேன். (போகிறான்.)

பத்மா: அம்ம, கண்ணீர்ப் பெருக்கு என் நாதன் முகத்தை மறைத்திருக்கிறது. நாம் இங்கிருந்து மெல்ல நழுவிவிடுவோம்.

வாச: ஆகட்டும். அல்லது சற்று நீ இங்கே இரு. கவலைப் படும் காதலரைப் பிரிந்து வெளியே போவது சரியன்று. நான் மட்டும் போகிறேன்.

சேடி: இந்த அம்மாள் சொல்வது சரிதான். இறைவி, அரச ரிடம் செல்லுங்கள்.

பத்மா: நான் போகட்டுமா?

வாச: ஆமாம். ஸகீ, போ.

*(வாசவதத்தை வெளியே செல்கிறாள்.)*

*(பத்மாவதி அரசனிடம் போகிறாள்.)*

*(விதூஷகன் போகிறான்.)*

விதூ: *(தாமரையில் நீரெடுத்து)* இதோ ராணி பத்மாவதி.

பத்மா: ஐயா, வசந்தகரே! என்ன இது?

விதூ: இது.... அது; அது.... இது.

பத்மா: சொல்லும் ஐயா; தெரியும்படி சொல்லும்.

விதூ: அம்மா, காற்றடித்துக் காசப்பூந்துகள் அரசர் பெருமானது கண்களில் விழுந்தமையால் கண்ணீர் சொரிந்து, அவர் முகம் நனைந்துவிட்டது. அவர் முகம் அலம்ப, இந்தத் தண்ணீரைக் கொண்டு செல்லுங்கள்.

பத்மா: *(தனக்குள்)* அன்புடையார் பரிசனமும் அன்புடையரே! *(அடுத்துச் சென்று)* என் பிராணநாதருக்கு ஜயமுண்டாக! முகம் சுத்தி செய்ய இதோ ஜலம் கொண்டு வந்திருக்கிறேன்.

அரசன்: ஆ, பத்மாவதியா? *(விலகி)* வசந்தக, இதென்ன?

விதூ : *(காதுக்குள்)* அது இப்படி.

அரசன்: நல்லது, வசந்தகா நல்லது. *(ஆசமனம் செய்து)* பத்மாவதி, உட்கார வேண்டும்.

பத்மா: அன்பர் உத்தரவுப்படி. *(உட்காருகிறாள்.)*

அரசன்: நங்காய், பத்மாவதி! சரத்காலத்துச் சந்திரனைப் போல் வெண்மையான காசப் பூந்துகள் காற்றடித்துக் கண்களில் விழக் கண்ணீரால் முகம் நனைந்தது. *(தனக்குள்)* இவள் ஓர் இளமங்கை. இப்போதுதான் மணம் புரிந்தவள். உண்மையை அறிந்தால் துன்ப

மடைவாள். சுபாவத்தில் இவள் தைரியமுடையவளாக இருக்கலாம்; ஆனால் அச்சம் பெண்களுக்கு இயல்பான குணம் அல்லவா?

விதூ: ஸ்வாமி, உம்மை முன்னிட்டு மகதவரசர் தம் நண்பர் களுக்கு இன்று பிற்பகலில் காட்சி கொடுப்பார். உபசாரத்தை ஆதர வுடன் ஏற்றாலன்றோ அன்பு பெருகும். அதனால் அரசர் பெருமான் உத்ஸாகமாக இருக்க வேண்டும்.

அரசன்: சரி, நீ சொன்னது மேன்மையான கருத்தே. (எழுந்து) இவ்வுலகில் நற்குணமுடையாரையும் நற்செயல் புரிவாரையும் காண்பது என்றும் எளிதாகும். ஆனால் அவர் செயல்களை அறிந்து, நன்கு மதிப் போரைக் காண்பது அரிதே.

*(எல்லோரும் போகிறார்கள்.)*

# அங்கம் 5

*(பத்மினி வருகிறாள்.)*

பத்மினி: மதுகரி, சீக்கிரம் இங்கே வா.

*(மதுகரி வருகிறாள்.)*

மதுகரி: தோழி, இதோ வந்துவிட்டேன்; என்ன வேண்டும்?

பத்மினி: என்ன, உனக்குத் தெரியாதா! இளவரசி பத்மாவதி தலைவலியால் வருந்துகிறாள்.

மதுகரி: ஆ, இதென்ன கஷ்டம்!

பத்மினி: ஸகீ, ஓடிச்சென்று, ஆவந்திகை அம்மாளை அழை. இளவரசி தலைவலியால் வருந்துகிறாள் என்று மாத்திரம் சொல்; தானே வந்துவிடுவாள்.

மது: ஸகீ, அவள் வந்து என்ன செய்யப் போகிறாள்?

பத்மினி: அவள் இனிய கதைகள் சொல்லி, இளவரசியின் தலைவலியைப் போக்குவாள்.

மது: ஆமாம்; அப்படித்தான். இளவரசிக்கு எங்கே படுக்கை போட்டிருக்கிறது?

பத்மினி: நீராழி மண்டபத்தில் படுக்கை விரித்திருக்கிறது. நீ அங்கே செல். நான் அரசரிடம் சொல்வதற்கு வசந்தகரைத் தேடுகிறேன்.

மது: அப்படியே ஆகட்டும்.

*(போகிறாள்.)*

பத்மினி: இப்போது வசந்தகரை எங்கே பார்க்கலாம்?

*(விதூஷகன் வருகிறான்.)*

விதூ: பத்மாவதியை மணம் புரிந்து, இன்பம் பெருகும் இந்த மங்கல நன்னாளிலே, வாசவதத்தையை இழந்து, நெஞ்சம் நைந்து வியாகுலப்படும் வத்சராஜருக்குக் காமாக்கினி மிகுந்து வளரு கிறது. (பத்மினியைப் பார்த்து) யார் இங்கே? பத்மினியா! பத்மினி, என்ன செய்கிறாய்?

பத்மினி: ஏன் ஐயா, வசந்தகரே! உமக்குத் தெரியாதா? இளவரசி பத்மாவதி தலைவலியால் வருந்துகிறாள்.

விதூ: உண்மையாகவா? எனக்குத் தெரியாதே அம்மா.

பத்மினி: நீர் இதைச் சீக்கிரம் அரசரிடம் தெரிவியும். நானும் அதற்குள் தலைப்பற்றுத் தயாரிக்கிறேன்.

விதூ: பத்மாவதிக்கு எங்கே படுக்கை போட்டிருக்கிறது.

பத்மினி: நீராழி மண்டபத்தில் படுக்கை விரித்திருக்கிறது.

விதூ: ஆனால் நீ போ. நான் அரசரிடம் தெரிவிக்கிறேன்.

(இருவரும் போகிறார்கள்.)

(அரசன் வருகிறான்.)

அரசன்: நான் நாளாவட்டத்தில் மீண்டும் மணம் புரிந்து, குடும்பச் சுமையை மேற்கொண்டிருக்கிறேன். ஆனால் கொடும் பனி யால் அழிந்த தாமரைப்போல், தன் மெல்லிய உடலை லாவாணகத் தீயில் நீறாக்கிய அவந்தி மன்னனது செல்வப் புதல்வியை என் மனம் நாடுகின்றது!

(விதூஷகன் வருகிறான்.)

விதூ: சீக்கிரம் வாருங்கள், ஸ்வாமி, வெகு சீக்கிரம்.

அரசன்: ஏன்?

விதூ: ராணி பத்மாவதி தலைவலியால் வருந்துகிறாள்.

அரசன்: யார் இப்படிச் சொன்னது?

விதூ: பத்மினி!

அரசன்: ஆ, கஷ்டம்! அழகும் செல்வமும் குணமும் வாய்ந்த காதலியை அடைந்த என் துயரம் சற்று ஆறியதுபோல் இருந்தது. ஆனால் முன் பட்ட துன்பம் என் நெஞ்சை நன்றாகச் சுட்டுவிட்டதால் துக்கம் இன்னதென்று ஒருமுறை அறிந்த நான், பத்மாவதிக்கும் அதே கதி வருமோ என்று அஞ்சுகிறேன். நல்லது; பத்மாவதி எந்த இடத்தில் இருக்கிறாள்?

விதூ: நீராழி மண்டபத்தில் படுக்கை போட்டிருக்கிறது.

அரசன்: ஆனால் அங்கே வழிகாட்டிச் செல்.

விதூ: ஸ்வாமி, எழுந்தருள வேண்டும். (இருவரும் செல்கின்றனர்.)

விதூ: இதோ நீராழி மண்டபம். உள்ளே செல்லுங்கள்.

அரசன்: நீ முன்னே போ.

விதூ: உத்தரவு. (உள்ளே சென்று) ஐயோ! நில்லும். ஸ்வாமி, நில்லும்.

அரசன்: ஏன்?

விதூ: இதோ விளக்கு வெளிச்சத்தில் தரையில் ஒன்று நெளிந்து செல்கின்றது. இது ஒரு பாம்பு.

அரசன்: (உள்ளே சென்று பார்த்து சிரித்து) இது இந்த மூடனுக்குப் பாம்பென்று தோன்றுகிறது. முட்டாள்! தோரண வாசலில் அசைந்து தொங்கிய மாலை, தரையில் விழுந்து, நீண்டு கிடப்பதைக் கண்டு, திகைக்கிறாய். அது மாலைப்பொழுதினில் வீசும் இளங்காற்றால் அசைந்து, புரண்டு, பாம்பின் செய்கையைச் சற்றுப் பின்பற்றுகிறது.

விதூ: ஸ்வாமி, தாங்கள் சொல்வது சரிதான். இது பாம்பன்று. (உள்ளே சென்று பார்த்து) பத்மாவதி தேவி, இங்கே வந்துவிட்டு போயிருக்க வேண்டும்.

அரசன்: நண்ப, அவள் இங்கே வந்திருக்க முடியாது.

விதூ: உமக்கு எப்படித் தெரிந்தது?

அரசன்: இதில் என்ன தெரிவதற்கு உள்ளது! இதோ பார். படுக்கை, தடம் விழாமல் விரித்தபடியே சமமாக இருக்கிறது; போர்வை கலையவில்லை; தலைவலி மருந்துகளால் கறைபடாது தலையணை சுத்தமாயிருக்கிறது. நோயை விரோதிப்பதற்குக் கண்ணுக் கினிய அலங்காரம் ஒன்றும் காணப்படவில்லை. நோயால் படுக்கை யில் கிடந்து, பிறகு ஒருவரும் தாமாகவே சீக்கிரம் அதை விட்டுப் போவதில்லை.

விதூ: பெருமானே, ஆனால் சற்றுநேரம் இந்தப் படுக்கை யிலிருந்து தேவியின் வரவை எதிர்பாருங்கள்.

அரசன்: ஆகட்டும். (உட்கார்ந்து) நண்ப, எனக்குத் தூக்கம் வருகிறது. ஒரு கதை சொல்.

விதூ: நான் சொல்லுகிறேன். நீர், 'உம்உம்' என்று கேளும்.

அரசன்: ஆகட்டும்.

விதூ: உஜ்ஜயினி என்று ஒரு நகரம். அங்கே நீராடும் துறை கள் நிரம்ப அழகியவை அல்லவா?

அரசன்: என்ன உஜ்ஜயினியா?

விதூ: இந்தக் கதை பிடிக்காவிட்டால் வேறொன்று சொல்லு கிறேன்.

அரசன்: நண்ப, இந்தக் கதை பிடிக்கவில்லை என்றல்ல. ஆனால் அது-அவந்தி மன்னன் புதல்வி என்னோடு புறப்படும்போது தன் உற்றாரை நினைத்துப் பொங்கின-கண்ணீர்ப் பெருக்கினை, அன்பினால் என் மார்பிலே சொரிந்ததை, நினைப்பூட்டுகிறது. மேலும், வீணை கற்றுக்கொள்ளுங்கால் இடைவிடாது என்னையே நோக்கி நின்றவள், வீணைத் தந்தியை நழுவவிட்டுக் கையை வெறும் வெளி யில் நீட்டியதையும் ஞாபகப்படுத்துகிறது.

விதூ: ஆனால் வேறொன்று சொல்லுகிறேன். பிரமதத்தம் என்று ஒரு நகரம் உண்டு. அங்கே காம்பிலியன் என்று ஓர் அரசன் இருந்தான்.

அரசன்: எப்படி எப்படி?

விதூ: பிரமதத்தம் என்ற ஒரு நகரம் உண்டு; அங்கே காம்பிலியன் என்று ஓர் அரசன் இருந்தான்.

அரசன்: அடா, மூடா! பிரம்மதத்தன் என்று ஓர் அரசன். காம்பிலியம் என்று ஒரு நகரம் என்று சொல்.

விதூ: என்ன? பிரமதத்தன் என்ற ஓர் அரசன். காம்பிலியம் என்று ஒரு நகரம் என்றா?

அரசன்: ஆமாம், அப்படித்தான்.

விதூ: ஆனால் பெருமானே, சற்றுப் பொறும். நான் அதை மனப்பாடம் செய்துகொள்ளுகிறேன். 'பிரமதத்தன் என்று ஓர் அரசன், காம்பிலியம் என்று ஒரு நகரம்'. (நெட்டுருப் போடுகிறான்) ஸ்வாமி, இப்போது சரியாகச் சொல்லுகிறேன் கேளும். ஆ, வேந்தர் தூங்கி விட்டார். இது மிகவும் குளிர்ந்த வேளை. நான்போய், என் போர்வையை எடுத்துக்கொண்டு வருகிறேன்.

*(போகிறான்.)*

*(ஆவந்திகை வேஷம் பூண்ட வாசவதத்தையும் சேடியும் வருகிறார்கள்.)*

சேடி: அம்மா, வரவேண்டும். இளவரசி தலைவலியால் மிகவும் வருந்துகிறாள்.

வாச: ஆ, கஷ்டம்! பத்மாவதிக்கு எங்கே படுக்கை விரித் திருக்கிறது?

சேடி: நீராழி மண்டபத்தில்.

வாச: ஆனால் நீ முன்னே செல்.

*(இருவரும் செல்கின்றனர்.)*

சேடி: இதோ, நீராழி மண்டபம். உள்ளே போங்கள்; நானும் இதோ தலைப்பற்றுக் கொண்டு வருகிறேன்.

*(போகிறாள்.)*

வாச: ஆ, தேவதைகாள்! உங்களுக்கு என்மீது கருணை இல்லையே! விரகத்தால் துயரமடையும் என் காதலருக்கு ஆறுதல்

செய்து வந்த இந்தப் பத்மாவதியும் சௌக்கியமற்றவளானாள். (உள்ளே சென்று பார்த்து) ஆ, வேலைக்காரர்களுக்கு என்ன அஜாக்கிரதை! சௌக்கியம் இல்லாமல் இருக்கும் பத்மாவதிக்கு ஒரு விளக்கை மட்டும் துணையாக வைத்துவிட்டுப் போய்விட்டார்களே! இதோ பத்மாவதி படுத்து உறங்குகிறாள். நான் உட்காருகிறேன். படுக்கையிலிருந்து விலகி உட்கார்ந்தால் என் அன்பு அற்பமாகத் தோன்றும். அதனால் இந்தப் படுக்கையிலேயே உட்காருகிறேன். (உட்கார்ந்து) என்ன ஆச்சரியம்! இன்று இவளருகில் இருக்கும்போது என் உள்ளம் சந்தோஷத்தால் பூரிக்கிறது. நல்ல காலம். நேராகவும் சுகமாகவும் மூச்சுவிடுகிறாள். வியாதி அநேகமாகக் குணப்பட்டிருக்க வேண்டும். படுக்கையின் ஓர் ஓரமாகப் படுத்திருப்பதால் தழுவிக்கொள்ள என்னை அழைப்பது போல் தோன்றுகிறது. நானும் படுத்துக்கொள்ளுகிறேன். (படுத்துக் கொள்ளுகிறாள்.)

அரசன்: (கனவில் புலம்புகிறான்) ஏ, வாசவதத்தாய்!

வாச: (திடீரென்று எழுந்து) ஆ! என் காதலா! பத்மாவதி அல்ல. என்ன? யாரேனும் என் உண்மையை அறிந்துவிட்டார்களா! உண்மை வெளியாகிவிட்டால் யௌகந்தராயணர் எடுத்தப் பெரும் பாரமாகிய பிரதிக்ஞை வீணாகிவிடுமே!

அரசன்: ஆ, அவந்திராஜன் புதல்வி!

வாச: என் அன்பர் கனவில் புலம்புகிறார்; நல்ல காலம். இவ்விடத்தில் ஒருவருமே இல்லை. சற்று இருந்து கேட்கிறேன்; என் கண்ணும் உள்ளமும் களிப்புறட்டும்.

அரசன்: ஆ, என் அன்பே! ஆ, என் அன்பார்ந்த சிஷ்யே, எனக்கு மறுமொழி சொல்.

வாச: சொல்லுகிறேன், நாதா, சொல்லுகிறேன்.

அரசன்: கோபித்துக் கொண்டிருக்கிறாயா?

வாச: இல்லை, இல்லை; துக்கத்துடன் இருக்கிறேன்.

அரசன்: கோபமில்லையானால் ஏன் அலங்கரித்துக் கொள்ள வில்லை?

வாச: இதிலும் மேலாக என்ன வேண்டும்?

அரசன்: விரசிகையை நினைக்கிறாயா?

வாச: (கோபத்துடன்) போம், போம். இங்கேயும் விரசிகையா?

அரசன்: ஆனால் விரசிகை காரணமாக உன் மன்னிப்பை வேண்டுகிறேன்.

(இரண்டு கைகளையும் நீட்டுகிறான்.)

வாச: (தனக்குள்) நெடுநேரம் இருந்துவிட்டேன். யாராவது என்னைக் காணக்கூடும். நான் போய்விடுகிறேன். இல்லை; படுக்கை யிலிருந்து தொங்குகிற என் காதலர் கைகளைப் படுக்கைமேல் எடுத்து வைத்துவிட்டுப் போகிறேன்.

(அப்படியே செய்துவிட்டுப் போகிறாள்.)

அரசன்: (சரேல் என்று எழுந்து புறப்பட்டு) வாசவதத்தாய்! நில். (கதவில் மோதிக்கொண்டு) ஆ, கஷ்டம்! பரபரப்புடன் நான் வெளியே ஓடிவந்ததில் வாசல் கதவு என்னை இடித்துவிட்டது. ஆனதால் இது உண்மைதானோ தோற்றமோ என்று தெளிவாக அறிய முடியவில்லை.

(விதூஷகன் பிரவேசிக்கிறான்.)

விதூ: ஸ்வாமி, தூங்கி விழித்தீரா?

அரசன்: நண்ப, உன்னிடம் ஒரு நல்ல செய்தி சொல்லுகிறேன். வாசவதத்தை உயிரோடிருக்கிறாள்.

விதூ: ஆ, வாசவதத்தையா! வாசவதத்தை எங்கே! அவள் இறந்து வெகுகாலம் ஆகிவிட்டதே!

அரசன்: இல்லை, என் நண்பனே, இல்லை. நான் படுக்கை யில் தூங்கிக்கொண்டிருந்தேன். அப்போது அவள் என்னை எழுப்பி விட்டுப் போனாள். தீயில் அழிந்தாள் என்று உருமண்ணுவா முன்னே சொன்னது வஞ்சனையே.

விதூ: இது அசம்பாவிதமல்லவா? உஜ்ஜயினியில் நீராடு தலைப் பற்றி நான் சொன்னது முதல் வாசவதத்தையை நினைத்துக் கொண்டிருந்த நீர், நித்திரை போனீர். அவளைக் கனவில் கண்டிருக்கலாம்.

**அரசன்:** நான் இப்படிக் கனவா கண்டேன்? இது கனவானால் இந்தக் கனவிலிருந்து விழியாமல் இருப்பதுவே என் பாக்கியம். இது ஒரு மயக்கமானால் இந்த மயக்கம் என்னிடம் எப்போதுமே இருக்க வேண்டும்.

**விதூ:** ஸ்வாமி, இந்த நகரத்தில் அவந்திசுந்தரி என்று ஒரு யக்ஷிணி இருக்கிறாள்; அவளை நீர் பார்த்திருக்கலாம்.

**அரசன்:** இல்லவே இல்லை. நான் தெளிந்து எழுந்திருந்தும் அவளது கற்பு விளங்கும் முகத்தைக் கண்டேன். கண்கள் அஞ்சனம் துறந் திருந்தன. கூந்தல் நீண்டு தொங்கிற்று. மேலும், நண்ப, இதோ பார். நான் உறங்கியபோது நடுக்கமுற்ற தேவி, என் கையைத் தழுவினாள். அவள் பரிசத்தால் உண்டான ரோமாஞ்சம் இன்னும் என் கையை விட்டு நீங்கவில்லை.

**விதூ:** ஸ்வாமி! இந்தப் பயனற்ற விஷயத்தைப் பற்றி நினைத்தது போதும். வாருங்கள், நாம் நாலுகட்டுக்குப் போவோம்.

*(கஞ்சுகி பிரவேசிக்கிறான்.)*

*கஞ்சுகி:* வாழி மன்னவ, எங்கள் தர்சக மகாராஜர் தங்க ளிடம் தெரிவிக்கிறார்: ''உமது மந்திரி உருமண்ணுவா பெரிய சேனை யுடன் ஆருணியைத் தாக்குவதற்கு இதோ வந்திருக்கிறார். யானை, குதிரை, தேர், காலாள் முதலிய, ஜயசீலமான எனது சேனை பிரயாணத் துக்கு ஆயத்தமாக இருக்கிறது. அதனால் நீர் புறப்பட வேண்டும். மேலும், உமது பகைவர் பிளவுபட்டனர்; குடிகள் உமது குணங்களில் ஈடுபட்டு, நம்பிக்கையுற்றிருக்கிறார்கள். பிரயாணத்தில் பின்பக்கத்தைக் காப்பதற்குக் காவல்படை வகுக்கப்பட்டுள்ளது. இப்படிப் பகைவரை ஒழித்தற்குச் சாத்தியமானதெல்லாம் நான் செய்திருக்கிறேன். சேனை களும் இதோ கங்கையாற்றைத் தாண்டிவிட்டன. வத்ச நாடும் உமது கையில் வரப்போகிறது.''

**அரசன்:** ஆகட்டும். இதோ யானைகளும் குதிரைகளும் நிறைந்து, அலைபாயும் இப்போர்க் கடலில் இறங்கிக் கொடிய செயல்களில் வல்ல ஆருணியை வதம் செய்கிறேன்.

*(எல்லோரும் போகிறார்கள்.)*

# அங்கம் 6

*(கஞ்சுகி வருகிறான்.)*

கஞ்சுகி: யார் இங்கே பொற்றோரண வாசல் காப்பது?

துவாரபாலிகை: *(பிரவேசித்து)* நான்தான் ஐயா விஜயை; என்ன செய்ய வேண்டும்?

கஞ்சுகி: அம்மா, வத்ச நாட்டை மீண்டும் பெற்றுப் பெருமை யுடன் விளங்கும் உதயணனிடம் விக்ஞாபனம் செய்ய வேண்டும்: மகா சேனரிடமிருந்து ரைப்பிய குலத்தினனான கஞ்சுகியும் அங்காரவதி தேவியார் அனுப்பிய வாசவதத்தையின் செவிலித்தாய் வசுந்தரையம் மாளும் வாயிலில் வந்திருக்கிறார்கள் என்று.

துவார: ஐயா, இது விக்ஞாபனம் செய்யத் தகுந்த தேசகாலம் அன்று.

கஞ்சுகி: ஏன் இது தகுந்த தேசகாலம் இல்லை?

துவார: கேளுங்கள், ஐயா! இன்று அரசனது 'ஸ~யமுனா' என்ற அரண்மனையில் வந்து, யாரோ ஒருவன் வீணை வாசித்தான். அரசர் அதைக் கேட்டுக் 'கோஷவதியின் நாதம்போல் இருக்கிறது' என்று சொன்னார்.

கஞ்சுகி: பின்பு?

துவார: உடனே அவனிடம், 'இந்த வீணை உனக்கு எங்கிருந்து கிடைத்தது?' என்று கேட்டார். 'இது நர்மதை யாற்றின் கரையில் தருப்பைப் புல் புதரில் காணப்பட்டது. பயன்படுமாயின் இதைப் பெருமான் பெற்றுக் கொள்ள வேண்டும்' என்றான். மன்னர் அதை எடுத்து மடியில் வைத்துக் கொண்டதும் மூர்ச்சையடைந்தார். பிறகு மூர்ச்சை தெளிந்து, கண்ணீர் வடித்துக் கலக்கமுற்ற முகத்துடன், 'ஆ, கோஷவதி! உன்னைக் கண் டேன். உன் இணைபிரியாத என் காதலியைக் காணவில்லையே!' என்று வருந்தினார். அதனாலேதான் இது சமயமல்ல என்றேன். எப்படி ஐயா தெரிவிப்பேன்?

கஞ்: அம்மா, தடையின்றித் தெரிவிக்கலாம். எங்கள் வரவும் அதை ஒட்டியதுதான்.

துவார: மன்னர் இதோ ஸுயமுனை அரண்மனையை விட்டு இறங்கி வருகிறார். இங்கேயே தெரிவிக்கிறேன்.

(அரசனும் விதூஷகனும் வருகிறார்கள்.)

அரசன்: செவிக்கினிய நாதம் தரும் வீணையே! தேவியின் மார்பிலும் மடியிலும் சுக நித்திரை செய்த நீ, பறவைகள் உன் மேனியை எச்சமிட்டு அசுத்தப்படுத்தப் பயங்கரமான வனவாசத்தை எவ்வாறு பொறுத்தாய்? ஆ, கோஷவதி! இன்னும் உனக்கு உணர்ச்சி யில்லையே! இரங்கத்தக்க தேவியை மறந்து விட்டாயே! அவள் உன் குடத்தை மடியில் வைத்துக் கையால் கட்டியணைத்ததும், தளர்ச்சி யுற்றபோது ஸ்தனங்களுக்கிடையில் உன்னைச் சுகமாகத் தழுவிக் கொண்டதும், என்னைப் பிரிந்து அவள் ஏங்கிப் புலம்பியதும் வாசிப்புக் கிடையே புன்னகை பூத்துப் பேசியதும் உனக்கு நினைவில்லையே!

விதூ: ஸ்வாமி, போதும்; இப்போது இத்தனை வருந்தியது.

அரசன்: நண்பனே, அப்படியல்ல. நெடுநாள் உறங்கிக் கிடந்த என் காதல் இப்போது வீணையால் விழித்துக்கொண்டது. இந்த வீணை மீது அத்தனை அன்பு வைத்திருந்த தேவியைக் காணவில்லையே! வசந்தகா, கோஷவதியைச் சிற்பிகளிடம் எடுத்துச் சென்று, சீக்கிரம் புதுப்பித்துக் கொண்டுவா.

விதூ: ஸ்வாமி, கட்டளைப்படி செய்கிறேன்.

(வீணையை எடுத்துக்கொண்டு போகிறான்.)

(துவாரப்பாலிகை வருகிறாள்.)

துவார: வாழி மன்னவ! மகாசேனரிடமிருந்து ரைப்பிய மரபின ரான கஞ்சுகியும் தேவி அங்காரவதி அனுப்பிய வாசவதத்தையின் செவிலித்தாய் வசுந்தரையும் வாயிலில் வந்திருக்கிறார்கள்.

அரசன்: ஆனால் பத்மாவதியை அழைத்துவா.

துவார: பெருமான் உத்தரவுப்படி. (போகிறாள்.)

அரசன்: என்ன? என் செய்தியெல்லாம் மகாசேனருக்கு இவ்வளவு சீக்கிரம் எட்டிவிட்டதா!

(பத்மாவதியும் துவாரபாலிகையும் வருகிறார்கள்.)

துவார: இளவரசி, வரவேண்டும்.

பத்மா: என் அன்பருக்கு ஜயமுண்டாகட்டும்.

அரசன்: பத்மாவதி, உனக்குத் தெரியுமா? மகாசேனரிடமிருந்து ரைப்பிய குலத்தினனான கஞ்சுகியும், அங்காரவதி அனுப்பிய வாசவ தத்தையின் செவிலித்தாய் வசுந்தரையும் வந்திருக்கிறார்கள்.

பத்மா: நாதா, என் உறவினருடைய க்ஷேம சமாசாரத்தைக் கேட்க நான் ஆசையுடன் இருக்கிறேன்.

அரசன்: வாசவதத்தையின் உறவினரை உன் உறவினராகக் கொண்டாடுவது உன் பெருமைக்கு ஏற்றது. பத்மாவதி, உட்கார். ஏன் நிற்கிறாய்?

பத்மா: நாதா, என்னுடன் இருந்துகொண்டா இவர்களைப் பார்க்கப் போகிறீர்கள்?

அரசன்: அதில் என்ன குற்றம்?

பத்மா: தங்களது இரண்டாவது தாரம் என்பதனால் இவர் களுக்கு என்மீது உதாசீனம் தோன்றும்.

அரசன்: மனைவியைக் காண உரிமை வாய்ந்தவர்களுக்கு மனைவியைக் காட்டாமல் இருப்பது பெருங்குற்றமாகும். அதனால் உட்கார்.

பத்மா: என் அன்பர் உத்தரவுப்படி. (உட்காருகிறாள்.) நாதா, என் தாயும் தந்தையும் என்னதான் சொல்வார்களோ என்று என் நெஞ்சம் படபடக்கிறது.

அரசன்: ஆமாம், பத்மாவதி! அவர்கள் என்ன சொல்வார் களோ என்று என் நெஞ்சமும் பதைக்கிறது. நான் அவரது கன்னிகை யைக் கவர்ந்துகொண்டு வந்தேன். ஆனால் காப்பாற்றினேனில்லை.

நிலையற்ற செல்வத்தால் மயங்கி, பெரியோரைப் பிழைத்து, அதனால் தந்தைக்குக் கோபமூட்டிய மகனைப்போல் மனம் நடுங்குகிறேன்.

பத்மா: நாதா, காலம் வரும்போது யார் எதைத் தடுக்க வல்லவர்?

துவார: இதோ கஞ்சுகியும் செவிலித்தாயும் வாசலில் வந்திருக் கிறார்கள்.

அரசன்: சீக்கிரம் அழைத்து வா.

துவார: உத்தரவு. (போகிறாள்.)

(கஞ்சுகியும் செவிலித்தாயும் துவாரபாலிகையும் வருகிறார்கள்.)

கஞ்: சம்பந்திகளுடைய இந்த நாட்டுக்கு வந்து, நான் பெரிதும் சந்தோஷமடைந்தேன். ஆனால் எங்கள் ராஜகுமாரி இறந் ததை நினைத்தாலோ துக்கம் பொங்குகிறது. பகைவர் பற்றின நாடு, போகட்டுமே, பாவி தெய்வமே! மன்னன் காதலி மட்டும் குசலமா யிருந்தால் நீ எனக்குச் செய்யாதது என்ன?

துவார: ஐயா, அரசர் இதோ இருக்கிறார். நீர் அடுத்துச் செல்லும்.

கஞ்: (அடுத்துச் சென்று) மன்னர்பிரானுக்கு மங்களம் உண் டாகட்டும்.

அரசன்: (ஆதரவுடன்) ஐயா, மகாசேனர் இம்மாநிலத்துள்ள மன்னர் குலத்தையெல்லாம் வாழவும் தாழவும் செய்யத் திறம் பெற்றவர். அவரை நான் உறவினராக்க விரும்பினேன்; அம்மன்னர் மன்னர் சௌக்கியமா?

கஞ்: ஆமாம்; மகாசேனர் சௌக்கியமாக இருக்கிறார். இங்கே எல்லோருடைய சௌக்கியத்தையும் விசாரிக்கிறார்.

அரசன்: (ஆசனத்தினின்று எழுந்து) மகாசேனர் என்ன ஆக்ஞை யிடுகிறார்?

கஞ்: இது வைதேகியின் வம்சத்தினருக்குத் தக்கதே. ஆனால்

அரசர், ஆசனத்தில் அமர்ந்துதான் மகாசேனர் அனுப்பிய செய்தியைக் கேட்க வேண்டும்.

அரசன்: மகாசேனரது உத்தரவுப்படி.

(உட்காருகிறான்.)

கஞ்: பகைவர் பற்றிக்கொண்ட நாட்டை நீர் மீண்டும் பெற்றதை அறிந்து, நான் சந்தோஷப்படுகிறேன். ஏனென்றால் பேடியிடமும் பலவீனனிடமும் ஊக்கமும் ஆற்றலும் உண்டாவதில்லை. அரசச் செல்வத்தை அநுபவிப்பவர் பெரும்பாலும் ஊக்கமுடையவர் தாம்.

அரசன்: இதெல்லாம் மகாசேனருடைய மாட்சியேயன்றி வேறல்ல. பண்டு நான் தோல்வியுற்று, அவரால் பிடிக்கப்பட்டேன். அப்போது தம் புத்திரரோடு என்னைச் செல்வமாகக் கொண்டாடினார். அப்புறம் அவர் புதல்வியைத் திருடிச் சென்றேன். ஆனால் அவளைக் காப்பாற்றவும் தவறிவிட்டேன். அவள் இறந்துபட்டாள் என்று கேட்டும், அவர், முன்போலவே என்னிடம் சொந்தம் பாராட்டுகிறார். எனது வத்ச நாட்டை மீண்டும் பெற முடிந்ததற்கும் அவ்வரசர் அன்றோ காரணம்.

கஞ்: இது மகாசேனர் விடுத்த தூது. மகாராணி சொல்லியனுப்பியதை இதோ வசுந்தரையம்மாள் சொல்லுவார்.

அரசன்: ஆ, அம்மா! பதினாறு அரசியருக்குத் தலைமை வாய்ந்தவள்; புண்ணியம் பொருந்திய நகர தேவதை போன்றவள்; என் பிரிவாற்றாமல் நெஞ்சம் நைந்தவள். என் தாய் சௌக்கியமா?

செவிலி: மகாராணி சௌக்கியமே. இங்கே எல்லாரும் சுகமா என்று விசாரிக்கிறார்.

அரசன்: எல்லோரும் சுகமா என்றா? (துக்கத்துடன்) அம்மா, இப்படி எல்லோரும் சுகந்தான்.

செவிலி: பெருமானே, அதிகம் வருந்தாதேயுங்கள்.

கஞ்: ஸ்வாமி, தைரியமாக இருங்கள். தாங்கள் இப்படி வருந்துவதால் மகாசேனன் புதல்வி இறந்தவளாயினும் உயிர் வாழ்பவளே யாவள். மேலும் சாகுங்காலம் வந்துவிட்டால் யார் யாரைக் காப்பாற்ற

முடியும்? கயிறு அறுந்துவிட்டால் குடத்தைத் தாங்குபவர் யார்? உலகத்தார் வாழ்வும் தாழ்வும், ஒரு காலத்தில் அழிவதும் ஒரு காலத்தில் தோன்றுவதுமான வனத்தின் இயல்பைப் போன்றது.

அரசன்: ஐயனே, அப்படியல்ல. மகாசேனன் செல்வப் புதல்வி, என் அன்பார்ந்த சிஷ்யை, என் பட்டத்தரசி, என் ஆருயிர்க் காதலி! அவளை எப்படி நான் எப்பிறப்பிலும் நினையாதிருப்பேன்?

செவிலி: மகாராணி சொன்னது இப்படி: ''வாசவதத்தை இறந்துவிட்டாள், என்ன செய்யலாம்? முதல் முதலாக மகாசேனரும் நானும் உம்மை எங்கள் கோபாலகனையும் பாலகனையும் போல நேசித்து, எங்கள் அருமை மருமகனாக்க விரும்பினோம். அதன் பொருட்டே உம்மை உஜ்ஜயினிக்கும் கொண்டு வந்தோம். வீணை கற்பிக்கும் பெயரைச் சொல்லி, அக்கினி சாட்சியாக இல்லாமலே மகளை உமக்குக் கொடுத்துவிட்டோம். திருமணம் மங்களமாக நிறைவேறும் முன்னரே உமது சாபலியத்தால் அவளுடன் நீர் ஒளிந்து ஓடிப் போய்விட்டீர். பிறகு நாங்கள் உமது உருவத்தையும் வாசவதத்தையின் உருவத்தையும் சித்திரப் பலகையில் எழுதித் திருமணம் கொண்டாடுகிறோம். அந்தச் சித்திரப் பலகை இதோ உமக்கு அனுப்பப்படுகிறது. அதைக் கண்டு ஆறுதல் உற்றிரும்.

அரசன்: அந்தோ! இப்பேரரசி பேசுவது அன்பும் தகுதியும் ஒருங்கே வாய்ந்தது. குற்றஞ் செய்த என் மீதும் அன்பு மறவாது மொழிந்த இச்சொல் எண்ணிறந்த ராச்சியங்களைப் பெறுவதினும் மேலாக விரும்பக்கூடியது.

பத்மா: நாதா, சித்திரத்தில் அமைந்த என் தமக்கையைப் பார்த்து வணங்க விரும்புகிறேன்.

செவிலி: இளவரசி, இதோ பாருங்கள்.

*(சித்தரப் பலகையைக் காட்டுகிறாள்.)*

பத்மா: *(தனக்குள்)* ஆ, ஆ! இதென்ன இந்தச் சித்திரம் ஆவந்தியம்மாளைப்போல் இருக்கிறதே! *(வெளிப்பட)* நாதா, இது என் தமக்கை வாசவதத்தையின் சரியான உருவப்படந்தானா?

அரசன்: சரியானதன்று. அவளேதான் என்று நினைக்கிறேன்.

ஆ, கஷ்டம்! இவ்வழகிய மேனிக்கு எத்தனை கோரமான விபத்து வந்துவிட்டது! இவ்வினிய முகத்தைத்தான் எப்படி நெருப்பும் எரித்தது!

பத்மா: இது என் தமக்கை வாசவதத்தையின் சரியான ஓவியமா அல்லவா என்று என் அன்பரின் ஓவியத்தையும் பார்த்த பிறகு தான் சொல்ல முடியும்.

செவிலி: இதோ பார்க்கலாமே! *(அரசனின் ஓவியத்தைக் காட்டுகிறாள்.)*

பத்மா: *(பார்த்து)* இத என் அன்பருக்கு சரிசமானமாக இருப்பதால் அதுவும் என் தமக்கையின் சரியான ஓவியமென்றே நினைக்கிறேன்.

அரசன்: தேவி, சித்திரத்தைப் பார்த்தது முதல் உன்னிடம் ஒரு சந்தோஷமும் அத்துடன் ஒரு பதற்றமும் தோன்றுகிறதே! ஏன்?

பத்மா: இந்தச் சித்திரத்துக்கு முழுதும் ஒத்திருக்கும் ஒரு மாது இங்கே இருந்து வருகிறாள்.

அரசன்: என்ன, வாசவதத்தையைப் போன்றவளா!

பத்மா: ஆமாம்.

அரசன்: ஆனால் அவளைச் சீக்கிரம் அழைத்துவா.

பத்மா: நாதா, நான் கன்னியா யிருக்கும்போது பிராமணர் ஒருவர் அவளைத் தம் சகோதரி என்று சொல்லி, என்னிடம் அடைக்கலமாக வைத்துவிட்டுப் போனார். கணவர் தேசாந்தரம் போயிருப்பதால் அவள் பரபுருஷரைப் பார்ப்பதில்லை. அதனால் அவள் என்னுடன் வரும்போது தாங்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

அரசன்: அந்தணன் சகோதரியானால் அவள் வேறொருத்தியே; அது நிச்சயம். உருவத்தில் ஒருவரை ஒருவர் ஒத்திருப்பது உலகத்தில் சாதாரணந்தானே.

*(துவாரபாலிகை வருகிறாள்.)*

துவார: அரசர் பெருமானுக்கு ஜயமுண்டாகட்டும்! உஜ்ஜயினியிலிருந்து பிராமணர் ஒருவர் இளவரசியிடம் அடைக்கலமாக வைத்து

விட்டுப் போன தம் சகோதரியைத் திரும்பப் பெற்றுக்கொள்ள இதோ வாசலில் வந்திருக்கிறார்.

அரசன்: பத்மாவதி, நீ சொன்ன பிராமணன்தானா?

பத்மா: இருக்கலாம்.

அரசன்: வேண்டும் உபசாரங்கள் செய்து, அவரை உள்ளே அழைத்து வா.

துவார: பெருமான் உத்தரவுப்படி. (போகிறாள்.)

அரசன்: பத்மாவதி, நீ போய் அந்த மாதை அழைத்துவா!

பத்மா: என் அன்பர் ஆக்ஞைப்படி. (போகிறாள்.) (யௌகந்த ராயணனும் துவாரபாலிகையும் வருகிறார்கள்.)

யௌகந்த: (தனக்குள்) அரசன் நன்மையைக் கருதியே பட்டத் தரசியை மறைத்துவைத்தேன். பத்மாவதியின் விவாகத்தையும் அவர் நன்மையின் பொருட்டே செய்வித்தேன். எண்ணிய கருமமும் நிறை வேறிவிட்டது. ஆனாலும் அரசன் இப்போது என்ன பேசுவாரோ என்று உள்ளம் பதறுகிறது.

துவார: மன்னர் இதோ இருக்கிறார்; அடுத்துச் செல்லும்.

யௌகந்த: உமக்கு மங்களம் உண்டாகட்டும்.

அரசன்: முன் கேட்ட குரல்போல் இருக்கிறதே! ஓய் பிராம ணரே! நீர் உமது சகோதரியைப் பத்மாவதியிடம் அடைக்கலமாக வைத்ததுண்டா?

யௌகந்த: ஆமாம்.

அரசன்: ஆனால் இவரது சகோதரியைச் சீக்கிரம் அழைத்துவா.

துவார: பெருமான் உத்தரவுப்படி. (போகிறாள்.)

(பத்மாவதியும் ஆவந்திகையும் துவாரபாலிகையும் வருகிறார்கள்.)

பத்மா: வா அம்மா, உமக்கு ஒரு நல்ல செய்தி சொல்லு கிறேன்.

வாச: என்ன செய்தி?

பத்மா: உமது சகோதரர் வந்துவிட்டார்.

வாச: நல்ல வேளை; இப்போதாவது ஞாபகம் வந்ததே!

பத்மா: (அரசனை அடுத்து) என் அன்பருக்கு வெற்றியுண் டாக! இதோ என் அடைக்கலம்.

அரசன்: பத்மாவதி, அடைக்கலப்பொருளைச் சாட்சியுடன் திருப்பிக் கொடுப்பது முறை. கனம் பொருந்திய ரைப்பியரும் வசுந்தரை அம்மையும் இதற்குச் சாட்சியாவார்கள்.

பத்மா: ஐயா, இதோ உமது சகோதரி.

செவிலி: (ஆவந்திகையை உற்றுநோக்கி) ஆ, ராணி வாசவ தத்தை அன்றோ!

அரசன்: என்ன! மகாசேனர் புதல்வியா! பேரரசி பத்மாவதி யுடன் உள்ளே செல்.

யௌகந்த: இல்லை! உள்ளே போகக்கூடாது. இவள் என் சகோதரியன்றோ!

அரசன்: நீர் என்ன சொல்கிறீர்! இவள் மகாசேனன் புதல்வியே தான்.

யௌகந்த: மன்னவ, நீர் பாரத குலத்து உதித்தவர். கற்பன வெல்லாம் கற்றறிந்து, தூய ஞானமும் சீலமும் வாய்ந்தவர். அரச தருமத்தைப் போதிக்கும் ஆசிரியர் போன்றவர். நீர் இவளைப் பலவந்த மாக அபகரிப்பது தகாது.

அரசன்: நல்லது. உருவப்படம் ஒத்திருப்பதைப் பார்ப்போம். திரைச்சீலையை அகற்று.

யௌகந்த: வாழ்க, என் இறைவ!

வாசவதத்தை: என் அன்பருக்கு மங்களம் உண்டாகட்டும்.

அரசன்: ஆ, இதோ யௌகந்தராயணன்! இதோ மகாசேனன் புதல்வி! (இருவரையும் தழுவிக்கொண்டு) நான் மீண்டும் இவளைக் கண்முன் காண்கிறேனே! இது நனவோ, கனவோ அறியேன்! இவ்வாறே முன் ஒரு முறை இவளைக் கண்டு மோசம் போனேன்.

யௌகந்த: ஸ்வாமி, தேவியை மறைத்து வைத்திருந்ததனால் நான் குற்றவாளியானேன். என்னைப் பொறுத்தருள வேண்டும்.

*(பாதங்களில் பணிகிறான்.)*

அரசன்: (தூக்கியெடுத்து) நீர் யௌகந்தராயணர் அன்றோ! என் பொருட்டுப் பித்தனாய்த் திரிந்தீர்; பெரும் போர் புரிந்தீர். நூலோதிய பல சூழ்ச்சியும் செய்தீர். உமது பெருமுயற்சியால் அன்றோ துன்பத்தில் ஆழ்ந்த நான் இன்று கரையேறினேன்!

யௌகந்த: எங்கள் அரசர் பெருமானது பாக்கியங்களைப் பின்பற்றிச் சென்றோம்.

பத்மா: ஓ, இவர் என் தமக்கையாயிற்றே! அம்மா, அறியாமையால் உம்மைத் தோழியாகப் பாவித்து, முறை தவறி நடந்து விட்டேன். அதற்குத் தலையால் வணங்கி, மன்னிப்பு வேண்டுகிறேன்.

*(பாதங்களில் பணிகிறாள்.)*

வாச: (பத்மாவதியை தூக்கியெடுத்து) கற்பரசி! எழுந்திரு, எழுந்திரு! வறுமையுற்றோர் செல்வமாய் விளங்கும் உன் சரீரம் பிழையும் செய்ததா!

பத்மா: உமது அநுக்கிரகம் பெற்றேன்.

அரசன்: யௌகந்தராயணரே! எதற்காகத் தேவியை மறைத்து வைத்தீர்?

யௌகந்த: கௌசாம்பி அனைத்தையும் ஆளுவோம் என்று.

அரசன்: நல்லது; ஆனால் பத்மாவதியிடம் கொண்டு வைத்ததற்கு என்ன காரணம்?

யௌகந்த: பத்மாவதி அரசனுடைய தேவியாவாள என்று புஷ்பகபத்ரகர் முதலான சித்தர்கள் முன்னமே சொன்னார்கள்.

**அரசன்: இது உருமண்ணுவாவுக்குத் தெரியுமா?**

**யௌகந்த: ஸ்வாமி, அவர் அனைவருக்கும் தெரியும்.**

**அரசன்: எத்தனை விளைந்த கள்வன் உருமண்ணுவா!**

யௌகந்த: ஸ்வாமி, கனம்பொருந்திய ரைப்பியரும் வசுந்தரை அம்மாளும் ராணி வாசவதத்தையின் க்ஷேம சமாசாரத்தைத் தெரிவிக்க இன்றே உஜ்ஜயினிக்குப் புறப்படலாமே!

அரசன்: ஏன், நாம் எல்லோருமே போவோமே, உஜ்ஜயினிக்கு. ராணி பத்மாவதியும் நம்முடன் வருவாள்.

*(பரத வாக்கியம்)*

இமயம், விந்தியம் இவ்விரு மலைகளைக் குண்டலமாய் அணிந்தவளும் கடல் நான்கு மட்டும் பரந்தவளுமான பூமியை எங்கள் ராஜசிம்மன் ஒரு குடையினள் ஆம்படி ஆளட்டும்.

*(எல்லோரும் போகிறார்கள்.)*

முற்றும்

★ ★

# பாஸ மகாகவியின் இரட்டை நாடகங்கள்

A.S. பஞ்சாபகேச ஐயர் ஆங்கிலத்தில் எழுதிய ''பாஸமகாகவியின் இரட்டை நாடகங்கள்'' என்னும் நூலை தி.அ. சாமிநாத ஐயர் 1944-ஆம் ஆண்டு தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டார். இந்நூலில் இடம்பெற்றுள்ள நூன்முகம் என்னும் பகுதி பாஸ மகாகவியின் நாடகங்களைப் பற்றிய விரிவான ஆய்வாக அமைந்துள்ளது. கிடைத்தற்கரிய அந்த ஆய்வுரையை இன்றைய இலக்கிய ஆய்வாளர்களின் பயன்பாடு கருதி இணைப்பாகத் தந்துள்ளோம்.

# நூன் முகம்

**'ஸ்வப்ன வாஸவ தத்தம்'** என்பது 'யௌகந்தராயணனது சபதங்கள்' என்பதன் தொடர்பேயானமையின், இவ்விரண்டும் சேர்ந்து ஒரே நாடகம் எனத்தகும். வட மொழியாசிரியர்கள் எழுதியுள்ள உத்தம நாடகங்களுள் இவை கணிக்கத்தக்கவை; உலகத்து உத்தம நாடகங்களுள் சேர்ந்தவையெனவும் சொல்லவேண்டியவையாகும். நெருக்கடியான நாடக சந்தர்ப்பங்கள்; பற்பல சித்த விருத்திகளில் மனத்துடிப்பு, காமம் (சிங்காரம்), குரோதம் (ரௌத்ரம்), கருணை, பக்தி, திடுக்காட்டம் (அற்புதம்), சுடுசொல் (ஹாஸ்யம்), வீரம், திகில் (பயானகம்), சாந்தம் முதலான ரஸங்களின் (மனோவிகாரங் களின்) அதிசய வர்ணனை; பறவைகளின் கதிகள். சூரியாஸ்தமனம் அந்திவேளை, வானத்தில் நக்ஷத்திரங்கள் முதலான இயற்கைத் தோற் றங்களின் நேர்த்தியான வர்ணனைகள்; தவச்சாலையின் தோற்றம், **பத்மாவதி**யின் கலியாணத்திற்கான ஏற்பாடுகள், சதிகாரர்கள் கோவிலிற் கூடுதல் முதலான வாழ்க்கைச் சித்திரவர்ணனைகள்; யௌகந்தராயணனது சபதங்கள்' என்னும் நாடகத்தில் வத்ஸராஜனைப் போல அரங்கமேடை ஏறாமலே எப்பொழுதும் அங்கிருப்பதுபோலத் தோன்றுகிறவர்கள் செய்யும் காரியங்களின் சித்திராலங்காரமான விவரம்; உலக வாழ்க்கையில் தோட்டி முதல் தொண்டமான் வரையிற் காணும் பற்பல அந்தஸ்தினரின் குணாகுண வர்ணனைச் சிறப்பு; மானிடர் பெருமை, தன்னரசு, பராதீன விடுதலை, மிருகரக்ஷணை, மனித ரக்ஷணை இவைகளின் பொருட்டான பராக்கிரமம்; தாழ்ந்த உத்தியோகஸ்தர்களையும் சேவகர்களையும் அன்புடன் ஆதரித்தல் ஆகிய இவையெல்லாம் அடங்கிய இந்நாடகங்கள் பேராசிரியரொருவர் ஆக்கியவையெனவும் அவ்வாசிரியர் **ஷேக்ஸ்பியருக்கேனும், காளி தாசருக்கேனும், கீதி (Goethe)** யென்பவருக்கேனும் குறைந்தவரல்ல ரெனவும் சாற்றுகின்றன. இவ்வதிசய நாடகங்களை மொழிபெயர்க்க மேற்கொண்டதற்கு அதுவே போதிய காரணமாகும். இந்நாடகங்களை ஆக்கியவர் **பாஸமகாகவி**தானோவென்று ஆலோசிக்க வேண்டிய ஆவசியகம் ஒருவேளை இல்லாதிருக்கலாம். முக்கியமாக, இவ்விரண்டு நாடகங்களையும், **மகா மகோபத்தியாய கணபதி சாஸ்திரியார் 1909 - 1910** - ஆம் யாண்டிற் கண்டுபிடித்த மற்றப் பதினொரு * நாடகங்

---

அப்பதின்மூன்று நாடகங்களாவன - 1. பிரதிஜ்ஞாயௌகந்தராயணம்; 2. ஸ்வப்ன வாஸவதத்தம், 3. பஞ்சராத்ரம்; 4. சாருதத்தம்; 5. அவிமாரகம்; 6. பால சரிதை; 7. மத்தியமவியாயோகம்; 8. கர்ணபாரம்; 9. ஊருபங்கம்; 10. தூதவாக்கியம்; 11. பிரதிமா நாடகம்; 12. அபிஷேக நாடகம்; 13. துதகடோத்கஜம்.

களையும் ஆக்கியவர் எவரென்று கடுமையான விவாதம் ஏற்பட்டிருப்பதனால், அதில் நாமும் தலையிட வேண்டாமே.

நான் எழுதியுள்ள '**பஞ்சதந்திர - ஹிதோபதேசக் கதை**'களையும், '**முப்பெருங்காதை**' என்பதையும் பார்த்து, ஆசைப்பட்ட நண்பர்களுள் பலருடைய விருப்பத்திற்கிணங்கி இவ்விரண்டு நாடகங்களையும் மொழி பெயர்க்க மேற்கொண்டேன். மகா மகோபாத்தியாய கணபதி சாஸ்திரியார், டாக்டர் சுக்தங்கர் முதலான மகா வித்துவான்கள், இவ் விஷயத்தை ஆழ்ந்து ஆராய்ந்து, இவ்விரண்டு நாடகங்களும் பாஸ மகாகவியினால் ஆக்கப்பட்டவைகளேயென்று நிச்சயப்படுத்திக் கூறியிருக்கிறார்கள்; என்னுடைய அபிப்பிராயமும் அதுவே. இவை பாஸகவியினால் ஆக்கப்பட்டவையல்ல, கேரளத்தில் நாடகமாடுவோராகிய **சாக்கியார்**களாற் கற்பனை செய்யப்பட்டவை, அல்லது தொகுக்கப்பட்டவை என்பாருடைய அபிப்பிராயத்தைச் சிறிதும் ஒப்பேன். திருவநந்தபுரத்துப் பதின்மூன்று நாடகங்களும் பாஸகவி கிருதம் என்று சொல்வதே சரி. அவற்றுள் எதனையேனும் சாக்கியார்கள் ஆக்கியிருத்தல் கூடும், அல்லது தொகுத்திருத்தல் கூடும் என்பது சரியன்றென நான் தெளிந்துள்ளேன்; இவ்விரண்டு நாடகங்களையும் சாக்கியார்கள் இயற்றியிருக்க முடியாதென்று நான் சொல்ல வேண்டியதில்லையே.

இந்நாடகங்களில் அங்கம், அவந்தி, உத்தரகுரு, காம்போஜம், காசி, குந்திபோஜம், குரு, குருஜங்கலம், கோசலம், காந்தாரம், மகதம், மத்ஸியம், மத்ரை, மிதிலை, வங்கம், வத்ஸம், விதேகம் முதலான நாடுகள் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன; கம்பில்யம், கௌசாம்பி, ராஜகிருகம், வைரந்தியம் முதலான நகரங்கள் குறிக்கப்பட்டிருக்கின்றனவே யல்லாமல்; சோழ, சேர, கேரள, பாண்டிய, பல்லவ, கங்க, கர்நாடகம் முதலான ராஜ்யங்களேனும், இதர தென்னாட்டுச் சமஸ்தானங்களேனும்; அல்லது, கஞ்சி, தஞ்சை, வஞ்சி, மதுரை முதலான பிரசித்தமான தென்னாட்டு பட்டணங்களேனும் குறிக்கப்படவில்லை; ஆகையால், இவை சாக்கியார்கள் எழுதிய நாடகங்களாயிருக்க முடியாது. அவர்களுக்கு **தர்சகனையும் பிரத்யோதனையும்** பற்றித் தெரிந்திருக்க முடியாது; இந்நாடகங்களில் கங்கை, யமுனை, நர்மதை என்னும் நதிகள் சொல்லப்பட்டிருக்கின்றனவேயல்லாமல், கோதாவரி, கிருஷ்ணை, காவேரி என்பவற்றுள் எதுவும் சொல்லப்படவில்லை. சாக்கியார்கள் இந்நாடகங்களை இயற்றவில்லை என்பதற்கு இதுவுமோர் சான்றாகும். வழக்கமாயுள்ள கோத்திர சம்பிரதாயமும் இந்நாடகங்களிற் காணப்படுகின்றது. எனவே ஸ்திரீகள் விவாகமானபின் பெற்றோர் இல்லத்தை விட்டு

நீங்குவதாம். ஸ்திரீகள் முக்காடு போட்டுக் கொள்வது முதலான வழக் கங்கள் காணப்படுகின்றன. இவையெல்லாம் கேரளத்துக்கு அன்னிய மான ஆசாரங்கள் அன்றியும், இவ்விரண்டையும் போன்ற பெரிய நாடகங்களையேனும் அல்லது அப்பதின்மூன்று நாடகங்களுள் எதனையேனும், எழுதக்கூடிய அளவு சாக்கியார்கள் திறமை வாய்ந்த வர்களல்ல. இப்படிப்பட்ட நாடகங்கள் பலவற்றைச் சாக்கியார்கள் எழுதியிருக்கிறார்கள், அல்லது, தொகுத்திருக்கிறார்களென்று சொல் வதற்கு அவர்கள் இத்தகைய நாடகத்தொடர் ஒன்றும் வெளியிட வில்லை; இந்தப் பதின்மூன்று நாடகங்களில் எதற்கேனும் சமமான யோகியதையுள்ள ஒரு தனி நாடகமேனும் அவர்கள் இயற்றவில்லை. பாஸமகாகவியின் இச்சிறந்த நூல்களை ஜாக்கிரதையுடனும் அன்புட னும், சிறிதும் விடாமல், சிறிதும் சேர்க்காமல் மலையாள லிபியில் எழுதிக் காப்பாற்றி வைத்த பெருமை சாக்கியார்களுக்கு நிரம்ப உண்டு. அங்ஙனம் அவர்கள் பாதுகாத்து வைத்ததினாலே மகா மகோபாத்தி யாயர் இவைகளைக் கண்டுபிடித்து, சம்ஸ்கிருத அபிமானிகளும் நல்ல இலக்கியப் பிரியர்களும் அவரை என்னாளும் நன்றி பாராட்டிக் கொண் டாடும் உரிமை படைத்தார். கட்டடங் காத்தவர்களே கோயில்களைக் கட்டினார்களென்று அதியபிமானவாதிகள் சிலர் சொல்வதனாலே அக்கௌரவம் நீங்காதிருக்குமாக!

இப்பதின்மூன்று நாடகங்களிலும் பொதுவான லக்ஷணங்கள் பல இருக்கின்றன. அதனால் இவை பாஸகவி ரஜிதமே என்று ருஜுவாகின்றது. புஸல்க்கர் என்பவர் இங்ஙனமே தீர்மானித்துள்ளார். ஆயினும், இவ்விரண்டு நாடகங்களை மாத்திரமே பாஸ கவி முற்றும் தாமே எழுதினாரென்று நினைப்பதற்குக் காரணம் இருக்கின்றது. ஏனெனில், இவையிரண்டும் ஒரே மாதிரியான சிறப்பு வாய்ந்துள்ளன. மற்ற நாடகங்களின் சிற்சில பகுதிகளை அவருடைய மாணவர்களும் சகாயிகளும் எழுதினார்களென்றும், அம் மகா கவி ஒவ்வோரிடத்தில் மாத்திரமே கைவைத்தாரென்றும் நினைக்க இடமிருக்கின்றது. இது போலவே ''பெரிகிளீஸ்'', ''டைமன் ஆவ் ஏதென்ஸ்'', ''டைடஸ் அன்ட்ரோனிகஸ்'', ''ஹென்றி VI'', ''ஹென்றி - VIII'' என்னும் நாடகங்களிலும் வேறு சிலவற்றிலும் ஷேக்ஸ்பியருடைய கை சிற்சில இடங்களிலேயே காணப்படுகின்றது; மற்றப் பகுதிகள் அவருடைய மாணவர்களால் எழுதப்பட்டன. அந்நாளில் பெரிய ஆசிரியர்கள், நாடக விஷயத்திலும், சித்திரப்பட விஷயத்திலும், இற்றை நாட்காரர் களைப்போல, தாம் இயற்றியவைகளைத் தம்முடையனவெனப் பிரத்தியேகமாக வைத்துக் கொள்ளும் நோக்கமுடையவராக இருக்க வில்லை; தம் மாணவர்களும் தம்மோடு கலந்து எழுதுவதற்கு இடங் கொடுத்தார்கள். அதுபோலவே மாணவர்கள் எழுதியவைகளை

அவர்கள் முற்றும் மாற்றித் திருப்பி எழுதினதும் உண்டு. சிற்சில பகுதிகளை மாத்திரம் திருத்தியதும் உண்டு. இங்ஙனமாக, ஷேக்ஸ்பியர் எழுதியவையென்று சொல்லப்படும் சில நாடகங்களின் பகுதிகளை **கிட், பிளெச்சர், மார்லோ, மாசிஞ்சர்** என்னும் இவர்கள் எழுதும்படி விட்டார்.

இப்பதின்மூன்று நாடகங்களிலும் பொதுவாயுள லக்ஷணங்களை இங்குச் சுருக்கமாகக் கூறுவேன். விவரமாகத் தெரிந்து கொள்ள விரும்புகிறவர்கள் புஸல்கர் எழுதியுள்ள ''பாஸன் - எ - ஸ்டடி'' என்னும் சிறந்த புத்தகத்தைப் பார்த்துக் கொள்வாராக. **''சாருதத்தம்''** என்பதைத் தவிர மற்ற நாடகங்களெல்லாம் **நாந்திக்கு** (ஆரம்பத்துக்கு)ப்பின், சூத்திரதாரன் சொல்லும் மங்கள சுலோகத்துடன் தொடங்குகின்றன. பிரஸ்தாவனைகளும் ஸ்தாபனைகளும் சுருக்கமாயிருக்கின்றன; நாடகங்களுக்கிடையில் நிகழ்ந்த விஷயங்களையுரைப்பதற்குச் சமத்காரமாக உபயோகிக்கப்பட்டிருக்கின்றன. பரதவாக்கியம் சொல்லப்பட்டிருக்கும் நாடகங்களிலெல்லாம் ஒரே விதமான அபிப்பிராயம் காணப்படுகின்றது. 'பரதவாக்கியம்' என்பது முடிவுரை. அரசன் உலக முழுவதையும் (இந்தியா முழுமையும்) வெல்வானாக, பிறர் படையெழுச்சியை எதிர்த்தடிப்பானாக, பசுக்களும் நல்லாரும் போற்றப் பெறுவாராக என்றே அம் முடிவுரைகள் கூறுகின்றன. இதில் அரசனை வழக்கமாக ராஜசிம்மனென்றே சொல்லப்படுகின்றது. அவனுடைய நாடு வடக்கே இமயம் முதல் தெற்கே விந்தியமலை வரையிலும், கிழக்கிலும் மேற்கிலும் கடல்மட்டும் வியாபித்திருக்கிறதாகச் சொல்லப்படுகின்றது. இங்ஙனம் குறிக்கப்பட்ட ராஜசிம்மனென்பவன் சந்திரகுப்த மௌரியன் என்றே பெரிதும் திடமாகச் சொல்லலாம். அதனைப் பின்னர்ப் பேசுவோம்.

நாடக லக்ஷணமென்று பரதமுனி வகுத்துள்ள விதிகள் பலவிடங்களில் அனுசரிக்கப்படவில்லை. சாவுகள், தனிப்போர்கள், சண்டைகள் ஆகிய இவை அரங்கமேடையிற் காட்டப்படுகின்றன; ஸ்நானத்திற்காவது, தேவாராதனைக்காவது, சபதம் பண்ணுவதற்காவது, கண்ணீர் படிந்த முகத்தைக் கழுவுவதற்காவது, ஸ்வப்னவாஸவதத்தத்திற்போல, அரங்க மேடைக்குத் தண்ணீர் கொண்டுவரப்படுகின்றது. ''ஆரியபுத்திரர்'' என்பது போன்ற சில சொற்கள், பரத **நாட்டிய சாஸ்திரத்**திற் கூறியதற்கு முற்றும் மாறான அர்த்தத்தில் இந் நாடகங்கள் பலவற்றில் வழங்கப்பட்டிருக்கின்றன. நாடக நிகழ்ச்சியில் இடைச்சம்பவங்களைக் காட்டாமலே சிற்சில நாடக பாத்திரங்களைப் 'போய்வர'ச் செய்து காரியப்போக்கு விரைவிக்கப்படுகின்றது. **ஆகாச பாஷிதம்** அடிக்கடி கைக்கொள்ளப்பட்டிருக்கின்றது. 'ஆகாசபாஷித'

மாவது அரங்கமேடையிலிருப்பவனொருவன் அதிலில்லாதவர்களோடு பேசுதல், அல்லது, மறுமொழி கூறல், சிறைபிடித்தல், சண்டைகள், இருவர் தனிப்போர் முதலியன வெகு சாதுரியமாக விவரித்துரைக்கப்பட்டிருக்கின்றன. அவ்விவரம் சித்திராலங்காரமாக இருக்கின்றது. அவ்வர்ணனையினால், 'பிரதிஜ்ஞா' நாடகத்தில் உதயனனையும் வாஸவதத்தையையும் போல, அரங்க மேடையில் வராதவர்களாயினும் அங்கேயே அவர்கள் இருப்பதுபோல ஜனங்களுடைய மனத்தில் ஒரு பிரமை தோன்றுகின்றது. தர்மிஷ்டரான அரசர்கள், ஸ்தூலத்தில் மரித்தவர்களாயினும், அவர்கள் செய்த பெருங்காரியங்களினாலும் யாகங்களினாலும் உயிர்த்திருக்கிறார்களென்னுங் கொள்கை இந்நாடகங்கள் பலவற்றில் வெளிப்படுகின்றது.

இந்நாடகங்கள் பெரும்பான்மையனவற்றுள் சாமானியமாக ஓர் உபாயம் செய்யப்பட்டிருக்கின்றது. அது சமத்காரமாகவும் மிக்க பயன்படத்தக்கதாகவும் இருக்கின்றது. அஃதென்னவெனில், விடுவிக்க முடியாத சங்கடமான விஷயத்தைப் புதிதாக வந்தவனொருவன் எண்ணாமலும் எதிர்பாராமலும் ஒரு வார்த்தை சொல்லி விடுவிப்பதாம். உதாரணமாக, வாஸவதத்தையை மணங்கேட்க வந்திருப்பவர்களுள் எவருக்கு அவள் மாலையிடுவது தகுமென **மகாசேனரும் அங்காரவதியும்** ஆலோசித்துக் குழம்பிக்கொண்டிருக்கையில் பரபத்தியக்காரன் வந்து, ''**வத்ஸராஜன்**'' என்று சொல்லுகிறான். அதனால் அவன் தன்னை அறியாமலே, மணவாளனாக வரிக்கத் தக்கவன் வத்ஸராஜனே என்று சொல்லியது போலாயிற்று. ஆயினும், அவன் வந்த காரியம், 'வத்ஸராஜனைச் சிறைப்பிடித்து விட்டார்கள்' என்று சொல்வதற்கேயாம்.

இதுபோலவே ''அபிஷேக நாடக''த்திலும் **இராமரையும்** லக்ஷ்மணரையும் இந்திரஜித்து கொன்று விட்டானென்று சீதைக்கு ராவணன் சொல்லி இனி நீ யாரால் விடுவிக்கப்படுவாய்? என்று வெற்றிக்களிப்போடு ஆர்ப்பரித்துக் கேட்டபோது, திடீரென அரக்கன் ஒருவன் வந்து இராமரால் என்று சொல்லுகிறான். அவன் சொல்ல வந்த சமாசாரமோவெனின், 'இராமரால் இந்திரஜித்து கொல்லப்பட்டான்' என்பதாம்.

சிற்சில நாடகங்களுள் சில்லறை நாடகப் பாத்திரங்களின் பெயர்கள் ஒரேமாதிரி இருக்கின்றன. உதாரணமாக, 'பிரதிஜ்ஞா' நாடகத்தில் மகாசேனனுடைய பரபத்தியக்காரனுக்கும், '**தூதவாக்கியம்**' என்னும் நாடகத்தில் துர்யோதனனுடைய பரபத்தியக்காரனுக்கும் பெயர் 'பாதராயண'னே; ''**ஸ்வப்னவாஸவதத்த**''த்திலும், 'பிரதிஜ்ஞா

யௌகந்தராயண'த்திலும், 'அபிஷேக நாடக''த்திலும், 'பிரதிமா நாடக'த்திலும் துவாரபாலகியின் பெயர் **விஜயை**யே, 'பஞ்சராத்திரத் திலும் 'பால சரித'த்திலும், 'விரிஷபதத்தன்' என்பதும், 'கும்பதத்தன்' என்பதுமே இடையரின் பெயர்களாகும்.

இந்நாடகங்களில் ஒரே மாதிரியான நாடகாலங்காரச் சிறப்பு கள் இருக்கின்றன. 'அபிஷேக நாடக'த்திலும் 'பிரதிமா நாடக'த்திலும் இராவணனுடைய காமப்பிரார்த்தனைகளைச் சீதாதேவி மறுத்து அவனைச் சபிக்கின்றனள். அதுபோலவே 'சாருதத்தம்' என்னும் நாட கத்தில் **வஸந்தசேனை** என்பவள் சகாரனுடைய காமப்பிரார்த்தனை களை மறுத்து அவனைச் சபிக்கின்றனள். 'பாலசரித'த்திலும் 'பஞ்ச ராத்திர'த்திலும் அரசனுக்கு வணங்கி வந்தனம் செய்யும்படி வீரர் களுக்குச் சொல்லியபோது அவர்கள், 'அவர் யாருக்கு அரசன்?' என்று ஆக்கிரகத்தோடு கடுமையாகப் பதிலுரைக்கின்றனர்.

'பிரதிஜ்ஞா யௌகந்தராயண'த்தில், 'இதுவரையில் நான் தங்களிடம் பொய் சொல்லியதுண்டோ?' என்று பாதராயணன் கேட்கிற வரையில் 'வத்ஸராஜன் பிடிபட்டான்' என்னும் வர்த்தமானத்தை மகாசேனன் நம்பாதிருந்தான். இது போலவே 'பாலசரித'த்தில் **தேவகி**க்குப் பெண்பிள்ளை பிறந்ததென்னும் செய்தியை, அவனது பரபத்தியக்காரன் மேலே சொல்லியது போலக் கேட்கிறவரையில், கம்சன் நம்பாதிருந்தான். ''அவிமாரக''த்தில் ''பிரதிஜ்ஞா யௌகந்த ராயண''த்திற் போல, தங்கள் மகளுக்கு ஏற்றவரன் யாவனென்று ராஜா வுக்கும் ராணிக்கும் தர்க்கம் நடக்கின்றது.

இந்நாடகங்கள் பலவற்றுள் பசுக்கள் மிகப் பூஜிதையாகப் பாராட்டப்படுகின்றன, அவைகளுக்கு ஆசியும் கூறப்படுகின்றது. பிரபல புருஷனுடைய வரவை நக்ஷத்திரங்களுக்கிடையில் சந்திரனுடைய வரவுக்கு ஒப்பிடுவது போன்ற உபமானங்கள் பலவிடங்களிற் சொல் லப்பட்டிருக்கின்றன. துர்யோதனனும் **வா்லியும்** தசரதரும் மரணத் தறுவாயில் புண்ணிய நதிகளும் தேவிமானமும் வரக்காண்கின்றார்கள். ''நாந்தி'', ''ஸ்தாபனம்'' முதலான பல சொற்கள் ஒரேமாதிரியான விசேஷ அர்த்தத்தில் வழங்கப்படுகின்றன. ''வழிவிடுங்கள் ஐயா, வழிவிடுங்கள்'' என்னும் வார்த்தைகளே மேன்மைமிக்க கனவான்கள் வரும்போது சொல்லப்படுகின்றன. இரண்டு மூன்று நாடகங்களிற் சில வாக்கியங்கள் பத்தியத்திலும் கத்தியத்திலும் ஒரேமாதிரியாகக் காணப் படுகின்றன. முடிவுரை வசனங்களே இதற்கு முதன்மையான உதா ரணமாம்; இருள் மூண்ட இரவில் கூரிய கண்ணும் பயன்படா தென்பதைப்பற்றி ''பாலசரித''த்திலும் ''அவிமாரக''த்திலும் சொல்லும்

வசனங்களும் நல்லுதாரணமாம். சூரியாஸ்தமனம், அந்திவேளை, இரவில் நகரத்தோற்றம், சண்டைகள், இருவர் போர்கள், போர்க் களங்கள் ஆகிய இவை போன்ற விஷயங்கள் ஏறக்குறைய ஒரே மாதிரி யான நடையில் அநேக நாடகங்களில் மிகத் தெளிவாக வர்ணிக்கப் பட்டிருக்கின்றன. யுத்தங்கள் இயக்கர்களாலும், படைவீரர்களாலும், பிராமணர்களாலும் வர்ணிக்கப்படுகின்றன. செய்யுட்கள் பற்பல துறைகளில் அமைக்கப்பட்டிருப்பினும் நாடகங்களின் உபயோகம் ஒரே மாதிரியாகவே இருக்கின்றது.

ஆரம்பத்திற் பாடும் பாட்டுகள், இந்நாடகங்கள் பலவற்றில் சாதுரியமான சிலேடைச் சொற்களால் முக்கியமான நாடக பாத்திரங் களைக் குறிப்பிடுகின்றன. ஒருவனே பேசுகையில், அல்லது, பலர் பேசுகையில் பாடல்களைப் பிளந்து கூறிய செய்யுளடிகள் காணப் படுகின்றன. எந்த நாடகத்திலும் ஆக்கியோன் பெயர் சொல்லப்பட வில்லை. நாடகத்தின் பெயர் அதன் முடிவிலேயே சொல்லப்பட் டிருக்கின்றது. எல்லா நாடகங்களிலும் நாடக லக்ஷண வழுக்களும் வழக்கொழிந்த பிராகிருத மொழிகளும் காணப்படுகின்றன. முக்கிய மான கதா பீஜங்கள் எல்லா நாடகங்களிலும் ஒரே மாதிரியாக இருக் கின்றன. உதாரணமாக, ஒவ்வொரு நாட்டுக்குமுள்ள ஸ்வதந்திராபி மானம் ஆக்கிரமிக்கும் பிறநாட்டாரைச் சேரவொட்டாமல் தடுக்கும் ஆக்கிரகம், ஸ்வதந்திரம் வேண்டுமென்று பிறரைக் கெஞ்சுவதன் இகழ்ச்சி, பசுக்களையும் பிராசீன வர்ணாசிரம தர்மத்தையும் காத்தல், துறவிகளைப் போற்றல், நீதி பரிபாலித்தல், நல்லாரை இன்புறச் செய்தல் முதலிய அரசர் கடமை - என்னும் இவைகளைச் சொல்லலாம்.

## பாஸன் என்பவன் யார்

காளிதாசருடைய காலத்திலும் பாஸகவி பழமையான பிர சித்தி பெற்ற கவியெனவே சொல்லப்பட்டார். காளிதாசரோ கி.பி. 5-ம் நூற்றாண்டு வாக்கில் இருந்தவரென ஊகிப்பதற்காகின்றது. ''மாள விகாக்கினிமித்திரம்'' என்று காளிதாஸர் ஒரு நாடகம் எழுதியிருக் கிறார். அதன் கதாபீஜம் ''ஸ்வப்ன வாஸவதத்த'த்தினின்று எடுத்துக் கொள்ளப்பட்டதென்பதற்கான குறிகள் தெளிவாகக் காண்கின்றன. அதில் பாஸன், ஸௌமிலன், கவிபுத்திரன் (ஸௌமிலனது சகோதர னாகிய ரமிலன்) என்பவர்கள் புகழ்பெற்ற புராதன கவிகளென்று காளி தாசர் குறிப்பிட்டிருக்கிறார். அவர் எழுதியுள்ள 'சகுந்தலா' என்னும் நாடகத்திலோ அந்த நூல் தாமே புதிதாக இயற்றியதென்று அவர் சொல்லுகிறார். இந்த ஸௌமிலன் என்பவனும் அவனுடைய சகோ

தரனான ரமிலன் (கவிபுத்திரன்) என்பனும் கி.பி. முதலாம் நூற்றாண்டில் இருந்ததாகச் சொல்லப்படுகின்றனர். அவர்கள் ''சூத்திரக்கதை'' என்பதையும் ''மணிப்பிரபை'' என்பதையும் எழுதியதாகச் சொல்லுகிறார்கள். அவ்விரண்டு நூல்களும் இந்நாளிற்கிடையா. ஸௌமிலனுக்கு முன்னவனென்று பாஸனைச் சொல்வதனால், பாஸன் கி.பி. முதலாம் நூற்றாண்டுக்கு முன் இருந்த நாடகாசிரியன் ஆக வேண்டும். உண்மையில், **பாஸ** என்பது, ''பதஞ்சலி'', ''யௌகந்தராயணா'' என்பவைகளைப் போல, ஒரு கோத்திரத்தின் பெயர் (அது **அகஸ்திய கோத்திர**த்துச் சாகைகளுள் ஒன்றாம்).

**ஜயநாகன்** என்பவன் எழுதியுள்ள 'பிருதிவி ராஜவிஜயம்' என்னும் நூலுக்குள்ள வியாக்கியானமொன்றில் 'மகாபாரத'ப் பிரசித்தரான **வியாஸ**மாமுனிவரும் **பாஸனும்** தம்முள் எவரே சிறந்த நூலாசிரியரென வாதுற்றதாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. அவ்விருவரும் தாமெழுதிய நூல்களிலொன்றைத் தீயிலிட்டனர்; அப்போது பாஸனுடைய 'விஷ்ணு தர்மம்' என்னும் நூல் எரிந்துபோகாதிருந்தது, வியாசருடைய நூல் எரிந்து போயிற்று. அழிந்துபோகாமற் பஞ்சபூதங்களே பாதுகாத்து மீத்து வைத்த பாஸனுடைய ''விஷ்ணுதர்ம'' மென்னும் நூலை நமது துரதிருஷ்டவசத்தால் மானிடர் பாதுகாத்து வைக்க மாட்டாதவராயினர். ஆயினும், ''அர்த்தசாஸ்திர''மும் இந்தப் பதின்மூன்று நாடகங்களும் வெளிப்பட்டது போல அதுவும் ஒரு காலத்தில், நிச்சயமாக வெளிப்படுமென்று நினைக்கிறேன். அதுபோன்று நிர்மாண சிற்பம், சிலாசிற்பம், ஓவியம் முதலானவைகளைப் பற்றி விலைமதிக்கவொண்ணாத சிறந்த நூல்கள் காணாமற் போனதற்குப் பிற நாட்டார் படையெழுச்சியும் உள் நாட்டு அராஜகமுமே காரணமாகும். வியாஸரோடு பாஸன் வாதம் செய்தனனென்னும் கர்ண பரம்பரா வசனத்தினாலேயே பாஸனுக்குரிய பூஜிக்கத்தக்க பிராசீனத்துவம் புலப்படுகின்றது.

**அஸ்வகோஷன்** என்பவன் எழுதியுள்ள 'புத்தசரிதம்' என்னும் நூலில், ''யௌகந்தராயணப் பிரதிஜ்ஞைகள்'' என்னும் நாடகத்தின் முதல் அங்கத்துப் பதினெட்டாம் சுலோகத்துக் கருத்தையே எடுத்துக் கையாண்டிருக்கிறானென்று தெளிவாகத் தெரிகின்றது. இங்ஙனமாக கி.பி. முதலாம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டவனல்லனென்று சொல்லத் தக்க அஸ்வகோஷனுக்கு முன்னரே பாஸன் இருந்தான் என்பதாயிற்று. சூத்ரகன் என்பவன் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு சார்பில் இருந்தவன். அவன் பாஸனுடைய 'சாருதத்த'மென்னும் நாடகத்தை ஆதாரமாகக் கொண்டே, பிரசித்தமாக வழங்கும் 'மிருச்சகடிகை' என்னும் நாடகத்தை எழுதினன் என்பதனாலும் பாஸனுடைய பிராசீனத்துவம்

தெளிவாகின்றது. **கௌடில்யர்** என்பவர் கி.மு. நான்காம் நூற்றாண்டில் தம்முடைய 'அர்த்தசாஸ்திரம்' என்னும் பெருநூலை எழுதினாரென்று பெரிதும் நிச்சயமாகக் கூறலாம். 'யௌகந்தராயணப் பிரதிஜ்ஞைகள்' என்னும் நாடகத்தின் நான்காம் அங்கத்திலுள்ள இரண்டாம் சுலோகத்தை அவர் தம் நூலில் மேற்கோளாக எடுத்துக் காட்டியிருக்கின்றார். ஆனமையின், பாஸனென்பவன் கௌடில்யருடைய காலத்திலே அவருக்கு ஜேஷ்டனாக இருந்திருக்க வேண்டும். கி.மு. நான்காம் நூற்றாண்டில் **சந்திரகுப்த மௌரிய**னுடைய காலத்தில் இருந்தவனாகும் எனத் தெளிவாகத் தெரிகின்றது; நம் நாட்டில் இப்போது **மகாத்மா காந்திக்கு** ஜேஷ்டராக மகாகவி **ரவீந்தரநாத் டாகூர்** இருந்தது போல என்னலாம்.

ராகுவின் வாயினின்று (நந்தனுடைய மந்திரியாகிய ராக்ஷசன் என்பவன் கையினின்று) சந்திரன் **சந்திரகுப்தன்** விடுபட்டது அடிக்கடி குறிக்கப்பட்டிருக்கின்றது. பாஸகவி சந்திரகுப்தனுடைய காலத்தவனென்பது இதனாலேயும் தெளிவாகின்றது. ராஜ சிம்மனைப் பற்றிச் சொல்லும்போது இங்ஙனம் கூறப்படுகின்றது. ராஜசிம்மன் என்னும் சொல்லுக்கு 'அரசர்களுள் சிங்கம் போன்றவன்' என்று அர்த்தம். இந்தப் பட்டம் 'முத்திராராக்ஷசம்', என்னும் நாடகத்தில் சந்திரகுப்தனுக்குப் பொருந்துவதாகச் சூசிப்பிக்கப்படுகின்றது. இந்தப் பட்டத்தை மௌரியர்களெல்லாரும் பொதுவாகவே மேற்கொண்டிருக்கலாம். 'ஸாஞ்சிஸ் தூப'த்திலுள்ள சிலர் சித்திரங்களிற் காணும் உக்கிர சிம்மங்களிலிருந்து இந்தப் பெயர் தோன்றியிருக்கலாம். ராஜசிம்மனுடைய ராஜ்யம் இமயம் முதல் விந்தியம் வரையிலும், கிழக்கு மேற்கில் கடல்வரையிலும் வியாபித்திருந்ததாகச் சொல்லப்படுவதானாலும் என்று அவன் சந்திரகுப்தனே என்று ஊகிக்கத்தகும்; சந்திரகுப்தனுடைய ஆட்சிக்காலத்தின் தொடக்கத்தில் அவனுடைய ராஜ்யம் இந்த விஸ்தீரணம் வாய்ந்திருந்ததென்பது உண்மை. பாஸனுடைய காலத்தவராகிய சாணக்கியரையும் அவருடைய உலகப் பிரசித்தமான சபதத்தையும், அவர் நந்தர்களோடு பொருததையும் ஜீவஸித்தி என்னுஞ் சமணனால் அவர் உதவி செய்யப்பட்டதையும், அந்தச் சமணன் மாறுவேஷம் பூண்ட அவருடைய சொந்த ஆள் என்பதையும், 'பாடலிபுத்திரம்' என்னும் தலைநகரைச் சந்திரகுப்தன் பிடிக்கும்படி அவர் செய்ததையும், அந்நகர் முழுவதையும் அவர் தம்முடைய வேவுகாரர்களால் நிரப்பியதையும், அரசியல் விவகாரத்தின் பொருட்டு **துர்தரை** என்பவளைச் சந்திரகுப்தன் மணக்கும்படி செய்ததையும், (அப்படிப்பட்ட காரணத்திற்காகவே இந்நாடகத்தில் **பத்மாவதி**யை மணந்தது போல) - வெளிப்படையாக வல்லாமல் மறைவாகக் குறிப்பிடும் பொருட்டே யௌகந்த

ராயணன் என்பவனைப் பாஸன் இந்நாடகத்தில் அமைத்துள்ளான் என்பது தெளிவுறத் தோன்றுகின்றது.

யௌகந்தராயணன் என்பவன் மேகமென்றும், அம்மேகத்தினூடே சந்திரன் தோன்றுகின்றதென்றும் சொல்லிய வர்ணனையானது கார்நிறமுள்ள தென் தேசத்தாராகிய சாணக்கியரையும், அவர் வாயிலாகச் சந்திரகுப்தன் தோன்றுவதையும் மிகப் பொருத்தமாகக் குறிப்பிடுகின்றது. வெளிப்படையாக வல்லாமல் மறைவாகப் **போரஸ் (புருஷோத்தமன்)** என்பவனை மகாசேனன் குறிப்பிடலாம்; தன்னுடைய **நளகிரியைப்** போரஸினுடைய பெயர் பெற்ற யானைக்கு* ஒப்பிட்டுச் சொல்லலாம். பிற நாட்டினின்று படையெழுச்சி செய்து வருகிறவர்களை அப்புறப்படுத்துவதற்காகத் தெய்வப் பிரார்த்தனை அடிக்கடி செய்யப்படுகின்றது. இவை **அலெக்ஸாண்டரின்** படையெழுச்சிகளையும் **செலூகஸின்** படையெழுச்சியையுமே குறிக்கின்றன வென்பது வெளிப்படை. பசுக்கள் பாதுகாக்கப்பெற்று க்ஷேமமாய் இருக்கவேண்டுமென்றும் பிரார்த்தனை செய்யப்படுகின்றது. மௌரியர் காலத்து ''விரிஷல'' நாகரிகத்தைப் பாஸன் எம்மட்டும் பற்றியிருந்தானென்று இது காட்டுகின்றது.

''பிரதிமா'' நாடகத்தில் ராவணன் என்னுமொரு பாத்திரம் இருக்கின்றது. தசரதருடைய சிரார்த்தத்தில் பசுவைப் பலியிடுவதா, பொன்மானைப் பலியிடுவதா என்னும் கேள்வியையும், பொன்மானே சரியென்று **இராமர்** சொல்வதையும் அது குறிக்கின்றது.

**பாணன்** என்னும் மகாகவி எழுதியுள்ள 'ஹர்ஷ சரிதம்' என்னும் நூலில் பாஸகவியைப்பற்றி இவ்வாறு கூறியிருக்கின்றான். 'பல மாடங்களும் பதாகைகளும் வைத்துப் பூர்வத்துப் புகழ்பெற்ற நிர்மாண சிற்பிகள் அமைத்துள்ள தேவாலயங்களைப் போன்ற கட்டடங்களைக் கட்டி வைத்தால் எவ்வளவு புகழ் உறுமோ அவ்வளவு புகழும் பாஸகவி தமது நாடகங்களினாற் படைத்தார். அவருடைய நாடகங்களில் முதன் முதலிற் சூத்திரதாரன் வந்து மங்கள கீதம் பாடுகிறான்; அவைகளில் நானாவிதமான அநேக நாடகபாத்திரங்களும் உபகதைகளும் இருக்கின்றன.'

---

* மற்றுமுள்ள ஒப்பனைகளைத் தெரிய வேண்டின் எனது ''முப்பெரு வீரர்'' என்னும் நூலைக் காண்க.

பாஸனுடைய நாடகங்களைப் பாணமகாகவி தேவாலய அமைப்புக்கு ஒப்பிட்டிருக்கின்றானேயல்லாமல் அரண்மனைகளுக்கும் நர்த்தனசாலைகளுக்கும் ஒப்பிடவில்லை. இவ்வுபமானத்தினால், பாஸன் அநேக நாடகங்கள் எழுதினான். அவைகளில் அநேக அங்கங்களும் (மாடங்களும்), பதாகை எனத்தக்க மத்தியாங்கங்களும் பிரஸ்தாவனைகளும் உண்டு. இந்நாடகங்கள் சூத்திரதாரர்களாற் சொல்லப்பட்ட சுலோகங்களோடு ஆரம்பமாகின்றன. அந்தச் சுலோகங்கள் பாரமார்த்திகமாகவும் பக்தி புரஸ்ஸரமாகவும் இருக்கின்றன (அபிஷேக நாடகம், பிரதிமா நாடகம், பாலசரிதம், தூதவாக்கியம் முதலிய நாடகங்களைக் காண்க). இவ்வாறு உபமான உபமேயங்கள் சரிப்போயின.

அந்நாடகங்கள் பாணனுடைய காலத்திலும் பிரசித்தமாய் இருந்தனவென்றும் அவைகளில் அநேக நாடக பாத்திரங்கள் அமைந்திருந்தனவென்றும் இதனால் தெரிகின்றது.

சமஸ்கிருத நாடகாசிரியனெவனும் மூன்று நாடகங்களுக்கு அதிகம் எழுதக்கூடாதென்னும் நிபந்தனை உண்டென்று சில புலவர்கள் கூறுவார்கள். பாணகவியின் வாக்கியங்களினால்அந்தக்கூத்து அடிபட்டுப்போகின்றது. அந்த நிபந்தனை பாஸனுடைய காலத்திற்கு நெடுநாள் பிற்பட்டே ஏற்பட்டிருக்க வேண்டுமென்று தெரிகிறது.

''அவந்தி சுந்தரி கதை'' என்னும் நூல் கி.பி. 7-ம் நூற்றாண்டிலோ எட்டாம் நூற்றாண்டிலோ ஆக்கப்பட்டது. அதனில் கீழ்க் குறித்த வாக்கியங்கள் காணப்படுகின்றன: ''பாஸகவி தனது நாடகங்கள் வடிவாக இன்னும் ஜீவித்திருக்கின்றான், அவையே அவனுடைய சரீரம் எனத்தகும். அந்தச் சரீரம் அவனுடைய நாடகங்களிற் பற்பல வடிவங்கள் ஏற்றன.'' இதனால், பாஸன் எத்தனையோ நாடகங்கள் எழுதினனென்று தெரிகின்றது. இந்த மேற்கோள் அவன் பதின்மூன்று நாடகங்களை எழுதினனென்று இங்கே நாம் சொல்வதற்குப் பொருத்தமாய் இருக்கின்றது. மேற் சொல்லிய வாக்கியங்கள் ''தூத வாக்கியம்'' என்னும் நாடகத்திலுள்ள வாக்கியங்களைக் குறிப்பினுங் குறிக்கலாம். அவ்வாக்கியங்கள் ஒரு நேர்த்தியான காட்சியை வர்ணிப்பனவாகும். அவைகளில், வாசுதேவரது சரீரம் நானா வடிவங்கள் மேற்கொண்டது. அப்பால் வேறு வடிவங்களிலும் வாசுதேவர் இருந்துதான் விவகரித்தார் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இதனால், ''தூத வாக்கிய''மென்பது பாஸன் எழுதிய நாடகங்களுள் ஒன்றென ஒப்புக் கொள்ளப்பட்டிருந்தது என்பதாயிற்று.

பாஸனுயை 'நாடக வட்டத்தை'ப் புலவர்கள் அக்கினிப் பரீக்ஷைக்கு உட்படுத்தியபோது ''ஸ்வப்ன வாஸவதத்தம்'' என்னும் நாடகம் எரிந்து சாம்பலாகாமல் மீந்து நின்றது - என்று **ராஜசேகரர்** என்பவர் தமது ''ஸூக்தி முக்தாவளி'' என்னும் நூலிற் சொல்லியிருக் கின்றார். அதனால், பாஸன் அநேக நாடகங்கள் எழுதினனென்றும் அவற்றுள் ''ஸ்வப்ன வாஸவதத்தமே'' சிறந்ததாகக் கருதப்பட்டிருந்த தென்றும் விளங்குகின்றது. பாஸன் எழுதியதென்று சொல்லப்படுகிற திருவனந்தபுரத்து பதின்மூன்று நாடகங்களுள் ''ஸ்வப்ன வாஸவதத்த''மே உண்மையிற் சிறந்ததாகும்.

இந்நாடகங்களைப் பாஸன் எந்த வரிசைக் கிரமத்தில் எழுதியிருக்கக் கூடுமென்று ஊகித்து **புஸல்கர்** (Mr. Pusalker) என்பவர் இப்பதின்மூன்று நாடகங்களை ஒன்றன்பின் ஒன்றாக இவ்வாறு தொகுக்கப் பிரயத்தனப்பட்டார். 1. தூத வாக்கியம், 2. கர்ணபாரம், 3. தூத கடோத்கஜம், 4. ஊருபங்கம், 5. மத்தியம வியயோகம், 6. பஞ்சராத்திரம், 7. அபிஷேக நாடகம், 8. பாலசரிதம், 9. அவிமாரகம், 10. பிரதிமா நாடகம், 11. பிரதிஜ்ஞா யௌகந்தராயணம், 12. ஸ்வப்ன வாஸவதத்தம், 13. சாருதத்தம்.

கடைசியாகச் சொல்லிய ''சாருதத்தம்'' என்பது முடிவுறாமல் அறைகுறையாக இருக்கின்றது. பாஸகவி இறந்துபோனதனால் அஃது அங்ஙனே நின்று போயிற்று என்பர். இவ்வாறு வரிசைப்படுத்திச் சொல்வதற்கு ஆதாரமாகப் புஸல்கர் கைக்கொண்ட அமிசங்கள் 1. நாடகங்களின் விஷயமும் போக்கும், 2. அவற்றின் பக்குவ பரி மாணம், 3. சம்வாதங்கள், சுலோகங்கள், காவியப் பிரயோகங்கள், துர்ப்பலமாக முடிவு கட்டல் என்பவைகளைப் பற்றிய விசாரம் என்பனவாம்.

இவ்விஷயத்தை நன்றாக ஆலோசித்துப் பார்த்ததில் அவ ருடைய அபிப்பிராயத்தைப் பெரும்பாலும் நான் ஒத்துக் கொள்கிறேன். நாடகவியலுக்குரிய லக்ஷணங்களிலும் சமத்காரத்திலும், அபூர்வத் தன்மையிலும் இப்பதின்மூன்று நாடகங்களும் ஒன்றினும் ஒன்று சிறந்து காண்கின்றன என்பது உறுதி.

முதன்முதலெழுதிய நாடக விஷயங்கள் புராண சம்பந்த மானவை, பின்னர்க் கடைசியாக எழுதிய நாடக விஷயங்கள் வர்த்த மானக் கதைகளினின்றும், ஜனங்கள் சொல்லிக்கொள்ளும் அதிசயக் கதைகளினின்றும் எடுத்துக் கொள்ளப்பட்டவை, அல்லது, கவியின் ஸ்வகபோலக் கற்பனைகளாகும். இந்நாடகங்களின் ஏற்றமுறை ஷேக்ஸ்

பியரின் நாடகங்களில் லவ்ஸ் லேபர்ஸ் லாஸ்ட் (Love's Labours Lost) ''டூ ஜென்டில்மென் ஆப் வேரோனா'' (Two Gentlemen of Verona) என்னும் இவைகளினின்று ''ஸிம்பலீன்'' (Cymbaline) ''டெம்பஸ்ட்'' (Tempest) ''வின்டர்ஸ் டேல்'' (Winters Tale) முதலியவற்றிற்குள்ள படிப்படியான ஏற்றம்போல் இருக்கின்றது.

பாஸகவி 23 நாடகங்கள் எழுதினனென்று சிலர் சொல்லுகிறார்கள். 36 நாடகங்கள் எழுதினனென்று வேறு சிலர் சொல்லுகிறார்கள். ஷேக்ஸ்பியர் 37 நாடகங்கள் எழுதியிருப்பதினாலே பாஸன் இத்தனை நாடகங்கள் எழுதினானென்பது அதிசயமன்று. இத்தனை நாடகங்கள் உரிமையாக்குவதற்குக் காரணம், அந்நாடகங்களின் சிற்சில பகுதிகள் பிறரால், (சககாரிகளால் அல்லது மாணவர்களால்) எழுதப்பட்டன வென்பதேயாம்.

காவிய மஞ்சரிக்காரர்கள் பாஸன் எழுதியனவென்று சில சுலோகங்களைச் சொல்லியிருக்கிறார்கள்; அந்தச் சுலோகங்கள் இப் பதின்மூன்று நாடகங்களிலும் இல்லை. இந்தக் காரணத்தால் அவை பாஸன் எழுதியவை அல்லவென்று சொல்லவொண்ணாது. இவ்விஷயத்தைப் புஸல்கர் என்பவர் தீர்க்கமாக ஆராய்ந்து பார்த்துள்ளார். அவருடைய அபிப்பிராயத்தில், காவியமஞ்சரியிற் காணும் சுலோகங்களுள் பத்து மாத்திரமே பாஸகவிரஜிதம் எனத் தகும். ஒருவர் சொல்லிய சுலோகங்களை மற்றொருவர் சொல்லியதாகக் கூறுவது காவியமஞ்சரி தொகுப்பார்க்குப் பெரிதும் இயல்பாயிருக்கின்றது. அந்நாளில் அச்சுப் பதிப்பித்தல் இல்லை. ஏட்டுப் பிரதிகள் அருமையாய் இருந்தன; வாய்மொழியாகவே கல்வி பெரும்பாலும் வளர்க்கப்பட்டு வந்தது. அந்தக் கல்வியை ஞாபகத்திலேயே பதித்துவைத்துக் கொள்ளவேண்டியதாய் இருந்தது; ஞாபகமோ பலபல இடக்குகள் செய்யும். இந்நாளில் நகலெழுதுவோர் ரிகார்டுகளிலுள்ள வாக்கியங்கள் சிலவற்றைக் கைதவறி விட்டுவிடுகிறார்கள். இதுபோல அந்நாளிலும் கிரந்தங்களுக்கு நகலெழுதினவர்கள் சிற்சில சுலோகங்களையும் வாக்கியங்களையும் எழுதாமற் கைப்பிசகாக விட்டிருப்பார்களென்பது திண்ணம். சிற்சில சுலோகங்கள் சரியல்லவென்று வேறு சில புலவர்கள் ஆக்ஷேபித்திருத்தல் கூடும்; தங்களுடைய அபிப்பிராயத்திற்கு ஒவ்வாத வாக்கியங்கள் சில இருத்தல் கூடும்; இப்படிப்பட்டவைகளை யெல்லாம் லிபிகாரர் வேண்டுமென்றே எழுதாமல் விட்டிருக்கலாம். அன்றியும், திருத்திச் சிறப்பிக்கிறோமென்று வீணே நினைத்துச் சில வார்த்தைகளையேனும் சுலோகங்களையேனும் அதிகமாகச் சேர்த்திருக்கலாம்; அல்லாது, தற்காலிக நாகரிகப் பான்மைகளைப் புகட்டியிருக்கலாம்.

இந்தக் காரியம் இந்தியாவில் மாத்திரமே நடக்கிறதென்று எண்ணவேண்டாம். இங்கிலாந்து என்னும் மிகச்சிறிய தேசத்திலும் இது நடைபெறுகின்றது. அங்கே சிறந்த கல்வி நிலையமெனத்தக்கது லண்டன் ஒன்றே உளது. பாஸனுக்கு ஆயிரத்தெண்ணூறு யாண்டு களுக்குப் பின் ஷேக்ஸ்பியர் தோன்றி நாடகங்கள் எழுதினான். அந்நாடகங்களைப் பார்த்து நகல் எழுதிக்கொண்டவர்களும், திருட்டுத் தனமாக எடுத்துக் கொண்டவர்களும், மற்றவர்களும் க்ஷேக்ஸ்பிய ருடைய வாக்கியங்கள் பலவற்றை நீக்கிவிட்டிருக்கின்றனர். சிலவற்றை மாற்றியிருக்கின்றனர். வேறு சில வாக்கியங்களைப் புதிதாக அவற்றிற் சேர்த்திருக்கின்றனர். இங்கிலாந்தைப் போலல்லாமல் 16 மடங்கு பெரிதாயுள்ள இந்தியாவின் கிரந்தங்களில் மாறுபாடுகள் எத்தனை அதிகமாய் இருக்கவேண்டுமென்று எண்ணிப்பார்த்து எளிதில் தெரிந்து கொள்ளலாம். இந்தியாவில் 56 அரசர்கள் வேறு வேறு தேசங்களை ஆண்டு வந்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியே கல்வி யாளரையும் நூலாசிரியர்களையும் நாடகாசிரியர்களையும் வைத்து ஆதரித்து வந்தார்கள். நாடகங்களை ஆடுவித்துக் களி கூர்ந்தார்கள்.

நன்றாகவும் நிலையாகவும் ஆராய்ந்து பார்த்து நான் ''ஸ்வப்ன வாஸவதத்த''த்தில் நிஜமாக பாஸகவியினால் இயற்றப்பட்ட 5 சுலோ கங்களை அவற்றிற்குரிய இடங்களிற் சேர்த்துள்ளேன். அவை ''வாஸவ தத்த நாடகத்''தில் சேர்க்காமல் விடப்பட்டிருக்கின்றன. அவற்றுள் **முதலாவது** நான்காம் அங்கத்தில் 2 - a என்னும் இலக்கமிட்ட செய்யு ளாகும். இது **ராமச்சந்திரர்** என்பவராலும் **குணசந்திரர்** என்பவராலும் குறிக்கப்பட்டிருக்கின்றது; இது பாஸகவி இயற்றியதென்றும் அவ னுடைய ''ஸ்வப்ன வாஸவதத்த''த்தினின்று எடுக்கப்பட்டதென்றும் அவர்கள் வெளிப்படையாகச் சொல்லியிருக்கிறார்கள். இதைச் சேர்த்துக் கொள்வது யுக்தமேயென்று **டாக்டர் சுக்தங்கர்** என்னும் மகாவித்து வானும் அனுமதிக்கின்றார். இதற்கு ஆதாரமாக அவர் சொல்லும் வாதத்தை நான் ஒப்புக்கொள்கிறேன். விதூஷகனுடைய தீர்மானத்தை அரசன் தன் கண்ணாரப் பார்த்துத் திடப்படுத்திக் கொள்வது இயல்பே. குணதோஷவிசாரக நிபுணர் அநேகர் இது பாஸனுடைய சுலோகங் களேயென்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

**இரண்டாவது**, நான்காம் அங்கத்தில் 4 - a என்னும் இலக்க மிட்ட செய்யுளாகும். இந்தச் சுலோகம் மிக அழகாக இருக்கின்றது. உத்தம ஹிந்து பாரியையின் லக்ஷணங்களை வர்ணிக்கின்றது. **ஸுபா ஷிதாவளி** என்னும் நூலில் இது பாஸகவியினுடையதென்று சொல்லப் பட்டிருக்கின்றது. இந்தச் செய்யுள் ஐந்தாம் அங்கத்தில் பிரசித்தமாகச் சொல்லுகிற ஸ்வப்னக் காட்சிக்குமுன் இருக்க வேண்டும்; அல்லது,

ஆறாம் அங்கத்தில் அங்காரவதியினிடமிருந்து வாஸவதத்தையின் தாதி வர்த்தமானஞ் சொல்ல அரசனிடம் வந்தபின் அவன் புலம்பும் சந்தர்ப்பத்தில் வரவேண்டும் என புஸல்கர் சொல்கிறார். ஆயினும் அது நான் போட்டிருக்கிற இடத்திலேயே இருக்க வேண்டுமென்பது எனது துணிபு. நான் போட்டிருக்கிற இடத்திற்கு அடுத்துள்ளது வாஸவதத்தை யின் வாக்கியம். அதில் அவள், ''நல்லது, நல்லது; நான் பட்ட கஷ்டங் களுக்கெல்லாம் போதிய நற்பயன் பெற்றேன். இம்மாறு வேஷத்தினாலும் எத்தனையோ நன்மைகள் உண்டு'' என்று சொல்லுகிறார்கள். இந்தக் கூற்றினாலும் நான் போட்டிருப்பது சரியான இடமே என்று தோன்றும்.

அவையெல்லாம் ஒருவாறிருக்க, பத்மாவதியை நோக்கி, ''ராஜாத்தி, நம் யஜமானருக்கு உண்மையில் மரியாதையே தெரிய வில்லை'' என்று அவளுடைய தாதி சொல்லியதற்கு, ''தோழி! அங்ஙன மன்றே யன்று. பெருமை படைத்த வாஸவதத்தையின் நற்குணங்களை யெல்லாம் இன்றைக்கும் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு குறிப்பிடு வத்னால் என் நாயகன் விசேஷ மரியாதை காட்டியிருக்கின்றார்' என்று பத்மாவதி பதில் சொல்லுகிறாள். இதனால் 4-a இலக்கமிட்ட சுலோகத்திலுள்ளதுபோல அவளுடைய நற்குணங்கள் பலவற்றை அரசன் எடுத்துக் கூறியிருக்க வேண்டும். 4-ஆம் சுலோகத்திலுள்ளதுபோல பொதுவான வார்த்தைகளை மாத்திரம் சொல்லியிருக்க முடியா தென்று தெரிகிறது.

**மூன்றாவது,** ஐந்தாம் அங்கத்தில் 7-a என்னும் இலக்கமிட்ட செய்யுளாகும். இது 'ஸ்வப்ன வாஸவதத்த'த்திலுள்ள சுலோகமென்று **அபிநவகுப்தர்** சொல்லுகிறார். உருவகப்படுத்திக் கூறுவதிற் பாஸ கவிக்குப் பிரியம் அதிகம் என்பதற்கு உதாரணமாக, இந்தச் சுலோ கத்தை மேற்கோள் காட்டுகிறார்; ஆழ்ந்த மனோ விகாரங்களை அவ்வளவாக அந்தக்கவி பொருட்படுத்துவதில்லை; மனோவிகாரங் களைப் பொருட்படுத்தாதினால் இந்தச் சுலோகத்திலுள்ள வாசகப் போக்கு அமைந்திராது என்று சொல்லுகிறார். அபிநவகுப்தர் சொல்லும் இந்த வார்த்தை இச் சந்தர்ப்பத்திற்குப் பொறுத்தமாயிருக்கின்றது. ஏனெனில் இறந்துபோன தன் மனைவி உயிரோடிருக்கிறாளென்று விதூஷகனுக்கு அரசன் சொல்லுகிறான். அப்போது அவள் உயிர்த் தெழுந்தாளென்பதைப் பற்றி அவன் ஆச்சரியமாவது சந்தோஷமாவது காட்டவில்லை; எவனேனும் அப்படிப்பட்ட மனக்கிளர்ச்சி உண் டாகும் சமயத்தில் அதிக ஆச்சரியமாவது காட்டியிருப்பான்; அப்படி யிருந்தும் அரசன் அவ்வித உணர்ச்சி காட்டவில்லை. ஆயினும், அவள் தன் அழகினால் தன் கண்ணைக் கவர்ந்ததையும் மனத்தை

மயக்கி மையலூட்டியதையும் வர்ணிக்கிறான்; இங்ஙனமாக, பிரதம தரிசனத்தில் அவள்மீது தனக்கு உண்டான மோகத்தைக் குறிக்கின்றான்; அபிநவகுப்தர் எடுத்துரைக்கும் நியாயங்களை மறந்து சில புலவர்கள், மேற்சொல்லியவாறு அரசன் ஆச்சரியங் காட்டாததனால், அந்தச் சுலோகம் பாஸகவியுனுடையதல்லவென்று அதைத் தள்ளிவிடுகிறார்கள்.

**நான்கவது**, ஐந்தாம் அங்கத்தில் 8 - a என்னும் இலக்கமிட்டுள்ள செய்யுள். ஒரு ஸ்வப்ன நாடகத்தின் கதையைச் சாங்கோபாங்கமாக ஆராயுமளவில் **ஸாரதா தன்யர்** ''பாவப் பிரகாசம்'' என்னும் தம்முடைய நூலில் இந்தச் சுலோகத்தைக் கொடுத்திருக்கிறார். அதிற் சொல்லப்பட்டிருக்கிற மற்ற விவரங்களைப் பார்த்தால் அவையெல்லாம் நமது ''ஸ்வப்ன வாஸவதத்த''த்திலுள்ள விவரங்களையொத்திருக்கின்றன. இந்தச் சுலோகத்தை மகாமகோபாத்தியாயர் கணபதி சாஸ்திரியார் ஐந்தாம் அங்கத்தில் 8-ஆம் சுலோகத்திற்குப் பின் வைத்தது சரியே என்பதிற் சந்தேகமில்லை.

**ஐந்தாவது**, ஆறாம் அங்கத்தில் 17 - a என்னும் இலக்கமிட்டுள்ள செய்யுள். இந்தச் சுலோகத்தை தண்டி என்னும் மகாகவி தம்முடைய **காவிய தரிசம் (II.** 280.) என்னும் நூலில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்; ஆனால், இது எவரியற்றிய சுலோகமென்றேனும் எந்நூலில் உள்ளதென்றேனும் சொல்லவில்லை. இஃது இந்த நாடகத்தினின்று எடுக்கப்பட்டதென்றும், இவ்விடத்திலேயே இருக்கத்தக்கதென்றும் புஸல்கர் என்பவர் சொல்வதை நான் ஒப்புக் கொள்கிறேன்.

ஷேக்ஸ்பியரையும் காளிதாசரையும் போல பாஸமகாகவி அழியாப் புகழுடம்பு வாய்ந்தவனென்பது நிச்சயம். மானிட மனம் ஆழம் மிகுந்திருக்கிற இடத்திலும் ஆழமில்லாதிருக்குமிடத்திலும் அதைப் பாஸகவி அளந்துள்ளான்; அதன் உயர்தரமான நற்குணங்களையும் நீசமான இழி குணங்களையும் பார்த்துள்ளான்; மிகுந்த கோபாவேசத்திலும் அன்பிலும் ஆசையிலும் அதன் தன்மையை அறிந்துள்ளான்; அவன் அழகாக வர்ணிக்காத மனக்கிளர்ச்சி ஒன்றுமே இல்லை. இனி, அவன் எப்படிப்பட்ட கவி, எப்படிப்பட்ட நாடகாசிரியன் என்று சுருக்கமாகச் சொல்வேன்.

முதன் முதல் எவர் மனத்திலும் படக்கூடியது என்னவெனில், அவனெழுதிய நாடகங்களின் சங்கியையும் அவற்றின் பல்வேறு விஷய விரிவுமேயாம். ஏனெனில், காளிதாசர் பவபூதி முதலான மற்ற சம்ஸ்கிருத நாடகாசிரியர்கள் ஒவ்வொருவர் மூன்று நாடகங்களே எழுதினார்கள். சம்ஸ்கிருத நாடக வித்வான்கள் மூன்று நாடகங்களுக்கு

அதிகம் எவரும் எழுதக் கூடாதென ஒரு சட்டம் செய்திருந்தார்கள். அது மதியீனமானதேயாயினும் அதை மீறமாட்டாமற் காளிதாசர் முதலாயினோர் அதிக நாடகங்கள் எழுதாதொழிந்தனர். ஆனால், பாஸகவியோ குறைந்த பக்ஷம் இப்பதின்மூன்று நாடகங்களையேனும் எழுதினான். இப்பதின்மூன்றில் ஏழுவிதமான நாடக முறைகள் தழுவப்பட்டுள்ளன: ''அபிஷேகம்,'' ''பாலசரிதம்,'' ''அவிமாரகம்'', ''ஸ்வப்னவாஸவதத்தம்,'' ''பிரதிமா,'' என்பவை **பரிபூரண நாடகங்களாம்.** அஃதாவது ஐந்து அங்கங்கள் அல்லது அதிகம் வாய்ந்தவை; ''சாருதத்தம்'' என்பது ஒரு **பிரகரணம்,** ''பஞ்சராத்ரம்'' என்பது **ஸமவாகரம்;** ''பிரதிஜ்ஞா யௌகந்தராயணம்'' என்பது **இஹாமிருகம்.** ''கர்ணபரம்,'' ''தூதகடோத்கஜம்,'' ''ஊருபங்கம்'' என்னும் மூன்றும் **உத்ஸ்ரிஷ்டி காங்கங்கள்;** ''தூதவாக்கியம்'' என்பது ஒரு **வீதி.** ''மத்தியம வியாயோகம்'' என்பது ஒரு **வியாயோகம்.**

இவையெல்லாம் வேறு வேறுவிதமான விஷயங்களையும் நாடக பாத்திரங்களையும் உடையவை; இவற்றின் அங்கங்களின் சங்கியை முதலியன வேறுபடும். ஆனால், நாடகவியல் விதிகள் ஏற்படுமுன் பாஸகவி இருந்ததனால் அவனுடைய நாடகங்கள் பிற்காலத்திலேற்பட்ட நாடக விதிகளுக்கு முற்றும் இசைந்திரா; அவ்விதிகளை அனுசரித்தே மேற்சொல்லிய ஏழுவிதங்களையும் பாகுபடுத்தியுள்ளேன். உதாரணமாக ''பிரதிஜ்ஞா நாடக''த்தைச் சிலர் ''பிரகரணம்'' என்கிறார்கள்; ''தூத கடோத்கஜம்'', ''ஊருபங்கம்,'' ''தூதவாக்கியம்'' என்பவைகளைச் சிலர் 'வியாயோகம்' என்கிறார்கள்.

சம்ஸ்கிருத பாகுபாட்டின் விவரமறியாத ஆங்கிலத்தவரும் இந்நாடகங்களில் பெரிய வித்தியாசங்களைக் காண்பார்கள். அவ்வித்தியாசங்கள், அங்கங்கள், கதாபீஜங்கள், நாடக பாத்திரங்களின் அமைப்பு, சுலோகங்கள், இரசபாவங்கள் முதலியவற்றில் இருக்கும். திருஷ்டாந்தமாக ''அவிமாரகம்'' என்பது கேவல இன்பியல் நாடகம். ''ஊருபங்கம்'' என்பது கேவல துன்பியல் நாடகம். இஃதொன்றே வடமொழி இலக்கியங்களுள் துன்பியல் நாடகமாம். ''பிரதிமா'' என்பது ஆழ்ந்த கருத்துள்ள தர்மங்களை யுணர்த்தும் இன்பியல் நாடகம். ஆனால், ஸ்ரீராமருடைய பிரிவினையால் தசரதருக்கு நேர்ந்த தீவிர வேதனையையும் மரணத்தையும் விரித்துரைக்கும். அதன் இரண்டாம் அங்கம் கேவல துன்பியல் நாடகமாகும். ''அபிஷேகம்'' என்பதும் ஆழ்ந்த கருத்துள்ள இன்பியல் நாடகமே; ஆனால், முதல் அங்கத்தில் வாலியை அம்பினால் அடித்துக் கொல்வது தனித்தொரு சிறு துன்பியல் நாடகமாகும். ''கர்ணபாரம்'' என்பது வெளிப்படாத துக்க கர்ப்பம் வாய்ந்த துன்பியல் நாடகமாகும். ''தூதகடோத்கஜமும்'' அத்தன்மையதே.

''சாருதத்தம்'' என்பது முடிவுகட்டாத நாடகம்: ஆசிரியனது மனம்போல அஃது இன்பியலாகவேனும் துன்பியலாகவேனும் முடிவுற்றிருக் கலாம். இப்போழ்துள்ளபடி சாருதத்தனுடைய மனைவியின் முத்து மாலையைத் திருப்பிக் கொடுப்பதற்காக அவனைச் சந்திக்கும் பொருட்டு வஸந்தசேனை என்பவள், பாங்கியரின் தடுப்புரையைப் பாராட்டாமல், புயல் வீசும் வேளையிற் புறப்படுவதோடு நின்றிருக் கின்றது.

நாடகங்களின் விஷயங்கள் வேறுவேறு விதமாக இருக் கின்றனவென்பது சரியே. விஷயானுஸாரமாக இப்பதின்மூன்று நாட கங்களையும் நான்கு தொகுதிகளாகப் பிரிக்கலாம். ''பிரதிமா'', ''அபிஷேகம்'' என்னும் நாடகங்களின் கதாபீஜம் ''ராமாயணத்தி னின்று கைக்கொள்ளப்பட்டது; ''தூதவாக்கியம்'', ''கர்ணபாரம்,'' ''ஊருபங்கம்'' என்னும் நாடகங்களின் கதாபீஜம்''மகாபாரத''த் தினின்று கைக்கொள்ளப்பட்டது; ''மத்தியம வியாயோகம்,'' ''பஞ்சராத்ரம்,'' ''தூதகடோத்கஜம்'' என்பவற்றின் கதாபீஜங்கள் ஆசிரியனது சொந்தக் கற்பனைகள். ஆனால், அவற்றிற்காணும் நாடக பாத்திரங்கள் ''மகாபாரதத்தில் உள்ளவை; ''பாலசரிதம்'' என்னும் ''பாகவத புராணத்''தின் பிற்காலத்திற் சேர்க்கப்பட்ட பக்தி விஷயக் கதைகளை ஆதாரமாகக் கொண்டுள்ளது; ''பிரதிஜ்ஞா யௌகந்த ராயணம்,'' ''ஸ்வப்ன வாஸவதத்தம்,'' ''அவிமாரகம்'' என்பவற்றின் கதா பீஜங்கள் சாமானிய உலகியற் கதைகளை ஆதாரமாகக் கொண் டுள்ளன. ''சாருதத்தம்'' என்பது நாடகாசிரியனுடைய சொந்த கற்பனை யாயிருக்கலாம். இவ்வாசிரியன் கதாபீஜங்களை வேறு இடத்தி லிருந்து கைக்கொண்ட போதிலும், நாடகாலங்காரச் சிறப்பை அதிகப் படுத்துவதற்காகப் பெரிய மாறுபாடுகள் செய்துள்ளான். நாடகாலங் காரச் சிறப்பைக் குறைக்கக் கூடிய அமிசங்களை எடுத்துவிடுகிறான். இப்புத்தகத்திற் காணும் இரண்டு நாடகங்களுக்கும் ஆதாரமாயுள்ள உலகியற்கதைகளில் என்ன மாறுபாடுகள் செய்திருக்கிறானென்று இனிப் பின்னாற் பார்ப்போம். இதுபோன்ற பெரிய மாறுபாடுகள் மற்ற நாடகங்களிலும் செய்யப்பட்டிருக்கின்றன.

மற்ற நாடகங்களினின்று ஓர் உதாரணம் காட்டுவோம். ''ராமாயண''க் கதைக்கு மாறாக, ''பிரதிமா'' நாடகத்தில் ராமரும் இராவணனும் சந்திக்கும்படி பாஸகவி செய்துள்ளான். அன்றியும், சீதாதேவியின் மனோபீஷ்டத்தை நிறைவேற்றுவதற்காக ஸ்ரீராமன் பொன்மானைப் பின்பற்றிச் சென்றாரென்னாமல், தன் தகப்பனா ருடைய சிராத்தத்திற் பிதுருக்களுக்குப் பெரும்படைப்பாக உபயோ கிக்கும் பொருட்டு அதனைப் பிடிக்கப் போனாரென்று இவன்

மாற்றியிருக்கிறான். இவ்வாறே ராமர், லக்ஷ்மணர், சீதை ஆகிய மூவரின் குணவிசேஷங்களையும் மிகைப்படுத்தி உயர்த்தியுள்ளான். அன்னியனுடைய கிருகத்தில் வஸித்துக் கொண்டிருந்த குற்றத்திற் காகச் சீதை இனித் தம்முடன் மனைவியாகத் தம் இல்லத்திலிராமல் லக்ஷ்மணன், பரதன், சுக்ரீவன், விபீஷணன் ஆகிய இவர்களில் ஒருவருடைய வீட்டிலேனும், வேறெவருடைய வீட்டிலேனும் போய் அவள் இருக்கவேண்டுமென்று அவளைப் பார்த்து ஸ்ரீராமர் மிகக் கடுமையாகவும் மனத்தைக் குத்தும்படியாகவும் சொல்லும்படியாகப் பாஸகவி செய்யவில்லை. பொன்மானைத் தேடி ஸ்ரீராமர் சென்றிருந்த போது அவர் இறந்துபோனால் அவருக்குப் பின் சீதையை மணக்கலா மென்னும் எண்ணங்கொண்டு லக்ஷ்மணன் அவருக்குத் துணைசெய்ய போகாதிருந்தானென்னுந் தகாத வார்த்தையை, அங்ஙனம் சொல்வது பெண்பாலற்கு இயல்பாயிருந்தபோதிலும், சீதை சொல்லவில்லை. சித்திரகூட பருவதத்திலிருந்தபோது பரதனுடைய வருகையைப் பார்த்து லக்ஷ்மணன், அரசுரிமைப் போட்டிக்காரனாகிய ராமனைக் கொல்வ தற்குப் பரதன் வருகிறானென்றெண்ணி அவனை உடனே கொன்று விட வேண்டுமென்று, ''ராமாயண''த்திலுள்ளதுபோல, இங்கே ராம ருக்கு ஆலோசனை சொல்லவில்லை.

''மகாபாரத''த்தில் துர்யோதனன் அக்கிரமமே அவதார மெடுத்து வந்தது போல வர்ணிக்கப்பட்டிருக்கிறான். அவனைப் பாஸகவி உத்தம புருஷனாகக் காட்டியிருக்கின்றான். 'பஞ்சராத்திர'த்தில் அவனைப் பெருங் கொடையாளியாக்கி இருக்கின்றான்; ''ஊருபங்க''த் தில் பெரிய போர் வீரனென்றும், தாய் தந்தையர் மனைவியர் மக்கள் ஆகிய இவர்களிடத்து அன்புடையவனென்றும் வர்ணிக்கப்பட்டிருக் கிறான். துர்யோதனனுக்குத் தொடை முறிந்துபோயிற்றல்லவா? தன்னுடைய ஊனத்தை உத்தேசித்து அவன் துக்கிக்கவில்லையென்றும், தன் பெற்றோருக்குச் சாஷ்டாங்கமாக நமஸ்கரிக்க முடியாததையும் தன் இளங்குழந்தையைத் தொடையின்மீது ஏற்றிவைத்துக்கொள்ள முடியாததையும் நினைத்தே அவன் துக்கித்தானென்றுமே சொல்லப் பட்டிருக்கின்றது. மகாபாரதத்தில் இருப்பதைக் காட்டிலும் ''கர்ண பாரம்'' என்னும் நாடகத்திற் **கர்ணன்** சிறந்த தன்மையுடையவ னாகக் காட்டப்பட்டிருக்கிறான்; அர்ஜுனன்மீது அவனுக்கிருந்த கடும்பகையும், துர்யோதனனுடைய அக்கிரமங்களுக்கு அவன் உடந்தையாய் இருந்ததும் காட்டப்படவேயில்லை.

''மத்தியம வியாயோக''த்தில் சுனச்சேபனுடைய கதையை யெடுத்துக் கையாண்டு அந்தப் பிராமண குடும்பத்தவர்களெல்லாரை யும் ஆத்மதியாக புத்தியுடைய பெரியாராக்கி உயர்த்தி இருக்கிறான்.

பாஸனிடத்தில் மற்றொரு பெரிய விசேஷமென்னவென்றால், ஏற்கெனவே பாணன் சொல்லியதுபோல, நாடக பாத்திரங்களின் பல்வேறு தன்மையாகும். நாடகப்பாத்திரங்களுள் ராமர், கிருஷ்ணன், பலராமர், இந்திரன், அக்கினி முதலான தேவர்களும்; வித்தியாதரர் முதலான உபதேவர்களும்; ராவணன், கஞ்சன், கடோத்கஜன், விபீஷணன் முதலான ராக்ஷசர்களும்; காத்தியாயனி முதலான தேவதைகளும்; ஹிடும்பி முதலான ராக்ஷசிகளும்; நாரதர் முதலான் தேவரிஷிகளும்; சுவர்க்க தூதர்களும்; திருதராஷ்டிரர், தசரதர், துர்யோதனன், சகுனி, சல்லியன், குந்திபோஜன், உக்கிரசேனன், மகாசேனன், உதயனன், விராடன், யுதிஷ்டிரர் முதலான அரசர்களும்; காந்தாரி, கௌசல்யை, சுமித்திரை, கைகேயி, சீதை, மாலவி, பௌரவி, அங்காரவதி, வாஸவதத்தை, பத்மாவதி, குந்தி முதலான ராணிகளும்; துச்சாஸனன், துர்ஜயன் முதலான இராஜகுமாரர்களும்; துச்சலை, குரங்கி, தேவகி முதலான ராஜகுமாரிகளும்; யௌகந்தராயணன், ருமண்வான், பரதரோஹகன், கௌஞ்சாயணன், சுமந்திரன், பூதிகன், சாலங்காயணன் முதலான மந்திரிகளும்; கர்ணன், அஸ்வத்தாமன், அவிமாரகன், சாருதத்தன், பீஷ்மர், துரோணர், பீமன், அர்ஜுனன், அபிமன்யூ, லக்ஷ்மணன், பரதன், சத்ருக்னன், உத்தரன் முதலான வீரர்களும்; வஸந்தகன், சந்துஷ்டன் முதலான விதூஷகர்களும்; வாலி, ஹநுமான், சுக்கிரீவன், தாரை, •அங்கதன், ககுபன், பிலமுகன் முதலான வாநர சிரேஷ்டர்களும்; பாதராயணன் முதலான கஞ்சுகிகளும்; ஹம்ஸகனைப் போன்ற நித்யாஸன்னர்களும் (உடனுதவிகளும்); நிர்முண்டகனைப் போன்ற சர்க்கீல்களும்; சாலகனைப் போன்ற தூதர்களும்; வசுந்தரையைப் போன்ற தாதிகளும் (அங்கபாலிகளும்); விஜயைப் போன்ற துவாரபாலகிகளும்; ''ஸ்வப்ன வாஸவதத்த''த்தில் வருகிற சமயாசார வித்யார்த்தியைப் போன்ற மாணவர்களும்; ''பஞ்சராத்திர''த்திலுள்ளது போன்ற அத்வர்யுகளும்; ''மத்தியம வியாயோகத்''திலுள்ளது போன்ற பிராமண குடும்பமும்; சாஹூரன், முஷ்டிகன் என்பவர்களைப் போன்ற மல்லர்களும் சந்தடி செய்யும் சிறிய உத்தியோகஸ்தர்களும்; வெள்ளையடிப்போர், ஸம்வாஹகர், படைவீரர், காவலர் ஆகிய இவர்களும்; சஜ்ஜலகன் போன்ற கள்வர்களும்; சகரன் என்னும் இந்திய பால்ஸ்டாப் (Indian Falstaff) பைப் போன்ற துராத்மாக்களும்; விடனும்; வஸந்தசேனையைப் போன்ற வேசிகளும்; சேடிகள், பாங்கிமார், பரிசாரகர்கள் ஆகிய இவர்களும் இருக்கின்றார்கள். இவர்களில் உயர் நிலையினராயினும் தாழ்நிலையினராயினும் ஒவ்வொருவருக்கும் தனி வியக்தி இருக்கின்றது. இவ்விஷயம் இவ்விரண்டு நாடகங்களிலுமுள்ள பாத்திரங்களைப் பாகுபடுத்தி இனி

விமரிசனை செய்யும்போது இவ்விஷயம் தெளியத் தெரியும் யௌகந்த ராயணருக்கும் கௌஞ்சாயணனுக்கும் இருப்பதுபோன்ற வித்தியாசம் காண்பதரிது. 'யௌகராயணர் காரியத்தில் துரிதமுள்ளவர். வார்த்தை களைச் சுற்றிச் சுழற்றாமல் நேரே சுருக்கமாகச் சொல்பவர். கௌஞ் சாணனோ ஆலஸ்ய ப்ரகிருதி, காரியங்களை விரைந்து செய்ய மாட்டான், கேட்பவருக்கு வெறுப்பும் கோபமும் உண்டாகுமளவு சுற்றிச் சுழற்றிப் பேசுவான். ஒன்று சொல்லிக் கொண்டிருக்கையிற் சரே லென வேறு விஷயத்திற்குத் தாவுவான்.

மானிடருள் இத்தனை விதமான நாடகப் பாத்திரங்களைக் கைக்கொண்டிருப்பதல்லாமல், அவர்களுக்கு மேலான அல்லது, சற்றுத் தாழ்வான பிராணிகளையும் பாஸகவி நாடக பாத்திரமாக்கிக் கொண்டிருக்கிறான். இவனுடைய நாடக பாத்திரங்களுள் கலியனென் னும் ஸர்ப்பம், அரிஷ்ட விருஷப மென்னும் காளை, கருடனென் னுங் கழுகு ஆகிய இவை சேர்ந்திருக்கின்றன; அன்றியும், ஸ்ரீ கிருஷ் ணனுடைய சக்கரம், சங்கு, வில், தண்டாயுதம், கட்கம் ஆகிய இவையும், கஞ்சனுடைய 'சாபம்', அவனுடைய 'நல்லதிருஷ்டம்' என்பனவும் சேர்ந்திருக்கின்றன; இவைகளை நாடகபாத்திரங்களாகச் சேர்த்திருப்பது போதாதென்று இவைகளுக்கு வியக்தித்துவமும் உயிரும் அளித்திருக்கின்றான்; இவைகளை மிகத் தெளிவாக வர்ணித்து இவைகளின் வாயால் அரிய பெரிய வார்த்தைகளையும் சொல்வித் திருக்கிறான். புருஷர்கள், ஸ்திரீகள், தேவர்கள், அரக்கர்கள் ஆகிய இவர்களில் உயர்தரமானவர்கள் முதற்கொண்டு தாழ்தரமானவர்களை யும் பற்றி பாஸன் விவரித்திருக்கிறானென்பது தெளிவு. இவர்களை ஊர்துவதனமாகவும் அனுப்பிரஸ்தரீதியாகவும் எடுத்து விவகரித் திருக்கின்றான்.

மற்றொரு விசேஷம் என்னவெனில், நம்மை எதிர்பாராத நிலைமைகளிலும் நவநிலைமைகளிலும் பாஸன் சுவைக்க வல்லான்; சாதாரணமாய் வழக்கத்திலுள்ள விஷயங்களை நமக்கு வழக்கமில் லாத வகையில் வித்யாசப்படுத்திக் காட்டவல்லான்; நம்மை வெகு விநோதப்படுத்தவும் மிக்க அறிவூட்டவும் வல்லான். உதாரணமாக, உதயனனைப் போன்ற அரசனொருவனைச் சிறையிட்டுக் காட்டு கிறான். தேசப் பிரஷ்டரான அரசர்கள் இந்நாளில் அதிகமாகிறார் களெனினும், சிறைப்பட்டிருக்கும் அரசர்கள் இன்னும் அரியரே. உயர் குலத்துப் பிறந்த குரங்கி என்னும் ராஜகுமாரி அவிமாரகனென்னும் குலவீனன்மீது கனமோகங் கொண்டிருப்பதாகக் காட்டப்பட்டிருக்

கிறாள். வஸந்தசேனை யென்னும் வேசி சகரனென்னுஞ் செல்வவானுடைய காதலைத் தவிர்த்து சாருதத்தனென்னும் ஏழைக்காதலனை விரும்புவதாகக் காட்டப்பட்டிருக்கிறாள். தந்தையும் மகனும் சண்டை செய்வதாக இரண்டு இடங்களிற் காட்டப்பட்டிருக்கிறார்கள்; தந்தையுடன் போர் புரிகிறோமென்று மகனுக்குத் தெரியாது; அபிமன்யூ அர்ஜுனனோடு போர்புரிகிறான், கடோத்கஜன் பீமனோடு போர் புரிகிறான். வஸந்தசேனையைத் தன் பணிப்பெண்ணென்று நினைத்துச் சாருதத்தன் தன் ஆடையை உள்ளே கொண்டுபோய் வைக்கும்படி அவளுக்குச் சொல்லுகிறான்.

ரஸங்களை வர்ணிப்பதிற் பாஸகவி மிகக் கை தேர்ந்தவன். ஒவ்வொரு நாடகத்திலும் ஒரு ரஸமேனும், பல ரஸங்களேனும் அமைந்திருக்கின்றன. பாண்டவர்களுக்குரிய பாதிராஜ்யத்தை அவர்களுக்குக் கொடுத்துவிடும்படி கௌரவர்களுக்குச் சொல்வதற்காகக் கிருஷ்ணன் தூது சென்றதைப் பற்றிச் சொல்கிற ''தூதவாக்கிய'' மென்னும் நாடகத்தில் வீர ரஸமும் அற்புத ரஸமும் அமைந்துள.

அபிமன்யுவைச் சூழ்ந்துகொண்டு கொன்ற நூறு அரசர்களையும் மறுநாள் மாலைக்குள் கொல்வேனென்று அர்ஜுனன் செய்த சபதத்தைக் கௌரவர்களுக்கு அறிவிக்க, பீமனது இராக்ஷச குமாரனாகிய, கடோத்கஜன் சென்றதைப் பற்றிச் சொல்கிற ''தூதகடோத்கஜம்'' என்னும் நாடகத்தில் கருணா ரஸமும் வீரரஸமும் அமைந்துள.

''கர்ணபாரம்'' என்பது கர்ணனது சுமை என்று பொருள்படும்; பரசுராமரிடமிருந்து அவன் வஞ்சகமாகக் கற்ற அஸ்திரவித்தை 'உற்ற சமயத்தில் பயன்படாதாகுக' என்று சொல்லிய அவருடைய சாபத்தால் அவனுக்கு வீண் சுமையாயிற்றென்று அவன் தெரிந்து கொண்டதைக் குறிக்கின்றது. இந்த நாடகமோவெனின் கர்ணனைத் தன் மகன் அர்ஜுனன் வெல்லும் பொருட்டு இந்திரன் பிராமணவடிவாக வந்து கர்ணனுடைய கவசத்தையும் கர்ணகுண்டலத்தையும் தானமாகப் பெற்றதைப் பற்றிச் சொல்கின்றது.

இந்நாடகத்திலுள்ள முக்கியமான ரஸங்கள் கருணையும் வீரமுமாம். கிருஷ்ணன் இரகசியமாகக் காட்டிய குறிப்பறிந்து பீமன் தன் கதாயுதத்தைச் சுழற்றிப் போர்முறைக்கு மாறாகத் துர்யோதனனுடைய தொடையையடித்து முறித்து அவ்வஞ்சாநெஞ்சம் படைத்த வீரனைக் கொன்ற விஷயத்தை ''ஊருபங்க''மென்னும் நாடகம் விவரிக்கின்றது; இதனிலுள்ள முக்கியமான ரஸங்கள் கருணையும் வீரமுமாம்.

ஒரு பிராமணச் சிறுவனை கடோத்கஜன் தன் தாயார் ஹிடும்பிக்கு இரையாகக் கொண்டு போகிறான்; அவ்விளைஞனை பீமன் வந்து விடுவிக்கிறான்; கடோத்கஜன் அவனைக் கொண்டு போனது உண்மையில் ஹிடும்பிக்கு இரையாகவன்று; ஹிடும்பியின் கணவனாகிய பீமனை அங்கு வருவிக்கும் பொருட்டேயாம்; இந்தக் கதையை ''மத்தியம வியாயோகம்'' என்னும் நாடகம் விவரிக்கின்றது. அந்தப் பிராமணச் சிறுவனை விடுவிப்பதற்காகப் பீமன் தன் மகன் கடோத்கஜனுடன் சண்டை செய்கிறான்; முடிவில் அவ்விளைஞனுக்குப் பதிலாகத் தன்னையே இரையாகக் கொள்ளும்படி கேட்கிறான். இதில், வீரம், கருணை, அற்புதம், பயானகம், ரௌத்ரம், ஹாஸ்யம், சிங்காரம், வாத்ஸல்யம் (புத்திரன், தாய்தந்தையர் முதலானவர்களுக்கு உள்ளது போன்ற நிஷ்காமியப் பிரேமை) என்னும் ரஸங்களெல்லாம் அடங்கியிருக்கின்றன.

''பாலசரித''மென்பது கம்ஸவதம் ஈறாகக் கிருஷ்ணனது வீரச்செயல்களை விவரிக்கின்றது. இதில் வீரம், அற்புதம், கருணை, ரௌத்ரம், பயானகம், ஹாஸ்யம், சாந்தம், பக்தி என்னும் ரஸங்கள் அமைந்திருக்கின்றன. பார்க்கப்போனால், சிங்காரம் தவிர மற்ற ரஸங்களெல்லாம் இதனிற் பொதிந்துள; சிங்கார ரஸத்தைத் தவிர்த்திருப்பது என்னோவெனின், ஸ்ரீகிருஷ்ணனுக்கு இன்னும் இளம் பிராயம் மாறவில்லை.

''அவிமாரகம்'' என்பது ''ரோமியோ அண்டு ஜூலியட்டு'' (Romio & Juliet) என்னும் நாடகத்தைப் போன்ற கதை; குரங்கி என்னும் ராஜகுமாரி **விஷ்ணுசேனன்** என்னும் அவிமாரகன்மீது மோகங்கொள்கிறாள். சண்டபார்கவரென்னும் முனிவருடைய சாபத்தால் அவன் ஒரு வருஷகாலம் குலப்பிரஷ்டனாய் இருக்கிறான்; அவருடைய தந்தை கோபத்தில் அவரை நாய் தின்னும் புலையனென்று கூறியிருக்கின்றார். இதில் சிங்காரம், ஹாஷ்யம், கருணை, அற்புதம், பயானகம் என்பன முக்கியமான ரஸங்களாம். ''பிரதிமா'' நாடகத்திலுள்ள ரஸங்களாவன வீரம், கருணை, ஹாஸ்யம் என்பனவாம்; ''அபிஷேக நாடக''த்திலுள்ளவை வீரம், கருணை, அற்புதம், பயானகம் என்பனவாம்; ''பிரதிஜ்ஞா யௌகந்தராயணத்''திலுள்ளவை வீரம், அற்புதம், ஹாஸ்யம், சிங்காரம் என்பனவாம்; ''ஸ்வப்ன வாஸவதத்தத்''திலுள்ளவை சிங்காரம், கருணை என்பனவாம்; ''சாருதத்தம்'' என்னும் நாடகத்திலுள்ளவை கருணை, ஹாஸ்யம், சிங்காரம் என்பனவாம்.

இனி, மேற்சொல்லிய ரஸங்களுக்கான சிற்சில முக்கிய உதாரணங்களை இந்நாடகங்களினின்று எடுத்துக் கூறுவேனாக.

## 1. ஹாஸ்யம் (நளினம், சுடுசொல்)

***ஜயதேவர்*** *என்னும் கவிவாளர் தம்முடைய* ***''பிரசன்ன ராகவம்''*** *என்னும் நூலில் பாஸனைக் குறித்துச் சொல்லும் போது ''பாஸோ ஹாஸகவிகுல குரு:'' (பாஸகவி ஹாஸ்ய கவிகளுள் சிறந்தவர்) என்று எழுதியிருக்கிறார். இந்நாடகங்களில் இவனுடைய ஹாஸ்யங்களின் நானாவிதங்கள் எண்ணிறந்தனவா யிருக்கின்றன. சில உதாரணங்கள் காட்டுவேனாக.*

### கேவல ஹாஸ்யம்

*கீழ்க்கண்டவைகளிற் கேவல ஹாஸ்யம் காணப்படுகின்றது. ''யௌகந்தராயண சபதங்கள்'' என்னும் நாடகத்தின் மூன்றாம் அங்கத்தில் வஸந்தகனை நோக்கி யௌகந்தராயணனும் ருமண்வானும் அவர்களுடைய சூழ்ச்சிகள் பயன்படாவென அவனுக்கு ஏன் தோன்றுகின்றதென்று கேட்டபோது, ''ஐயன்மீர், என் எண்ணங்களை முதன் முதல் நான் அறிகிறேன். பின்பு நீங்கள் அறிகிறீர்கள்'' என்று அவன் பதில் சொல்லுகிறான்.*

*''சாருதத்தத்''தில் சூத்திரதாரனுக்கு அவன் மனைவி, 'நெய்யும் பாலும் சர்க்கரையும் பிருஞ்சியரிசியும் போட்டுப் பதார்த்தங்கள் செய்யப்போகிறேன்' என்று சொல்லியபோது நாவில் ஜலம் ஊறி, 'அவன் அவ்வஸ்துக்கள் எங்கே இருக்கின்றன?' என்று வினவினான். அதற்கு அவள், 'இப்போது அவை கடையிலிருக்கின்றன' என்று பதில் சொல்லுகிறாள். அப்போது அவன், 'புயற் காற்றினால் உயரத் தூக்கிக் கொண்டு போகப்பட்ட புல்லிலை காற்றடங்கியபின் தன் யதாஸ்திதிக்கு வந்து அமர்ந்ததுபோலானேன்' என்று ஓலமிடுகிறான். அவன் விரதம் அனுஷ்டிப்பது ஏன் என்று வினவியதற்கு அவள், 'நல்ல கணவன் நேர வேண்டுமென்று' என்று மொழிந்தனள். அதற்குச் சூத்திரதாரன், 'அடுத்த ஜன்மத்தில்தானே' என்று சரஸமாகவும் சாதுர்யமாகவும் சுடச்சுடச் சொல்லுகிறான். 'அதற்கென்ன சந்தேகம்?' என்று அவள் மறுமொழி கூறுகின்றனள். அதே நாடகத்தில் விதூஷகன், 'இனிமை மிக்க மாங்கனியேயாயினும் அதன் குருவை எவனும் தின்பதில்லை' என்று கூறுகிறான். தூர்த்தனிடம் வஸந்தஸேனையைப் பற்றிச் சகரன், 'அவள் என் இதயத்தை அதன் கோசத்தோடே கொள்ளை கொண்டாள்,' என்று சொல்லுகிறான். வஸந்தசேனையின் ஆபரணங்களை இரவிற் காத்துக்கொண்டிருக்கும்படி மைத்ரேயனுக்குச் சொல்லிய போது அவன், 'ஒரு பணிப்பெண்ணை அடைவதற்குச் சங்கேதம் செய்துகொண்டிருந்த துறவிக்குத் தூக்கம் எப்படி வராதோ அப்படியே எனக்கும் தூக்கம் வராது' என்று தனக்குத்தானே சொல்லிக்கொள்கிறான்.*

'விளக்கு ஏன் மங்கலாக இருக்கிற்'தென்று சாருதத்தன் கேட்டபோது மைத்ரேயன், 'வேசியினிடத்து உள்ளன்பு இல்லாதது போலத் தீபத்திலும் எண்ணெய் இல்லை' என்று பதில் சொல்லுகிறான். வஸந்தசேனையென்னும் வேசி தன் மீது காதல் கொண்டிருக்கிறாளெனக் கேட்டபோது சாருதத்தன் 'என் ஐசுவரியமெல்லாம் களைந்துபோனபின் காதல் என்னைக் கிட்டுகின்றது. ஆகையால், அது கோழையினது கோபம்போல என் மனத்தினுள்ளேயே யடங்கிப்போக வேண்டும்' என்று சொல்லுகிறான்.

''பிரதிமா நாடக''த்தில் பரதன் சித்திரகூடத்திற்குப் போய், 'இனி ராமருக்குப் பணிவிடை செய்யும் முறை என்னுடையதாகும்' என்று சொல்லி, லக்ஷ்மணனிடமிருந்து தண்ணீர்த் தோண்டியைப் பிடுங்கிக்கொண்டு போய்த் தண்ணீர் கொண்டு வருகையிற் சீதையை நோக்கி ராமர், 'மைதிலீ! லக்ஷ்மணனுக்கு வேலை போய்விட்டது' என்று வேடிக்கையாகச் சொல்லுகிறார்; மற்றும், 'அயோத்தியில் பரதன் எனக்குப் பணிவிடை செய்யட்டும், வனத்தில் லக்ஷ்மணன் செய்யட்டும்' என்று சரஸமாகச் சொல்லுகிறார்.

''மத்தியமவியாயோக''த்தில் நர மாமிச பக்ஷணத்தில் எனக்கு நம்பிக்கை இல்லை. என் பிள்ளைகளில் எவரையும் நர மாமிச பக்ஷணத்திற்காக உனக்குக் கொடுக்கமாட்டேன் என்று பிராமணக் கிழவன் கடோத்கஜனுக்குச் சொல்லியபோது அவன், 'உங்களில் ஒருவனைத் தின்பதற்குப் பதிலாக ஐவரையும் விழுங்கிவிடுவதனால் உமது கொள்கை எங்ஙனம் காக்கப்பெறும்?' என்று கேட்கிறான்.

''பால சரிதத்''தில் நாரதர், ''நிஜபோகத்திற்குச் சுவர்க்கம் சரிப்படாது. இங்கே அமைதி அதிகமாய் இருக்கின்றது. கலகமே இல்லை. நான் பூலோகத்திற்குப் போய் கலகமெழுப்பி என் வாழ்க்கையை இன்புறச் செய்யவேண்டும். வேத சாஸ்திரங்களைப் படித்ததில் எனது நிரந்தர வீணையின் தந்திகளை நான் மீட்டிக் கலகமெழுப்ப வேண்டுமென்று தெரிகிறது'' என்று சொல்லுகிறார்.

வித்யாதரன் அதிருஸிய மோதிரத்தை அவிமாரகனுக்குக் கொடுத்து, அதை வலது கைவிரலில் அணிந்து கொண்டால் எவர் கண்ணுக்கும் அவன் புலப்படானென்றும், இடது கைவிரலில் அணிந்து கொண்டால் திரும்பப் புலப்படுவானென்றும் சொன்னான். அம்மோதிரத்தை அவ்விதம் தானே போட்டுக் கொண்டு திருஷ்டாந்தம் காட்டினான். அப்போது, 'என்னை மன்னிக்க வேண்டும், நான் போட்டுக் கொண்டால் இந்த வித்தை பலிக்கிறதாவென்று பார்க்கிறேன்' என்று

சொல்லிப் போட்டுப் பார்க்கிறான். அவனுக்கும் பலித்தது. அவன் எவரெவரைத் தொடுகிறானோ அவர்களெல்லாருங்கூட அதிருஸமாகி றார்கள். அவனது ஆப்த நண்பனான சந்துஷ்டன் என்னும் விதூஷ கனை அவன் தொட்டவுடன் அவன் கண்ணுக்குப் புலப்படாமற் போகிறான். அவனது உடலே மறைந்து போயிற்றோவென்று சந்துஷ்டன் கவலை கொள்கிறான். அவனுடைய கை இருக்கிறதாவென்று தெரியும் பொருட்டு அவனது வலதுகையில் எச்சில் துப்புகிறான்; அது இருக்க வேண்டிய இடத்தில் இருக்கக் கண்டு மனந்தேருகிறான்.

அவிமாரகனும் விதூஷகனும் பிறர் கண்ணுக்குப் புலப்படாமல் குரங்கியின் அறைக்குள் போனார்கள்; அவிமாரகன் மோதிரத்தை இடது கைவிரலில் அணிந்து கொள்கிறான். இருவரும் புலப்படு கிறார்கள்; குரங்கியின் பணிப்பெண் அறைக்குள் வந்து அவ்விருவரை யும் பார்க்கிறாள். தன் யஜமாட்டிக்காகத் தாக்ஷிண்யம் பாராட்டி அவள் அவிமாரகனைப்பற்றி ஒன்றுங் கூறாமல், விதூஷகனைக் குறித்து, இந்தப் புருஷன் யாரென்று மாத்திரம் கேட்கிறாள். 'எவ்வளவு பகுத் தறிவு! உன்னைத் தவிர வேறெவரும் என்னைப் புருஷனென்று தெரிந்து கொள்ளவில்லை, மற்றவர்களெல்லாரும் என்னைக் கிழவியென்றே தவறாகக் கருதினார்கள்' என்று விதூஷகன் சொல்லுகிறான். உடனே அவள் அவனைக் காதலுடன் கட்டியிழுத்துக்கொண்டு போகிறாள். அப்போது அவன், 'என்ன அபசாரம்' என்று கூவுகிறான்.

அந்தக் கூப்பாட்டைக் கேட்டுக் குரங்கி, 'இந்த விதூஷகன் என்ன பைத்தியக்காரக் கிழவனாய் இருக்கிறானே! மனோஹரமான யுவதியொருத்தி காதல்கொண்டு கையைப் பிடித்திழுத்தால் கூச்சற் போடுகின்றானே! என்று அவிமாரகனைக் கேட்கிறாள். அதற்கு விதூஷகன், 'தற்கொலை செய்துகொள்வதற்கிருந்த அந்தக் குரங்கி இடிச்சத்தங் கேட்டு துணை கோரியதைக் காட்டிலும் இது நகைக்கத் தக்கதன்று' என்று குத்திச் சொல்லுகிறான்.

''சாருதத்''தத்தில் ஸஜ்ஜலகனென்றும் பிராமணக் கள்வன் தன் பூணூலைப் பற்றிப் பேசும் போது, 'பகலில் இது யஜ்ஞோப வீத மாகும். இரவில் கன்னதுளையை அளந்து பார்க்கும் நூற்புரியாகும்' என்று சொல்லுகிறான். ஏனெனில், சுவர்களிற் கன்னம் வைக்கும் துளை யின் பரிமாணத்தைப் பூணூலைக் கொண்டு அவன் அளந்து பார்க் கிறான். எவ்வகைக் கன்னத்துளை அழகாக இருக்குமென்று யோசிக் கும்போது சிங்கக்காற் கவட்டிடை, அர்த்த சந்திராகாரம், பூர்ண சந்திராகாரம், யானைவாய், கோலாச்சிமீன் தாடை என்னும் இவ்வடி வங்கள் நன்றாய் இருக்கும்' என்று சொல்வதும் சித்திரமாயிருக்கின்றது.

## நிந்தா கர்ப்ப ஹாஸ்யம்

'தூத கடோத்கஜ'த்தில் கடோத்கஜனை நோக்கித் துச்சாஸனன், 'நாங்களும் ராக்ஷதரைப் போன்றவர்கள், ஆகையால் எளிதில் வெற்றி பெறலாகுமென்று நினைக்காதே' என்று சொல்லியதற்குக் கடோத் கஜன், 'இருவரில் நீங்கள் மிகக் கெட்டவர்கள். அரக்கர்கள் தம் சகோதரர் அரக்குமாளிகையில் தூங்குகையில் அவர்களைத் தீயிட்டுக் கொளுத்த மாட்டார்கள்; அண்ணன் மனைவியரை மானபங்கப் படுத்த மாட்டார்கள்; சகோதரர்களது சிசுக்களின் சாவைக் கொண்டாட மாட்டார்கள்' என்று பதில் சொல்லுகிறான்.

துர்யோதனனையும் துச்சாஸனனையும் நோக்கித் திருதராஷ் டிரன், 'நீங்களும் உங்கள் 98 தம்பிமாரும் அபிமன்யுவைக் கொன் றதனால் உங்கள் ஒரே தங்கையாகிய துச்சலைக்கு வைதவ்வியம் விளைவித்தீர்கள். கண்ணனுடைய கோபத்திற்கும் 'அர்ஜுனனுடைய கோபத்திற்கும் ஆளானீர்கள்' என்று சொல்லுகிறான். அபிமன்யு வின் சாவைக் கேட்டவுடனே திருதராஷ்டிரன், 'இனிச் சாந்தம் குடி கொள்ளும் - உலகமெல்லாம் மாண்டபின்' என்று ஓலமிட்டான். கங்கையாற்றுக்குத் தன்னுடன் வரும்படி மனைவி காந்தாரியை யழைத்தான். கங்கையில் ஸ்நானம் செய்வதற்காவென்று அவள் கேட்க,' அன்று, வாசுதேவனது சகோதரியின் மகனான அபிமன்யுவைக் கொன்ற அக்கிரம கிருத்தியத்தினால் நம்மக்கள் இருந்தும் இறந்த வர்களைப்போல் ஆனார்களாதலால் அவர்களுக்குத் தர்ப்பணஞ் செய்யும்பொருட்டுப் போகவேண்டும்' என்று திருதராஷ்டிரன் சொல்லு கிறான். அபிமன்யுவின் வதத்திற் சம்பந்தப்பட்ட ராஜகுமாரர்கள் நூற்றுவரையும் நாளைக்குள் கொல்ல அர்ஜுனன் சங்கற்பித்திருக் கிறானென்று கிருஷ்ணன் சொல்லியனுப்பிய செய்தியைக் கடோத்கஜன் போய்ச் சொல்லியபோது சகுனி, 'அது வாய்வார்த்தையினாலேயே ஆகிற காரியமா? உலகம் முழுவதையும் ஜமித்துவிடலாமே! வாய் வார்த்தையினாலேயே, வார்த்தை தவிர வேறொன்றினாலும் அல்ல வெனின் வீரர்களைக் கொன்றுவிடலாமே!' என்று குத்திச்சொல்கிறான்.

''அபிஷேக நாடக''த்தில் ஹநுமானை நோக்கி ராவணன், 'எத்தனையோ தேவர்களையெல்லாம் போரில் தோற்கடித்திருக்கிற என்னுடன் கேவலம் மானிடப் பிறப்பினனான ராமன் எங்ஙனம் எதிர்த்துச் சண்டை செய்வதற்காகும்' என்று கேட்டான். அதற்கு ஹநுமான், 'உனது பராக்கிரமத்தில் உனக்கு அவ்வளவு நம்பிக்கை இருக்குமாயின், நீ ஏன் ராமரை எதிர்த்து நேரிற் சண்டை செய்து வென்று சீதையைக் கொண்டுபோகாமல், அவரை பொன்மானைத்

தேடிச் செல்லும்படி செய்து தூரத்தில் அகற்றிவிட்டுக் கள்வனைப் போல அவளைத் தூக்கிக்கொண்டுபோவானேன்?' என்று குத்தினான்.

''யௌகந்தராயண சபதங்கள்'' என்னும் நாடகத்தில், சிறைச் சாலையில் உதயனன் சிங்காரச் சேஷ்டைகள் செய்வதைக் குறித்தும் நகை திருட்டுப் போனபின் நகைப்பெட்டியைப் பராதாரோஷகன் வெகு ஜாக்கிரதையாகக் கண்கொட்டாமற் காத்துக் கொண்டிருப்பதைக் குறித்தும், அடிமரம் அற்றுப்போனபின் கிளைகள் வாடாதிருக்கு மென்னும் அவனுடைய நம்பிக்கையைக் குறித்தும் யௌகந்தராயணர் ஹாஸ்யமாகவே மிகக்காரமாக இழித்துக் கூறுகின்றார்.

## அஜ்ஞாத ஹாஸ்யம் (நினையா நளினம்)

இவ்விதமான ஹாஸ்யமும் யதேஷ்டமாகக் காணப்படு கின்றது. உதாரணமாக, கம்பில்ய நகரத்தரசனான பிரம்மதத்தனது சரித்திரத்தைச் சொல்லுமிடத்து விதூஷகன், அரசனைக் கம்பில்ய னென்றும், நகரத்தைப் பிரம்மதத்தமென்றும் உளறுகிறான். கதை சொல்லுகிறவர்கள் பெரும்பாலார் தூக்கமயக்கமாய் இருக்கும் போதும் மனம் கலக்கமுற்றிருக்கும்போதும் இவ்வாறு குளறிப் பேசு வார்கள். அவர்களைத் திருத்தினாலும் பின்னுமவர்கள் அப்படியே திரும்பத் திரும்ப பரிகசிக்கும்படி உளறுவார்கள். வஸந்த சேனை யின்மீதுள்ள காமத்தினால் சகரன் தன் தேகம் செந்தனல்மீது வீழ்ந்த பழந்தோல் துண்டைப் போலப் பொசுங்கிப் போயிற்றென்று சொல்லு கிறான். இது மிகப் பொருத்தமான உபமானம். ஆனால், அதனி லடங்கிய ஹாஸ்ய ரஸத்தை அவன் உணரவில்லை. அது போலவே, 'ஒருவன் இறந்தபின் உயிர்த்திருப்பதில்லை' என்று அவன் சொல்லும் வார்த்தையும், 'முதலில் உன் தலையை வெட்டிப்போட்டுப் பின்பு உன்னைக் கொல்வேன்' என்று அவன் வஸந்தசேனையை அச்சுறுத்தும் வாக்கியமும் அவன் அறியாமற் சொல்லிய ஹாஸ்யக் கூற்றுகளேயாம். சிற்சில இடங்களில் அவன் ஒன்றை நினைத்து அதற்கு மாறாக அது போன்ற தொன்றைச் சொல்கிறான். இவ்வறியாப் பிழையும் வேடிக்கை யாகவே இருக்கின்றது. உதாரணமாக, ''நான், பிரேதலோகாதிபதி* யான வாசுதேவனைப் போன்றவன், அல்லது, குந்திபுத்திர** னான ஜனமே

---

* **பிரேதலோகாதிபதி:** - இவ்வடைமொழி பிரேதராஜனான யமனுக்கு உரியது. விஷ்ணுவை யமனுக்கு யமனென்பார்கள், இவ்விடத்தில் இவன் யமனுக்கு - யமனை யசுனென மயங்கி வாசுதேவனென்கிறான்.

** **குந்தி புத்திரன்:**- சரியான வார்த்தை தனஞ்செயன், அல்லது, அர்ஜுனன் என்பதாம். ஜனமேஜயனோ பரீக்ஷித்து மகாராஜனின் புத்திரன். அர்ஜுன னுடைய பேரன். குந்திக்குக் கொள்பேரன்.

ஜயனைப் போன்றவன். நான் என் கையால் உன் கூந்தலைப் பிடித்து, சீதையைத்** துச்சாஸனன் எடுத்துக் கொண்டு போனதுபோல உன்னை எடுத்துக்கொண்டு போவேன்'' என்று அவன் வஸந்தசேனைக்குச் சொல்லுகிறான்.

இந்த ஹாஸ்யத்தில் விளையாட்டல்லாமல் வினையாகக் கூடிய சில நளினங்களும் இந்நாடகங்களிற் காணப்படுகின்றன. இவை நாடகச் சிறப்புக்குரிய வக்ரோக்திகள் எனத்தகும். அபிமன்யுவை அநியாயமாகக் கொன்றதைக் குறித்துச் சினந்து துச்சலை, ''உத்தரையை விதவையாக்கினவன் தன் மனைவிக்கே வைதவ்யம் வருவித்துக் கொண்டான்'' எனக் கதறுகின்றாள். அபிமன்யுவைக் கொன்றவனோ ஜயத்ரதன்: ஆதலால், வைதவ்யம் அவளுக்கே வாய்க்கும். இங்ஙன மிருந்தும் அவள்மேற் சொல்லியவாறு கூவுகிறாள்.

ராம லக்ஷ்மணர்களுடைய பொய்த் தலைகளைச் சீதைக்குக் காட்டி ராவணன், ''இனி உன்னை விடுவிக்கத்தக்கவர் யாவர்?'' என்று கேடு கண்டுகளிக்கும் குரலோடு கேட்கின்றான். அப்போது அரக்கனொருவன் வந்து ''ராமர்'' என்கிறான். அவன் சொல்லவந்த வார்த்தை ''ராமர் இந்திரஜித்தைக் கொன்று விட்டார்'' என்பதாம். வாஸவதத்தையை கலியாணம் செய்துகொள்வதற்கு மிக்க தகுதி வாய்ந்தவன் யாவனென்று அங்காரவதி என்றும் ராணியை மகாசேன ராஜன் கேட்கையில் பாதராயணன் வந்து ''வத்ஸராஜன்'' என்கிறான்.

## ஹாஸ்யகரமான சந்தர்ப்பங்கள்

எண்ணிறந்த இடங்களில் ஹாஸ்யகரமான சந்தர்ப்பங்கள் நேர்ந்திருக்கின்றன. உதாரணமாக, ''வாஸவதத்தையின் கனவு'' என்பதில் விதூஷகன், உதயனன், வாஸவதத்தை என்னும் மூவரும் ஐந்து நிமிஷத்திற்குள், ''காஸ புஷ்பங்களின் பூந்தாது படிந்ததனாற் கண்ணீர் பெருகியது'' என்னும் அசட்டு சமாதானம் பத்மாவதிக்குச் சொல்லுகிறார்கள்.

''சாருதத்தத்''தில் வஸந்த சேனையின் தாதியாகிய மதனிகையை அடிமைத்தனத்தினின்றும் விடுவித்து அவளைக் கலியாணம் செய்து

** சீதை :- இவ்விடத்தில் இரட்டைக் குழப்பம் இருக்கின்றது. துச்சாஸனன் என்பதை ராவணன் என்றாவது மாற்றவேண்டும். அல்லது, சீதை என்பதை துரௌபதி என்றாவது மாற்ற வேண்டும். அந்நிய விஷயங்களைப் பற்றிப் பேசும் அநேகம் பௌராணிகளைப் போலக் குழப்பி இருக்கிறான்.

கொள்ளும் பொருட்டு வஸந்தசேனைக்கு ஸஜ்ஜலகன் பணங்கொடுக்க விரும்புகிறான். ஆனால், வேறு பல சந்தர்ப்பங்களின் சேர்க்கையால் அவன் சாருதத்தன் வீட்டிலிருந்து வஸந்தசேனையின் நகைகளைத் திருடிக்கொண்டுபோய்த் திகிலடைந்த மதனிகையிடம் கொடுக்கிறான். அந்நகைகளை விதூஷகனான மைத்ரேயன் என்பவன் வைத்திருந்து மறுநாள் சாருதத்தனிடம் கொடுக்க வேண்டியவன், அரைத் தூக்கத்தில் ஸஜ்ஜலகனைச் சாருதத்தனென்று தவறாக நினைத்து அவன் கையிற் கொடுக்கிறான். சாருதத்தனது மனைவியின் முத்து மாலையுடன் மைத் ரேயன் வஸந்தசேனையினிடம் அனுப்பப்படுகிறான். சாருதத்தனிடம் ஒப்பித்த வஸந்தசேனையின் நகைகளை அவன் சூதாடி ஒழித்து விட்டானென்னுங் கதையும் சொல்லப்படுகிறது. அவன் போய்ச் சேரு முன்னர், ஸஜ்ஜலகன் நகையைச் சாருதத்தன் வீட்டிலிருந்து திருடி வந்தேனென்று மதனிகையிடம் சொல்லிக்கொண்டிருந்ததை வஸந்த சேனை ஒட்டுக்கேட்டுத் தெரிந்து கொண்டிருந்தாள். மைத்ரேயன் தன் கதையை வஸந்தசேனைக்குச் சொல்லி, முத்துமாலையைக் கொடுத்த பின், சாருதத்தனது வீடு பழமைப்பட்டு இடிந்திருப்பதனால் நகை களை அங்கு வைத்திருப்பது நல்லது அன்றென்று நினைத்து அந்நகை களை வஸந்தசேனைக்குத் திருப்பிக் கொடுத்து விடும்படி அவன் அனுப்பியதாக மதனிகை கற்பனை செய்த கதையை ஸஜ்ஜலகன் வஸந்தசேனையிடம் போய்ச் சொல்லுகிறான்.

''அவிமாரகத்''தில், தன் காதலனாகிய அவிமாரகனுடைய பிரிவாற்றாமல் தீவிர விரகநோய் கொண்டு தற்கொலை செய்துகொள்ள நினைத்து அவள் தன் சேலையின் நுனியைக் கழுத்திற்சுற்றிச் சுறுக் கிட்டுத் தூக்கிட்டுத் தொங்குந் தருணத்தில் இடிமுழக்கங்கேட்டுப் பயப்பட்டு யாராவது துணைக்கு வாருங்களென்று கூச்சலிட்டுக் கொண்டு கீழே விழுகிறாள்.

''மத்தியமவியாயோகத்''தில், கடோத்கஜன் தன் தகப்பனார் பீமனென்று சொல்லியது கேட்டுப் பீமன், 'பீமனென்பவன் கிருஷ் ணனைப் போல் இருப்பனா?, சிவனைப் போல் இருப்பனா?, இந்தி ரனைப்போல் இருப்பனா?, யமனைப்போல் இருப்பனா?' என்று வினவுகிறான். 'அவர்களெல்லாரையும் போல் இருப்பான். அவர்களிலும் மேலாய் இருப்பான்' என்று கடோத்கஜன் மறுமொழி கூறுகிறான். அது பொய்யென்று பீமன் சொல்ல, கடோத்கஜன் பெரிய மரமொன்றை வேரோடு பிடுங்கிச் சுழற்றி பீமன்மீது எறிகிறான்; மற்றும், ஒரு மலைச்சிகரத்தைப் பிடுங்கி வீசுகிறான். கடோத்கஜனை நோக்கி பீமன், 'நீ என்னை போர்புரிந்து பலாத்காரமாக வெல்லலாம், இல்லை யெனின் நயந்து பலவந்தம் செய்யாமற் போர்புரியாமல நின்று வெல்ல லாம்' என்று சொல்லுகிறான். கடோத்கஜன் முதலில் தன் பராக்

கிரமத்தினால் வெல்லப் பார்க்கிறான்; அது முடியாமற் போகவே கையோய்ந்து சும்மா நின்று பீமனை ஹிடும்பியிடம் அழைத்துக் கொண்டு போனான்.

சாருதத்தன் வீட்டிற்குப்போய் வஸந்தசேனை அடைக்கலம் புகுந்ததனாற் கோபங்கொண்டு, தூர்த்தனான சகரன் என்பவன் மரீஷையின் மூலமாகச் சாருதத்தனுக்கு வர்த்தமானம் சொல்லியனுப்பு கிறான். 'நாளைக் காலைக்குள்ளாக வஸந்தசேனையைத் திருப்பி யனுப்பிவிடவேண்டும். அங்ஙனம் செய்யாவிட்டால், அடிமை மகனே! மணிப்புறாவானது வெள்ளைப்பூண்டை நொறுக்குவதுபோல உன் மண்டையை நொறுக்கிவிடுவேன், இரட்டைக் கதவின் இடையில் அகப்பட்டுக் கொண்ட முலாம் பழத்தைப்போல, உன் தலையை மென்று நசுக்கி முத்தையாக்கி விடுவேன்.' இந்த உக்கிரமான வர்த்த மானத்தைச் சொல்லியவுடன் விதூஷகனான மைத்ரேயன் என் பவன் இருளில் அவன்மீது தீபத்தைப் பளீரென வீசுகிறான். அவன் பயப்பட்டு, தனது தூர்த்த நண்பன் போய்விட்டானென்று தெரிந்து, சரேலென ஓடிப்போகிறான்.

''தூதவாக்கிய''த்தில் குருவாகிய துரோணாசாரியரும் பாட்ட னாராகிய பீஷ்மரும், மாமனாகிய சகுனியும் ஒருமித்து வந்தபோது துர்யோதனன் துரோணருக்குக் கூர்மாசனமும், பீஷ்மருக்குச் சிம் மாசமும், சகுனிக்குச் சர்மாசனமும் அளிக்கிறான். கூர்மத்தைப் போலத் துரோணர் தம்புலன்களை உள்ளடக்கிக் கொள்ளவல்லார், சிங்கத்தைப் போலப் பீஷ்மர் பராக்கிரமம் காட்டவல்லார். காற்செருப்பு கடிப்பது போலச் சகுனி உள்ளிருந்து தந்திரங்கள் செய்து பெருங்கேடு விளைவிக்கவல்லான் என்பது அவ்வேறு வேறு ஆசனங்களினாற் குறிக்கப்படும் பொருளாம்.

கிருஷ்ணன் வருகிறாரென்று அறிக்கையிட்டவுடனே அவரைக் கம்ஸனது கிங்கரரென்று சொல்லி, தர்பாரில் உட்கார்ந் திருந்தவர்களை நோக்கி, 'கிருஷ்ணன் வந்தால் நீங்கள் எவரும் எழுந்துநின்று மரியாதை செய்யக்கூடாது, எவரேனும் எழுந்தால் 12 பொற்பணம் அபராதம் விதிப்பேன்' என்று அச்சுறுத்தினான். இங்ஙனம் அவர்களை அச்சுறுத்தியபின் அவன் மறுபுறம் திரும்பித் தனக்குத் தானே, 'நான் எழுந்து நில்லாமல் தவிர்ப்பது எங்ஙனம்?' என்று வினவிக்கொள்கிறான். தனக்குத் தைரியம் தந்து கொள்ளும் பொருட்டு அவன், கூந்தலைப் பிடித்திழுத்துக் கொண்டு வரப்படும் துரௌபதியின் சித்திரத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறான். கிருஷ்ணன்

வந்தவுடன் சபையினரெல்லாரும் எழுந்து நிற்கவே அவன் கலக்க முற்றுத் தடுமாறி ஆசனத்தினின்று கீழே விழுகிறான்!

துர்யோதனன் தன்னை மானபங்கப்படுத்தப் போகிறானென்று நினைத்துக் கிருஷ்ணன் தன் தெய்விகமான பஞ்சாயுதங்களை அழைத்த போது சக்கரமாகிய சுதர்சனம் தோன்றி, 'தேவரீர் என்னை என்ன செய்யச் சொல்கிறீர்? மலைகளைப் பெயர்த்துத் தள்ளட்டுமா?, கடல் களை வாட்டட்டுமா?, நக்ஷத்திரங்களைக் கீழே வீசி எறியட்டுமா? என்று கேட்கின்றது'. துர்யோதனனைக் கொல்லவேண்டுமென்று கிருஷ்ணன் பதில் சொல்லியவுடனே, தனக்கு இட்டவேலையின் அற்பத்தனத்தை எண்ணிச் சுதர்ஸனம், 'இவ்வாறு இப்பாபி மடிவா னாயின், துஷ்டர்களையெல்லாம் நிக்கிரகவிபதற்காகத் தாங்கள் பூமியில் அவதரித்த சிரமமெல்லாம் வீணாய்ப்போமே. அவர்களெல் லாரும் அழிவுறாமல் மீந்து நிற்பார்களே; ஏனெனில் அவர்கள் பின்பற்றி நடப்பதற்கு நாயகன் இல்லாமற் போவான்' என்று சாற்றியது. அதன்மீது, சுதர்சனன் முதலான ஆயுதங்களையெல் லாம் திரும்பிப் போகும்படி கிருஷ்ணன் கட்டளையிட, அவை அங்ஙனமே மறைந்து போயின.

''பால சரித''த்தில் அரிஷ்ட விருஷபம் என்னும் எருது எல்லாருக்கும் திகிலெழுப்பிக்கொண்டிருந்தது; ஆனால், கிருஷ்ணன் என்னும் குழந்தை மாத்திரம் சிறிதும் அஞ்சாதிருந்தது. கிருஷ்ணனைப் பார்த்து அவ்வெருது, 'என்னைப் பார்த்து உனக்கு அச்சமுண்டாக வில்லையா?' என வினவியது. 'மானிட மனத்தினின்றும் அச்சத்தை ஒழிப்பதற்காகவே நான் பூலோகத்திற்கு வந்திருக்கிறேன். மூட மிருகமே எனக்குப் பயம் பிடிக்குமோ?' என்று கிருஷ்ணன் கூறினான். 'அங்ஙனமாயின் உன் ஆயுதங்களைக் கைக்கொண்டு என்னுடன் சண் டைக்கு வா' என்று எருது கூறியது. 'ஆயுதங்கள் அவசியமில்லை. இக்கரங்களே போதும். அதுவல்லாமல் நான் ஒற்றைக்காலில் நிற் கிறேன், உன்னால் முடியுமானால் என்னை முட்டிக் கீழே தள்ளி விடு' என்று கிருஷ்ணன் எதிர் மொழிந்தான். எருது கிருஷ்ணனை முட்டியது. ஆனால் அதன் சக்தி போதாதாயிற்று; எதிர்த்தாக்கம் தாளாமல் அது தத்தித் தடுமாறி விழுந்து இறந்தது.

''கம்ஸன் பெரிய அரசன். அவனுக்கு வந்தனம் செய்யும்'' என்று கிருஷ்ணனுக்குச் சொல்லியபோது, 'எதற்குப் பெரிய அரசன்? அவனுக்கு விதியாயுள்ள வெறுமைக்கா அரசன்?' என்று கிருஷ்ணன் மறுத்துக்கேட்டார்.

ஹாஸ்ய சந்தர்ப்பங்களுள் மிகவும் விநோதமானதொன்று ''கர்ணபரம்'' என்னும் நாடகத்தில் வருகின்றது. பிராமணவேஷம் பூண்ட இந்திரன், கர்ணனண்டை போய் பெருங்கொடையொன்று வேண்டுகிறான். கர்ணன் அவனுக்கு நமஸ்காரம் பண்ணுகிறான். அங்ஙனம் நமஸ்காரம் செய்தவனுக்கு 'நீடூழிவாழி' என்று பெரியார் ஆசீர்வாதம் செய்ய வேண்டும். அவ்வாறு ஆசீர்வதித்தால் தேவதை யாகிய இந்திரனுடைய வாக்கு பலிக்கும். அது பலிப்பதானால் இந்திரன் வந்த உத்தேசம் நிறைவேறாமற் பங்கமாய்ப் போகும். ஆனதனால் அவ்வாறு ஆசி கூறாமல் இந்திரன், 'கர்ணா! ஹிமயபர்வதத்தையும் சமுத்திரத்தையும் போல உன் கீர்த்தி ஆசந்திரார்க்கம் சாசுவதமாய் விளங்குமாக!' என்று வாழ்த்துகிறான்.

அப்போது கர்ணன் அவனுக்கு ஓராயிரம் கோக்கள் கொடுப்ப தாகச் சொல்லுகிறான். 'நான் பால் குடிப்பதில்லை. ஆகையால் எனக்குப் பசுக்கள் வேண்டாம்' என்று பிராமணன் சொல்லுகிறான். உத்தமமான போர்க்குதிரைகள் எத்தனை ஆயிரம் வேண்டுமானாலும் கொடுக்கிறேன் என்கிறான் கர்ணன். 'நான் சவாரி செய்வதில்லை. எனக்குப் போர்க்குதிரைகள் ஏன்?' என்கிறான் பிராமணன். அதற்குமேல் கர்ணன் சிறந்த யானைகளில் ஒரு மந்தை, கொடுப்பதாகச் சொல்லு கிறான். அதற்குப் பிராமணன், 'நான் யானை ஏறிச் செல்வதில்லை. அவை எனக்கு என்ன பிரயோஜனம்?' என்று பதில் மொழிகிறான். வேண்டியவளவு பொன் கொடுக்கிறேனென்று கர்ணன் கூறுகின்றான். அதற்கு இசைவதாகப் பிராமணன் பாசாங்கு செய்து பின்னர், 'எனக்குப் பொன் வேண்டாம்' என்கிறான். அதன்மீது கர்ணன், 'உலகம் முழு வதையும் ஜயித்து உமக்கு அளிக்கின்றேன்' என்று சொல்ல, 'ஆளுந் திறமை இல்லாத பார்ப்பனனுக்கு அவனியின் ஆட்சி என்ன பயன் படும்' என்று பிராமணன் அதையும் மறுக்கின்றான். பின்பு கர்ணன் தான் செய்துள்ள ஓமங்களின் பயனையும் யாகங்களின் பயனையும் பிராமணனுக்குத் தாரை வார்ப்பதாகக் கூறுகிறான். 'நான் வேண்டிய மட்டும் யாகாதிகள் செய்துள்ளேன். ஆதலால் உனது யாகபலன் எனக்கு வேண்டாம்' என்று பிராமணன் மொழிகின்றான்.

குழப்பமுற்ற கர்ணன், 'என் தலையைக் கொடுக்கிறேன், எடுத்துக்கொள்ளும்' என்று முடிவாகச் சொல்லவே, பிராமணன் நடுங்கி கூச்சலிட்டு 'அ॰!' என்கிறான். பின்பு கர்ணன் மன்னிப்பு வேண்டிக்கொண்டு, தனக்கு அருமையாயுள்ள தன் கவசம், கர்ண குண்டலமாகிய இவைகளைத் தருவேன் என்கிறான். 'அவைகளைக் கொடு' என்று பிராமணன் கேட்கிறான்.

மற்றோர் உதாரணம் யாதெனில், பாண்டவருள் ஒருவரை நிச்சயமாகக் கொல்லத்தக்க ஈட்டியைக் கர்ணனுக்கு அளிப்பதாம். கர்ணனும் உலகத்தோரும் எண்ணிக்கொண்டிருந்தபடி அவ்வீட்டில் பஞ்சபாண்டவரில் ஒருவரைக் கொல்லாமல் பாண்டவ வமிசத்தவ னெனத்தக்க பீமனுக்குப் பிறந்த ராக்ஷசபுத்திரனான கடோத்கஜனைக் கொல்கின்றது.

''பிரதிமா நாடக''த்தில் ரதசாரதியை நோக்கிப் பரதன், 'என் தகப்பனாருக்கு என்ன வியாதி?' என்று கேட்கிறான். உள்ளதை உரைக்க மனமில்லாத ரதசாரதி, 'உள்ளத்துப் பெருநோய்' என்று கூறுகின்றான். 'வைத்தியர்கள் என்ன சொல்கிறார்கள்' என்று பரதன் கேட்க, 'இதற்குச் சிகிச்சை ஒன்றுந் தோன்றாமல் அவர்கள் திகைக்கிறார் கள்' என்று சாரதி மறுமொழி கூறுகின்றான்.

அதே நாடகத்தில் சித்திராலங்காரஞ் செய்யும் வேலைக்காரன் அதிகாலையிலெழுந்து சிற்பச் சிலா சாலைக்குப் போய்த் தன் வேலை களையெல்லாம் முடித்துவிட்டுப் படுத்து உறங்குகிறான். அப்போது படையினனான அற்பபதாதியொருவன் அவனை அடிமேல் அடி அடிக்கிறான். அவன் தன் வேலைகளையெல்லாம் முடித்துவிட்டே னென்று சொல்லியதைக் கேட்டபின், வெறும் வாக்குபசாரமாக மன் னிப்பு வேண்டுகிறான். இஃது இந்தியாவிற் சாமானியமாக நடக்கும் விவகாரத்தைக் குறிப்பதாகும். போரில் தோல்வியுற்ற தளகர்த்தனை ஓர் அரசன் அடித்துக் கொன்றானென்று சொல்லுவார்கள்.

''அவிமாரக''த்தில் குரங்கியின் அந்தபுரத்தில் சௌவீரத்து இளவரசனை ஒளித்து வைத்திருக்கும்போது, குரங்கியின் தகப்ப னான குந்திபோஜனும், அவிமாரகனுடைய தந்தை சௌவீரத்தரச னும், நாரதமாமுனிவரும் இவ்வாறு பேசிக்கொள்கிறார்கள்:-

**குந்திபோஜன்** - சுவாமி! சௌவீரத்து இளவரசன் உயிரோடிருக்கிறானா?

**நாரதர்** - ஆம். உயிரோடிருக்கிறான்.

**சௌவீரன்** - அவன் ஏன் அகப்படுவதில்லை?

**நாரதர்** - அவன் முதல்மண மாதத்து ஆனந்தானுபவத்தில் அமர்ந் திருப்பதனாலே.

**சௌவீரன்** - என்ன, இளவரசனுக்குக் கலியாணமாகி விட்டதா?

**குந்திபோஜன்** - எவ்விடத்தில்?

**நாரதர்** - வைரந்த்ய நகரத்தில்.

**குந்திபோஜன்** - வைரந்த்யம் என்னுமொரு வேறு பட்டணம் உளதோ? நல்லது, அவன் யாருடைய மருமகன்.

**நாரதர்** - குந்திபோஜனுடைய மருமகன்.

**குந்திபோஜன்** - யார் அந்த குந்திபோஜன்?

**நாரதர்** - குரங்கியின் தகப்பன்.

திரும்பவும், ''அவிமாரக''த்தில் கீழ்க்கண்ட இனிமையான காட்சி காண்கின்றது.

**சந்திரிகைஎன்னும் பணிப்பெண் :** ஓ, கௌமதிகா! ஒரு பிராமணனைக் கண்டுபிடித்தாயா? என்ன சொல்லுகிறாய்? இன்னுமா இல்லை?

**விதூஷகன் :** என்ன அது, சந்திரிகா?

**பணிப்பெண் :** ஐயா, நான் ஒரு பிராமணனைத் தேடிக் கொண்டிருக்கிறேன்.

**விதூஷகன் :** பிராமணனை எதற்காகத் தேடுகிறாய்?

**பணிப்பெண் :** எதற்காகவென்று நினைக்கிறாய்? சாப்பாட்டுக்கு அழைப்பதற்குத்தான்.

**விதூஷகன் :** ஆனால், நான் யார், அம்மா, நான் பௌத்த பிக்ஷுவா?

**பணிப்பெண் :** ஆனால், உனக்குச் சாஸ்திரம் தெரியாது.

**விதூஷகன் :** எனக்குச் சாஸ்திரம் தெரியாதென்று நீ எப்படித் துணிவாகச் சொல்லுவாய்? சொல்லுகிறேன் கேள்? ''ராமாயணம்'' என்று ஒரு நாடக கிரந்தம் இருக்கின்றது. ஒரு வருஷத்திற்குள்ளாக அதில் ஐந்து சுலோகங்கள் வரப்படுத்தினேன்.

**பணிப்பெண்:** நீ பரம்பரையாகவே நல்லவித்வானாய் இருக்கவேண்டும்.

**விதூஷகன் :** சுலோகங்களை வரப்படுத்தினதேயல்லாமல், அவற்றின் அர்த்தமும் எனக்குத் தெரியும். அன்றியும், எனக்குப் படிக்கவும் தெரியும் அர்த்தம் பண்ணிக்கொள்ளவும் தெரியும். இரண்டும் தெரிந்த பிராமணர்கள் அரியர் என்பது உனக்குத் தெரியுமே.

**பணிப்பெண் :** அப்படியானால் இந்த வார்த்தையை எனக்குப் படித்துச் சொல் (ஒரு முத்திரை மோதிரத்தைக் காட்டுகிறாள்).

**விதூஷகன் :** (தனக்குத்தானே) அது என்னவென்று எனக்குத் தெரியவே தெரியாது. என்ன சொல்லட்டும்? (ஆலோசித்துக்கொண்டு) சரி, எனக்குத் தெரிந்தவிட்டது. (உரக்க) இந்த வார்த்தை என் புத்தகத்தில் இல்லை, அம்மா.

**பணிப்பெண் :** இதை நீ படிக்க முடியாவிட்டால், புக்த தஹிணைப் பொன் இல்லாமலே நீ புசிக்க வேண்டும்.

**விதூஷகன் :** நல்லது, அப்படியேயாகட்டும்.

**பணிப்பெண் :** உன் கைமோதிரத்தை நான் பார்க்கலாமா?

**விதூஷகன் :** நல்லது, இதைப்பார்: இது ஓர் அழகான வஸ்து.

**பணிப்பெண் :** (அதை வாங்கிக்கொள்கிறாள்) ஓ இதோ நமது ராஜ குமாரன் இவ்வழி வருகின்றான்.

**விதூஷகன் :** (சுற்றித் திரும்பி உற்றுப்பார்த்து) எங்கே? மகாராஜர் எங்கே?

**பணிப்பெண் :** (தனக்குத்தானே). இந்த அசட்டுப் பிராமணனை நான் ஏமாற்றிவிட்டேன். இப்போது நான் ஜனக்கூட்டத்திற் கலந்து, சௌக்கில் இவனை விட்டு நழுவியோடிப் போவேன். (போகிறாள்)

**விதூஷகன் :** (சுற்றமுற்றும் பார்த்து) சந்த்ரிகா! சந்த்ரிகா! அவள் எங்குப் போய்விட்டாள்? என் பொருள் திருடுப் போய்விட்டது. அவள் இன்னாளென்று எனக்குத் தெரியும், துப்புக்கெட்ட முடிச்

சவிழ்க்கி, அந்தச் சாப்பாட்டை நம்பி ஏமாந்து போனேன். (சுற்றி நடந்து கொண்டு) இப்பொழுது நினைத்துப் பார்த்தால் அந்தச் சாப்பாடென்பது ஏமாற்ற வார்த்தையாயிருக்க வேண் டும். (எதிரே நோக்கி) ஓ! அதோ அவள் ஓடிப்போய்க் கொண் டிருக்கிறாள். நில்லு, நில்லு, ஏ! தட்டுவாணி, நில்லு. நில்லு என்கிறேனே ஓடுவாளா? அப்படியானால் நானும் ஓடுவேன். (ஓடுகிறான்) கனவில் யானையினால் துரத்தப்பட்டவ னுடைய கால்போல என் பாதம் இதே இடத்தில் ஒட்டிக் கொள்கின்றதே. நாசமாய்ப்போக, இந்தச் சிறுக்கியின் நட வடிக்கையைப் பற்றி அரச குமாரனிடம் சொல்வேன். (போகிறான்)

''பஞ்சராத்திர''த்தில், பாண்டவர்களை ஐந்து தினங்களுக் குள் கண்டுபிடிப்பது சந்தேகமென்று சகுனி நினைக்கிறான். அர்ஜுன னுடைய பெயர் பதிந்த அவனுடையஅம்பை, சத்ரு யாவனென்று கண்டுபிடிப்பதற்காக, பீஷ்மரிடம் கொடுத்தபோது அவர், ஹாஸ்ய ரஸம் தொனிக்க, 'எனக்கு வயது முதிர்ச்சியால் கண் பார்வை மங்கி யிருக்கின்றது, இதை நீ படித்துப்பார்' என்று சொல்லிச் சகுனியின் கையிற் கொடுத்தார். திகைப்புற்ற சகுனி அதனில் 'அர்ஜுனன்' என்னும் பெயரைப் படித்துப் பார்த்தவுடனே திடுக்கிடுகிறான்.

## 2. வீரரஸம்

இந்த ரஸம், யுத்தவீரம், தர்மவீரம், தயாவீரம் என மூவகைப் படும். யுத்த வீரரஸம் இந்நாடகங்கள் பலவற்றிற் காணப்படுகின்றது. உதாரணமாக ராம ராவண யுத்தம், துர்யோதன பீம யுத்தம், அபிமன்யு விராடர்கள் யுத்தம், உதயன மகாசேன படர்கள் (யானைக்காட்டில்) யுத்தம் ஆகிய இவைகளைக் காண்க. பிரபலமான வேறு இரண்டு உதாரணங் கள் யுத்த வீரத்திற்குச் சொல்லலாம். சீதையை ராவணன் தூக்கிக் கொண்டு போவதைக் கண்டு ஜடாயு, அவனுடைய பெரு வலியைப் பாராட்டாமலும், அவன் கையால் தான் சாவது உறுதி என்பதை எண்ணாமலும், 'நான் உயிரோடிருக்குமளவும் இந்த அநியாயத்தைக் கண்டு பொறுக்க மாட்டேன்' என்று சொல்லி அவன் மீது பாய்ந்தது. பராக்கிரமம் வாய்ந்த அப்பறவையின் சிறகுகளிரண்டையும் சேதித் தெறிகிறான், பறவை காயப்பட்டுக் கீழே விழுகின்றது. மற்றோர் உதா ரணம் வருமாறு: கடோத்கஜனைப் பார்த்துக் கௌரவர், 'நீ தூதுவனான

மையின் உன்னைக் கொல்லாமல் விட்டோம். ஆரிய யுத்த தர்மத்தின் படி தூதுவனைக் கொல்லலாகாது' என்று மொழிந்தனர். அதற்குக் கடோத்கஜன், 'அங்ஙனமாயின் நான் தூதத்தன்மையைத் துறக்கின் றேன். என்னோடு போர்புரிந்து பார்' என்று சொன்னான்.

தமது தந்தையார் கைகேயிக்குக் கொடுத்தவார்த்தையைக் காப்பதற்கு அனுகூலமாக ஸ்ரீராமர் முன்பின் பாராமல் ராஜ்யத்தைத் துறந்து, பிதுருவாக்கிய பரிபாலனம் என்னும் தர்மத்தைக் கடைப் பிடித்துக் காட்டுக்குப் போனதில் தர்மவீரம் முதன்மையாக விளங்கு கின்றது. உண்மையில், பாஸகவி சிரத்தை மிகுந்த ஹிந்துவாவன்; வேதத்திற் சொல்லிய நான்கு கட்டளைகளையும் பற்றி நான்கு நாட கங்கள் எழுதினான். அக்கட்டளைகளாவன: மாத்ரு தேவோ பவ; பித்ரு தேவோ பவ; ஆசார்ய தேவோ பவ; அதிதி தேவோ பவ. ''பிரதிமா'' என்பது ஒரு தர்ம வீரத்தைக் காட்டும் நாடகம். இதனில் ராமர் தன் தந்தையைக்கடவுளாகப் பாவித்து நடக்கின்றார். ''மத்தியம வியாயோகம்'' என்பது வேறொரு தர்ம வீரத்தைக் காட்டும் நாடகம். இதனில் கடோத் கஜன் தன் தாயாரைத் தெய்வமாகப் பாவித்து நடக்கின்றான்; அவன் தனக்குச் சம்மதமில்லாவிடினும் அவளுடைய கட்டளைக்குக் கீழ்ப் படிந்து அவள் தின்பதற்கு ஒரு நரனைக் கொண்டுவருகிறான். ''பஞ்ச ராத்ரம்'' என்பது மற்றொரு தர்மவீரத்தைக் காட்டும் நாடகம். இதனில் துர்யோதனன் தனது குருவாகிய துரோணரைத் தெய்வமாகப் பாவித்து நடக்கின்றான்; ஐந்து தினங்களிற் பாண்டவரைக் கண்டுபிடித்தால் தன் ராஜ்யத்தின் பாதி கொடுப்பேனென்று சொல்லி அந்த வார்த்தை யைக் காப்பாற்றுகிறான். ''சாருதத்தம்'' என்பது இன்னுமொரு தர்ம வீரத்தைக் காட்டும் நாடகமாம். இதனில் சாருதத்தன், சகரனுக்குக் கோபம் வரும், அதனால் தனக்கு அழிவு நேரும் என்று தெரிந்திருந்தும் தன்னை வந்து அடைக்கலம் புகுந்த வஸந்தசேனை என்னும் அதிதியை ஆதரிக்கின்றான்.

''பஞ்சராத்திர''த்தில் தயாவீரம் விளங்குகின்றது. இதில் துரோணர் கௌரவர்மீது இரக்கத்தினாலும் அவர்கள் அழியாமற் காக்க வேண்டுமென்னும் விருப்பத்தினாலும் துர்யோதனன் செய்யும் யாகத் தில் பாண்டவர்களுக்காக பாதி ராஜ்யம் தானம் கொடுக்க வேண்டு மென்று, மகாபாரத யுத்தத்தைத் தவிர்க்கும் பொருட்டு, கேட்கின்றார். பின்னர் நாளடைவில் அந்த மகாபாரத யுத்தமே கௌரவகுலத்தை அழித்தது. ''கர்ணபாரத்தில்'' கர்ணனும் தயாவீரம் காட்டுகின்றான்.

## 3. அத்புதரஸம்

இந்நாடகங்களிற் பல இடங்களில் அத்புத ரஸம் தோன்று கின்றது. உதாரணங்கள் வருமாறு: 'அவிமாரக'னுக்கு வித்யாதரன் மறைப்பு மோதிரம் கொடுத்தது; ''தூதவாக்கிய''த்தில் கிருஷ்ணனைத் துர்யோதனன் சுருக்குப் போட்டுப் பிடிக்க முயன்றபோது கிருஷ்ணன் தன் தேகத்தைச் சுருக்குக்குள் அகப்படாதபடி பெரிதாக்கிக் கொண் டதும், கயிற்றுச் சுருக்கை அவன் அகலமாக்கியபோது அவர் அனுப் பிரமாணமாகி அதற்குள் நழுவித் தப்பியதும்; பஞ்சதேவாயுதங்கள் தோன்றியதும்; இவைகளினால் துர்யோதனனுக்கு ஆச்சரியமுண் டானது, ''பாலசரித''த்தில் கம்ஸனுடைய அறையில் சாபமும், நல்ல திருஷ்டமும் இரண்டும் மானிடவடிவாக வந்து தோன்றியது; கம்ஸ னுடைய சிற்றின்பப் பிரியமானது கடைச்சாதிப் பெண்களாக உருவகப் படுத்தப் பெறுகின்றன. அவை தம்மை மணக்கும்படி அவனை வேண்டுகின்றன. அப்போது அவன், ''நான் யமனுக்கு யமனாயிருப் பவன், பயத்திற்குப் பயமூட்டவல்லேன், ஆனால், ஐயோ! இந்தப் பெண்களின் மீதுள்ள காமம் என்னைப் பின்பற்றி வருத்துகின்றதே' என்று ஆச்சரியப்பட்டுக் கூவுவது; கிருஷ்ணனுடைய தேகம் பளீரிட்டு ஒளித்து வசுதேவருக்கு வழிகாட்டுதல்; வசுதேவருக்கு வழிவிடும் பொருட்டு யமுனாநதி இரண்டாகப் பிரிந்து நின்றது; கிருஷ்ண சிசுவை வாங்கிக்கொள்ளுமுன் நந்தகோபன் மண்ணினால் உடம்பைத் தேய்த்துக் கொண்டபோது பாவனார்த்தமாகப் புண்ணிய தீர்த்தவூற்று தோன்றி அவன்மீது நீர் பொழிந்தது; நந்தனுடைய பெண் குழந்தை யைக் கம்ஸன் பாறையில் வீசியடித்தபோது, அங்ஙனம் இறந்த குழந்தை உயிர்த்துத் தன் பரிவாங்களுடன் காத்தியாயணியாக விண்ணிற் கிளம்பியது; நந்தகோபனும் வசுதேவனும் தாளமுடியாத வாறு கிருஷ்ணனுடைய தேகம் கனத்துப் போனது; பூதனையையும், சகடாசுரனையும், அரிஷ்ட ரிஷபத் தையும், கலியனையும் கிருஷ்ணன் கொன்றது; இரண்டு மரங்களையும் வேரோடு பிடுங்கியது; வத்ஸ ராஜனைக் கொல்லவந்த கொலைகாரப் படைவீரன் கால்சறுக்கி விழுந்தது; ராமர் செல்வதற்காகச் சமுத்திரம் இடைவழிவிட்டு விலகி நின்றது.

மந்திர சக்தியைப் பிரசித்தமான மூன்று வகைகளிலும் பாஸகவி கையாண்டிருக்கிறானென்று தெரிகிறது வஸ்துவின் மாயம் ''அவி மாரக''த்தில் உபயோகிக்கப்படுகிற மறைப்பு மோதிரத்திற் காணப் படுகின்றது. ''யௌகந்தராயண''த்தில் ஆடையின் ரூபம் மாறுவதனாலும் தெரிகின்றது. ''பாலசரித''த்திலும் ''அவிமாரக''த்திலும் இடப்படும்

சாபங்களினால் இரண்டாம் வகைமாயம் விளக்கப்படுகின்றது. ''தூதவாக்கிய''த்திற் சொல்லப்படுகிற உருவுதடத்தினாலும், ''பிரதிமா'' நாடகத்தில் இடிமுழக்கத்தினாலும் பொன் மானினாலும் மூன்றாம் வகை மாயம் காட்டப்படுகின்றது.

## 4. ரௌத்ரரஸம் (கோபம்)

பரதன் தன் தாயார் கைகேயியை நோக்கி 'நீ என் தாய்மார் களுள் சேர்ந்து விளங்கவில்லை, கங்கைக்கும் யமுனைக்கும் இடையி லுள்ளதோர் மலின நீரோடையைப் போலிருக்கின்றாய்' என்பதில் ரௌத்ரம் விளங்குகின்றது; அபிஷேக தீர்த்தத்தை வாங்கிக் கொள்ளும் படி வசிஷ்ட வாமதேவாதி முனிவர்கள் பரதனைக் கேட்டபோது அவன், கைகேயிக்குப் புரோக்ஷித்து அவளை அபிஷேகம் செய்யும்படி சொல்லியது; கைகேயியை நோக்கிப் பரதன், 'உன்னை மருமகளாகப் பெற்றதனால், இக்ஷ்வாகு குலத்திற்கு, அரக்கனால் தூக்கிக்கொண்டு போகப்பட்ட சீதையென்னும் மற்றொரு மருமகளும் வாய்த்தனள்' என்றது; துர்யோதனனைப் பீமன் போர்முறை மீறி அக்கிரமமாக அடித்ததைக் கண்டு அசுவத்தாமன் கோபித்து, பாண்டவர்களைக் கொன்று துர்ஜயனுக்கு ராஜ்ய பட்டாபிஷேகம் செய்வேனென்று சபதம் செய்தது; துர்யோதனன் யாகஞ்செய்த காலத்தில் பாண்டவர்களுக்காகப் பாதி இராஜ்யம் தனக்குத் தானம் செய்யும்படி துரோணர் கேட்டது, அவரைச் சகுனி வைதிகவஞ்சகனென்று நிந்தித்தது ஆகிய இவற்றிலும் ரௌத்ரம் காணப்படுகின்றது.

## 5. கருணாரஸம் (இரக்கம்)

வாஸவதத்தையும் குரங்கியும் தம் கணவருடைய பிரிவாற் றாமல் துக்கித்தல்; வாஸவதத்தையை விட்டுப் பிரிந்ததனால் உதயனன் உறும் துயரம்; பெற்றோர்க்கு நமஸ்காரம் செய்யமுடியாமையையும், துர்ஜயனை எடுத்து மடியில் வைத்துக்கொள்ள முடியாமையையும் நினைத்துத் துர்யோதனன் விசனப்படுதல்; ''இந்த யுத்தத்தின் உச்ச நிலையில் என் மனத்தில் கொடுந்துயரே குடிகொண்டிருக்கின்றது. காலம் வந்திருக்கிறவனுக்கு மங்களம்'' என்று கர்ணன் சாற்றியது; ராமரை விட்டுப் பிரிந்து தசரதர் படுந்துன்பம்; சீதை தன்னுடைய நிலைமையை, ராமர் கேட்டு இடிந்து போகாதிருக்குமாறு, அவருக்கு எடுத்துச்சொல்லும் படி ஹநுமானைக் கேட்டுக் கொள்ளல்; ராம லக்ஷ்மணர்களுடைய பொய்த்தலையைச் சீதா தேவிக்கு ராவணன் காட்டியபோது, அவர் களைத் துண்டித்த கத்தியினாலேயே தன்னையும் கொல்லும்படி அவள்

ராவணனை வேண்டல். சீதாதேவி ஸ்ரீராமரைப் பார்க்க விரும்புகிறா ளென்று லக்ஷ்மணனும் விபீஷணனும் சொல்லியபோது ஸ்ரீராமர், பிறர் மனையில் இருந்ததனாற் களங்கமுற்ற சீதையைப் பார்க்க மாட்டே னென்று அவர்களுக்கு சொல்லியதும்; தீக்குளிக்க சீதாதேவி அனுமதி வேண்டலும், ஸ்ரீராமர் அனுமதியளித்தலும், அதன்மீது சீதா தேவி தீக்குளித்தலும் என்னும் இவ்விடங்களில் கருணாரஸம் ததும்பு கின்றது.

## 6. பயானகம் (திகில்)

பயானக ரஸத்திற்குச் சில உதாரணங்கள் சொல்வோம். பொன்மானைத் தேடி ஸ்ரீராமர் புறப்பட்டுப் போனபின், ராவணன் தன் ராக்ஷச வடிவத்தை சீதைக்குக் காட்டல்; இந்திரஜித்து மரித்தா னெனக் கேட்டு ராவணன், ''இவ்வளவு கேட்டுக்கும் காரணமாயுள்ள சீதையினால் எனக்கென்ன பிரயோஜனம்! அவள் நிமித்தம் எத்தனையோ சகோதரர்களும், புத்திரர்களும், சிநேகிதர்களும் கொல்லுண்டனர். ஆகையால், பகைக்கு இருப்பிடமாகிய அவளுடைய நெஞ்சைப் பிளந்து குடலைப் பிடுங்கி மாலை போட்டுக் கொள்வேன்'' என்று ஆர வாரித்தல்; கம்ஸனுக்கு உற்ற சாபமானது மானிட உருக்கொண்டு அவனுடைய அறைக்குள் பிரவேசிக்கையில், அது கண்மையைப் போலக் கறுத்து, கையிற் கொள்ளிக்கட்டை பிடித்து, பல் நீண்டு, பாம்பைப்போன்று மஞ்சட் கண்வாய்ந்து, கோபமே உருவாகக்கொண்டு, தாக்ஷிண்யமில்லாமல் 'நல்லதிருஷ்ட'த்தைச் சுறுட்டி மூட்டையாகக் கட்டி, 'உன் காலம் ஆய்விட்டது. மிதமிஞ்சி நீ இருத்தலாற்பயனில்லை' என்று அவனுக்குச் சொல்லுதல்.

அதுபோலவே ''பாலசரித''த்தில் கிருஷ்ணன் மச்சளிந்தத்தின் மீதேறி கம்ஸனைத் தலைகீழாகக் கீழே எறிதல்; பின்பு, கம்ஸன் முகமெல்லாம் ரத்தம் படிந்து பருத்து, கண்கள் பிதுங்கி, கழுத்தும் தொடையும் முறிந்து, தோற்பட்டையும் இடுப்பும், கால்களும் சிதைந்து, முழங்கால் நொறுங்கி, ஆரம் அறுந்து, கடகம் கழன்று பூணூல் தொங்கியாட அவ்விடத்திற் கீழே கிடப்பது;

''ஊருபங்க''த்தில் குருக்ஷேத்திரம் என்னும் போர்க்களம் மானிடப் பிணக்களமாகவும், யானையுடல்களும் குதிரையுடல்களும் நிரம்பியதாகவும் வர்ணிக்கப்பட்டிருக்கின்றது. அங்கே அநேக மாதங் கள் வரையில் தின்பதற்கு வேண்டியளவு உணவு இருப்பதனால் கழு கினங்கள் அங்கே ஸ்திரமாகக் கூடுகட்டிக் கொண்டிருந்தனவென்று

சொல்லப்பட்டிருக்கின்றது. சாருதத்தனையும் வஸந்தசேனையையும் சகரன் அச்சுறுத்தலும் இவ்வகையிற் சேரும். வஸந்தசேனையை நோக்கித் தூர்த்தன், 'எனக்குக் குறுக்கிட்ட போலீஸ்காரர் எத்தனை பேர் மயிரிழை உயிர் தப்பினார்களென்று இந்நகரத்துப் போலீஸாரைக் கேட்டுத் தெரிந்துவா. நான் செய்துள்ள கொலைகளின் கணக்கில் யௌவனமும் அழகும் வாய்ந்த யுவதியின் கொலையையும் சேர்க்கும்படி செய்யாதே' என்று சொல்லியதும் இந்தத் தலைப்பின் கீழே வரும்.

## 7. சாந்தரஸம்

சாந்தரஸமும் அநேக இடங்களிற் காணப்படுகின்றது. உதாரணமாக, ''தூதவாக்கிய''த்தில் கம்ஸனுடைய மாமனாராகிய ஜராசந்தன் பழிவாங்குவானென்று அஞ்சிக் கிருஷ்ணன் மதுராபுரியை விட்டுத் துவாரகைக்கு ஓடிப்போனது கோழைத்தனமென்று துர்யோதனன் கிருஷ்ணனைக் குறை கூறியபோது அவர், 'மடையர்களுக்கு அரசியல் விவகாரம் தெரியாது, எந்தெந்த காலதேசவர்த்தமானங்களுக்கு எவ்வெவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்றும் தெரியாது' என்று மறுமொழி கூறினார். ''யௌகந்தராயண சபதங்கள்'' என்னும் நாடகத்தில் யௌகந்தராயணரை நோக்கிக் கஞ்சுகி, 'நீங்கள் தீயிட்டெரித்த வீடுகள் இன்னும் கனன்று கொண்டிருக்கின்றனவாயினும் மகாசேன மகாராஜருக்கு உங்கள்மீது வன்மமில்லை. இந்தக் கிண்ணத்தை ஏற்றுக் கொள்ளுங்கள்' என்று சொன்னது;

''கர்ணபார''த்தில் உடற் கவசத்தையும் கர்ண குண்டலத்தையும் கொடுக்க வேண்டாமென்று சல்லியன் சொன்னபோது கர்ணன், 'கல்வி காலக்கிரமத்தில் மறந்து போகின்றது, ஆழவேரூன்றி நிற்கும் மரங்கள் ஒரு காலத்தில் காற்றினால் பிடுங்கியெறியப்படுகின்றன. ஆழமிக்க ஏரிகளின் நீரும் ஒருகால் வரண்டுபோகும். தானங்களும் தர்ப்பணங்களுமே எந்நாளும் இருப்பன'' என்று மிகச் சாந்தமாகச் சொல்லிவிட்டு இந்திரனுக்கு அவைகளைக் கொடுக்கிறான். அவைகளைப் பெற்றுக்கொண்டு இந்திரன் போனபின், கர்ணனை நோக்கிச் சல்லியன், 'உன்னை இந்திரன் ஏய்த்துவிட்டான்' என்றபோது கர்ணன், 'ஓ, சல்லியா! நீ சொல்வது முற்றும் தவறு. அவனை ஏய்த்தவன் நானே. கோடிக் கணக்கானவர்கள் இந்திரனிடம் வரம் வேண்டுகிறார்கள், அவன் என்னிடம் வேண்டினான்' என்று மிக அமைதியோடு கூறினன்.

''ஊருபங்க''த்தில் மரணங் கிட்டியதென துர்யோதனன் தெரிந்துகொண்டபோது, அவனுடைய மகன் துர்ஜயன் அவனை நோக்கி, 'அப்பா! எங்கே போகிறாய்?' என்று வினவ, துர்யோதனன்,

'எனது சகோதரர் நூற்றுவரைப் பார்க்கப்போகிறேன்' என்று மிக்க சாந்தத்தோடு பதில் சொல்லுகிறான். 'பிதுருக்களுக்குத் தர்ப்பணாதிகள் செய்யப் பாண்டவர்களேனும் மீந்திருக்கும் பொருட்டு உன் வில் நாணைக் கழற்று' என்று அசுவத்தாமனை நோக்கியும் துர்யோதனன் சொல்கின்றான். அசுவத்தாமனுக்குள்ள ராஜபக்தியைக் கண்டு ஆறுதலடைந்து, தன் மகனை அரசனாக்குவதாக அவன் கூறிய உறுதி வாக்கை ஏற்றுக் கொண்ட துர்யோதனன், கண்ணுக்கு அவனுடைய பிதுருக்களும் கங்காநதியும் ஆயிரம் அன்னப்புட்கள் ஓட்டிவரும் விமானமும் தோன்ற, அவன் அமைதியாக உயிர் துறக்கிறான்.

''பிரதிமா நாடக''த்தில், மரித்த தந்தையாருக்கு ராஜோபசாரம் செய்வதற்கில்லையேயென்று ஸ்ரீராமர் வருந்தியபோது அவரை நோக்கிச் சீதா பிராட்டி, 'அளிப்பார் சக்தியையனுசரித்துத் தேவர்களும் நல்லவர்களும் அவர்கள் கொடுத்ததை ஏற்றுத் திருப்தியடைவார்கள். ஆகையால், பிராணநாதரே! பரதர் அரண்மனையில் தந்தையாருக்குரிய ராஜோபசாரமான பலிகளை நிவேதிப்பார். நாம் காட்டில் இங்கே கனிவகைகளும் உதகமும் அளிப்போம். இவ்விருவகையும் தசரதருக்கு ஏற்புடையனவேயாகும்' என்று சாந்தமாகச் சொல்லித் தேற்றினாள்.

மற்றும், கைகேயியைப் பரதன் அடிக்கடித் திட்டி அவமதித்துக் கடிந்தபின் அவனை நோக்கிக் கைகேயி தசரதர்மீது விதியின் செயல் நடைபெறும் பொருட்டும், ரிஷிகுமாரனைக் காட்டுயானை என்று நினைத்துத் தசரதர் அறியாமற் கொன்ற அவ்விளைஞனது தந்தையாகிய முனிவர், 'என்னைப்போல் தசரதனும் மகனைப் பிரிந்து வருந்துவானாக' என்று இட்ட சாபம் இதனூடே நிறைவேறும்பொருட்டும் தசரதரை அவ்வாறு வரங் கேட்டேனென்று பரதனுக்குச் சொன்னாள். அவள் சொல்லிய வார்த்தைகளின் உண்மையை வசிஷ்ட வாமதேவாதி முனிவர்களின் வாயிலாகத் தெரிந்துகொண்டபின் பரதன் தன்னை மன்னிக்கும்படி அவளைக் கேட்டுக் கொள்கிறான். உடனே அவள் அவனை மன்னித்து, 'குழந்தாய், எந்தத்தாய் தன் மகனின் குற்றத்தை மன்னிக்காதிருப்பள்?' என்று மிகச் சாந்தமாகவும் அடக்கமாகவும் மொழிகின்றனள்.

இதுபோலவே 'யௌகந்தராயணத்தில்' யௌகந்தராயணரை நோக்கி பரதாரோககன், 'போரிற் சிறைப்பட்டவர்களுக்குச் சாஸ்திரங்களில் என்ன தண்டனை விதிக்கப்பட்டிருக்கின்றது!' என வினவிய போது, தாம் சொல்லும் மறுமொழி தம்மை எவ்வளவு வாதிக்குமென்று சிறிதும் கருதாமலே அவர் சாந்தமாக, 'மரண தண்டனை' என்று மறுமொழி கூறுகின்றார்.

''அபிஷேக நாடக''த்தில் தீக்குளித்த சீதாதேவி சிறிதும் ஊறுபடாமல் அத்தீயினின்றும் வெளிவருவதைக் கண்டு எல்லாரும் அதிசயித்து சீதை பரிசுத்தமானவளென்றும் தீயினாற் சுடப்பெறாத வளென்றும் ராமரிடம் அறிக்கைசெய்தபோது ராமர், 'வைதேகியின் பரிசுத்துவம் எனக்குத் தெரியும். ஆயிரநாவுடைய காசினியாருடைய மனத்துக்குத் திருப்தி விளைவிக்கும் பொருட்டே இவ்வாறு செய்தேன்' என்று அமைதியாகப் பதில் சொன்னார். போர் முறைக்கு மாறாகத் தன்னை ஒளிந்திருந்து அடித்தது ஏனோவென்று ராமரை வாலிகேட்டு, வலைபோட்டும் மற்றும் சூதானவகைகளிலும் மிருகங்களைக் கொல்வது போர் முறையேயாகுமாதலின், அவன் சகோதரன் மனைவியோடு வியபிசரித்த குற்றத்திற்குத் தண்டனையாகக் கொல்லப்பட்டானென்று தெரிந்து, ராமரை மன்னிப்புக்கேட்டு, தன் பாபத்தைப் போக்கும்படி அவரைப் பிரார்த்தித்து, அங்குதனையும் குடும்பத்துக்குரிய குலதன மாகிய பொன் மாலையையும் சுக்ரீவனுக்கு ஒப்பித்துவிட்டு, சுக்ரீ வனது உபதளகர்த்தனாகிய ஹநுமானிடமிருந்து நீர் வாங்கி அருந்தி, அமைதியாகப் பிராணனை விடுகிறான். அவனும் கங்கை முதலான புண்ணிய நதிகளையும் யமதர்மராஜன் அனுப்பிய தேவமாதரோட்டும் விமானத்தையுங் காண்கிறான்.

## 8. பக்தி ரஸம்

பக்தி ரஸமானது சாந்த ரஸத்தோடு இணைந்ததேயாயினும் அதனினும் உயர்ந்த தலத்ததயாகும். இது ஒன்றுக்கொன்று உயர்வான நான்கு தரகதி வாய்ந்ததாகும். முதலாவது தன் கஷ்டங்களை நிவாரணம் செய்ய வேண்டுமென்று துன்பத்திலாழ்ந்தவன் செய்யும் பக்தி. இது ''ஊருபங்க''த்திலுள்ள மங்கள சுலோகத்தினால் நன்கு விளங்கும். அந்தச் சுலோகத்தின் கருத்து வருமாறு: துர்யோதனனே வேகம் மிக்க நீரோடையாகவும், கிருபாசாரியாரே மகர மீனாகவும், அசுவத்தாமனே முதலையாகவும், கர்ணனே அலைகளாகவும், காந்தாரத்தரசனை ஆழ்த்தும் நீர்ச்சுழலாகவும், ஜயத்ரதனே பொங்கு நீராகவும், பீஷ் மரும் துரோணருமே இரு கரைகளாகவும் உள்ள சத்துரு வெள்ளத்தை அர்ச்சுனன் கடந்தேகச் செய்த கேசவன் எங்களையும் சத்ருவெள்ளத்தைத் தாண்டுவிப்பானாக - என்பதாம்.

இவ்வித பக்தி, கௌரவ சபையில் துரௌபதி துகிலுரியப் பெற்ற காலத்தில் அவள் வெறி பிடித்தாற்போலக் கிருஷ்ணனை துணைக்கு அழைத்து கூவுவதிலும் கிருஷ்ணன் ஓடிவந்து முடிவுறாச் சேலை கொடுத்து உதவுவதிலும் காணப்பெறும்.

இரண்டாவது, பொருளும் பிரபலமும் நாடுகிறவன் செய்கிற பக்தி: இது சிவனையும் பிரம்ம தேவனையும் குறித்து ராவணன் நெடுங் காலம் தவம் புரிந்து, அற்புதமாக நீடிய ஆயுள், ஒப்புயர்வில்லாத செல்வம், செழுமை, வாழ்வு, பராக்கிரமம், தேவர்களாலும் அசுரர் களாலும் வெல்லப்படாமை என்னும் வரங்களைப் படைப்பதனால் தெரியும். செருக்குப் பெருக்கத்தால் அவன் நரமனிதர்களைத் தவிர்த் தானாதலின், தேவர் நர மனிதனாக வந்து அவனை வெல்வதற்கு இடம் வைத்துக்கொண்டான். ஆதலின் ஸ்ரீமந் நாராயணனே ராமர் வடிவாக அவதரித்து அவனை உலகினின்றும் ஒழித்தனர்.

மூன்றாவது, ஞானத்தை நாடுகிறவன் செய்கிற பக்தி. இதற்கு உதாரணம் ''தூத கடோத்கஜ''த்தில் மங்கள சுலோகத்திற் காணப்படும். அது வருமாறு: - மூன்றுலகத்திற்கும் தஞ்சமாய் இருக்கப்பட்ட ஸ்ரீமந் நாராயணன், மூவுலகமென்னும் இடையறா நாடகத்தின் கதாபீஜத் திற்கும் உபோத்காதத்திற்கும் மத்தியாங்கத்திற்கும் எல்லாவற்றிற்கும் சூத்திரதாரனாயிருக்கிறவன் உங்களைக் காப்பாற்றட்டும்! என்பதாம். ஞானத்தை நாடுகிறவன் கடவுளே பிரபஞ்சத்தையெல்லாம் ஆட்டு விக்கிறவன் என்று தெரிந்து வர்ணிக்க முயன்று செய்யும் பக்தி, அவன் ஆபத்தேனும் சங்கடமேனும் இல்லாத காலத்திற் பொதுவாக ரக்ஷிக்க வேண்டுமென்று மாத்திரம் ஒரு பெரும் பிரார்த்தனை செய்கிறவன்.

கடைசி விதம், ஞானிகள் செய்யும் பக்தி. இது முற்றுட முயர்ந்த ஞானிகள் செய்யும் பக்தியாகும். இது ''அபிஷேக நாடக''த்திற் காணப்படும். சீதை தீக்குளித்துத் தீங்குறாமல் வெளிவந்த பின் எல்லா முணர்ந்த தேவலோக வாசிகளான கந்தர்வர்கள் வந்து ராமரை நோக்கி, 'ஸ்ரீமந் நாராயணருக்கு நமஸ்காரம், மூவுலகிற்கும் காரணபூதமா யிருக்கப்பட்டவனுக்கு நமஸ்காரம்; பிரம்மதேவனே உமது ஹ்ருதயம், ருத்திரனே உமது கோபம், சூரிய சந்திரர்களே உமது கண்கள், வித்தியாதி தேவதையாகிய பராதியே உமது நாக்கு, மூவுலக நாயகனே! பிரமன், இந்திரன், மருத்துக்கள் ஆகிய இவர்களோடு கூடிய எல்லா உலகங்களும் உண்மையில் உம்மாலேயே படைக்கப்பட்டவை. ஓ பரமேசுவரா! சீதையே லக்ஷ்மி தேவி! நீரே விஷ்ணு பகவான்! அவளை நீர் ஏற்றுக்கொள்ளும். பூமியானது சமுத்திரத்திற்குள்ளாழ்ந்து வெளி வருதற்கில்லாதிருந்தபோது வராகாவதாரம் எடுத்து நீர் அதைத் தூக்கி மேலே கொண்டுவந்தீர்; ஸ்வேச்சையாகவே நீர் மூன்றடிகளால் மூவுலகத்தையும் அளந்தீர்; நீரும் உமது தேவியுமே இவ்வடிவங்கள் மேற்கொண்டீர்கள்; இராக்ஷசேந்திரனான ராவணனைக் கொன்றதனால் மனிதர்களுக்குத் தேவர்களிடமிருந்த பக்தியை முன்னிலும் அதிகமாக உறுதிப்படுத்தினீர்.

## 9. சிங்கார ரஸம்

சிங்கார ரஸம், சிங்காரஸ்வயம், வத்ஸலம் என்னும் இரு வகைப்படும். சிங்காரஸ்வயமென்பது சம்போக சம்பந்தமான காமத்தைக் குறிக்கும், வத்ஸலமென்பது சம்போக இச்சையில்லாத பிரேமையைக் குறிக்கும்; இது பிதுரு வாத்ஸல்யம், சகோதர வாத்ஸல்யம், சிநேக வாத்ஸல்யம், குரு சிஷ்ய வாத்ஸல்யம் முதலியவைகளைப் போன்ற தாகும்.

## 9 A. சிங்காரஸ்வயம்

சிங்காரஸ்வயம் என்பதில் ஐந்து உபரஸங்கள் அடங்கி யிருக்கின்றன. அவை முறையே ஆத்ம ஐக்கியம், மன ஐக்கியம், விஷய ஐக்கியம, தேக ஐக்கியம், காம ஐக்கியம் எனப்படும்.

**முதலாவது,** தர்மசிங்காரம் ஆகும். இது கேவலப் பிரேமை, எவ்வகை காம சம்பந்தமும் இல்லாதது, வாழ்க்கை கடமைகளை நிறைவேற்றுவதற்காகவும் தர்ம பிரஜாபதி விருத்தி செய்வதற்காகவும் புருஷனும் ஸ்திரீயும் ஒன்றித்திருப்பது. இதில் அமித சம்போகத்திற்கு இடமில்லை, காம சங்கற்பம் இல்லை; ஆயினும், தம்பதிகளில் ஒருவர் மனவேக்காடின்றி மற்றவரைப் பிரிந்திருக்க மாட்டார், தயங் காமல் மற்றவருக்காகத் தம் உயிரையும் இறுக்க இசைவான். ''பிரதிமா நாடக''த்திலும் ''அபிஷேக நாடக''த்திலும், ஸ்ரீராமருக்கும் சீதைக்கும் உள்ள நேசம் இத்தன்மையதேயாகும்; இது ஸாவித்திரிக்கும் ஸத்திய வானுக்குமுள்ள காதலுக்கு ஒப்பிடப்பட்டிருப்பது மிகப் பொருத்த மாகும். அவ்விருவருக்குமுள்ள பிரேமை இத்தகையதாதலின் ஸாவித் திரி மரணாவஸ்தையைக் கடக்கவல்லவளாயினாள் என்பதை மறவா திருப்போமாக.

**இரண்டாவது,** இது காமசிங்காரம்; அஃதாவது இல்லற வாழ்க்கையில் ஸ்திரீ புருஷருக்குள்ள காதல். இதற்கு உதாரணம், வாஸவதத்தைக்கும் உதயனனுக்குமுள்ள பிரேமை. இதில் காமாமிசம் மிகுந்து மனத்தை இயக்குகின்றது. பிரிவினாலுண்டாகும் துக்கம் பெரிதும் உடற் பிரிவினால் ஏற்பட்டதேயாகும்; ஆத்மாமிசம் இதில் அவ்வளவு முக்கியமாகக் காணப்பெறாது; ஆயினும், பாரமார்த்தி காமிசம் எப்பொழுதுமே இதனில் அமைந்தே இருக்கும்.

**மூன்றாவது,** அர்த்த சிங்காரம்; அஃதாவது அரசியல் விவகார நோக்கத்தோடேனும், பொருளாதார நோக்கத்தோடேனும், வேறு

இம்மைப்பயன்மீது நோக்கத்தோடேனும் செய்து கொள்ளும் விவாக மாகும். இதில் லோகாயதக் கொள்கையே மேம்பட்டிருக்கும், இதற்குப் பெரிய உதாரணம், உதயனன் பத்மாவதியைக் கலியாணஞ் செய்து கொண்டதேயாம். அவனுடைய தமையனான மகதாதிபதியின் துணை கொண்டு தன்னுடைய வத்ஸ ராஜ்யத்தை ஆக்கிரமித்துக்கொண்ட ஆருணியின் கையினின்று மீட்டுக் கொள்வதற்கே அவன் அவளை மணந்தனன்.

**நான்காவது,** முக்த சிங்காரம். இதில் சரீர சமபந்தமே பெரிதும் வற்புறுத்தப்பெறும். இதற்குச் சரீர சுகமே ஆதியும் அந்தமுமாகும். மனமும் ஆன்மாவும் இவ்வாழ்க்கையில் இன்புறத்தோன்றாவாயினும் பின்புறத்தொதுங்கியமைந்திருக்கும்; இந்த தாம்பத்தியத்திலும் ஸ்திரீ புருஷர் ஒருவர்க்கொருவர் உண்மையாயும் உறுதியாயும் இருத்தல் கூடும், பிரிவாற்றாமல் வருந்தி வாடுதல் கூடும். இதற்கு உற்ற உதா ரணம் பீமனுக்கும் ஹிடும்பிக்கும் உள்ள மணப்பொருத்தமேயாம்.

**ஐந்தாவது,** மூட சிங்காரம். அஃதாவது மூடத்தனம் வாய்ந்தது. இதில் காமமே பிரதானம். இது கேவலம் மிருகத் தன்மையான காமம். முக்த சிங்காரத்திற்போல ஸ்திரீபுருஷர்களிருவரும் இதனில் மன மொத்திருக்க வேண்டியதில்லை, பரஸ்பர விசுவாசமாயும் இருக்க வேண்டியதில்லை. இதற்குப் பெரிய உதாரணம் ஒரு தூர்த்தனுக்கு வேசியின் மீதுள்ள ஆசையும் அவளுக்கு அவன் மீதுள்ள ஆசையுமாம். இவ்விதமான மூட சிங்காரத்தைப் பாஸகவி தன்னுடைய நாடக பாத் திரங்களுள் சகரனுக்கும் ஒரு தூர்த்தனுக்கும் உள்ள மனோபாவத்தில் விளக்கியிருக்கிறான். அவர்கள் வஸந்தசேனையைச் சாலையோரத்திற் பூத்திருக்கிற மலர், அதை எவரேனும் பறித்துக்கொள்வதற்காகும்; காசுக்கு வாங்கக்கூடிய மண்பாண்டம்; உற்றானென்றும் மாற்றா னென்றும், அழகனென்றும் அழகில்லாதவனென்றும், நல்லவனென் றும் கெட்டவனென்றும் அவள் பார்க்கமுடியாது; பணங் கொடுக்கிற வனெவனுக்கும் இணங்கவேண்டிய விலைமாது என்று சொல்லுகிறார் கள், இந்தச் சிங்காரத்தின் தன்மையைச் சரியானபடி சகரன் வர்ணித் திருக்கிறான். அவனும் அந்தத் தூர்த்தனும் ஒரு நரியைத் துரத்திக் கொண்டோடும் இரண்டு வேட்டை நாய்களைப் போன்றிருக்கிறார் களென்றும், பழைய தோல் துண்டு எரிதணலின்மீது விழுந்து கருகிப் போவது போல அவன் வஸந்தசேனையின் மீதுள்ள காமத்தினால் தகித்துப் போகிறானென்றும் சொல்லியிருக்கின்றான்.

## 9 B - வத்ஸல ரஸம்

வத்ஸல ரஸத்தையும் பாஸன் பல நாடகங்களில் நன்றாகக் காட்டியுள்ளான். ''பிரதிமா நாடக'த்தில் ராமர், லக்ஷ்மணர், சீதை என்னும் இவர்களின்மீது தசரதர் காட்டும் பிரேமை; அதே நாடகத்தில் ராமருக்குப் பரதன் மீதுள்ள பிரேமை, லக்ஷ்மணருக்கு ராமர் மீதுள்ள பிரேமை இவையெல்லாம் வத்ஸல ரஸத்திற்குத் திருஷ்டாந்தமாம்; ''ஊருபங்க''த்தில் துர்யோதனன் தன் தாய் தகப்பன் குழந்தை மீது காட்டும் பிரேமை இத்தலைப்பின் கீழே வரும்; துர்யோதனன் மரணத்தறுவாயில் தன் தாயாரிடம் ஒருவரம் வேண்டுகிறான். அந்த வார்த்தைகளில் இந்த வத்ஸல ரஸத்தின் பிரபாவம் முற்றும் நன்றாகக் காணப்படுகின்றது. என்ன வரம் வேண்டுமானாலும் கேட்கும்படி தாயார் சொல்லுகிறாள். அப்போது துர்யோதனன், 'அம்மா கைகூப்பி வேண்டிக் கொள்கிறேன். நான் ஏதேனும் புண்ணியம் படைத்திருந்தால் மறுபிறப்பிலும் உன் வயிற்றிலே பிள்ளையாய் ஜனிக்கும்படி எனக்கு வரமளிப்பாய்!'' என்று சொல்லுகிறான். இம் மொழிகளால் பாஸன் இந்த ரஸத்தின் பெருமையை அழகாக வெளியிட்டுள்ளான். ''மத்தியம வியாயோக''த்தில் கடோத்கஜன் மீது பீமனுக்குள்ள பிரேமை, அபிமன்யுவின்மீது திருதராஷ்டிரனுக்கும் அர்ஜுனனுக்குமுள்ள பிரேமை, இந்திரஜித்தின்மீது ராவணனுக்குள்ள பிரேமை என்னும் இவையும் வத்ஸல ரஸமே. மைத்திரேயனுக்குச் சாருதத்தன் மீதும், சந்துஷ்டனுக்கு அவிமாரகன் மீதும் வஸந்தகனுக்கு உதயனன் மீதும் உள்ள பிரேமை இத்தன்மையதேயாம்.

பாஸனுக்குள்ள இதர பெருந்தன்மைகளாவன பாஷா நடையின் இனிமை, மனோரதியத்தின் உன்னதம், தீர்மான புத்தியின் உரம், வாழ்க்கையின் பற்பல தரகதிகளிலும் மனஸ்தத்துவ விவகார ஞானம், திடமான தேசாபிமானம், நேர்மைப் பிரியம், ஸ்வதந்திரப் பிரியம், அன்னியர் ஆட்சி வெறுப்பு, அமைதி, கௌரவம், மானிடப் பெருமை, மானம் ஆகிய இவைகளின் மீதுள்ள ஆசை, இயற்கைத் தோற்றங்களின் விவரணச் சிறப்பு, எதுவும் நன்மைக்கே யென்னும் உத்தம பாவனை என்பனவாம்.

''யௌகந்தராயண சபதங்கள்'' என்னும் நாடகத்தின் 1-ஆம் அங்கம், 18-ஆம் சுலோகத்திற்காணும் ''உத்தம பாவனையைக் காட்டிலும் சிறந்ததைக் காண்பது அரிது. மரக்கட்டையினின்று நெருப்பும் தரையினின்று நீரும் எடுக்கலாம். சரியான வழியில் முயற்சி செய்தால் மனிதனால் ஆகாதது ஒன்றுமே இல்லை'' என்று அதிற் சொல்லப்பட்டிருக்கின்றது.

நாடகங்களின் முடிவுரைகளெலலாம் தேசிய ஸ்வதந்ரம் வேண்டுமென்று மிக்க ஆர்வத்தோடு பிரார்த்திக்கின்றன; அது போலவே நம்தேசத்தின் மீது படையெடுத்து வருகிறவர்களெல்லாரும் தோல்வியுற வேண்டுமென்று வேண்டுகின்றன; இது கிங் ஜான் (King John) என்னும் நாடகத்தில் ஷேக்ஸ்பியர் எழுதியுள்ளது போலிருக்கிறது.

இங்கிலாந்தை அடிமையாக்கி
இகல் கெடுக்க எண்ணினார்
பங்கமுற்றதன்றி வெற்றி
பார்த்ததில்லை இல்லையே!

நாட்டுமக்கள் ஒருமை குன்றி
நலிவு கொண்ட போதலால்,
வேட்டுவந்த பகைஞர் என்றும்
வெற்றி கொள்வதில்லையே!

மன்னரெங்கள் வீரர்மீள
வந்து நாடு கூடினார்!
இன்னமுள்ள உலகியாவும்
ஈண்டெதிர்த்த போதிலும்,

பணிவதில்லை, வீழ்வதில்லை!
பகை நடுங்க ஓட்டுவோம்
துணிவு கூடி இங்கிலாந்து
தூயவீரம் எய்தவே!

ராஜாக்களின் பொருட்டும் ராணிகளின் பொருட்டும் முனிவர்களையும் தவத்தோர்களையும் முரட்டாட்டமாக ஒதுக்கித் தள்ளுவது தகாதகாரியமென்னும் ஆக்கிரகம் ''ஸ்வப்ன வாஸவதத்த''த்தின் பிரஸ்தாவனையிற் காட்டப்பட்டிருக்கின்றது. அரசர்களின் பிரதாபம் பாம்பின் நாவைப்போல் அசைந்தாடிக் கொண்டிருக்கிறதெனவும், அவர்களுடைய நல்லாட்சியின் ஞாபகத்திலும் நற்காரியங்களின் ஞாபகத்திலுமே அரசர்கள் ஜீவித்திருக்கிறார்களெனவும் பல நாடகங்களிற் பாஸன் சொல்லியிருக்கிறான்.

யானைக் காட்டில் உதயனனைக் கொல்ல ஓடிவந்த படைவீரன் இரத்தம் சுவறின தரையில் வழுக்கி விழுந்ததைக் கேட்டு யௌகந்தராயணர், பிறர் படையெழுச்சியினின்றும் அக்கிரமங்களினின்றும் உதயனன் காத்த பூமியானது அவனுக்கு ஆபத்து வந்த காலத்தில்

அதனைக் காப்பாற்றியது. தேசத்தைப் போன்று உயரில்லாத ஜடவஸ்துவும் நன்னெறியை மெச்சி அதற்குத் தக்கவாறு பயனளிக்குமென்னும் நம்பிக்கை பாஸனுக்கு இருந்ததென இக்கூற்று காட்டுகின்றது. 'சத்தியம் ஒழிந்து போனால் மனிதர்களெல்லாரும் ஒழிந்தார்கள்; சத்தியம் நிலைநிற்கின் அவர்களும் நிலைநிற்கிறார்கள்' என்று ''பஞ்சராத்திர''த்தில் துர்யோதனன் சொல்வதாகப் பாஸன் எழுதியிருக்கின்றான். இது, தர்மத்தை அழிக்கின்றவன் அதனால் அழிக்கப்படுகிறான், தர்மத்தைத் தாங்குகிறவன் அதனால் தாங்கப்படுகிறான் என்னும் மனுவின் பிரசித்தமான வாக்கின் பிரதித்தொனி போன்றதாகும்.

பாஸகவிக்குள்ள நுண்ணிய மனநூற்புலமை இவனுடைய நாடகங்களின் ஒவ்வொரு பக்கத்திலும் காணப்படுகின்றது. சில உதாரணங்கள் கொடுப்போம். ராஜவிசுவாஸமில்லாத சைனியம், வாழ்க்கைப்போரில் அன்பில்லா மனைவியைப் போல, யுத்தத்திற் பயன்படாது என்று யௌகந்தராயணர் முறையிடுகின்றார். அடிமரம் வெட்டுண்டபின் கிளைகளைப்பற்றிக் கவலைப்படுவானேன்? என்று வினவுகின்றார்; நகை திருட்டுப் போனபின் நகைப் பெட்டியைப் பத்திரப்படுத்துவதனாற் பயனென்னவாமென்று ஆச்சரியப்படுகிறார். இந்நாடகாசிரியரின் மனநூற் புலமைக்கு ''ஸ்வப்ன வாஸவதத்த''த்தின் நான்காம் அங்கத்தின் 6-ஆம் சுலோகம் அரிய உதாரணமாம். நிஜமான துக்கத்தைக் கண்ணீர் சொரிந்தே ஆற்றிக்கொள்ள வேண்டுமென்று சொல்ல வேண்டியதில்லையே.

''பஞ்சராத்திர''த்தில் ஸ்திரீகள் அழகுக்குத் தக்கவாறும் புருஷர்கள் பராக்கிரமத்திற்குத் தக்கவாறும் மதிக்கப்படுகிறார்களென்று பீஷ்மர் சாற்றுகின்றார். வாய் வார்த்தை கேட்பதனாலாவது கெஞ்சிக் கேட்பதனாலாவது எவனும் ஸ்வதந்திரம் பெறமுடியாது; ஆள்வதற்கு நாடு படைக்க முடியாது; அதற்கு எத்தனையோ நஷ்டங்களும் கஷ்டங்களும் அனுபவிக்க வேண்டும். கஷ்டப்படுவதற்குச் சித்தமாய் இருக்கவேண்டும் என்று துர்யோதனன் சொல்லுகிறான். யுதிஷ்டிரர் அரசராயிருப்பின் ஒவ்வொரு நிலத்திலும் நெல் விளையுமென்று சகுனி சொல்கின்றான். இதனால் நாட்டின் செழிப்பு அதன் இயற்கைத் தன்மையினாலல்ல, நல்ல துரைத்தனத்தினாலேயாம் என்று சொல்லியதாயிற்று. இதற்கு உதாரணமாக இங்கிலாந்தையும் வேறு சில தேசங்களையும் இந்நாளிற் சொல்லலாம்.

சீடன் செய்யுங் குற்றம் குருவைத் தாக்குமென்று துரோணர் சொல்லுகின்றார். மரித்தவர்களே சுவர்க்கத்திற்குப் போகிறார்களென்று சொல்வதும், சுவர்க்கலோகம் கண்ணுக்குத் தெரியாது என்பதும்

அறிவீனம்; நாம் நன்மைப்படுத்திக்கொள்வதற்குச்சுவர்க்கம் இங்கேயே இவ்வுலகத்தில் இருக்கின்றது என்று துர்யோதனன் சாதிக்கின்றான். இது ஆணித்தரமான உண்மையாகும். நெறிதப்பி நடக்கிறவர்களுக்குச் சமாதான வார்த்தையே நல் மருந்தாகும். கோபக்கூற்றுகள் அவர்களைப் பின்னும் மூர்க்கமாக்கும் என்று பீஷ்மர் கூறுகின்றார்.

''தூத வாக்கிய''த்தில், பயத்தை வென்ற அஞ்சா நெஞ்சம் படைத்த கம்ஸ்ன் என்பவன் காமத்தை வெல்ல முடியாத அசக்தனாகச் சொல்லப்பட்டிருக்கிறான். பயமென்பதே சிறிதும் அறியாதவர்கள் பலரும் காமவசப்பட்டு அதற்கு அடிமையாயிருக்கிறார்களென்னும் ஆழ்ந்த உண்மையை இது தெரிவிக்கின்றது.

''சாருதத்த''த்தில் சாகரன் என்பவன் கோழை மனமுள்ளவனாகவும் வாயடியடிக்கும் துஷ்டனாகவும் வர்ணிக்கப்பட்டிருக்கிறான். இதுவும் பாஸகவியின் அரிய மன நூற்புலமைக்குச் சான்றாம்.

''பிரதிமா நாடகத்தில்'' ராமரும் லக்ஷ்மணரும் சீதையும் என்ன வர்த்தமானம் தமக்குச் சொல்லியனுப்பியிருக்கிறார்ளென்று சுமந்திரனைத் தசரதர் கேட்டதற்கு, ''நெடுநேரம் அவர்கள் ஆலோசித்தார்கள், ஓ மகாராஜரே! அவர்கள் ஏதோ சங்கதி சொல்வார்கள் போலிருந்தது. ஆனால், அவர்களுடைய உதடுகள் வார்த்தைகளினால் நடுங்கின, கண்ணீரினால் தொண்டைகள் கம்மிப் போயின, ஒரு வார்த்தையும் சொல்லாமல் அவர்கள் காட்டுக்குள் போய்விட்டார்கள்'' என்று பதில் சொல்லுகிறான். இதனால், மனநிலையையுள்ளபடி முற்றுமுணர்ந்து பாஸகவி எழுதியிருக்கிறானெனத் தெரிகிறது.

உதயனனைச் சிறைப்பிடித்தார்களென்று யௌகந்தராயணர் விஜயையைக்குச் சொல்ல மாட்டாமல் ''அது இப்படி'' என்கிறார்; தாமரை இலையில் தண்ணீர் கொண்டுவருகையில் பத்மாவதியைச் சந்தித்து வஸந்தகன் உள்ளதைச் சொல்ல மாட்டாமல் திகைத்து, ''இது தான் அது, அதுதான் இது'' என்று உளறிக் கொட்டுகிறான்; இவையும் மனநிலையை அறிவிக்கின்றன.

இது போலவே வத்ஸராஜன் பிடிபட்டான் என்று சொல்லக் கேட்டும் மகாஸேனன் மேலும் மேலும் ''பிடிபட்டானா'' என்று வினவுகின்றான். சிலையுருவச் சாலையில் பரதன் தன் தந்தையின் உருவச் சிலையைப்பற்றிக் கேட்க மனமில்லாதவனாய் முற்பட்ட மூன்று பிதாமகர்களின் சிலைகளைப் பற்றிக் கேட்கிறான்; மகளுக்கு விவாகமாகாதிருந்ததால் தாயார் வெட்கப்படுகிறாள்; ஆகையால், விவாகம்

செய்விக்க வேண்டுமென்று கவலைப்படுகிறாள்; அங்ஙனமாயினும், தன்னை விட்டு மகள் பிரிந்து போவளே என்னும் நினைவு தோன்றிய வுடன் அவளுடைய மனம் பிளவுறுகின்றது என்று மகாஸேனன் சொல்லுகிறான். இவையெல்லாம் நுண்ணிய மனநிலையையும் உணர்த்துவனவாகும்.

இயற்கைத் தோற்றங்களை விவரணங்கள் பாஸனுடைய நாடகங்களில் அடிக்கடி காணப்படுகின்றன. இந்தியாவிற் கொளுத்து கிற நடுப்பகல் வெய்யில் ''அவிமாரக''த்தில் இவ்வாறு வர்ணிக்கப் பட்டிருக்கின்றது:- ''இப்போது ஆயிர கிரணங்களுடைய சூரியன் மனிதருடைய தேகத்தை அரித்துச் சிதைக்கத் தொடங்குகின்றான். ஹா, வெப்பம் எவ்வளவு பயங்கரமாயிருக்கின்றது! கடுஞ் சுரத்தின் வேகம் போலத் தரை கொதிக்கின்றது; இதிலுள்ள ஈரத்தையெல் லாம் சூரியன் வறட்டி விட்டான்; மரங்கள் நிழல் நீத்துக் காட்டுத் தீயையடக்கி வைத்துக் கொண்டிருப்பனபோல உலர்ந்து விவர்ணமா யுள்ள இலைகளை, க்ஷயரோகம் பிடித்தாற்போல உமிழ்கின்றன. மலைகள் நீர் வேட்கையால் தம் பிலங்களின் வாயைத் திறந்து கொண் டிருக்கின்றன. தீக் காற்றினால் எங்கு பார்த்தாலும் எரிமணலும் தூசி யும் நிரம்பியிருக்கின்றன. உலகமெல்லாம் சூரியனது வெப்பத்தாற் சூடுண்டு மூர்ச்சித்திருக்கின்றது.''

''வாஸவதத்தம்'' முதலாம் அங்கம் 16-ஆம் சுலோகத்திலும் ''அபிஷேக நாடகம்'' 3-ஆம் அங்கம் 23-ஆம் சுலோகத்திலுமுள்ள சூரியாஸ்தமன வர்ணனை மிகத் தெளிவாகவும், இயற்கையமைப்பாக வும், உயிர்க்களை வாய்ந்ததாகவும் இருக்கின்றது. சூரியாஸ்த மனமும் இருள் மூட்டமும் ''அவிமாரக''த்தில் இவ்வாறு அழகாக வர்ணிக்கப்பட்டிருக்கின்றன: ''சூரியன் அஸ்தமனமாய் விட்டான். கீழ்த்திசை கறுத்துக் காண்கிறது; மேற்றிசையோ அந்திச் சிவப்பினால் பிரகாசிக்கின்றது. இடையிலுள்ள வானம் இரு கூறாகி சிவபிரானுடைய அர்த்தநாரீசுவர ஸ்வரூபத்தின் அழகோடு விளங்குகின்றது. ஹா! உலகம் என்ன விசித்திரமானது! சாந்திவெளிச்சத்தில் இது வேறொரு வடிவுமேற்கொள்கின்றது. இது தன் நெற்றியினின்று சூரியனென்னும் திலகத்தை அழித்து விட்டு நக்ஷத்திரங்கள் என்னும் மாலையை அணி கின்றது; பகற் பொழுதிற் கொளுத்துகிற வெய்யிலை ஒழித்துக் குளிர்ந்த இனிமையான இளங்காற்றை மேற்கொள்கின்றது; வியாபாரங்களை யும் வேலைகளையும் விடுத்துக் கட்டித்தழுவும் காதலர்க்கும் கொள்ளை தேடித்திரியும் கள்வர்களுக்கும் உற்ற உலகமாகின்றது!''

''ஊருபங்க''த்தில் துர்யோதனனை நோக்கி அசுவத்தாமன்,

அஸ்தமிக்கும் சூரியன் சந்தியா வெளிச்சத்தில் ஆழ்வதுபோல ஏன் ஆழ்ந்து போகின்றாய்' என்று வினவுகின்றான்.

'சாருதத்தம்' முதலாம் அங்கம், 29-ஆம் சுலோகத்தில் சந்திரோதயம் இவ்வாறு வர்ணிக்கப்பட்டிருக்கின்றது: ''இதோ சந்திரன் உதயமாகின்றது; வானத்துப் பெருஞ்சாலையை விளக்கும் இரவொளியாம், யுவதிகளையழைக்கும் பேரொளியாம். பழுத்த பேரீச்சம் பழம்போன்று இளமஞ்சள் நிறம் வாய்ந்துள்ளது. வரண்ட சேற்றில் பாற்கோடு படிந்தாற்போல இதன் வெண்கிரணங்கள் இருள் மீது படிகின்றன.'' மூன்றாம் அங்கம் 3-ஆம் சுலோகத்தில் சந்திராஸ்தமனம் இவ்வாறு வர்ணிக்கப்பட்டிருக்கின்றது: ''பிறைச் சந்திரன் இருளுக்கு இடந்தந்து மறைந்து போகின்றது; இது நீரில் அமிழும் காட்டானையின் வளைகொம்புகள் நீரில் மறைவதுபோல் இருக்கின்றது.''

இயற்கையானது மானிடரின் குண வேற்றுமைகளையும் பற்பலவுணர்ச்சிளையும் நடித்துக் காட்டுவதாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. உதாரணமாக, குரங்கியின் அழைப்புக்கிணங்கி அவிமாரகன் அவளைச் சந்திக்கப்போகும்போது களிமிக்க மனத்தினனாய், 'ஹா, உலகம் எவ்வளவு அதிசயமானதாய் இருக்கின்றது!'' என்று ஆர்ப்பரிக்கின்றான். ஆனால், அரண்மனையையும் தன் காதலியையும்விட்டு நீங்கவேண்டி வந்தபோது, 'மரங்களுக்கு சயரோகம் பிடித்திருக்கின்றது, மலைகள் நொந்து கதறுகின்றன. உலகம் முழுதும் மூர்ச்சித்திருக்கின்றது', எனப் புலம்புகிறான்.

விரைவாக ரதம் ஓட்டுவது ''பிரதிமா நாடக''த்தில் இவ்வாறு வர்ணிக்கப்பட்டிருக்கின்றது: ''மரங்கள் அதை நோக்கி ஓடிவருவது போலிருக்கின்றது. அஃது அசைவுறும் வேகத்தினால் அவற்றிற்கிடையிலுள்ள தூரம் பொந்துக்குள், கலங்கிப் பாயும் நீரோடையைப் போல, பாய்ந்தோடுகின்றது . சக்கரத்து ஆரைகள், அது சுழலும் வேகத்தினால், கண்ணுக்குத் தெரிவதில்லை; சக்கரங்கள் முழுதும் கெட்டியான வட்டங்களைப் போன்று தோன்றுகின்றன. குதிரைகளின் காற்குளம்பால் எழுப்பப்பட்ட தூசி முன்புறம் போகாமல் பின்புறமே இருக்கின்றது.''

''வாஸவதத்தம்'' 1-ஆம் அங்கம் 12-ஆம் சுலோகத்தில் தவச் சாலையின் வர்ணனம் மனத்திற் பதியத்தக்கதாகவும் உண்மையாகவும் இருக்கின்றது.

இரவின் வர்ணனையில் பாஸகவி மிகக் கைதேர்ந்தவன். கண்ணன் பிறந்தபோது இருந்த நடுநிசியை வாசுதேவர் ''பாலசரித''த்தில்

இவ்வாறு வர்ணிக்கின்றான்: ''இருளானது என் கைகால்களின்மீது பூசிக்கொண்டிருக்கின்றது. வானம் புகைக்கரி பொழிவது போன்றிருக்கின்றது. என் கண்பார்வை, துர்ஜனனுக்குச் செய்த சேவைபோல், பயன்படாதிருக்கின்றது. திக்குகள் தெரியவில்லை, மரங்களெல்லாம் திரண்டு ஒரே மொத்தையாய்க் காண்கின்றன. பழக்கமாயுள்ள பாருலகம் புதுக்கோலம் பூண்டிருக்கின்றது.''

''அவிமாரக''த்தில் இரவு இவ்வாறு வர்ணிக்கப்பட்டிருக்கின்றது: ''இந்த நள்ளிரவு எவ்வளவு பயங்கரமாய் இருக்கின்றது. ஏனெனில், பிராணிகளெல்லாம், கர்ப்பகோசத்திற் கருவுருக்களைப் போல, நித்திரை மப்பில் நினைவு தப்பிக்கிடக்கின்றன. ஜனங்கள் மௌனமாய் அயர்ந்து தூங்கிக்கொண்டிருக்க அரண்மனைகளெல்லாம் தியானத்தில் அமர்ந்திருப்பதுபோலத் தோன்றுகின்றன. சுற்றி மூடிக் கொண்டிருக்கிற இருளினால், மரங்களை, தொட்டுப் பார்த்தாலல்லாமல், தெரிந்துகொள்ள முடியாது. எல்லைக் கோடுகள் களைந்து புலப்படாதிருக்கின்றமையின் உலகம் கண்ணுக்குத் தெரியவில்லை. தெருக்களோ இருள் வெள்ளமோடுகிற ஓடைகளாகின்றன, வீடுகளின் வரிசைகள் திடர்கள்போல் இருக்கின்றன, பத்துத் திக்குகளும் அந்தகாரத்தில் ஆழ்ந்திருக்கின்றன. இவ்விருளினூடே ஒருவன் நீந்திச் செல்லலாம்.'' இந்த வர்ணனையில், காமத்தினாலும், பேராசையினாலும், ஆக்கிரகத்தினாலும் இயக்கப்பெற்று இதன் மீது (இவ் விருளின் மீது) ஜனங்கள் அலைந்து திரிகிறார்கள் என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது.

''சாருதத்த''த்தில் தூர்த்தன், 'இரவின் காரிருள் என்னைத் தடுக்கவில்லை, ஏனெனில், என் தன்மை அதனிலும் கரியது. ஆகையால், இரவிருள் என்னிலும் இலேசாய் இருக்கின்றமையின், எந்தச் சந்தின் வழியேயும் நான் போவேன்' என்று பிரதாபம் பேசுகிறான்.

''அவிமாரக''த்தில் மேகங்கள் இவ்வாறு வர்ணிக்கப்பட்டுள்ளன: ''கறுநீலமான இம் மேகங்கள் அழகாய் இருக்கின்றன. பெய்யும் மழையில் இடிகளென்னும் மத்தளங்கள் முழங்க நடிகர்கள் பலவிதமான ஆடல்கள் புரிவதுபோல் இருக்கின்றன. இவை இந்திரனது பசுக்கள், நட்சத்திரங்களை மறைக்கும் திரைகள்; மின்னொளியென்னும் பெண் பாம்புகள் உறைவதற்கான கரையான் புற்று வீடுகளாகும். தேவலோகத்துச் சாலையில் வளரும் புதர்கள் போன்றிருக்கின்றன; மன்மதனுடைய அம்புகளைக் கூராக்கத் தீட்டும் சாணைக்கற்களாம்; மலைகளுக்கு அபிஷேகம் செய்யும் பொருட்டுச் சமுத்திரத்திலிருந்து பிச்சை வாங்கி வரும் தண்ணீர்ச் சாடிகளாம்; சூரிய சந்திரர்களின் ஒளியை மறைப்

பதற்கான மடிப்புக் கதவுகளாம்; வானத்துச் சொரி தாரைகளிற் குளிப்பதற்கான நீர்த் தொட்டிகளாம்.''

''அபிஷேக நாடக''த்தில் சமுத்திரம் இவ்வாறு வர்ணிக்கப் பட்டிருக்கின்றது: ''இதோ என் பிரபுவாகிய சமுத்திரராஜன் இந்திர நீல மஞ்சத்திற் பள்ளி கொண்டுறங்குகின்றார்; மஞ்சத்து மேற்கட்டி கார்மேகங்களால் அமைக்கப்பட்டள்ளது; நுரைகளாய்ப் பரிணமிக்கும் அலைகளென்னும் மாலைகளை அணிந்துள்ளார்; நதி வடிவான ஆயிரங்கரங்கள் வாய்ந்துள்ளார்.''

ஆகாயத்தில் உயரப் பறக்கும் ஒரு வித்தியாதரனுடைய பிரபஞ்ச ஸ்தூலதரிசனம் ''அவிமாரக''த்தில் இவ்வாறு வர்ணிக்கப் பட்டிருக்கின்றது: ''பிரம்மாண்டமான மலைகள் சிறிய யானை களைப்போல் இருக்கின்றன, கடல்கள் நீராடும் குளங்களைப்போல் இருக்கின்றன; மகாநதிகள் சாதாரண எல்லைக் கோடுகள் போல் இருக்கின்றன; மரங்கள் வாத்துக்கள் ஓடியாடும் நீர் நிலயத்துக்களைப் புற்களைப்போல் இருக்கின்றன; தரைமீது பள்ளங்களே இல்லாமற் போயின; பெரிய வெண்மையான மாளிகைகள் பனித்துளிபோல் இருக்கின்றன.''

யெளவனம் ஆர்வமிக்கது, எண்ணாமை வாய்ந்தது. கஷ்டங் களைப் பொருட்படுத்தாது, சட்டத்துக்கடங்கி நடக்காது, மூர்க்க முடையது, அதன் ஆத்திரம் அறிவை அழிக்கின்றது, ஆபத்துக்கிட மானது; ஆனால், மனத்துககு இனிமையானது என வர்ணிக்கப்பட் டிருக்கின்றது.

போலீஸ்காரர்கள் லாந்தர்களைப் பிடித்துக்கொண்டு சாலை களில் நடப்பதாகவும், திருடர்கள் நாற்சந்தி மூலைகளிலுள்ள கள்வர் - கூட மென்னும் இருண்ட இடங்களில் ஒளிவதாகவும் வர்ணிக்கப் பட்டிருக்கின்றது.

''பிரதிமா நாடக''த்தில், ராமர் நீங்கினபின் அயோத்தியாபுரி இவ்வாறு வர்ணிக்கப்பட்டிருக்கின்றது: ''பெருந்தன்மை வாய்ந்த யானைகள் தீனி மறுக்கின்றன; போர்க்குதிரைகள் கனைக்காமற் கண்ணீர் ததும்பி நிற்கின்றன; நகரவாசிகள், ஆண், பெண், பெரியார், சிறியார், எல்லாருக்கும் உணவின்மீது நோக்கமில்லை; வம்புப் பேச்சில் விருப்பமுமில்லை; முகத்தில் துக்கங் குடிகொண்டு உரக்கப் புலம்புகிறார்கள்; இராமர் தம் தம்பியோடும் மனைவியோடும் செல்லும் வழியையே பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.''

ராமர் புறப்பட்டுப் போனபிறகு தசரதர் இவ்வாறு ஓலமிடு கிறார்: ''ராமன் சூரியனைப் போல அஸ்தமித்துப் போனான்; சூரியனைத் தொடர்ந்துபோகும் பகலைப் போல லட்சுமணன் அவனைப் பின் தொடர்ந்து போயிருக்கின்றான்; சூரியனோடும் பகலோடும் மறைந்து போகும் நிழலைப் போலச் சீதை அவர்களுடன் மறைந்து போனாள்; எனக்கு மக்களில்லாதவாறு விதி ஏன் வகுக்கவில்லை, அல்லது, ராமனை மற்றோர் மன்னனுக்குப் புத்திரனாக ஏன் பிறப்பிக்கவில்லை, அல்லது, கைகேயியை காட்டிற்கு பெண்புலியாகப் பிறப்பிக்கலாகாதா?''

சுமந்திரன் ரதத்துடன் திரும்பி வந்தபோது அரசன், 'அம் மூன்று கண்மணிகளுமில்லாமல் ரதம் திரும்பி வந்திருக்குமாயின், தசரதனை அழைத்து வருமாறு யமன் தன் ரதத்தை அனுப்பியுள்ளா னென்பது தெளிவு' என்று சொல்கின்றான்; அவன் அம்மூவர் பெயர் களையும் ராமன், லக்ஷ்மணன், சீதை என்று வரிசையாக உச்சரித்துப் பின்பு, 'அது சரியன்று; அது ராமன், சீதை; லக்ஷ்மணன்' என்னும் வரிசையாக வரவேண்டும்; இங்ஙனம் சீதை இருபுறத்திலும் காக்கப் பெறுவாராக' என்று சொல்லுகிறான்.

நெடுங்காலம் மலைப் பிரதேசத்தில் வசித்துக்கொண்டிருந்து தன் ஊருக்குத் திரும்பிப் போகையில் அங்கே என்னென்ன நிகழு மென்று பரதன் எதிர்பார்க்கும் விஷயங்களின் விவரம் மிகத் தெளிவா யிருக்கின்றது.'' என் உறவினர்களைப் பார்க்கவேண்டுமென்னும் அவாவினால் என் மனம் ஆத்திரப்பட்டுத் துடிக்கின்றது! என் தகப்ப னாருடைய பாதங்களிற் பணிந்து நமஸ்காரம் செய்கின்றேன்; அவர் என்னை மேலே தூக்குகிறார். என் சகோதரர்கள் அவசரமாக என்னிடம் ஓடி வருகிறார்கள்; என் தாய்மார்களின் கண்ணீரினால் என் உடம்பு நனைகின்றது. அவன் எவ்வளவு நன்றாக இருக்கிறான்; உயரமாக வளர்ந்திருக்கிறான், பலமுடையவனாகவும் இருக்கிறான்' என்று வேலைக்காரர்கள் என்னைச் சொல்லுகிறார்கள். என்னுடைய மலை நாட்டுக் கொச்சைப் பேச்சையும் விகாரமான ஆடையையும் பார்த்து லக்ஷ்மணன் பரிகாசம் பண்ணுகிறான்.''

ரதஸாரதி தனக்குத் தானே சொல்லிக் கொள்கிறான். ''அவனுக்கு நான் உண்மையைச் சொல்ல முடியாது. தந்தையின் மரணம், தாயின் அதிகார ஆசை, தமையனது தேசப்பிரஷ்டம் என்னும் மூன்று அவச் செய்திகளையும் ஒருங்கே எவன் சொல்லுவான்?''

உருவச் சிலைச்சாலை காப்போன் தசரதருடைய மூன்று மூதாதைகளையும் தசரதரையும் நன்றாக வர்ணித்துரைக்கிறான்: ''இது

தருமமென்னும் தீபத்தையேற்றி வைத்த திலீப மகாராஜன்; இது ரகுமகாராஜன். இவர் உறங்கும்போதும் தூக்கந் தெளிந்தெழும் போதும் ஆயிரக்கணக்கான பிராமணர்கள் வேதமோதுவார்கள். இது அஜமகாராஜன். தமது அன்புக்குரிய மனைவியின் பிரிவாற்றாமல் இவர் ஸிம்மாஸனத்தையும் ராஜ்யத்தையும் துறந்து தவம் புரிவதற்காகக் காடுபுக்கவர். இவர் தசரத சக்கரவர்த்தி; கன்னியாசுற்கமாகத் தம் உயிரையும் ராஜ்யத்தையும் அளித்தவர்.''

ஜனஸ்தானத்து ஆசிரமத்தில் சீதாதேவி வளர்த்த செடிகளுக்குத் தண்ணீர் வார்க்கும் காட்சி வர்ணனை இனிமையாயிருக்கின்றது. இது ராவணன் அவளையெடுத்துக் கொண்டு போகுமுன் நிகழ்ந்ததாகும். அவள் தண்ணீர் வார்த்துக்கொண்டிருப்பதை ராமர் பார்த்து, 'அரண் மனையில் இருக்கையில் முகம் பார்ப்பதற்குக் கண்ணாடியைக் கையி லேந்தியதால் களைப்புள்ள இந்தப் பெண் இப்போது கனத்த தண்ணீர்க் குடங்களைத் தூக்கிக் கொண்டு போகிறாள். வனவாசமானது மெல் லியல் மாதரையும் காட்டுக் கொடிகளைப் போலக் கடினமாக்கு கின்றது' என்கிறார். சீதை மீட்புண்டபின் ஜனஸ்தானத்திற்குத் திரும்பி வந்து மரங்களுக்குத் தண்ணீர் வார்க்கிறாள். ''முன்னர்க் குனிந்து ஒவ்வோர் இலையும் பார்த்துத் தண்ணீர் வார்த்த நான் இப்போது இலைகளை அண்ணாந்து பார்க்க வேண்டியிருக்கிறதே'' எனக் கூறு கின்றாள். அதற்கு ராமர், 'உலகத்தில் வாழ்வும் தாழ்வும் இங்ஙனமே யாகும்' என்று சொல்கிறார்.

ராமருக்கும் பரதனுக்கும் பார்வைக்கு ஒரே மாதிரியாயிருக் கிறார்கள். அவர்களுடைய குரலும் ஒரே மாதிரியாயிருக்கின்றது. ஆன தனால், லக்ஷ்மணனும் சீதையும் பரதனை ராமரென்று ஒருபோது நினைத்து மயங்குகிறார்கள். ஆயினும் காட்டுமான்கள் பரதனைக் கண்டு வெருண்டோடுகின்றன, ராமனைக் கண்டு தாராளமாகச் சூழ்ந்து விளையாடுகின்றன!

சீதாதேவி சிறைப்படுவதற்கு முன் ஜனஸ்தானத்தில் அவளைப் பார்த்திருந்த கிழ ஆமையொன்று அவள் திரும்பி வந்தபின் அவளை உற்றுப் பார்க்கின்றது. அதன் மனோபாவத்தில் விகற்பமே இல்லை. ஆனால், 'அது உண்மையோவெனச் சந்தேகிக்குமளவு நன்றாயிருக் கின்றது' என்று சொல்லி, பொன்மான் பெயரைச் சொன்னவுடனே உடல் நடுங்குகின்றாள்.

சாருதத்தனுடைய நிலைமை, சூரியோதய காலத்தில் தன் ஒளியை யெல்லாமிழந்த சிறந்த சந்திரனைப்போல, மங்கிப் பரிதபிக்கத்

தக்கதாயிருக்கிறதென்று மைத்ரேயன் வர்ணிக்கிறான். ஏழையொருவனைப் பார்த்து, 'இவன் நடைப்பிணம்போல் நடமாடிக் கொண்டிருக்கிறான்' என்று சாருதத்தனே ஓரிடத்திற் சொல்லுகிறான். 'செல்வம் இழந்துபோவதனால் மாத்திரம் கஷ்டமில்லை. அதோடு நண்பர்களை இழப்பதனால்தான் கஷ்டம். செல்வம் குறைந்தவுடன் நண்பர்கள் நம்மை உபேக்ஷிக்கிறார்கள்' என்று அவன் கூறுகிறான். வறுமை அனுபவித்த பின் வளமை வாய்ப்பது இருளில் திகைப்பவனுக்கு விளக்கொளி அளித்ததுபோல் ஆகும்' என்று அவன் சொல்லுகிறான். 'ஏழையொருவன் எவ்வளவு நற்குண நற்சீலனாயினும், அவனுடைய வறுமையினாற் சந்தேகித்து யோக்கியர்களும் அநேகக் கெட்ட காரியங்களை அவனுக்கு ஆரோபிக்கிறார்கள்' என்றும் சொல்லுகிறான். ஆனால் அவன் சத்தியப் பிரியன்; 'அன்புடைய மனைவியும் உண்மையான நண்பனும் உடையவன், எவனையும் முற்றும் ஏழையென்று சொல்ல முடியாது' என்றும் மொழிகிறான்.

''சாருதத்த''த்தில் கைதேர்ந்த கள்வன் இங்ஙனம் வர்ணிக்கப்பட்டுள்ளான்: ''தாவுவதில் பூனை, நழுவியோடுவதில் ஓநாய், வழுக்கிப்போவதில் பாம்பு, பாய்ந்தடிப்பதில் பருந்து, மாறுவேஷம் பூண்ட மாயையே, தரைமீது வீசும்காற்று, நீர்மீது நடக்கும் படவு, இருட்டில் ஒளி, ஒளியில் இருள், ஒவ்வொரு கிருகஸ்தனுடைய நித்திரா பரிமாணத்தையும் அளந்தறிவதற்கான 'பாரமாத்திரி' என்னுங் கருவி,''

''மத்தியம வியாமோக''த்தில், பலியிடுவதற்காகக் குறிப்பிடப்பட்ட குமாரனது பிராமணப் பெற்றோர், தங்கள் கன்றின்மீது புலி பாய்ந்தபோது திகிலுறும் காளையையும் பசுவையும் போல ஏங்குகிறார்கள் என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

''பாஞ்சராத்திர''த்தில், துஷ்டமகன், உலர்ந்துபோன காட்டுமரமொன்று காட்டுத் தீ பற்றியபோது தன் காடு முழுமையும் அழிப்பதுபோல, தன் குடும்பத்தையே அழிக்கிறானென்று சொல்லப்படுகின்றது. தீப்பற்றிய கூரையான் புற்றினின்று பாம்புகள் குதித்தோடுவதுபோல, ஐம்புலன்கள் மரித்தவனது உடலினின்றும் நீங்குகின்றனவெனச் சொல்லப்பட்டிருக்கின்றது. விறகு இன்மையால் அவியும் தீயானது, பணமின்மையால் பயனற்றுப்போம் தயாளத்தைப் போன்றதாகும் என்று சொல்லப்படுகின்றது. பீஷ்மகன் தக்ஷிணத்து வாசற்கதவின் தாழ்ப்பாளெனச் சொல்லப்பட்டிருக்கின்றான். ''ஊருபங்க''த்தில் இறக்குந் தறுவாயிலுள்ள துர்யோதனனைப் பார்த்து துக்கமூண்ட தந்தை, அவனை உடைந்துபோன கதவின் தாழ்ப்பாளெனக் கூறுகின்றான். ''பிரதிமா நாடக''த்தில் சீதையென்னும் பதிவிரதா மனைவியின் வர்ணனை நன்றாயிருக்கின்றது: ''சூரியனது சாயை

போல, சந்திரனைப் பின்பற்றும் நிலவொளிபோல, சுற்றிக் கொண்டிருக்கும் காட்டு மரத்தோடு விழும் கொடிபோல, தான் காதலித்த ஆண் யானையைப் பின்றொடர்ந்து பெண் யானை சேற்றுப் பள்ளத்தில் வீழ்வதுபோலச் சீதையானவள் ராமரைப் பின்பற்றிச் சென்று பலவிதமான கஷ்ட நஷ்டங்களுக்கும் உட்படுகிறாள்.''

''ஸ்வப்ன வாஸவதத்தம்'' நான்காம் அங்கம் 4-a என்னும் இலக்கமிட்ட சுலோகத்திலும் பதிவிரதையின் லக்ஷணம் அழகாக விவரிக்கப்பட்டிருக்கின்றது. ''சாருதத்த''த்தில் வரண்ட குளத்தைப் போன்ற நிர்த்தனனாகிய சாருதத்தனை ஏன் மதித்து மரியாதை செய்கின்றாயெனத் தூர்த்தனை நோக்கிச் சகரன் வினவியபோது, 'அவன் இப்போது வறண்டுபோன குளத்தைப் போன்றிருக்கிறானென்பதில் ஐயமில்லை. ஆனால், மனிதர்களின் தாகத்தைத் தணித்தே அக்குளம் வறண்டு போயிற்றென்பதை மறக்காதே' என்று தூர்த்தன் பதில் மொழிகின்றான்.

பாஸகவியின் நாடகங்களைக் குறித்துச் சொல்லக்கூடிய பெரிய விஷயம் என்னவெனில், அவை ஒவ்வொன்றும் அரங்கத்தில் எளிதிலாகுவதற்கு ஏற்றவை. சம்வாதங்கள் சுருக்கமாயும் முறுக்காயும் இருக்கின்றன. பாஷை நடை சரளமாகவும் விஷயத்தையொட்டினதாகவும் இருக்கின்றது, செய்கைகள் சுறுசுறுப்பாகவும், தெளிவாகவும் இருக்கின்றன. உண்மையிற் சொல்லப்போனால் நாடகப்போக்கு விரைவில் நடைபெற வேண்டுமென்னும் ஆவல் பாஸகவிக்கும் அதிகமாயிருக்கின்றது. அதனால் இவன் அதற்கு அனுகூலமாயில்லாத விஷயங்களையெல்லாம் நீக்கி விடுகிறான்; இன்னாரென்று அறிவிக்காமலே அநேகம் பேர் அரங்கமேடைக்கு வருகிறார்கள். அநேகர் பெயரால் மாத்திரமே குறிக்கப்படுகிறார்கள். அநேகர் அவர்களுடன் பேசும்போது அரங்கத்தில் இருப்பதில்லை, அநேகர் உள்ளே போய் நொடிப் பொழுதில் திரும்பி வந்துவிடுவார்கள். தெரிந்துகொள்ள வேண்டிய விஷயம், அதற்கு எத்தனை நேரம் பிடிக்குமோ அதற்குள்ளாகவே தெரிந்துகொள்ளப்படுகிறது.

உபகதைகளையும், சம்பவங்களையும், நாடகபாத்திரங்களையும் உயிர்க்களையோடு வர்ணிப்பதிற் பாஸகவி அதிசாமர்த்தியமுள்ளவன்; அப்பாத்திரங்களை விவரிக்காமலும், அரங்கத்திற் கொண்டு வராமலும்; ஆனால், அவர்கள் வர்ணிக்கப்பட்டிருப்பது போலவும், அரங்கத்திற் காணப்பட்டிருப்பது போலவும் ஜனங்களுக்குத் தோன்றும்படி செய்கிறான். உதாரணமாக, ''யௌகந்தராயண சபத''ங்களில் உதயனனும் வாஸவதத்தையும் அரங்க மேடைக்கு வரவில்லை;

அப்படியிருந்தும் அவர்கள் எப்போதும் அங்கே இருப்பதாக நமக்குத் தோன்றுகிறது. யானைக்காட்டு நிகழ்ச்சிகளின் காட்சி, யக்ஷிணி கோவிலில் தோள் மாற்றிக்கொள்ளுதல், சிறைச்சாலையிற் காமாசாரம், வீணைப்பாடம் கற்பித்தல் ஆகிய இவையெல்லாம் அரங்கத்தில் பத்துமுறை ஆடக்காட்டியதுபோல நம் கண்ணுக்குப் புலப்படுவன வாயிருக்கின்றன. வாஸவதத்தை இறந்து போனாளென்று பிரம்மசாரி வந்து சொன்னதைக் கேட்டு அரசன் துயருறுவதும் அதுபோலவே இருக்கின்றது. சாலங்காயனன், ஆருணி, வத்ஸனது தாய் ராணியார், மகதத்து ராணியார், இன்னும் எத்தனையோ பேர் அரங்கமேறவேயில்லை. ஆயினும், அவர்கள் இன்னாரென்று நமக்குத் தெரியும். ஆயினும் அவர்களுடைய வியக்திகள் மேகாடம்பரமில்லாத காலைவேளையில் இமயமலைச் சிகரம்போலத் தெளிவாகப் புலப்படுகின்றன. யுத்தங்களும் மற்றச் சம்பவங்களும் ஹம்ஸகன், வஸந்தகன் முதலானவர்களால் விவரித்து உரைக்கப்படுவதல்லாமல், சாமானியமாய்த் தற்செயலாய் வருகிற தூதர்களாலும் வர்ணிக்கப்படுகின்றன. உதாரணமாக, உதயனனுக்கு அங்காரவதி அனுப்பிய தூதன், அவளும் மகாசேனரும் வாஸவதத்தையை உதயனன் மணக்கும்படி செய்ய வேண்டுமென்னும் நோக்கங்கொண்டே அவனைப் பிடித்து உஜ்ஜைனிக்குக் கொண்டுபோனதாகவும், அந்த உத்தேசத்தை நிறைவேற்றும் பொருட்டே அவனிடம் அவளை வீணை கற்க வைத்ததாகவும் சொல்லுகிறான்.

பாஸகவியினிடத்துள்ள மற்றொரு விசேஷமான பெருங்குணம் என்னவெனில், இவன் பொதுவாக லோகாபிமானமுடையவனாயிருந்தும் இந்தியாவின் மீதும் இந்தியக் கலாபி விருத்தியின் மீதும் மிகுந்த பக்ஷமுடையவன், இவைகளைப் பெரிதும் ஆதரிப்பவன். ஷேக்ஸ்பியரைப் போல இவனும் ஒரு காலத்திற்கே உரியவனல்ல. எல்லாக் காலத்துக்கும் உரியவன். ஆனால், ஷேக்ஸ்பியர் இங்கிலாந்தின்மீது மிக்க அபிமானம் பாராட்டியவன். அதனால் எட்டாம் எட்வர்ட் என்னும் ஆங்கிலத்தரசன் அவன் மற்றெல்லாத் தன்மைகளைக் காட்டிலும் ஆங்கிலத்தவன் என்னும் தன்மையே மிகுந்தவனென்று சொன்னான்; பாஸனும் உலகத்திற்கெல்லாம் பொதுவானவனாயிருந்தபோதிலும் இந்தியாவின் பெருமையையே பெரிதும் கொண்டாடினவன். இந்தியாவின் மீதும் இந்தியக் கலாபி விருத்தியின்மீதும் தனக்குள்ள பக்ஷபாதமான அபிமானத்தினால் ''அபிஷேக நாடக''த்தில், பலவீனமான சாஸ்திர வாக்கியார்த்தத்தைக் கொண்டு ராமர் வாயால் ஒரு வார்த்தை சொல்விக்கிறான். சுக்கிரீவனும் வியபிசார தோஷத்திற்குரியவனாயிருக்க, அவனையும் கொல்லாமல் தன்னை மாத்திரம் கொல்வது ஏன் என்று ராமரை வாலி கேட்கிறான். அதற்குச் சமாதானமாக, ராமர் தமையன் மனைவியோடு

வியபிசரிப்பதைக் காட்டிலும் தம்பியின் மனைவியோடு வியபிசரித் தலே பெருங் குற்றமெனச் சாத்திரங்கள் சாற்றுகின்றன என்று சொல்லு கிறார். ''இது பதில் சொல்ல முடியாத நியாயம். ஆனால் வைதீகப் பற்று மிகுந்த ஹிந்துவே இதையேற்றுக் கொள்வனேயல்லாமல் மற்றெவனும் ஒப்பமாட்டான்'' என்று வாலி அதற்கு எதிருரைக்கிறான்.

அந்நாடகத்தில் உலகத்தில் எல்லாச் சாதியாரும் ஒப்புக் கொள்ளத்தக்க பிரபலமான நியாயங்களைப் பாஸகவி தானே முதலில் எடுத்தோதுகின்றானாயினும் ஜாதீய நியாயத்தையே கைக்கொள்கிறான். ''விஷ்ணு மூர்த்தியே சுக்கிரீவனுக்குத் துணை செய்வதாயினும் அவனைக் கொல்வேன்'' என்று வாலியைக் கொண்டு சொல்வித்துப் பின்னர், ''விஷ்ணு மூர்த்தியையெதிர்த்து ஒருபோதும் சண்டை செய்ய மாட்டேன்'' எனவும் சொல்வித்துப் பெரிய பக்தனாக வாலியைக் காட்டுகின்றான். ஹிந்துவல்லாமல் 'ஸர்வ தேசாபிமானியா'யிருப் பவன் சொல்லக் கூடியது என்னவெனின், யுத்தத்தில் விஷ்ணுவின் பராக்கிரமத்தையும் பாராட்ட மாட்டேனென்று வீரம் கூறியதனால், வாலியின் கையிற் கொல்லுண்டு சாவதற்கிருந்த சுக்ரீவனை எவ்வகை யிலும் காப்பாற்ற ராமர் கடமைப்பட்டவராயினர். ஆனதனால் அவர் வாலியைக் கொல்ல வேண்டியதாயிற்று என்பதாம்.

அல்லது, நேரே பார்த்தால் தம் காலில் வாலி பணிவான், அவனைக் கொல்ல முடியாது. ஆதலால் முறை தப்பி இவ்விதமாக அவனைக் கொல்லவேண்டியதாயிற்று என்று ராமர் சொல்வதற்காகும்.

இந்திய மன்னன் இந்நாடு முழுமையையும், ஆஸேது ஹிமா சலம் வரையில், கடலுக்கடல் விரிந்ததும், இமய மலையையும் விந்திய மலையையும் இரண்டு காதணிகளாகக் கொண்டுள்ள தேசம் முழுமையும் ஏக சக்ராதிபதியாக அரசாண்டு, படையெடுத்துவரும் பிற நாட்டாரை நசுக்குகிறானென்று பெருமையாகப் பாஸன் வர்ணிக் கிறான். இந்தத் தேசாபிமானம் இந்தியர்களெல்லாருடைய மனத்திலும் ஊறி உற்சாக மூட்டும். இது போலவே ஷேக்ஸ்பியர் இங்கிலாந்தைப் பற்றிப் பெருமை பேசுகின்றார். ''இங்கிலாந்து, வெண் கடலில் அமைந் துள்ள இத்தீவு இங்கிலீஷ்காரன் ஒவ்வொருவனுடைய மனத்திலும் பெருமையூட்டுகின்றது'' என்று அவன் எழுதியிருக்கிறான்.

பாஸகவியை இவனுடைய ஸர்வ தேசாபிமானத்தின் பொருட் டும் ஸ்வதேசாபிமானத்தின் பொருட்டும் பிரேமித்துக் கொண்டாடு கிறோம். இவனுக்கு ஸ்வதேசாபிமானம் ஆழ்ந்திருப்பதனாலே இவ னுக்குள்ள ஸர்வதேசாபிமானத்தைக் கொண்டாடுகிறோம். எதுபோல

வெனின், பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாசம் என்னும் பஞ்ச பூதங்களைப் பெரிதும் ஆசையுடன் பாராட்டுகின்றோம். எதனாலெனின் அவற்றின் ஒவ்வொரு பகுதி நமக்குச் சொந்தமாய் நம்முடையதாகவே இருக்கின்றது. நமக்குச் சொந்தமான துண்டு நிலத்தில் இருப்பது, நமக்கு மாத்திரமே சொந்தமாயுள்ள குளத்தில் நீராடுவது, நமது சொந்த நந்தவனத்தில் நல்ல வாயுவையனுபவிப்பது, நமக்கெனப் பிரத்தியேகமாக விளக்கொளியமைத்துக் கொள்வது, நமது மொட்டமாடியினின்றே வானத்தையும் நட்சத்திரங்களையும் உற்றுப்பார்ப்பது இவையே தொன்றுதொட்டு மனிதர்களுக்குப் பெரு மகிழ்ச்சியளிப்பனவாகும். பிச்சைக்காரன் தனக்கென மேற்சொல்லிய பஞ்ச பூதங்களில் ஒரு பகுதியைச் சொந்தமாகப் பெறானாயின், எங்கும் வியாபித்துள்ள பிருதிவி அப்பு தேவு வாயு ஆகாசங்களினால் நன்மையடைய முடியாது. நாம் மண்ணிற் பிறந்து மண்தன்மை வாய்ந்திருப்பதினாலே அப்படியிருக்கலாம். ஆனால், மனிதன் மத்தியனாயிருக்குமளவும் அஃது அப்படித்தான் இருக்கும்.

பாஸகவியை இந்நாட்டு மற்றப் பிரபல கவியான காளிதாஸனோடு ஒப்பிட்டுப் பார்த்து இவ்வத்தியாயத்தை முடிப்போனாக. காளிதாஸன் பாஸகவியின் நூல்களையூன்றிப் படித்தவன். பாஸனுடைய நாடகங்களிலிருந்து அநேக பிரசித்தமான காட்சிகளையும் அபிப்பிராயங்களையும் தெரிந்தோ தெரியாமலோ, தன்னுடைய ''சாகுந்தலம்'',''விக்கிரமோர்வசீயம்,'' ''மாளவிகாக்னி மித்திரம்'' என்னும் நாடகங்ளிலும், ''மேகஸந்தேசம்,'' ''ரகுவம்சம்'' முதலான காவியங்களிலும் எடுத்துக் கையாண்டிருக்கிறான். பாஸனுடைய மனம் வேதங்களையும் ஆதிபுராணங்களையுமே தழுவியது. அது பாரமார்த்திகச் சார்புள்ளதாய், தன் கொள்கையிலேயே திருப்தியடைந்ததாய், சுபநோக்கமேயுள்ளதாயிருந்தது. காளிதாஸனோ, பிற்பட்ட காலத்தில் இருந்தவன். அவனுடைய காலத்தில் இந்தியாவின் கலாபிவிருத்தியென்னும் கால்வாய் மிக்க ஆழமுற்றிருந்தது, அதிகக் கலங்கலாயிருந்தது. அவனுடைய காலத்தில் மனநிலை அதிக சிக்கல் வாய்ந்திருந்தது. வேதக் கடவுளாகிய அக்கினி, இந்திரன், வருணன் முதலான இயற்கைத் தேவர்கள் பாராட்டப்படாமல், அவர்களின் ஸ்தானத்தில் விஷ்ணு, சிவன், சக்தி என்பவர்கள் ஆராதிக்கப் பெறலாயினர். பழைய தேவதைகளின் மீதும் புதிய தேவதைகளின் மீதும் ஜனங்களெல்லாருக்கும் பக்தியும் விசுவாசமும் இருக்கிறதெனக் கொண்டு பாஸன் தன்னுடைய நாடகங்களின் மங்கள சுலோகங்களை யமைத்திருக்கிறான். அதுபோல வெறும் பிரார்த்தனைகளைக் காளிதாஸன் செய்வதில்லை. அதற்குப் பதிலாகக் காளிதாஸன், உலகத்தவர்களுக்கு நம்பிக்கையும்

விசுவாசமும் இல்லையெனக் கொண்டு அவர்கள் மனத்தைத் திருப்பும் பொருட்டு ஆத்யாத்மிக ஸித்தாந்தங்களைக் கூறுகின்றான்.

உதாரணமாக, ''சாகுந்தல'' நாடகத்தின் மங்கள சுலோகத்தில், நாஸ்திகனாயிருப்பவன் கடவுள் இருக்கிறார் என்பதற்குச் சாக்ஷியம் வேண்டுமென்று அலைவானேன் எனச் சுற்றுவழியாகக் கேட்கிறான். கடவுள் இருக்கிறாரென்பதற்கு நேரான சாக்ஷியங்கள் எட்டு இருக்கின்றன. அவையாவன, எல்லா உயிர்களையும் தாங்குகிற பூமி; எங்கும் வியாபித்துள்ள வாயு; ஹவ்ய கவ்யங்களைப் பாவனமாக்கிக்கொண்டு போகிற அக்கினி; இரண்டு வேறு வேறு வஸ்துக்களின் சேர்க்கையால் உண்டாகிய முதற்படைப்பான ஜலம்; காலத்தை வரையறுக்கும் சூரிய சந்திரர்கள்; எல்லாவற்றிற்கும் ஆதாரமாய்த் தனக்கு ஆதாரமுளதெனப் புலப்படாதிருக்கிற ஆகாசம்; பிறருடைய நன்மைக்காகப் பாடுபட்டு யாகம் (தியாகம்) செய்கிறவன் என்பனவாம்.

பாஸன் கேட்டிருக்கக் கூடியதுபோல பிரமன், விஷ்ணு, சிவன், அக்னி, வருணன், இந்திரன் என்பவர்கள் இல்லையா என்று காளிதாஸன் கேட்கவில்லை. காலம் மாறிப் போயிற்று; கொள்கைகள் மாறிப்போயின; சாதன முறைகள் மாறிப் போயின.

அதுபோலவே, பாஸனுடைய நூல்களில் அரசனானவன் ஸ்வேச்சாப் பிரபு, தன் பெயர் நீடித்திருக்க விரும்பினால் அவன் தர்ம நெறிப் பிரகாரம் தன் பிரஜைகளின் க்ஷேமத்திற்காக உழைக்கிறவனாவன். காளிதாசனுடைய அரசனோ, குடிகளின் இஷ்டப்படி நடக்கிறவன். ''சாகுந்தல''த்து முடிவுரைச் சுலோகம் இங்ஙனம் கூறுகின்றது: ''பிரஜைகளின் க்ஷேமத்திற்காக அரசன் உழைப்பானாக; அவர்களிஷ்டப்படி நடப்பானாக; விவேகிகளின் ஆலோசனையும், வித்துவான்களின் வார்த்தையும், சாதுக்களின் சொல்லும் எவ்விடத்தும் பெருமைப்படுத்தப் பெறுமாக; ஸ்வயம்புவாய் நீலகண்டனாயிருக்கிற சிவபிரான் எனக்கு மறுபிறப்பில்லாமற் செய்வானாக.''

பாஸகவி ஏகாதிபத்தியத்தையும், கேவல நற்குணத்தையும், சோர்வில்லாச் சுப பாவனையையும் தாங்கிப் பேசினன். காளிதாசனோ, பிரஜாபிப்பிராயந்தழுவிய அரசியலையும், விவேகத்தோடு கூடிய நற்குணத்தையும், யுக்தமாயுள்ள அசுப பாவனையையும் தாங்கிப் பேசினன்.

பாஸனோ, நீல்நிறம் வாய்ந்த யமுனாநதிக்கு ஒப்பாவன்; அது தெளிந்த நீருடையது, காண்பதற்கும் குளிப்பதற்கும் இனிமையானது, ஆனால் ரோகக் கிருமிகளைக் கொல்லச் சக்தியற்றது. காளி

தாசனோ, இருண்டு கலங்கி மாயமாகத் தோன்றும் கங்காநதிக்கு ஒப்பாவன்; அதிற்குளிப்பதும் விளையாடுவதும் ஆபத்துக்கிடமாகும்; அதில் அழுக்கும் அசுத்தமும் எத்தனையோ இருப்பினும் அது ரோகக் கிருமிகளை நொடிப் பொழுதிற் கொல்லத்தக்கது. இவ்விரண்டு நதி களும் கூடுகிற இடம் இந்தியாவுக்குள் சிரேஷ்டமான **திரிவேணி சங்கமம்** என்னும் புண்ணிய ஸ்தலமாகும். அதுபோலவே பாஸனை யும் காளிதாசனையும் ஒன்றித்துப் பார்த்தாலே இந்திய நாடகவியலின் சிறப்பு விளங்கும். இற்றைநாள் இந்தியாவில் அசுப பாவனையே குடி கொண்டிருக்கிறது, ஆத்தியாத்மிக விசாரத்தில் அநேக சிக்கல்களும் குழப்பங்களும் ஏற்பட்டுள்ளன; காளிதாசன் செய்ததுபோல சக்தி பூசையும் காளி பூஜையும் மும்முரமாய் இருக்கின்றன. இற்றை நாளில் பாஸ னுக்குள்ள கேவல விஷ்ணு பக்தியானது விசேஷ பெருமையுடையதாகும்; நூற்குண்டானது ஓர் ஓரத்திலிருந்தால் அதை மையத்தில் நிலைநிறுத்தும் பொருட்டு மற்றோர் ஓரத்திற்குத் தள்ளவேண்டுமல்லவா?

பாஸன் உரத்துக் கூவுகிற கற்கசமான உபதேசத்தைக் காட் டிலும் இற்றைநாள் இந்தியாவுக்கு உபயோகமாகத்தக்க நல்லுபதேசம் வேறு இல்லை: ''ஆஸேது ஹிமாசலம் வியாபித்துள்ள பூமியின் மக்களே! நேர் வழியிற் செய்த முயற்சி எப்போதும் நன்கு பலிக்கும். மனிதனால் ஆகாதது ஒன்றுமில்லை. ஆதலால் உன்னாலாகாதது எதுவுமே இல்லை. ஊக்கங் கொண்டெழுந்து உன் தர்மத்தை (கடமை யை)ச் செய். தாய் தந்தையரையும் ஆசாரியரையும், அதிதியையும், சனாதன தர்மத்தோடு கூடிய இந்த நமது இந்தியாவையும் போற்றி, மானிடர்க்குரிய பூர்ணபுருஷாகிருதியை யடையுங்கள்.''

இப்புத்தகத்திலடங்கிய நாடகங்களிரண்டும் நிச்சயமாகப் பாஸனால் எழுதப்பட்டவைகளே. ஏற்கெனவே நாம் சொல்லி யிருப்பதுபோல, தீயினுக்கு இரையாகாமல் மீந்துநின்ற பாஸனுடைய உத்தமமான நாடகம் ''ஸ்வப்ன வாஸவதத்தம்'' என்பதேயாமென்று **ராஜசேகரர்** குறிப்பிட்டிருக்கிறார். ''ஸ்வப்ன வாஸவதத்த''த்தில் வரும் ''கிரீடை''யைப் பற்றி **அபிநவகுப்தர்** சொல்லியிருக்கிறார். அந்தக் கிரீடை என்பது ''ஸ்வப்ன வாஸவதத்தம்'' இரண்டாம் அங்கத்தில் வருகிற பந்து விளையாட்டேயாகும்.

அதுபோலவே **ஸாரதாதன்யர்** என்பவர் விமரிசை செய்கிற ''ஸ்வப்ன நாடகம்'' என்பதன் கதாபீஜம் முழுவதும் இந்நாடகத் தையே ஆதாரமாகக் கொண்டதெனத் தோன்றுகின்றது. **போஜதேவன்** என்பவன் தன்னுடைய ''சிங்காரப்பிரகாசம்'' என்னும் நூலில் ஒரு ''ஸ்வப்ன நாடக''த்தினின்று சில சம்பவங்களைக் குறிப்பிட்டிருக் கிறான். அவை நமது ''ஸ்வப்ன வாசவதத்த''த்தின் ஐந்தாம் அங்கத்தி லுள்ள நீராழி மண்டபக் காட்சியேயாகவேண்டும்.

**சர்வானந்தன்** என்பவனும் ''ஸ்வப்ன வாஸவதத்த''த்தைக் குறிப்பிட்டிருக்கின்றான். ஆனால், பாடாந்தர தோஷத்தினால் அதைக் **காமசிங்கார** (காதற்கலியாண) நாடகம் என்று சொல்லியிருக்கிறான்; **அர்த்தசிங்கார** (பொருட் பரிணய) நாடகமென்று சொல்லியிருக்க வேண்டும். பாடாந்தர தோஷம் இல்லையெனக் கொள்ளினும், வாஸவ தத்தை உதயனனை மணந்தது **காமசிங்கார**த்தைக் குறிக்கும். இந்நாட கத்தில் அந்த விவாகம் பல இடங்களில் குறிக்கப்பட்டிருக்கின்றது; அது **காமசிங்கார** விவாகமேயாகும்.

**ராமசந்திரனும் குணசந்திரனும்** தங்களுடைய ''நாட்டிய தர்ப்பணம்'', என்னும் நூலில் ''ஸ்வப்ன வாஸவதத்த''த்தை விசேஷ மாக எடுத்துக் குறிப்பிட்டிருக்கிறார்கள்; அது பாஸன் எழுதிய நாடக மென்றும் சொல்லியிருக்கிறார்கள்; அதன் நான்காம் அங்கத்திலுள்ள **செபாலிக** மலர்களையும் கருங்கல் திண்ணையையுஞ் சொல்லியிருக் கிறார்கள். **சாகர நந்தி** என்பவன் இந்நாடகத்து முதலாம் அங்கத்தின் பிரஸ்தாவனையைச் சங்கிரகித்துத் தன்னுடைய சொந்த வார்த்தை களிற் சொல்லியிருப்பதாகத் தோன்றுகின்றது. ''சாகுந்தல வியாக் கியை'' என்னும் நூலில் முதலாம் அங்கத்துப் பிரஸ்தாவனையிலுள்ள சொற்கள் உள்ளவாறே எடுத்தெழுதப்பட்டிருக்கின்றன. வாமனன் என்பவன் தன்னுடைய ''காவியாலங்கார விருத்தம்'' என்னும் நூலில் நான்காம் அங்கத்து மூன்றாம் சுலோகத்தை எடுத்தெழுதியிருக்கின்றான்.

''பிரதிக்ஞா யௌகந்தராயண''த்தைப் பற்றிச் சொல்வோ மாயினும், பாமன் என்பவன் அதைத் தன்னுடைய விமரிசையிற் குறிப்பிட்டிருக்கின்றான். கிருத்திரிம யானையை உதயனன் நிஜமான தெனக் கொண்டதும், மகாசேனனுடைய படையாட்களிற் பலரைப் போரில் உதயனன் கொன்றிருக்க, அங்ஙனம் கொல்லுண்டவர்கள் அவர்களுடைய சகோதரர்கள், புத்திரர்கள், தந்தைமார்கள், சித்தப்பன், மாமன் முதலானவர்களாயிருக்க, அவர்கள் உதயனனைக் கொல் லாமல் விட்டதும் சாமானிய விவேகமுள்ளவன் ஒப்புக்கொள்ளத் தக்கன வல்லவென்று பாமன் குற்றங் கூறுகின்றான். ஆனால், பாமன் குறைகூறுவது சரியல்லவென்பது திண்ணம். ஏனெனில், மரத்தினால் விகாரமாகச் செய்து தோலைப் போற்றி வைத்திருந்தால் அதை எவனும் யானைப்போலி என்று எளிதில் தெரிந்துகொள்வான். ஆனால், தாஸத்து (Madame Tassaud) மாதின் சிலைச்சாலையிலுள்ள மாதிரி யானையைப் போலச் சமத்காரமாகச் செய்யப்பெற்றதொன்றைப் பார்த்து எவனும் எளிதில் ஏமாறிப் போவான். முக்கியமாக, அதனை நிஜமான யானைக் கூட்டமொன்று சூழ்ந்து மறைத்துக் கொண்டிருக் கையில் ஏமாறுவது இயல்பு.

அதுபோலவே, உதயனன் தன்னை வந்து வணங்கும்படி செய்யும்பொருட்டு அவனை உயிரோடு பிடித்து வரும்படி மகாசேனன் சொன்னதனால், சாலங்காயனன் குறுக்கிட்டு அவனுடைய படைகள் உதயனனைக் கொல்லாமல் தடுத்ததிலும் விபரீதமொன்றுமில்லை. அந்நாளில் குடிகளுடைய விருப்பு வெறுப்புகள் எப்படியிருப்பினும் அரசனது ஆக்கினையே நிறைவேற்றப்படும். பாமன் என்பவன் தன் பாண்டித்தியத்தைக் காட்டுவதில் பிரியமுள்ள கடுஞ்சோதகன் போலும்; மானிட இயற்கையின் தன்மையை மிதமீறிப் பாராட்டுகிறான். மானிட மனத்திற்குத் தோன்றுகிற நியாயவாதத் தீர்ப்பே சரியானதென்று ஆட்சேபிக்காமல் ஒப்புக்கொள்கிறான். டிராய் (Troy) தேசத்து மரக்குதிரைக் கதையை அவன் நம்பாமல் நிராகரித்திருப்பான்; ஆங்கில சோல்ஜர்கள் பலரின் உறவினர்களைக் கொன்ற **நெப்போலியன், பெல்லெரோபோனில்** ஓடியொளிந்தபோது ஆங்கிலத்தவர் அவனைக் கொல்லாமல் விட்டது அதிசயமென்பார்கள்.

நீலயானை நிஜமானதே யென்றும்; படைவீரர்கள் அதற்குள் ஒளிந்திராமற் சூழ்ந்திருந்த புதர்களில் ஒளிந்திருந்தார்களென்றும், யானைக்காடு என்பது மகாசேனனது அவந்தி தேசத்திலுள்ளதென்றும் புஸல்கர் நினைக்கிறார். சில காரணங்களினால் அவருடைய அபிப்பிராயத்தை நான் ஒப்புக்கொள்ள முடியவில்லை. **பிரச்சந்தம்** என்னும் வார்த்தை அந்தச் சந்தர்ப்பத்தில் உபயோகிக்கப்பட்டிருக்கின்றது. அந்தச் சொல்லுக்கு 'மறைத்து வைக்கப்பட்டது' என்று அர்த்தம்; கிருதக **ஹஸ்தி** என்று சொல்லப்பட்டிருக்கின்றது, அஃதாவது, 'கையினாற் செய்யப்பட்ட கிருத்திரம யானை' என்று அர்த்தம்; இதனால் அது ஸ்வயமான யானையன்றென்று தெளிவாகின்றது. போர்வீரர் அதற்குள் ஒளித்து வைக்கப்பட்டிருந்தது என்பதிலும் சந்தேகமில்லை. யானைக் காடானது வத்ஸ நாட்டிலிருந்த தென்பதற்கும் சந்தேகமில்லை. அங்ஙன மில்லையெனின், எல்லைப் பிரதேசத்தை அடக்கியாள்வது கஷ்டம்; அங்குள்ளவர்கள் வெட்கங் கெட்டவர்கள், இழிபிறப்பாளர் என்று உதயனனுக்குச் சொல்வதில் அர்த்தமே யில்லை. ''யௌகந்தராயண சபதங்கள்'' என்பதின் முதலாம் அங்கம் ஒன்பதாம் சுலோகத்திற்கும் அர்த்தம் ஏற்படாது. அந்தச் சுலோகம் எடுத்துக்காட்ட வந்த முக்கிய மான விஷயம் என்னவெனில், பிற நாட்டாருடைய ஆக்கிரமத்திற்கு அகப்படாமல் வத்ஸநாட்டை உதயனன் காத்துக் கொண்டிருந்தான். அந்நாட்டில் **வர்ணாசிரதர்மம்** நிலைகொண்டோங்கும்படி செய் திருந்தான். அதற்காக நன்றி பாராட்டி அவ்வத்ஸநாடு, அவனுக்கு ஆபத்து உற்றகாலத்தில், அவனைக் கொல்ல வந்தவனைத் தடுத்து அவனைக் காப்பாற்றியது என்பதாம். அவந்தி தேசத்தை உதயனன் ஆளவில்லை, பிறநாட்டாருடைய ஆக்கிரமத்தினின்று அதனை அவன்

காக்கவில்லை. வர்ணாசிரம தர்மம் அவந்தியில் முறைகெட்டிருந் ததை அவன் சீர்படுத்தவில்லை; ஆகையால், யானைக்காடு அவந்தி தேசத்தில் இருக்குமாயின், அந்தச் சுலோகம் பொருந்தவே பொருந்தாது.

''ஸ்வப்ன வாஸவதத்த''த்தில் ''பிரதிக்ஞா யௌகந்தராயண''த் திலுள்ள விஷயங்கள் பல குறிக்கப்பட்டிருக்கின்றன. ஆதலால் இந்நாட கங்களிரண்டையும் பாஸகவியே எழுதினனென்று ஏற்படுகின்றது. ''வாஸவதத்தையும் பாஸகவியினாலே எழுதப்பட்டதென்று தெளிவாக ருஜுப்பிக்கப்பட்டது; அதனால், ''யௌகந்தராயணம்'' அவனால் எழுதப்பட்டதென்று எங்கும் சொல்லப்படாவிடினும், அதுவும் அவ னாலேயே எழுதப்பட்டதென்று ருஜுவானதாகக் கொள்ள வேண்டும்.

இவ்விரண்டு நாடகங்களுஞ் சேர்ந்து ஒரே நாடகமாகின்றன வாயினும், அவை தனித்தனியே தத்தம் தன்மையில் வேறுபட்டிருக் கின்றன. ''யௌகந்தராயண சபதங்கள்'' என்பது ஆண் நாடகம்; இதில் விஜயை என்றும் அங்காரவதி என்றும் இரண்டு ஸ்திரீகளே வரு கின்றனர்; வந்தபோதிலும் அவர்கள் நெடுநேரம் அரங்கத்தில் இருப்ப தில்லை. வன்போர்களும், வேட்டைகளும், சூதுகளும், சதியாலோசனை களும், சபதங்களும், போர்க்கறைகளும், மதுபானங்களும், கொலை களும் இந்நாடகத்தில் முக்கியமாகக் காணப்படுகின்றன. இந்நாடகத் தின் முக்கிய ரஸம் வீரம்; ஆனால் அற்புதம் ரௌத்ரம் ஹாஸ்யம் என்னும் ரஸங்களும் இதனில் தோன்றுகின்றன. வாஸவதத்தையின் மீது வத்ஸராஜனுக்குள்ள மோகத்தை உள்ளூறவைத்து விதூஷகன் சொல்லும் விருத்தாந்தங்களினாலே சிங்காரரஸம் அதோதாரையாகக் காண்கின்றது. இந்த நாடகத்துக்கு யௌகந்தராயருடைய பெயர் வைக்கப் பட்டிருக்கிறதாயினும், இதில் கதாநாயகன் வத்ஸராஜன், கதாநாயகி வாஸவதத்தை. ஆனால் அவர்களிருவரும் அரங்கமேறுவதில்லை; ஆயினும், அவர்கள் அரங்கத்திலிருப்பதாகவே எல்லோர் மனத்திலும் தோன்றும். இஃது இங்ஙனமிருக்க ''ஸ்வப்ன வாஸவதத்த''மோ பெண் நாடகமெனத்தகும். இதில் சிங்காரம், கருணை, சோகம் என்னும் மிருதுவான ரஸங்கள் தோன்றுகின்றன. மற்ற ரஸங்கள் காணப்படாமற் போகவில்லை. அற்புதம், ஹாஸ்யம், சாந்தம் என்னும் ரஸங்களும் அமைந்திருக்கின்றன.

இவ்விரண்டு நாடகங்களும் இந்தியாவில் வழங்கிய பழைய ஐதிகங்களை ஆதாரமாகக் கொண்டுள்ளன. வத்ஸ நாட்டு உதயன னுடைய வீரச் செயல்களைப் பற்றிப் பேசுகின்றன. கி.மு. நான்காம் நூற்றாண்டில், பாஸனுடைய காலத்தில், வழங்கிய இந்தக் கதையின் விவரம் இப்போது நமது துரதிருஷ்டத்தால் கிடையாததாயிற்று.

ஆனால் ஜனங்கள் சொல்லிக்கொண்டிருந்த கதையை **குணாட்டியன்** என்பவன் எழுதிய ''பிருஹத் கதை'' என்னும் புத்தகத்தில் உள்ளபடி ஏறக்குறைய சுத்தமாகவே எடுத்தெழுதினனென்று கொள்வதற்காகும். பின்னாளில் இத சிற்சில சில்லறை மாறுபாடுகளுடன் சோமதேவன் என்பவன் தன்னுடைய ''கதாஸரித்ஸாகரம்'' என்னும் நூலில் எடுத் தெழுதினன். அஃதங்ஙனமாயின், கதையின் அழகை அதிகப் படுத்தும் பொருட்டும், நாடகமாட ஏற்கும்படி அதைச் சிறப்பிக்கும் பொருட்டும் பல முக்கியமான அமிசங்களிற் பாஸன் அநேக மாறுபாடு கள் செய்துள்ளான். இதுபோலவே ஷேக்ஸ்பியரும் 'ஹாம்லெட்டு' (Hamlet), கிங்கிலியர் (King Lear), மாக்பெத் (Macbeth), ஒதெல்லோ (Othello) என்னும் திருத்தமில்லாக் கதைகளைத் திருத்தி மாற்றிச் சிறப்பித்துள்ளான்.

கதாஸரித்ஸாகரத்தில் உள்ளபடி ஊர்க்கதையை இதனடி யில் எடுத்துரைப்பேன். அதற்குப்பின் நமது நாடகாசிரியன் செய் துள்ள மாறுபாடுகளையும் அவற்றின் அருமைகளையும் சுருக்கமாகச் சொல்வேன். சௌகரியத்தின் பொருட்டுக் கதையை நான்கு பாகங் களாகப் பிரிக்கின்றேன்.

அந்த லோகோக்தி கதை (Folklore Story) வருமாறு:

## முதற் பாகம்

### (''யௌகந்தராயணரது சபதங்களு''க்கு முற்பட்ட விஷயங்கள்)

**ஸதாணிகன்*** என்னுமோர் பிரசித்தமான அரசன் இருந்தான். அவன் பாண்டவ வமிசத்தோன்றல். **கௌஸாம்பி** என்பதைத் தலைநகரமாகக் கொண்டு அவன் வத்ஸ தேசத்தை யாண்டு வந்தான். அவனுக்கு **ஸஹஸ்ராணிகன்**** என்னுமொரு புத்திரன் இருந்தான். அவன் கோசல மன்னனது குமாரியாகிய **மிருகவதி***** என்பவளை மணந்தான். அவள் கர்ப்பவதியாயிருக்கையில் மசக்கையினால் மிக வருந்தினாள். ஒருநாள் அவள் இரத்தக் குளத்திற் குளிக்க விருப்பங்கொண்டாள். அரசன்

---

★ ஸதாணிகன்: நூறு படைப்பகுதிகள் உள்ளவனென்று அர்த்தம். கௌதம புத்தருடைய காலத்தில் இருந்த சுத்த சத்திரிய மன்னனென்று அவனை அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

★★ ஸஹஸ்ராணிகன் - ஆயிரம் படைப் பகுதிகளுடையவன்.

★★★ மிருகவதி - மான் கண்ணி.

அறநெறியைக் கடைப்பிடித்தவனாதலின் அவளுடைய ஆசையைத் தணிப்பதற்காக மிருகங்களையேனும் கொல்ல விரும்பினானில்லை. ஆயினும் அவளுடைய விருப்பத்தை ஈடேற்றக் கருதினான். ஆதலால், அவன் அவள் குறிப்பதற்கான நீர்த்தொட்டியில் செவ்வரக்குக் கரைந்த நீரை நிரப்பி வைத்தான். அந்நீர் இரத்தம் போலவே தோன்றும். அவ் விரண்டுக்குமுள்ள வித்தியாசத்தைத் தெரிந்து கொள்ளாமல் அந்த ராணி குளிப்பதற்காகத் தொட்டிக்குள் இறங்கினாள்.

அவள் அங்ஙனம் குளித்துக் கொண்டிருக்கையில், ஆகாயத் திற் பறந்து கொண்டிருந்த பிரம்மாண்டமானதொரு பறவையின் கண்ணுக்கு, இரத்த வெள்ளத்தில் மிதக்கும் இறைச்சித் துண்டம்போலத் தோன்றினள். உடனே அது விரைந்து அவள்மீது பாய்ந்தடித்து அவளை உதயகிரி மலைக்கு (இப்போது கஞ்சம் ஏஜன்ஸியிற் சேர்ந்துள்ளது) தூக்கிக் கொண்டு போயிற்று. ஒரு சிகரத்தின்மீது அவளை இறக்கி வைத்துப் பார்த்தபோது அவள் உயிருள்ள மானிடப் பிறப்பேயல்லாமல் பச்சையிறைச்சித் துண்டமல்லவென்று தெரிந்து அது வெறுத்து அவளை அங்கேயே விட்டுப் பறந்துபோயிற்று.

இரத்தக்குளி குளிக்க வேண்டுமென்று ஆசைப்பட்ட அநியா யத்திற்கு தகுந்த சிக்ஷையே தனக்கு வாய்ந்ததென உணர்ந்து ஒரு செங்குத்தினின்று கீழே விழுந்திறக்க எண்ணினாளாயினும் அந்த ராணி தன் கர்ப்பத்திலுள்ள சிசுவை நினைந்து விழாது நின்றனள். ஜமதக்னி* மாமுனிவரின் சிஷ்யனான இளைஞன் ஒருவன் அவ்வழிச் செல்கை யில் அவளுடைய அழுகைக் குரலைக் கேட்டு, அவளுடைய விருத்தாந் தத்தை விசாரித்தறிந்து, முனிவராச்சிரமத்திற்கு அவளை அழைத்துக் கொண்டு போயினன். அவ்வாச்சிரமத்தில் அவள் சௌந்தர்யம் மிக்க குமாரனை ஈன்றனள். அவனுடைய ஜனன காலத்தில், ''பெரும் பிரக் யாதியுள்ள அரசன் ஒருவன் பிறந்துள்ளான். இவன் உதயனன் எனப் படுவன். இவனுடைய மகன் வித்யாதரர்**களுக்கு இறைவனாவன்'' என்றோர் ஆகாசவாணி அறைந்தது.

அந்தப் பையன் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியு மாகத் தேகத் திடமுற்று வளர்ந்து வந்தான். ஆச்சிரமத்துள்ளவர்களெல் லாரும் அவனைக் கண்ணுக்குக் கண்ணாய்ப் பாராட்டி வந்தார்கள். மிருகவதியானவள் தன்கை மணிக்கட்டில் ''ஸஹஸ்ராணிகன்''

---

★ **ஜமதக்னி** - பரசுராமரின் தந்தை. இந்த இடத்தில் வெப்பமான கந்தக நீர் ஊற்று ஒன்றிருக்கின்றது. அது ''தப்தபானிகாட்'' என்று இன்றைக்கும் வழங்குகின்றது.

★ **வித்யாதரர்** - ஒருவகை உபதேவதைகள்.

என்னும் பெயர் பதிந்த கடகமொன்றை யணிந்திருந்தாள். அதைக் கழற்றி அவள் தன் குமாரனுடைய கையிற் போட்டாள். ஜமதக்னி முனிவரே அச்சிறுவனுக்கு எல்லாக் கலைகளையும் கற்பித்தனர். உதயனன் காட்டில் தனியே திரிந்து, மான் முதலான காட்டு மிருகங் களோடு விளையாடிக் கொண்டு, அச்சமென்பதே யறியாமல் இருந்தான்.

ஒருநாள் பெரும் பாம்பொன்றைச் சவரன்* ஒருவன் பிடித்திருக்கக் கண்டான். அந்தப் பாம்பை விட்டுவிடும்படிச் சவரனை உதயனன் கேட்டான். ''நான் விடமுடியாது, பையா! இப்படிப்பட்ட பாம்புகளை விற்றே நான் வயிறு வளர்க்கிறேன்'' என்று சவரன் பதில் மொழிந்தான். அப்போது உதயனன் தன் கையிலணிந்திருந்த கடகத்தைக் கழற்றி அவனுக்குக் கொடுத்து, பாம்பை விட்டுவிடச் சொன்னான். களிமிகுந்த சவரன் பாம்பை விட்டுவிட்டுக் கடகத்தை எடுத்துக் கொண்டு போனான்.

அங்ஙனம் விடுபட்ட பாம்பானது **வாஸுகி****யின் தம்பி யான **வஸுநேமி** என்னும் தெய்வீக நாகம் தன்னை விடுவித்த உதயனனது தயாளத்தை மெச்சி அந்தப் பாம்பு அவனுக்குக் **கோஷவதி** என்னும் தெய்வீக வீணையைப் பரிசளித்தது. அதை அவன் தமைய னான வாஸுகி அதற்குக் கொடுத்திருந்தனன்; வாஸுகியோ அதனைக் கானாதி தேவதையான சிவபிரானிடமிருந்து அதை அருட்பேறாகப் பெற்றவர். அந்த வீணையில் நுண்ணிய ஸ்வரங்களை வாசிக்கத் தக்க வாறு அநேக தந்திகள் இருந்தன. அந்தத் தொனிகள் மிகமிக இனிமை யாயிருந்தன; அந்தத் தொனிகளினால் மிக முரடான காட்டு யானை யும் வசப்பட்டு ஆட்டுக் குட்டியைப் போல அமைதியாகும். அந்த வீணையை மிகவும் நேர்த்தியாக வாசிப்பதற்கு அப்பாம்பு அவனுக்குக் கற்பித்தது; அவனுக்கு மந்திரமும் கற்பித்தது; அந்த மந்திரத்தைத் தன் ஆசைநாயகிக்கு உபதேசித்தால் அவள் போடும் வெற்றிலை எப்பொழுதும் கெட்டுப் போகாது துளிராகவே இருக்கும், அவள் கோக்கும் பூமாலை ஒருபோதும் வாடாது, அவளணியும் நெற்றிப் பொட்டு (திலகம்)*** மங்காமற் பிரகாசமாகவே இருக்கும். பின்பு அப்பாம்பு மறைந்து போயிற்று. அது கொடுத்த பரிசுகளுடன் உதயனன் ஆசிரமத்திற்குத் திரும்பி வந்தான்.

---

* **சவரர்** - அக்குன்றிகளில் இன்றைக்கும் வசிக்கும் ஆதிக்குடிகள். **ப்ளினி (Pliny)** என்பவர் இவர்களைக் குறித்துச் சொல்லியிருக்கிறார்.

** **வாஸுகி** - பாற்கடலைக் கடைவதற்குக் கயிறாக உபயோகிக்கப்பட்ட தெய்வீக நாகம். தேவர்களெல்லாருக்கும் பிரியமானது.

*** **திலகம்** - சுமங்கலிகள் நெற்றியிலணியும் குங்குமப் பொட்டு.

அந்தச் சவரன் கடகத்தை எடுத்துக் கொண்டு சமீபத்திலுள்ள பட்டணத்திற்கு விற்கப் போனான். உடனே அவனைப் போலீஸ்காரர் பிடித்து, கௌசாம்பிக்குக் கொண்டுபோய், அதன்மீது அரசனுடைய முத்திரை இருந்ததனால் அரசன் முன் நிறுத்தினார்கள். அவனைத் தண்டிக்காமல் விவேகியான அரசன், அந்தச் சவரனுக்கு அக்கடகம் எப்படி கிடைத்ததென்று அவனைக் கேட்டு விசாரித்து, அவனுடன் உதயகிரியிலுள்ள ஜமதக்கினி ஆசிரமத்திற்குப் போனான். முனிவர் அரசனை வரவேற்று மிருகவதியையும் உதயனனையும் அவன் வசம் ஒப்பித்தனர். தனக்கு அவ்வளவு சௌந்தர்யம் வாய்ந்த குமாரன் வாய்த்தானென அரசன் களிகூர்ந்தான். காலக்கிரமத்தில் அவனுக்கு அரசன் யுவராஜ பட்டங்கட்டி, தன்னுடைய சொந்த மந்திரிகளின் குமாரர்களாகிய வஸந்தகன், ருமண்வான், யௌகந்தராயணன் என்பவர்களை அவனுக்கு உசாத்துணைவர்களாகக் கொடுத்தான். நாளடைவில், உதயனனுக்கு ராஜபட்டங்கட்டி சஹஸ்ரானிகன், ஆரியர்களுடைய அனாதி வழக்கப்படி, தன் மனைவி மிருகவதி யுடன் இமயமலையில் ஓர் ஆசிரமத்தில் தவஞ் செய்யப் போயினான்.

முதலில் உதயனன் தனக்குரிய ராஜகாரியங்களைச் செய்து, குடிகளை நன்றாகப் பரிபாலித்து வந்தான். ஆனால், பின்பு கொஞ்சங் கொஞ்சமாக அவன் ராஜ்ய விவகாரங்களை மந்திரிமாரிடம் ஒப்பித்து விட்டுத் தன் காலம் முழுமையும் பெரும்பாலும் யானை வேட்டை யிலே கழித்து வந்தான்; கோஷவதி என்னும் வீணையின் மனோ ஹரமான வீணாகானத்தினால் அக்காட்டு யானைகளை மயக்கி வசப்படுத்திக் கொண்டிருந்தான். அவன் கவலையற்று குசலாகவே இருந்தான். ஆனால், ஒரு சிந்தை மாத்திரமே இருந்தது. ''பிறப்பிலும் அழகிலும் எனக்கு ஈடான மனைவி எங்கும் அகப்படவில்லை, வாஸவதத்தையே எனக்கேற்ற வாழ்க்கைத் துணைவியாவாள். நான் கேள்விப்படுவதிலிருந்து, அவளுக்கும் என்மீது ஆசை இருக்கிற தெனத் தெரிகிறது. ஆனால், அவளை அடைவது எங்ஙனம்?' என்றே அவன் சிந்தித்துக் கொண்டிருந்தான்.

அப்போது அவந்தியரசனாயிருந்தவன் மிக்க பிரபலவான். உதயனனைத் தவிர சுற்றுப்புரத்து அரசர்களெல்லாரும் அவனுக்கு அடங்கி நடந்துகொண்டிருந்தார்கள். அவன் உஜ்ஜயினியைத் தலை நகராகக் கொண்டிருந்தான். அவனிடம் பெரிய போர்ப்படை இருந்தது. அதனால் அவனுக்கு மகாசேனன் என்னும் பட்டப்பெயர் வாய்ந் திருந்தது. அவனைக் **சண்ட** மகாசேனன் எனவும் சொல்லுவார்கள்; அந்தப் பெயருக்கு 'பயங்கரமான மகாசேனன்' என்று அர்த்தம்.

உஜ்ஜைனி **மகாகாளி***யை வேண்டிக் கடுந்தவம் புரிந்து அவன் அத் தேவியினிடமிருந்து ஒரு வாள் பெற்றிருந்தான். அவ்வாளுள்ள வரை யில் அவனைப் பகைவர் வெல்ல முடியாதென்னும் வரமும் பெற்றி ருந்தான். அவன் தைத்திய** மாதொருத்தியை மணந்து அவளிடமாக கோபாலகன், பாலகன் என்னும் இரண்டு புதல்வரைப் பெற்றான். ஒருநாள் தேவர்களுக்கு*** இறைவனாகிய **இந்திரனுக்கு** அவன் பெரு விருந்து அளித்தான். அவ்விருந்தினால் திருப்தியடைந்த இந்திரன் அவனுக்கு அழகிலும் குணத்திலும் சிறந்த புத்திரி பிறப்பாளென வரங் கொடுத்தான். காலக்கிரமத்தில் அந்தப் பெண் பிறந்தாள்; அவளுக்கு 'வாஸவதத்தை' (இந்திரனால் அளிக்கப்பட்டவள்) எனப் பெயரிட் டார்கள்.

வாஸவதத்தைக்கு விவாக வயது வந்தவுடன் மகாசேனன் இவ்வாறு தனக்குத்தானே நினைத்துக்கொண்டான்: ''இவ்வுலகத்தில் என் புதல்விக்கேற்ற புருஷன் உதயனனைத் தவிர வேறு எவருமில்லை. ஆனால், அவன் எப்போதும் எனக்குப் பகைவனாகவே இருக்கிறான். அவனை நான் எப்படி மருமகனாக்கிக் கொள்ள முடியும், எனக் கடங்கிய துணையரசாக்கிக் கொள்ள முடியும்? அவன் தன்னந்தனியே காட்டில், தன் வீணை வாத்தியத்தால், யானைகளை வசப்படுத்திக் கொண்டு அலைகிறான். அவனுக்குள்ள இந்த குணக்குறையை ஏதுவாகக் கொண்டு அவனை வலைபோட்டுப் பிடித்துத் தந்திரமாக இங்கே கொண்டுவரச் செய்வேன். அப்போது வீணா வாத்தியத்தில் வல்லவ னான அவனிடம் என் மகளை வீணை கற்க விடுவதாகப் பாசாங்கு செய்வேன். அவளைப் பார்த்தவுடனே அவன் அவள்மீது மோகங் கொள்வான். அவளுடைய அழகைக் கண்டு அயர்ந்துபோவான். நிச்சய மாக எனக்கு மருமகனாகித் துணையரசுமாவான்.

மேற்சொல்லியவாறு தீர்மானித்துக்கொண்ட பின்னும் அவன், தந்திரோபாயத்தைக் கைக்கொள்ளு முன் விவகார முறைப்படி சந்தி செய்யலானான். ''என் மகள் உம்மிடத்தில் சங்கீதங் கற்க விரும்புகிறாள். எம் மீது உங்களுக்கு அன்பு உண்டெனின் இங்கே வந்து அவளுக்குக் கானவித்தை கற்பியுங்கள்'' என்று சொல்லும்படி உதயனனுக்குத்

---

* **மகாகாளி** - சிவனாகிய 'மகாகால'னது பாரியை.

** **தைத்தியர்** - ஒருவகை அரக்கர். அவர்களில் ஆண்மக்கள் மிக்க தீரமுள்ள வர்கள். பெண்மக்கள் மிக்க அழகு மிக்கவர்கள்.

*** **தேவர்கள்** - பிரகாசமானமாய் இருப்பவர்கள், ஸுரர்கள்.

தூதனுப்பினான். தற்பெருமை பாராட்டும் உதயனன் ஓரரசன் மற்றோ ரரசனுக்கு இணங்கி நடப்பதில்லை என்னும் க்ஷத்திரிய வழக்கத்தைத் தழுவி, ''உங்கள் குமாரி என்னிடம் சங்கீதம் கற்க விரும்பினால் அவளை இவ்விடத்திற்கு அனுப்புங்கள்'' என்று மறுமொழி சொல்லி யனுப்பினான். அம் மறுமொழி மகாசேனனை அவமதித்ததாகும். ''சங்கீத வாத்தியாராக என்னைத் தன் ஊருக்கு வரும்படி மகாசேனன் அழைத்த துடுக்குத்தனத்திற்காக அவனை நான் போய் விலங்கிட்டுக் கொண்டு வருவேன்'' என்று உதயனன் தன் மந்திரிமார்களுக்குச் சொன்னான். மகாசேனன் பிரபலமான மன்னவன். அவனை நீங்கள் வெல்ல முடியாது. உங்களுடைய எண்ணம் சரியானதன்று, சாதிக்கக் கூடியதுமன்று' என்று யௌகந்தராயணர் உதயனனுக்கு எடுத்துக் கூறினர். மகாசேனனிடம் பெரும் படை இருக்கின்றதனாலும் அவந் திக்குப் போகும் வழி கஷ்டமாயிருப்பதனாலும் அவனை வெல்ல முடியாதென்றும் அவர் சொன்னார்.

உதயனன் சொல்லிய மறுமொழியை மகாசேனனுடைய தூதன்போய் அவனுக்குச் சொன்னான். தந்திரத்தினாலேயே காரி யத்தைச் சாதிக்க வேண்டுமென்று அவன் நிச்சயித்துக் கொண்டான். ஆதலின் அவன் தன்னுடைய சொந்த யானையாகிய **நளாகிரி** என்பதைப் போன்ற கிருத்திரம யானையொன்று செய்வித்து, அதற்குள் நன்கு தேர்ந்த போர்வீரர்களை நிரப்பி, விந்திய மலையிலுள்ள யானைக் காட்டிற் கொண்டுபோய் வைத்தான்.

## இரண்டாம் பாகம்
### (''யௌகந்தராயணர் சபதங்க''ளிலடங்கிய விஷயங்கள்)

உதயனனுடைய சாரணர்கள் இந்த யானையை தூரத்திலிருந்து பார்த்துத் திரும்பிப்போய், ''ஒற்றை யானையொன்று விந்தியமலைக் காட்டில் திரியக் கண்டோம். அதற்கீடானது உலகத்தில் எங்கும் இல்லை'' என்று அறிவித்தார்கள். ''மகாசேனனுடைய நளாகிரி என்னும் யானைக்கு ஈடான அந்த மகத்தான யானையை பெறுவே னாயின், மகாசேனன் என் கைக்குள் நிச்சயமாக அடங்கிப் போவான், தன் மகள் வாஸவதத்தையை விவாகஞ் செய்துகொள்ளும்படி என்னைக் கேட்பான்'' என அன்றிரவெல்லாம் நினைத்துக் கொண்டிருந்தான். ஆகையால் மறுநாட் காலையில் அவன் விந்தியமலைக் காட்டுக்குப் புறப்பட்டான். போகவேண்டாமென்று மந்திரிகள் தடுத்தார்கள்; அவன் புறப்படுகிற லக்கினம் நன்றாயில்லை; அவ்வேளையிற் புறப் பட்டால், புறப்படுகிறவன் சிறைப்படுவான்; ஒரு கன்னிகையையும்

அடைவான் என்று சோதிடர்கள் சாஸ்திரம் பார்த்துக் கூறினார்கள்; எவருடைய வார்த்தையையும் அவன் செவிக்கொள்ளவில்லை.

விந்தியமலைக்குப் போய்ச் சேர்ந்தபின் அவன் தன் படைகளையெல்லாம் சிறிது தூரத்தில் இருக்கவிட்டு, சாரணர்களை மாத்திரம் உடனழைத்துக்கொண்டு தனது இன்னிசை வீணையாகிய கோஷவதியைக் கைக்கொண்டு யானைக்காட்டிற் புகுந்தான். விந்திய மலைத் தொடரின் தென்சரிவில் நிஜமான யானையைப் போல் தோன்றிய போலியுருவைக் கண்டான். அவனுடைய சாரணர்கள் சிறிது தூரத்திலிருந்து அதை அவனுக்குக் காட்டினார்கள். அவன் தன் வீணையை வாசித்துக்கொண்டு அரவம் எழுப்பாமல் தனியே அதனை யணுகிப் போனான். இனிமையான ராகங்களை வாசித்தான். அதை எப்படி பிடித்துக்கட்டுவதென்று ஆலோசித்துக் கொண்டே போனான்.

அவன் மனமெல்லாம் வீணா வாத்தியத்தில் ஆழ்ந்திருந்தத னாலும் அந்தி மந்தாரம் போட்டுக்கொண்டிருந்ததனாலும் அது போலி யானையென்று அவன் கண்டுகொள்ளவில்லை. அதனண்டை போன வுடனே போரணி பூண்ட யுத்தவீரர்கள் யானைக்குள்ளிருந்து வெளிவந்து அவனைச் சூழ்ந்துகொண்டார்கள். அரசன் தன் வேட்டை வாளை யுருவிக்கொண்டு கடுமையாகப் போர் புரிந்தான். எதிரிலுள்ளவர்களை அவன் அடித்துக் கொண்டிருக்கையில் பின்புறத்திலிருந்த ஆட்கள் வந்து அவனைப் பிடித்துக் கொண்டார்கள். பின்பு அப்படைவீரர்கள் அவனை உஜ்ஜைனிக்குக் கொண்டு போனார்கள்.

மகாசேனனே தன் சிறையை எதிர்கொண்டு மரியாதையாக வரவேற்றுத் தன் நகருக்குள் அழைத்துக் கொண்டு போனான். சில நாளைக்குப் பின், தன் மகள் வாஸவதத்தையை அவனிடம் ஒப்பித்து, 'ராஜகுமார! இந்தப் பெண்ணுக்கு வீணை கற்பியும், இங்ஙனம் உமது வீரச்செயலுக்கு இனிமையான பயன் பெறுவீர், விசனப்படாதேயும்' என்று சொன்னான்.

வாஸவதத்தையைக் கண்டவுடன் உதயனனுக்கு அவள்மீது மோகம் மூண்டது. அம்மோகாவேகத்தில் அவன் கோபத்தையும் துக்கத் தையும் மறந்தான். அவன் மகாசேனனுடைய அரண்மனை யுட்புறத்தில் கானமந்திரத்திலே இருந்துகொண்டு அவளுக்குச் சங்கீதம் கற்பித்து வந்தான். அவன் கண்கள் அவளுடைய கண்களையே உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தன.

இதற்கிடையில், உதயனனோடு போயிருந்த ஆட்கள் கௌசாம்பிக்குத் திரும்பிப் போயிருந்தனர். அமைதியும் ஆழ்ந்த நினைவுமுள்ள யௌகந்தராயணர் துரைத்தன விவகாரத்தை ருமண்வானுக்கு ஒப்பித்துவிட்டு, வசந்தகனுடன் உஜ்ஜைனிக்குப் போனார். போகும் வழியில் யௌகந்தராயணர் மந்திர மகிமையால் தம் வடிவையே மாற்றிக்கொண்டனர். விரூபம் மேற்கொண்டனர், கூன் முதுகு வாய்ந்தனர், முதுமை ஏற்றனர், பைத்தியக்காரனைப்போலத் தோன்றினர். அந்த மந்திரத்தின் மகிமையினாலேயே வஸந்தகனுடைய உடம்பில் நரம்புகள் புடைத்துத் தோன்றச் செய்தார், வயிறு பிதுங்கிக் காணச்செய்து விகாரமான வாயும் நீண்ட பல்லும் உண்டாக்கினார்.

யௌகந்தராயணர் ஆடிப்பாடிக் கூத்தாடிக் கொண்டு உஜ்ஜைனிக்குட் பிரவேசித்து அரசனுடைய அரண்மனைக்குப் போனார். அவரைச் சூழ்ந்து பெரிய ஜனத்திரள் பின்பற்றிச் சென்றது. அவருடைய ஆடல்பாடல்களைக் கேட்டு வாஸவதத்தை தன் தாதியை அனுப்பி அவரைக் கானமந்திரத்திற்கு அழைத்துவரச் செய்தாள். அவ்விடத்தில் அவர் உதயனனுக்கு ஒரு ரகசியமான ஜாடை செய்தனர். அதனால் அவன் அவர் யௌகந்தராயணரென்று தெரிந்துகொண்டு, ஏதோ சாக்குவைத்து வாஸவதத்தையை வெளியே அனுப்பிவிட்டு அவரோடு நெடுநேரம் அவிக்னமாகப் பேசிக்கொண்டிருந்தான். பின்பு யௌகந்த ராயணர் விலங்கைத் தெறிப்பதற்கான மந்திரத்தையும் வாஸவதத்தை யின் மனத்தைக் கவருவதற்கான மந்திரத்தையும் உதயனனுக்கு உபதேசித்தார். பின்பு அவர் வெளியே போய்விட்டார். வாஸவதத்தை திரும்பி வந்தவுடன், அரண்மனை வாசலிற் காத்துக் கொண்டிருந்த வஸந்தகனை அவளைக் கொண்டு உள்ளே அழைத்துவரச் செய்தான். வாஸவதத்தைக்கு வேடிக்கையான கதைகளைச் சொல்லி வஸந்தகன் அவளுடைய தயவைச் சம்பாதித்துக் கொண்டான்.

நாள் செல்லச் செல்ல உதயனன் மீது வாஸவதத்தைக்கு ஆசை உண்டாயிற்று. தன் தந்தைக்கு எதிரிடையாக அவள் உதயனனைச் சார்ந்து பேசத் தலைப்பட்டாள். யௌகந்தராயணர் திரும்பவும் அரண்மனைக்குப் போய், பிறர் கண்ணுக்குப் புலப்படாமல் உதய னனைப் பார்த்தார். வஸந்தகனை மாத்திரம் வைத்துக்கொண்டு அவர் உதயனனை நோக்கி, ''அரசே! மகாசேனன் தந்திரத்தினால் உம்மைச் சிறைப் பிடித்தான். இப்போது தன் மகளை உமக்கு விவாகஞ் செய் வித்து சகல மரியாதைகளுடன் உம்மை விடுதலை செய்யும் நோக்கங் கொண்டிருக்கிறான்; இவ்விவாகம் நடந்தேறுமுன் இவன் மகளை நாம் எடுத்துக் கொண்டு ஓடிப்போவோம். இவ்வாறு இந்தக் கர்வம் பிடித்த அரசன் மீது பழிதீர்த்துக் கொள்வோம்; இவனை அவமானப்

படுத்துவோம். இவன் வாஸவதத்தைக்குப் **பத்திரவதி** என்னுமொரு பெண்யானை கொடுத்திருக்கிறான். **நளாகிரி**யைத் தவிர வேறு எந்த யானையும் வேக நடையில் வெல்ல முடியாது. இந்த யானையின் பாகன் இவ்வூர்க்காரன், **ஆஷாடகன்** எனப்படுவன். அவனுக்கு வேண்டிய பணம் கொடுத்து நான் அவனை நம் வசப்படுத்திக் கொண்டிருக்கிறேன். நீர் சகலாயுதபாணியாய் வாஸவதத்தையுடன் அந்த யானையின் மீது ஏறிக்கொண்டு இரவில் இரகஸியமாக இவ்விடத்தை விட்டுப் புறப்பட வேண்டும்'' என்று சொன்னார்.

யௌகந்தராயணர் சொல்லியதை எல்லாம் நன்றாக ஞாபகத்தில் வைத்துக்கொண்டு உதயனன், வாஸவதத்தை வந்தவுடன் அவளுக்குச் சொன்னான். அவள் இசைந்து அவனுடன் திருட்டுத்தனமாக ஓடிப்போகத் தீர்மானித்தாள். அவர்கள் உஜ்ஜைனியை விட்டுத் தப்பியோடி வழியில் நேர்ந்த இடையூறுகளை எல்லாங் கடந்து கௌசாம்பிக்கு க்ஷேமமாக வந்து சேர்ந்தார்கள்.

## மூன்றாம் பாகம்

### (''யௌகந்தராயண சபதங்க'ளுக்கும் ''ஸ்வப்ன வாஸவதத்த''த்திற்கும் இடைச் சம்பவங்கள்)

சில நாளைக்குப் பின் மகாசேனனும் அவனுடைய ராணியாரும் தங்கள் ஆசீர்வாதம் சொல்லும்படி தம் குமாரன் கோபாலகன் என்பவனை உதயனனிடம் அனுப்பினார்கள். அதற்குப் பின் உதயனன் வாஸவதத்தையை முறைப்படி விவாகஞ் செய்துகொண்டான். மனிதருள் தானே பெரிய அதிர்ஷ்டசாலியென எண்ணிக்கொண்டான். ஆனால், சிறிது காலத்திற்குப் பின் வாஸவதத்தையின் மீது அபிமானங் குறைந்து முன்னர் ஒருபோது சம்பந்தப்பட்டிருந்த **விரசிதை** என்னும் சேட்டியுடன் இரகசியமாக விவகரிக்கத் தலைப்பட்டான். ஒருநாள் வாய் தவறி அவன் வாஸவதத்தையை 'என் கண்மணி விரசிதா' என்று விளித்தான். அதன்மீது அவள் கோபங் கொண்டாள். அவளைச் சமாதானப்படுத்த அவன் அவளுடைய காலிற் பணிந்து, இனி விரசிதை விவகாரத்தை விட்டு விடுவேனென்று வாக்குறுதி கூறவேண்டியதாயிற்று. அவன் அவ்வாறு வேண்டிக் கொண்டதன்மீது அவள் ஊடல் தவிர்த்தாள். மறுபடி சிறிது காலத்திற்குப்பின் உதயனன் ராஜ்ய விவகாரத்தைப் புறக்கணித்து தன் இஷ்ட போகங்களிலே மனத்தைச் செலுத்தலானான்; முக்கியமாக, வேட்டையாடுவதிலே பிரியங் கொண்டிருந்தான். இதைக் கண்டு யௌகந்தராயணர் விசனப்பட்டார். ஏனெனில்,

உதயனனை உலகத்துக்கெல்லாம் ஏக சக்ராதிபதியாக்குவது மந்திரிகளின் கடமையாகும். அதுவே ஒவ்வொரு க்ஷத்திரிய ராஜனுக்கும் இருக்க வேண்டிய நோக்கம் - என்று அவர் நினைத்தார். அதன் மீது அவர் மற்ற மந்திரிகளை அழைத்து, ''உதயனன் இருக்கிறபடி இருந்துகொள்ளட்டும். அவனுடைய முயற்சியில்லாமலே நாம் அவனுக்கொரு நல்ல காரியம் செய்து வைக்க வேண்டும், அஃதாவது, உலகத்துக்கெல்லாம் அவனைச் சக்கரவர்த்தி ஆக்க வேண்டும். இதற்கு உள்ள பெருந்தடை மகதராஜன் ஒருவனே. அவன் எப்பொழுதும் நம்மைப் பின்புறத்திலிருந்து தாக்கிக் கொண்டிருக்கிறான். அவனுடைய நாடு நமது நாட்டிற்குப் பின்னே இருக்கின்றது. அவனுடைய மகள் பத்மாவதி என்பவளை உதயனன் கலியாணஞ் செய்துகொண்டு அவனை வசப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவர் மற்ற மந்திரிகளுக்குச் சொன்னார்.

அவனுடைய மகளை நம் அரசருக்கு விவாகஞ் செய்து கொடுக்கும்படி மகதத்தரசனை ஏற்கெனவே நான் கேட்டிருந்தேன். 'என் மகளை நான் என் உயிரினும் அதிகமாகப் பாராட்டுகின்றேன். வாஸவதத்தையின் மீது பிராண பிரேமை வைத்திருக்கும் உதயனனுக்கு என் பெண்ணைக் கட்டிக் கொடுக்க மாட்டேனென்று' அவன் எனக்குப் பதில் சொல்லியிருக்கிறான். ஆகையால், வாஸவதத்தையை நாம் ஓரிடத்தில் ஒளித்துவைத்து, அவள் வீட்டைத் தீயிட்டெரித்து, மகாராணி தீயில் இறந்து போனாளென்று எங்கெங்கும் பறையறைய வேண்டும். வேறு எவ்விதத்திலும் மகதத்தரசன் தன் பெண்ணை நம் அரசனுக்கு விவாகஞ் செய்து கொடுக்க மாட்டான். நம் அரசனும் வேறொரு மனைவி ஏற்க மாட்டான். ஆனால், இங்ஙனம் செய்வோமாயின் நாம் நினைத்த வண்ணமே எல்லாக் காரியமும் கைக்கூடும்'' என்று மற்ற மந்திரிகளை நோக்கி யௌகந்தராயணர் சொன்னார்.

மற்ற மந்திரிகளை இந்த ஆலோசனைக்கு யௌகந்தராயணர் மெல்ல மெல்ல இசைவித்தார்; கோபாலகனுக்கும் இந்த மர்மம் ஒருவாறு தெரியும்படி செய்தார். பின்பு மகத தேசத்தை யடுத்த 'லாவாணகம்' என்னும் ஜில்லாவில் அரசன் பெரிய வேட்டையாடுவதற்கு வேண்டிய ஏற்பாடு செய்தார்கள். வாஸவதத்தையின் வீட்டைக் கொளுத்தி விடுவதற்குத் தீர்மானித்தார்கள். வாஸவதத்தையைக் கொண்டு போய்ப் பத்மாவதியினிடம் ஒப்பிக்கவும் சூழ்ச்சி செய்தார்கள். வாஸவதத்தை மறைந்திருக்கும் காலத்தில் ஒழுக்கந் தவறாதிருந்தாளென்பதற்கு உதயனனுக்கு இனிப் பட்டமகிஷியாக வரத்தக்க பத்மாவதியே சாக்ஷியாய் இருக்கும்பொருட்டு அவளிடமே ஒப்பிக்க நினைத்தார்கள்.

## நான்காம் பாகம்

### (''ஸ்வப்ன வாஸவதத்த''த்தில் உள்ளடங்கிய விஷயங்கள்)

யௌகந்தராயணரும் மற்ற 'மந்திரிகளும் உதயனனுடனும் வாஸவதத்தையுடனும் லாவாணகத்திற்குப் போனார்கள். ஒரு நாள் அரசன் வேட்டைக்குப் போயிருக்கையில் யௌகந்தராயணர் எல்லா ஏற்பாடுகளையும் செய்து முடித்தார். பின்பு அவரும், கோபாலகனும் ருமண்வானும் வஸந்தகனும் ரகசியமாக வாஸவதத்தையினிடம் போய், அவளுக்குத் தன் நாயகன் மீதுள்ள பேரன்பின் பொருட்டும் அவருக்குப் பெருமையும் பிரதாபமும் விளைவிக்கும் பொருட்டும் தங்களுடைய சூழ்ச்சிக்கு அவள் இசையும்படி செய்தார்கள். பின்பு யௌகந்தராயணர் தமது மந்திர சக்தியால் அவள் பிராமண மாதாகத் தோன்றும்படி செய்தார். வஸந்தகன் பிராமணச் சிறுவன் ரூபம் மேற்கொள்ளவும் செய்து, தாம் கிழ பிராமணனாக மாறினார். அதற்கு மேல், ஆவந்திகை* என்னும் பெயருடன் வாஸவதத்தையையும், வஸந்தகனையும் அழைத்துக்கொண்டு ராஜகிருகத்திற்குப் போனார். அதற்குப் பின் வாஸவதத்தையின் வீட்டுக்குத் தீ வைத்துவிட்டு ருமண்வான் 'என்ன பாவம், என்ன கஷ்டம்! ராணியாரும் வஸந்தகனும் தீயில் எரிந்து போனார்கள்' என்று உரத்து ஓலமிட்டான்.

யௌகந்தராயணரும் ஆவந்திகையும் ராஜகிருகம் போய்ச் சேர்ந்தார்கள். இளவரசி பத்மாவதி நந்தவனத்திலிருப்பதைக் கண்டு அவளை நோக்கிச் சென்றார்கள். அப்போது அங்குள்ள காவலர்கள் அவர்களைத் தடுக்க முயன்றனர். ஆவந்திகையைப் பார்த்த மாத்திரத்தில் அவள்மீது பத்மாவதிக்கு ஆசை உண்டாயிற்று. அவர்களைத் தடுக்காமல் வழிவிட்டுத் தன்னிடம் வரவிடும்படி காவலர்களுக்கு அவள் கட்டளையிட்டாள். ஆவந்திகை என்பவள் தம் மகளென்றும், அவளுடைய கணவன் அவளை விட்டுத் தேசாந்தரம் போனானென்றும் சொல்லி அவளைப் பத்மாவதியின் வசத்தில் ஒப்பித்துவிட்டு யௌகந்தராயணர் லாவாணகத்திற்குத் திரும்பிப் போனார். அவளையும் வஸந்தகனையும் தன்னுடன் கூட்டிக்கொண்டு பத்மாவதி தன்னுடைய மகத்தான அரண்மனைக்குப் போனாள். ஆவந்திகை என்னும் மாது மிகப்பெரிய பதவியிலுள்ளவள், மாறுவேடம் பூண்டிருக்கிறாளென்று சீக்கிரமாகத் தெரிந்துகொண்டு பத்மாவதி அவளுக்கு உயர்தரமான சௌகரியங்களை அவருடைய மனம் திருப்தியடையும்படி அமைத்தனள்.

---

* அவந்தி நாட்டு மாது.

உதயனன் லாவாணகத்திற்குத் திரும்பி வந்து, வாஸவ தத்தையின் வீடு எரிந்து சாம்பலாய்க் கிடப்பதைக் கண்டான். வாஸவ தத்தையும் வஸந்தகனும் எரிந்து இறந்தார்களென்று ருமண்வான் சொன் னான். அந்த வார்த்தையைக் கேட்டவுடன் உதயனன் தரையில் விழுந்து புரண்டு நினைவுதப்பிப் போனான். ஆனால், யௌகந்த ராயணரும் கோபாலகனும் நடந்து கொள்ளும் விதத்தைக் கவனித்தான்; சோதிட சாஸ்திரிகள் சொல்லியிருந்த வார்த்தைகளையும் நினைத்துப் பார்த்தான்; அதனால், தன்னுடைய ராணி உயிரோடிருத்தல் கூடும் என்று சந்தேகித்து, இனியொரு காலத்தில் அவளுடன் கூடுவதற் காகுமென்று எண்ணங் கொண்டான்.

யௌகந்தராயணர் உத்தேசித்திருந்தபடியே, லாவாணகத் திலிருந்த மகதராஜனது ஒற்றர்கள், தம் அரசனிடம் போய் தீ விபத் தின் விவரங்களையும் வாஸவதத்தையின் மரணத்தையும் அறிவித் தார்கள். அவர்களுடைய வார்த்தையைக் கேட்டு மகதராஜன் தன் மகளை உதயனனுக்கு விவாகஞ் செய்துகொடுக்கும் ஆவல்கொண்டு அவனை ராஜகிருகத்திற்குள் வரவழைத்துத் தன் மகளைக் கலியாணஞ் செய்துகொள்ளும்படி கேட்டான். யௌகந்தராயணருடைய சொற்படி உதயனன் மகதத்தரசனுடைய வார்த்தைக்கு இணங்கினான். அவ னுக்கும் பத்மாவதிக்கும் முறைப்படி விவாகம் மிகச் சம்பிரமமாக நடந்தேறியது. உதயனனுக்கு ஒருபோதும் தீங்கு செய்வதில்லை என மகதத்தரசன் அக்னி சாட்சியாக அந்தச் சுபமுகூர்த்தத்திற் பிரமாணம் பண்ணும்படி யௌகந்தராயணர் செய்வித்தார். தன் பிராணபதிக்கு மேன்மேலும் சிறப்பு உண்டாக வேண்டுமெனக் கடவுளைப் பிராத் தித்துக்கொண்டு வாஸவதத்தை அவ்வரண்மனையிலேயே பிறரறி யாமல் இருந்தாள். ஒருவேளை, வாஸவதத்தையை உதயனன் பார்த்து விடக் கூடுமென்று நினைத்து யௌகந்தராயணர், திருமணம் முடிந்த வுடனே அவனை, பத்மாவதியுடனும் சைனியத்துடனும், அரண் மனையை விட்டு நீங்கிப் போகும்படி செய்தார்.

சைனியத்தின் பின்னணியில் வஸந்தகனை முன்னிட்டுக் கொண்டு வாஸவதத்தை இரகசியமாக அந்தக் கூட்டத்தோடு போயினள். உதயனன் லாவாணகம் போய்ச் சேர்ந்து பத்மாவதியுடன் தனது அரண் மனையிற் பிரவேசித்தனன். ஆனால், எப்பொழுதும் வாஸவதத்தை யையே நினைத்துக் கொண்டிருந்தனன். அன்றிரவு கோபாலகனுடைய வீட்டுக்குப்போய் வாஸவதத்தை அவனைத் தழுவிக்கொண்டு தன் தலைவிதியை நினைத்து அழுது புலம்பினள். யௌகந்தராயணரும் ருமண்வானும் அங்குப்போய் அவளைத் தேற்றினர்.

'மகாராணி! ஆவந்திகை இந்த ஊருக்கு வந்திருக்கிறாள், கோபாலகனுடைய வீட்டிற்குப் போயிருக்கிறாள் என்று பத்மாவதியின் வேலைக்காரர்கள் போய் அவளுக்குச் சொன்னார்கள். அதைக் கேட்டவுடனே பத்மாவதி கலங்கி அச்சமுற்று, உதயனன் முன்னிலையில் தன் வேலைக்காரர்களை நோக்கி, 'நீ என் வசத்தில் ஒப்பிக்கப் பட்டவள், நீ இப்பொழுது இருக்குமிடத்தில் உனக்கென்ன காரியம், நீ என்னிடம் வா' என்று ராணியார் சொல்வதாக ஆவந்திகைக்குப் போய்ச் சொல்லுங்கள் என்று ஏவினாள். பத்மாவதி கலங்கிச் சஞ்சலப் படுவதைக் கண்டு உதயனன் அவளை நெருங்கிப் போனபோது அவளுடைய மணமாலை வாடாதிருப்பதையும் நெற்றிக் குங்குமப் பொட்டு அழியாதிருப்பதையும் கவனித்து அதிசயித்தான். அவை அங்ஙனமிருப் பதற்குக் காரணம் யாதென அவளை வினவினான். அவையெல்லாம் தன்னிடம் ஒரு பிராமணனால் ஒப்பிக்கப்பட்ட ஆவந்திகை என்னும் மாதின் செய்கையெனக் கூறினள்.

இதையெல்லாம் கேட்டவுடனே, ஆவந்திகை என்பவள் வாஸவதத்தையாகவே இருக்க வேண்டுமென்றெண்ணி உதயனன் கோபாலகனுடைய வீட்டுக்குப் போகப் புறப்பட்டான். கோபாலகனுடைய வீட்டுக்குள் போனபோது அங்கே வாஸவதத்தை, யௌகந்த ராயணர், ருமண்வான், வஸந்தகன் ஆகிய இவர்கள் கோபாலகனுடன் இருக்கக்கண்டான்.

உதயனனும் வாஸவதத்தையும் ஒருவரையொருவர் தழுவிக் கொண்டு அழுதார்கள். அந்தக் காதலரிருவரும் திரும்பவும் ஒன்று கூடிய உருக்கமான காட்சியைக் கண்டு யௌகந்தராயணருடைய கண்களிலும் நீர் ததும்பியது.

அப்பொழுது வாஸவதத்தையைப் பற்றிய உண்மையான விஷயத்தைத் தெரிந்துகொண்ட பத்மாவதியும் கண்ணீர் சொரிந்தனள். உள்ளம் பிளந்து போகுமாறு அழுது வாஸவதத்தை, 'என் கணவனுக்குத் துன்பத்தையே விளைவித்துக் கொண்டு நான் உயிர் வாழ்வதிற் பயனென்ன?' என்று ஓலமிட்டலறினாள். அப்பொழுது யௌகந்த ராயணர், ''அரசே! மகதத்தரசனது மகளை உமக்குத் திருமணம் செய்வித்து உம்மை இந்தியா முழுமைக்கும் சக்கரவர்த்தியாக்கும் பொருட்டே இத்தனையும் செய்துள்ளேன். இந்தச்சூதுக்கு ராணி வாஸவ தத்தை சிறிதும் உத்தரவாதமல்ல. இவளுடைய நல்லொழுக்கத்திற்குப் பத்மாவதி ராணியாரே சாட்சி'' என்று உதயனனுக்குச் சொன்னார்.

அதன்மீது பத்மாவதி பொறாமை சிறிதும் இல்லாதவளாய்,

''இவள் குற்றமற்றவளென்றும் பதிவிரதையென்றும் நிரூபிப்பதற்காக நான் இப்பொழுதே இந்த இடத்திலேயே தீக்குளிக்கச்* சித்தமாயிருக் கிறேன்'' என்றனள். 'அரசனுடைய மனத்திற் சந்தேகம்** தோன்றாத படி நானும் தீக்குளிக்க வேண்டும்' என்று வாஸவதத்தையும் சொன்னாள்.

பின்பு யௌகந்தராயணர் வாய்கழுவி சுத்தஞ் செய்து கொண்டு, 'எனது அரசனுக்கு நான் நன்மை செய்தவனேயாயின், வாஸவதத்தை குற்றமற்றவளேயாயின், உலகம் காக்கும் திக்பாலகர்களே! வாய்விட்டுச் சொல்லுங்கள். இன்றேல், இன்னே உயிர்துறப்பேன்' என்று இறைஞ்சினர். உடனே ஆகாசவாணி, 'ஓ அரசனே! யௌகந்தராயணரை மந்திரியாகவும், முற்பிறப்பில் தேவதையாயிருந்த வாஸவதத்தையை மனைவியாகவும் பெற்ற நீயே பாக்கியவான்; அவள்மீது தோஷம் எள்ளளவுமில்லை' என்று பகர்ந்தது.

அவ்வாறு யௌகந்தராயணர் வைராக்கியத்தோடு திக்பாலகர் களை வேண்டிக்கொண்டதற்காக உதயனனும் கோபாலகனும் அவரைத் தழுவிக்கொண்டனர்; பூமண்டலம் முழுதும் தன்வசம் ஆய்விட்ட தெனவே உதயணன் நினைத்துக்கொண்டான். அதற்குப்பின், தன் இரு மனைவியரோடு அவன் சர்வ சௌக்கியங்களையும் அனுபவித்து ஆனந்தமாய் வாழ்ந்தான். அம்மனைவியரின் அன்பு அவன்மீது நாளுக்கு நாள் வளர்ந்து விளங்கியது.

லோகோக்தியாகச் சொல்லும் இந்தக் கதையில் பாஸகவி அநேக மாறுபாடுகள் செய்துள்ளான் என்பது வெளிப்படை. இவன் செய்துள்ள மாறுபாடுகளினால் கதை அழகுற்றது, நாடகம் சிறப்புற்றது.

''யௌகந்தராயணருடைய சபதங்கள்'' என்னும் நாடகத்தில் இவன் செய்துள்ள முக்கியமான மாறுபாடுகள் வருமாறு: வாஸவதத்தை யைக் காண்பதற்கு நெடுநாள் முன்னரே உதயனன் அவள்மீது மோகங் கொண்டிருந்தானெனவும், அவள் அவன்மீது காதல் கொண்டிருந்தா ளெனவும், லோகோக்தி கதை சொல்லுகின்றது. இது நள-தமயந்தி கதையிலுள்ளது போலாகும். பாஸன் தனக்குள்ள இயற்கையான கவிதா வல்லமையினால் முதற்பார்வையிலே அவள்மீது மையல்

---

★ **தீக்குளித்தல்** .- குற்றமின்மையை நிரூபிப்பதற்காக ஆரியர்கள் கைக்கொண் டிருந்த சோதனை. இதற்குப் பிரபலமான திருஷ்டாந்தம் சீதாதேவி தன் னுடைய கற்பை நிலைநாட்டுவதற்காகத் தீக்குளித்ததேயாம்.

★★ பலமனை ஆட்சியுடையவனாயினும், மனைவியருக்கு உண்மையாக நடந்து கொள்ளாதவனாயினும் அவனுக்கு அனுமான புத்தி போகவில்லை.

கொண்டதாக மாற்றியுள்ளான். அதற்குச் சந்தர்ப்பம் பல்லக்கு காலாட்கள் தோள்மாறுவதற்காக பல்லக்கு இறக்கிய இடத்தில் அவளை மூடு திரையில்லாமல் தெளிவாகக் காணும்படி அமைத்துள்ளான். வாஸவ தத்தைக்கு வீணை கற்பிக்கும் விஷயமாக மகாசேனனுக்கும் உதயன னுக்கும் நடந்த கர்வித வார்த்தைகளையும் சுடுசொற்களையும் பாஸகவி தவிர்த்து விட்டான். உதயனனை வீணாகானப் போதகனாக நிய மிக்கும் விஷயம், அங்காரவதி அனுப்பிய தூது வாக்கியங்களினாலும், வீணை கற்பித்தலைப் பற்றிச் சொல்லும் சில அழகிய சுலோகங்களி னாலும் மாத்திரமே குறிப்பிடப்படுகின்றது.

நாடகத்தில் உதயனன் வாஸவதத்தையை முதல் முதல் தற் செயலாகப் பார்த்தது மேற்சொல்லிய சந்தர்ப்பத்திலேயே யல்லாமல், அவளுக்கு வீணாபாடம் கற்பிக்க நியமனம் பெற்றபின் அன்று; அப்போது அவளை விவாகஞ் செய்துகொள்ளும் நோக்கத்தை விகார மாகக் குறிப்பிட்டுச் சொல்லவுமில்லை. இவ்வாறு கதையின் விசித்திரத் தன்மை அதிகரிக்கப் பெற்றது.

யானைக் கதையைப் பற்றி அநேக மாறுபாடுகள் தொடர்ச்சி யாக செய்யப்பட்டிருக்கின்றன. உதயனனுடைய சாரணர்கள் வந்து அந்த அதிசய யானையைப் பற்றி அவனுக்குச் சொன்னதாக லோகோக்தி கூறுகின்றது; அதை மாற்றிப் பாஸன் ஒரு பதாதி வீரன் (மகாசேனனது ஒற்றனென்பது தெளிவு) வந்து அவனுக்குச் சொல்வதாகத் திருத்தி யிருக்கிறான். அந்தப் போலி யானைக்கு நிஜத்தன்மைத் தோன்றுமாறு உண்மையான யானைமந்தையொன்றை இடையிற்கொண்டு வந்து சேர்க்கிறான். தரைமீது நின்று வேட்டை வாளைக் கைக்கொண்டு போர்புரிகிறானென்பதற்குப் பதிலாக சுந்தரபடலன் என்னும் தன் குதிரை மீதிருந்து ஈட்டியைக் கொண்டு, மகாசேனனுடைய படை யாட்களோடு சண்டை செய்ததாகப் பாஸன் காட்டியுள்ளான். அவனைச் சேர்ந்த 20 பிரபுக்கள் அவனுடன் போய் போரிலமர்ந்து மாண்டனரென வும் சொல்லியிருக்கிறான். அதற்குப் பின் அரசனைக் கொடிகளி னாலும் மிலாறுகளினாலும் கட்டுகிறார்களே யல்லாமல் அவன் சண்டை செய்துகொண்டிருக்கையில் பின்புறமாக வந்து, லோகோக்திற் போல, கட்டவில்லை. உறவினரைப் போரிற் பலிகொடுத்த வீரர்களின் புலம்பல்கள், ஒரு தனி வீரன் உதயனன் குடுமியைப் பிடித்திழுத்து அவன் தலையை வெட்ட முயன்றது, அம்முயற்சியில் அவன் இரத்தம் படிந்த தரையில் வழுக்கி இறந்தது, முற்போரிலே காயமுண்ட சாலங்காயனன் அவ்வாபத்தான வேளையில் தெளிந்தெழுந்து வந்து

உதயனனை அதற்கு மேலும் இம்சிக்காமற் செய்தது ஆகிய இவை யெல்லாம் வதந்திக் கதையில் இல்லை, பாஸகவியின் சொந்த கற்பனைகளே.

ஹம்ஸகன் என்னும் ஆளையனுப்பி உதயனன் தன் நிலைமையை யௌகந்தராயணருக்கு அறிவித்ததாகவும் அவனை விடுவிப்பேனென்று அவர் சபதம் செய்ததாகவும் லோகவதந்தியா யுள்ள கதை சொல்வதில்லை. கதையில் மகாசேனனுடைய சைனியம் பிரபலமானதென்று யௌகந்தராயணர் சொல்லுகிறாரேயல்லாமல் நாடகத்தின் முதலாம் அங்கம் நான்காம் சுலோகத்திலுள்ளதுபோல இழிவாகக் கூறவில்லை. ரக்ஷாஸனாத்திரத்தையும் மகாராணியின் ஆசிமொழிகளையும் பற்றிச் சொல்லுகிற இனிமையான வாக்கியங்கள் உலகியற் கதையில் இல்லை. யானைக் காட்டுக்கு உதயனன் புறப் படும் சமயத்தில் அந்த லக்னத்தின் பயனாக அவன் ஒரு வதுவை யடைந்து சிறைப்படுவானென்று சோதிடர்கள் கூறுகிற நாடகாலங் காரத்திற் சொல்லாத வார்த்தைகள் நாடகத்தில் எடுத்துக்கொள்ளப் படவில்லை. அவ்விடத்தில் அற்புத ரஸம் தோன்ற வேண்டும். அந்தச் சோதிடக் கூற்றுக்கள் அவ்வற்புத ரஸத்தைக் கொடுக்குமாதலின் அவை விடப்பட்டன. அது போலவே, உதயனனை எதிர்கொண்டு மகாசேனன் ராஜாங்க மரியாதைகளுடன் அவனை நகரத்திற்குள் அழைத்துக்கொண்டு போனதாகவும் நாடகத்தில் சொல்லவில்லை.

லோகோக்திக் கதையில் யௌகந்தராயணர் பெரிய மந்திரவாதி, மாயாவி; அம்மந்திரமகிமையால் அவர் தன் வடிவத்தையும், வஸந் தகனுடைய வடிவத்தையும் மாற்றி விடுகிறார்; பிறர் கண்ணுக்குப் புலப்படாமல் மறைந்து விவகரிக்கின்றார், இன்னும் பலபல சித்துக்கள் செய்கிறார். நாடகத்திலோ, துவைபாயனர் விட்டுப்போன ஆடையை அணிவதனால் யௌகந்தராயணர் உருமாறுகின்றாரே யல்லாமல், தம்முடைய சொந்த மந்திரப் பிரபாவத்தினாலன்று. வாஸவதத்தை யின் உருவத்தை அவர் மாற்றியதாகச் சொல்லவில்லை. நாடகத்தில் ருமண்வானும் உஜ்ஜைனிக்குப் போகிறான், கதையிலுள்ளது போலக் கௌஸாம்பியில் தங்கியிருக்கவில்லை. கதையிலுள்ளது போல யௌ கந்தராயணரை அரண்மனைக்கு வாஸவதத்தை அழைக்கவில்லை. அவர் உதயனனோடு நெடுநேரம் பேசிக்கொண்டிருந்து தன் சூழ்ச்சி களை யெல்லாம் விரித்துரைக்கவில்லை; விலங்கை முறிப்பதற்கும், வாஸவதத்தையின் மனத்தைக் கவர்வதற்கும் இவைபோன்ற வேறு சில காரியங்கள் செய்வதற்கும் அவர் உதயனனுக்கு மந்திரோபதேசம் செய்யவில்லை.

மறுபடி யௌகந்தராயணர், உதயனனுக்கும் வஸந்தகனுக்கும் மாத்திரமன்றி மற்றெவருக்கும் புலப்படாமல் உதயனனைப் பார்த்துப் பேசவில்லை. மகாசேனனை அவமானப்படுத்தும் பொருட்டு வாஸவ தத்தையை எடுத்துக்கொண்டு போவோமென்று சொல்லவும் இல்லை. இதைக் காட்டிலும் உலகியல் ஒழுக்கத்திற்கேற்ப, மந்திரிகள் மூவரும் மாறுவேஷம் பூண்டு, ஜனநடமாட்ட மில்லாதோரிடத்தில் ஒரு பழைய கோயிலிற் கூடிக் கலந்து பேசிக்கொண்டு, ஜனங்கள் நடமாடத் தொடங்கியவுடன் வேறு வேறு வாயிலாகப் பிரிந்து வெளியேறுகிறார் கள். வசந்தகன் மாத்திரம் அரசனைச் சந்தித்து அவனுக்கும் யௌ கந்தராயணருக்கும் ருமண்வானுக்கும் மத்திய வர்த்தியாக விவகரிக் கிறான். மகாசேனனை அவமானப்படுத்தும் பொருட்டு வாஸவதத்தையை எடுத்துக்கொண்டு போய் விடுவோமென உதயனனே ஆலோசனை சொல்லுகிறான். அதை ஒப்பாமல் யௌகந்தராயணர் கோபப்படுகிறார்.

யௌகந்தராயணர் சண்டை செய்யாமலே கதையில் உதய னனும் வாஸவதத்தையும் ஓடிப்போகிறார்கள். அவர்கள் ஓடிப்போன பின் யௌகந்தராயணர் சண்டை செய்ததாக நாடகத்திற் சொல்லப் படுகின்றது. லோகோக்தி கதையில், மகாசேனனும் ராணியும் தங்கள் மகன் கோபாலகனைக் கௌஸாம்பிக்கு அனுப்பி அவன் மூலமாகத் தங்கள் ஆசீர்வாதத்தைத் தெரிவிக்கிறார்கள். விவாகத்தை வெளிப் படையாக உதயனன் அங்கே நடத்திக் கொள்கிறான். யௌகந்த ராயணருக்கும் பரதாரோகனுக்கும் நடந்த வாக்குவாதம், அங்காரவதி தற்கொலை செய்து கொள்ளும் முயற்சி, யௌகந்தராயணருக்குப் பொற்கிண்ணம் அளிக்கும் உருக்கமான ஸங்கதி, வாஸவதத்தையி னுடைய படத்தையும் உதயனனுடைய படத்தையும் வைத்து விவா கோற்சவம் கொண்டாடல் ஆகிய இவையெல்லாம் பாஸகவியின் சொந்த கற்பனைகளே.

'ஸ்வப்ன வாஸவதத்த'திலும் பாஸகவி லோகோக்தி கதை யைப் பெரிதும் மாற்றியிருக்கின்றான். உதாரணமாக உதயனனுக்குச் சொந்தமாக ஆசையில்லாவிடினும் அவனை உலகத்திற்கெல்லாம் அரசனாக்கும் கருத்துக் கொண்டு வாஸவதத்தைத் தீயில் எரிந்துபோன தாகப் புரளி எழுப்ப வேண்டுமென்று யௌகந்தராயணர் ஆலோசனை சொல்லி, உதயனனுக்கும் பத்மாவதிக்கும் விவாகமாகும்படி செய் கிறார். தங்கள் அரசன் உலகம் முழுவதையும் ஜயித்து ராஜஸூய யாகம் செய்ய வேண்டுமென்று மந்திரிகள் ஆசைப்படுவது ஆரியர்களுக்கு

உண்டான பெருநோக்கம். ஆயினும், அந்த ஆசையை நிறைவேற்று வதற்காக யௌகந்தராயணர் இப்படிப்பட்ட காரியங்கள் செய்ததை நாடகம் பார்க்கும் ஜனங்கள் பெரும்பாலார் ஒப்புக்கொள்ள மாட்டார் களென்பது தெளிவு. பாஸன் மானிடர் இயல்பை நன்கு உணர்ந்தவன். ஆதலால், இவன் இந்தக் கதையை மாற்றிவிட்டான். உதயனனை ஏகசக்ராதிபதியாக்கும் பொருட்டு இப்படிப்பட்ட கோரமான காரியங்களைச் செய்து யௌகந்தராயணர் உதயனனுக்கும் வாஸவ தத்தைக்கும் எல்லையில்லாத் துன்பம் விளைவித்தாரென்னாமல், கௌசாம்பியையும் வத்ச நாட்டையும் ஆக்கிரமித்துக் கொண்டிருந்த ஆருணியின் கையினின்று அதை விடுவிக்கும் பொருட்டே இங்ஙனம் செய்தார் என்று பாஸன் சொல்லுகிறான். லோகோக்தி கதையிற் சொல்லப்படுகிற காரணத்திற்காக யௌகந்தராயணர் இங்ஙனம் செய்தாரென்றால் அவர்மீது ஜனங்கள் எவ்வளவு தோஷம் சொல் வார்களோ அவ்வளவு, நாடகத்திற் சொல்லிய காரணத்திற்காகச் சொல்ல மாட்டார்கள் என்பதற்காகும்.

வாஸவதத்தையின் தமையனான கோபாலகனும், உதய னனை உலகத்திற்கெல்லாம் அரசனாக்கும் பொருட்டு, இந்தச் சூழ்ச் சியிற் கலந்திருந்தானென்று கதையிற் சொல்லப்படுகின்றது. இதில் இரண்டுவிதமான குற்றம் இருக்கின்றது. முதலாவது, தன் தங்கைக்குப் பிரதியாக வேறொருத்தியை ராணியாக்குவதற்கு அவன் உடன்பட்ட வனாகின்றான்; இரண்டாவது, அவன் அரசியல் விவகார தந்திரங் களில் கைதேர்ந்தவனென்று அவனுடைய தகப்பனார் சொல்லியிருக்க, தன் சொந்த தந்தையையும் ராச்சியத்தையும் வென்று உதயனன் சக்கரவர்த்தியாவதற்கு அவன் ஒப்புக்கொள்கிறான் என்பதுமாகும். கோபாலகனுடைய பெயர் இந்தச் சூழ்ச்சியிற் சம்பந்தப்பட்டதாகச் சொல்லாததனால் நாடகாசிரியன் மேற்சொல்லிய குற்றங்களுக்கு இடமில்லாமற் செய்தான்.

வாஸவதத்தையுடனும் வஸந்தகனும் தீயினுக்கு இரையாயி னான்; வாஸவதத்தையையும் வஸந்தகனையும் அழைத்துக்கொண்டு யௌகந்தராயணர் ராஜகிருகத்திற்குப் போய்ப் பத்மாவதியிடம் வாஸவ தத்தையை ஒப்பித்து விட்டு, காட்டினின்று உதயனன் திரும்பி வரு முன்னரே, லாவாணகத்திற்குத் திரும்பி வந்துவிட்டாரென்று கதை கூறுகின்றது. இதில் ஒரு தோஷம் இருக்கின்றது. யௌகந்தராயணர் மகதத்துக்குப் போய் வந்தபின்னரே உதயனன் வேட்டையாடிக்

காட்டிலிருந்து திரும்பிவந்தானென்பது பொருந்தாது. ஆகையால், வாஸவதத்தையோடு நெருப்பில் மாண்டது யௌகந்தராயணர் என்று பாஸனும் சொல்லுகிறான். ஆவந்திகையைத் திரும்ப அழைத்துக் கொண்டுபோக வரும்போதே கடைசியில் யௌகந்தராயணர் அரசனுடன் மறுபடி சேர்வதாக அவரைக் கொண்டு வருகிறான்.

யௌகந்தராயணருடைய நடவடிக்கையையும் கோபாலகனுடைய நடவடிக்கையையும் பார்த்ததும் சில சோதிடர்களுடைய முற்குறிப்பை ஞாபகப்படுத்திக் கொண்டும் வாஸவதத்தை இறந்து போகவில்லையென்று உதயனன் அனுமானிக்கிறான்; இனி ஒருகால் அவளோடு கூடிவாழ்வோமென்னும் ஆசையோடிருந்தான். இப்படிச் சொல்வதனால் நாடகத்தின் அதிசயத்தன்மை குறைந்து போகின்றது. ஆதலால் பாஸன் இதை எடுத்துக்கொள்ளவில்லை; இதற்குப் பதிலாக, பத்மாவதியின் நெற்றிப் பொட்டு அழியாதிருந்ததைக் கண்டு, வாஸவதத்தை உயிரோடிருக்கிறாளென்று அரையனுமானங் கொள்கிறானென்று சொல்லியிருக்கிறான். கதையின்படி பார்த்தால், வாஸவதத்தையைக் குறித்து உதயனன் புலம்புவது பிள்ளைத்தனமான உணர்ச்சியெனத் தோன்றும்; பத்மாவதியை மணந்துகொள்வது பல மனையாட்சிக்காரருக்கு வழக்கமாயுள்ள காரியமெனத் தோன்றும். ராணி இறந்து போகவில்லை, மறுபடி அவளோடு கூடி வாழ்வோமென்னும் எண்ணம் உதயனனுக்கு இருக்குமாயின், வாஸவதத்தையின் பிரிவாற்றாமல் அவன் படும் கடுவேதனையும் பெருந்துயரும் புலம்பும் அன்பு மொழிகளும் பயனற்றனவாகத் தோன்றும். நீராழி மண்டபத்தில் அவன் காணும் கனவுக் காட்சியின் அருமையும் அழகும் இனிமையும் தோன்றாவாகும். 'வாஸவதத்தையின் கனவுக் காட்சி' 'வாஸவதத்தையின் காட்சி'யேயாகிவிடும்.

இந்நாடகத்திற்குள் சிறந்த காட்சி நீராழி மண்டபத்து கனவு காட்சியே. அதனாலேயே இந்நாடகத்திற்கு ''ஸ்வப்ன வாஸவதத்தம்'' என்னும் பெயர் வந்துளது. லோகோக்தி கதையில் அந்தக் காட்சியே இல்லை. கதையின்படி வத்ஸராஜன் கலியாணமானவுடன் ராஜகிருகத்தை விட்டு நீங்கிப் போகிறான். அங்கேயே இருந்தால் வாஸவதத்தையை ஒருவேளை அவன் காணுவதற்காகும், அதனால் யௌகந்தராயணர் செய்த சூழ்ச்சியெலாம் பங்கமாய்ப் போகும் என்னும் காரணத்தினால் அவன் அவ்வூரைவிட்டுப் போகும்படி அவர் செய்தார் என்பதாகின்றது.

பத்மாவதியின் மணமாலையை வாஸவதத்தை தொடுப்பது, 'இது என்ன என் தௌர்ப்பாக்கியம்! இந்தக் காரியமும் என் தலை மீது விடிந்ததே! எனது பிரியநாயகனும் இப்பொழுது வேறொருத்திக்கு உரியவராயினரே' என்று அவள் ஓலமிடுவது முதலான ரஸமான நுண்ணிய அம்சங்கள் லோகோக்தி கதையில் இல்லை.

லோகோக்தி கதையில், வஸந்தகனுடன் வாஸவதத்தையை யௌகந்தராயணர் அரண்மனை முற்றத்திற்கு அழைத்துக்கொண்டு போனபோது வாஸவதத்தையின் மீது பத்மாவதி முதற்பார்வையிலேயே அன்பும் ஆசையும் கொண்டாளென்று சொல்லப்பட்டிருக்கின்றது; இதனால் தவச்சாலையின் அரியவர்ணனையும், அங்கு நடந்த இனிமையான காட்சியும், பத்மாவதி பக்தி விசேஷத்தினால் அறவோர்க்குக் கொடையளிக்கும் அழகிய விதமும், தவத்தினரொருவரின் வேண்டுகோட் கிணங்கி பத்மாவதி அந்த வாஸவதத்தையை தன் பார்வையில் வைத்துக் காக்க ஒப்புக்கொண்ட பெருங்குணமும் சுணையற்று களையற்றுக் காணாமற் போகும்.

லோகோக்தி கதையில், பத்மாவதியின் விவாகமுகூர்த்த சமயத்தில், உதயனனுக்கு ஒருபோதும் தீங்கிழைப்பதில்லையென்று மகதத்தரசன் அக்கினி சாக்ஷியாகப் பிரமாணம் பண்ணும்படி யௌகந்தராயணர் செய்கிறார். இது மிக விகாரமாகவும் நாடகவியலுக்குப் பொருந்தாததாகவும் இருக்கின்றது. இப்படிச் சொல்வதனால், உதயனனுக்கு மகதராஜன் சமயோசிதமாகத் தானே முன்வந்து உதவி செய்தானென்னும் பெருமை அழிந்து போகின்றது; அவன் சொல்லியனுப்பிய தூது வர்த்தமானத்தின் அழகும் ஐந்தாம் அங்கம் 12-ஆம் சுலோகத்திலடங்கிய நட்புரிமையும் நாகரீகச் சிறப்பும் மறைந்துபோகும்.

நாடகத்தில், கௌசாம்பியில் தன் கணவன் வீட்டிற்குப் பத்மாவதியுடன் வாஸவதத்தை போகின்றாள். அங்கு நிகழும் விஷயங்கள் வாஸவதத்தையின் நிஜஸ்வரூபம் வெளிப்படுவதற்குச் சரியான ஏதுவாகின்றன. கதையின்படி பத்மாவதியினின்று பிரிந்து வாஸவதத்தை போர்ப்படையின் பின்னணியோடு சேர்ந்து லாவாணகத்திற் கோபாலகனுடைய வீட்டுக்குப்போய் அவனைத் தழுவிப் புலம்புகிறாள். இந்த உளவு தெரிந்து பத்மாவதி சீற்றமுற்று தன் வசமாயிருக்கத்தக்க வாஸவதத்தையைத் தன்னிடம் திரும்பி வந்து சேரும்படி அவளுக்குச் சொல்லியனுப்புகிறாள். பத்மாவதி கலக்கமுற்று திகைக்கையில் அவ

ளுடைய நெற்றிப்பொட்டு அழியாதிருப்பதை வத்ஸராஜன் கண்டு ஆவந்திகையே வாஸவதத்தையாக இருக்க வேண்டுமென்று அனுமானப் படுகிறான், கோபாலகனுடைய வீட்டுக்கு ஓடிப்போகிறான். அங்கே வாஸவதத்தையைப் பார்த்து அவளைக் கண்டுகொள்கிறான். எல்லாரும் அழுகிறார்கள். வழக்கம் போல வாஸவதத்தையும் பத்மாவதியும் தீக் குளிக்க முன்வருகிறார்கள். சம்பிரதாயப்படி வாஸவதத்தை பரிசுத்த மானவளென்று பகரும்படி யௌகந்தராயணர் விண்ணவரை வேண்டு கின்றார். அதன்மீது ஆகாசவாணி பேசுகின்றது.

இவையெல்லாம் சீதாதேவியினது போன்ற பிரசித்தமான கதை களைப் பார்த்து விகாரமாகப் போலி செய்த சங்கதிகளாம். இவை நாடகத்திற்குச் சிறிதும் ஏற்காத வீண் சுமைகளெனப் பாஸன் இவற்றை யெல்லாம் ஒழித்துவிட்டான். லோகோக்தி கதையை அனுசரித்து நாட கத்தை எழுதியிருந்தால் வாஸவதத்தையைத் தன் பராமரிப்பிலேயே எப்போதும் வைத்துக்கொண்டிருப்பதாக யௌகந்தராயணருக்குப் பத்மாவதி கொடுத்த வாக்குறுதி நிறைவேறாததாகும்; வாஸவதத்தை தன் இயல்புக்குத் தகாதவிதமாக நடந்துகொண்டிருப்பாள்; வாஸவ தத்தையை யௌகந்தராயணர் பத்மாவதியின் வசம் ஒப்பித்து அவ ளுடைய நல்லொழுக்கத்திற்குச் சான்றாகும்படி செய்வது, வத்ஸராஜ னுக்கு வாஸவதத்தையின் கற்பையுணர்த்தும் பொருட்டு தீக்குளிக்க முன்வருவது போலவும் ஆகாசவாணிவந்து சாக்ஷி சொல்வது போலவும் பயனற்றதாகும்.

வத்ஸராஜன் தன் நாட்டைத் தவிர வேறு எதனையும் வெல் லாதவன்; உலக முழுவதையும் வென்றதாக நினைத்துக் கொண்டா னென்று கபடமில்லாமற் கதையிற் சொல்லப்பட்டிருக்கின்றது. பாஸன் இருந்தது சந்திரகுப்த சக்கரவர்த்தியின் காலமாகும். சந்திரகுப்தனோ, வத்சராஜ்யத்தைக் காட்டிலும் நூறுமடங்கு பெரிதான ராஜ்யத்தை ஆண்டுக்கொண்டிருந்தான். ஆனதனால் வத்ஸராஜன் உலக சாம் ராஜ்யம் பெற்றானென்னும் மாயையைக் கைக்கொள்ளாமல் ஒதுக்கி விட்டான். யௌகந்தராயணர் செய்த சூழ்ச்சிக்கு அதைக் காரணமாகக் கொள்ளாமற் கைவிட்டதனால், ஆருணி என்பவனொருவன் வத்ஸ ராஜ்யத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தானெனப் பாஸன் கற்பனை செய்ய வேண்டியதாயிற்று. அரண்மனை நந்தவனத்தில் அழகிய காட்சி யைக் கற்பித்தவனும் பாஸனே; அதைப் போலவே அழகாகக் கோஷ வதி அரசன் கைக்கு வந்து சேர்ந்த கதையையும் அதைப் பழுதுபார்த்து வைத்துக் கொண்டு வத்ஸராஜன் துக்கித்த உப கதையையும்; உற்ற

தருணத்தில் உஜ்ஜைனியிலிருந்து கஞ்சுகியும் தாதியும், உதயன னுடைய படத்தையும் வாஸவதத்தையின் படத்தையும் வைத்துக் கலியாணம் நடத்தியதாக அவர்கள் அப்படங்களைக் கொண்டுவந்த காட்சியையும், இவைபோன்ற ரம்மியமான வேறு காட்சிகளையும் கற்பனை செய்தவன் பாஸனே.

இந்த இரண்டு நாடகங்களையும் ஜனங்கள் பெரிதுங் கொண் டாடினார்கள்; இவைகளைப்போல அநேக நாடகங்கள் எழுதலானார் கள். உதாரணமாக, ''வீணாவாஸவதத்தம்'' என்பதும் ''உன்மத்த வாஸவ தத்தம்'' என்பதும் ''பிரதிக்ஞா யௌகந்தராயண''த்தைத் தழுவி எழுதப்பட்டனவாகும்; ''பிரியதரிசிகை'', ''ரத்னாவளி'', ''மாளவிகாக் நிமித்ரம்'' என்பனவும் ''ஸ்வப்ன வாஸவதத்த''த்தின் போலிகளேயாம்.

''ரத்னாவளி'' என்னும் நாடகத்தில் ராணி வாஸவதத்தைக்கு **சாகரிகை** என்னுமொரு பரிசாரிகை இருந்தாள்; அவள்மீது உதயனன் இரகசியமாகக் காதல் கொண்டொழுகியது வர்ணிக்கப்பட்டிருக் கின்றது. தீ விபத்தொன்று நேர்கின்றது; முடிவில் சாகரிகையையும் உதயனன் கலியாணம் செய்துகொள்கிறான்; நீராழி மண்டபத்தில் தோன்றும் ஆவந்திகைக்குப் பதிலாகச் சாகரிகை வைக்கப்பட்டிருக் கிறாளென்பது சொல்லாமலே தெரியும்.

''பிரியதரிசிகை''யிலும் தன் ராணியின் பணிப்பெண் ஆரண் ணியகையின் மீது உதயனன் ஆசைகொண்டு இரகசியமாக விவகரிக் கிறான். அந்த விவகாரம் வெளியாகி விடுகின்றது. முடிவில், அவ னுடைய ராணியே ஆரண்ணியகையை உதயனனுக்கு இரண்டாம் மனைவியாக ஏற்றுக்கொள்ளும்படி செய்கிறாள்; ஆரண்ணியகை என்பவள் அங்க தேசத்தரசனது குமாரியெனத் தெரிகின்றது. விரசிகை யையும் ஆவந்திகையையும் ஒருமித்து ஆரண்ணியகை என்பவளை அந்நாடகாசிரியன் சிருஷ்டித்துள்ளானென்று சொல்லவும் வேண்டுமோ!

''மாளவிகாக்நிமித்திர''த்தில் அக்நிமித்திரன் என்பவன் தன் ராணியின் வேலைக்காரியின் மீது ஆசைப்படுகிறான்; அவள் மாளவிகை எனப்படுபவள். அவள் அழகிற் சிறந்தவளானமையின் அரசனது கண்ணுக்குப் படாதபடி பொறாமையினால் ராணி அவளை மறைத்தே வைக்கிறாள். கடைசியில் அவன் மாளவிகையை மணந்து கொள்கிறான். அவள் ஒரு ராஜகுமாரியென்று ஏற்படுகின்றது.

மாளவிகை என்னும் நாடகபாத்திரம் ஆவந்திகை என்பதை ஒத்திருக் கிறதென்று நாம் வற்புறுத்திக் காட்டவேண்டியதில்லையே.'' 'மாளவ' என்னும் சொல்லுக்கு 'அவந்தி' என்று அர்த்தம். பாஸன் காலத்தில் அவந்தி எனப்பட்ட தேசமே காளிதாசனுடைய காலத்தில் மாளவம் என வழங்கப்பெற்றது.

## இவ்விரண்டு நாடகங்களிலுள்ள பாத்திரங்கள்
## உதயனன் : (வத்ஸராஜன்)

உதயனென்னும் பெயரால் மனோஹரமான பாத்திரமொன் றைப் பாஸன் சிருஷ்டித்திருக்கிறான். அவனிடத்து கிங் ஆர்த்தர், டான் ஜுவான், பிரின்ஸ் சார்மிங் (King Arthur, Donjuan, Prince Charming) என்னும் மூவருடைய தன்மையும் ஒருங்கே அமைந் துள்ளன; இந்த நாடக பாத்திரம் லோகோக்திக் கதையினின்றே கைக்கொள்ளப்பட்டிருக்கின்றது; அது டான் ஜுவான் என்பவனது தன்மையை அரசனிடம் அதிகமாக அமைந்திருப்பதாகக் காட்டு கின்றது; மாதர்களின் மனத்துக்கு இனியவனாய் இருப்பதன்றி லலித கலைகளிற் கைதேர்ந்தவனாகவும் இருக்கிறான்; அதுவல்லாமல் புதிதாகச் சுந்தரவதியொருத்தியைக் கண்டவுடன் முன் மாதை மறக்கும் தன்மையுடைய ஸ்திரீலோலனாகவும் இருக்கிறான். பாஸன் காலத்து முன்னரும் லோகோக்தி கதையானது உதயனன் தன்னையறியாமல் தனது பழைய இரகசிய காதலியை நினைத்துக் கொண்டு வாஸவதத் தையை அந்தப் பழைய காதலியின் பெயரிட்டு 'விரசிகா' என விளிக் கிறான். அதனால் ஊடலும் உபத்திரவமும் உண்டாகின்றன. இந்த அமிசத்தை மேனாட்டுக் கதைக்காரர் பலரும் பலமுறை எடுத்துக் கையாண்டிருக்கிறார்கள். அரசனுடைய சபல சித்தத்தைக் காட்டிலும் தயாவீரத்தையும் தரும குணத்தையும் பாஸன் வற்புறுத்துகின்றான். சுருக்கிச் சொல்லின், கிங் ஆர்த்தர் மீதும் பிரின்ஸ் சார்மிங் மீதும் மனத்தை அதிகமாகச் செலுத்தி டான் ஜுவான் தன்மையைப் பாஸன் தணித்திருக்கிறான்; ஆயினும், விரசிகையைக் குறித்த கிளைக்கதை மிக்க ருசிகரமாயிருப்பதனால், அதை விட்டுவிட மனமில்லாமற் பாஸன் அதை ''ஸ்வப்ன வாஸவதத்த''த்திற் குறிப்பாகக் காட்டியிருக்கின்றான்.

இவ்விரண்டு நாடகங்களிலும் அரசனுடைய ஒழுக்கம் முற்றும் இனிமையாயிருக்கின்றது. ஒரு மனைவி இருக்கையில் அவளைப்

பொருட்படுத்தாமல் மற்றொரு மனைவியை மணக்க வேண்டுமென்னும் துராசையினால் அவன் பலமனையாட்சிக்காரனாகவில்லை. பார்க்கப் போனால், அன்றைய நாளில் பிரபலமாயிருந்த மன்னனுடைய ரூபவதியான பத்மாவதியென்னும் மகளை மணப்பதற்கு உதயனன் இசையுமுன் வாஸவதத்தையை எரித்துக் கொன்றுவிட வேண்டியது அவசியமெனப் பாஸன் வற்புறுத்தியிருக்கின்றான். இந்த விஷயத்தைப் பற்றிப் பேசும்போது அக்காலத்துக்கு உற்ற குற்றங்குறைகளை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். வடமொழி நாடகாசிரியர்கள், அரசர்களெல்லாரும் 'பலமனையாளர்' எனவே சொல்லியிருக்கிறார்கள். 'சாகுந்தல' நாடகத்தின் கதாநாயகனான துஷ்யந்தனுக்கும், அவன் சகுந்தலையை மணக்குமுன் அநேக மனைவியர்கள் இருந்தார்களாம். கண்வமாமுனிவரும் சகுந்தலையை நோக்கி, சகக்களத்தியரோடு சரசமாயிருக்கும்படி புத்தி சொல்கிறார். இந்த வார்த்தை இக்காலத்தவர்களின் காதுக்கு அருவருப்பாயிருக்கும்; நாடகத்தின் அழகையும் இது குறைக்கின்றது. அந்நாளில் அன்னிய தேசங்களின் நிலைமை இதனினுங் கேடாக இருந்ததென்று சொல்வேன். சாலமன் என்பவன் வத்ஸ ராஜ்யத்தைக் காட்டிலும் சிறிதானதொரு பிரதேசத்திற்கு அதிபதியாயிருந்தவன். அவன் ''ஞானி'' என்னும் பட்டப் பெயரும் வாய்ந்தவன். அவனுக்குக் கூத்தியார்களல்லாமல் நூற்றுக்கணக்கான மனைவியர்கள் இருந்தார்களெனச் சொல்லப்பட்டிருக்கின்றது. அவனுடைய அந்தத் துராசாரத்தையும் மற்றுமுள்ள சார்புகளையும் கண்டித்து பைபிள் பழைய ஏற்பாட்டிலேனும் புதிய ஏற்பாட்டிலேனும் ஒரு வார்த்தையாவது சொல்லப்படவில்லை. பாஸன் சிறந்த மனநூற் புலவன். பலமனையாட்சிக் கொள்கையை மறுக்காமலே அவன், வாஸவதத்தை உயிரோடிருக்கிறாளென்று தெரிந்து உதயனன் பத்மாவதியை மணந்துகொள்ளின் அவனுக்கு வாஸவதத்தையின் மீதுள்ள அதிசயமான பிரேமைக்குப் பங்கம் வருமென்று நினைத்தான்.

பாஸனுடைய நாடகங்களில் உதயனன் வாஸவதத்தையின் மீது அதிசயமான ஆசை வைத்திருக்கும் பத்மாவதியினிடம் தயாவீரமும் உபகார புத்தியும் உடையவனாயிருக்கிறான். இவ்விஷயம், வாஸவதத்தை இறந்துபோனாளென்று கேள்விப்பட்டு அவன்படும் கடுவேதனையின் வர்ணனையினால் தெரிகின்றது. அவனுடைய துயரத்தை ''ஸ்வப்ன வாஸவதத்தம்'' முதலாம் அங்கத்தில் பிரம்மசாரி ஒருவன் வந்து விரித்துரைக்கிறான். நான்காம் அங்கம் 1, 4, 4(a), 5, 6 என்னும் சுலோகங்களிலும், ஐந்தாம் அங்கம் 1, 2, 5, 6, 7, 7(a), 8,

8(a), 9, 10, 11 என்னும் சுலோகங்களிலும், ஆறாம் அங்கம் 1, 2, 3, 4, 11, 13, 14, 17 என்னும் சுலோகங்களிலும் இது விவரிக்கப்பட்டிருக்கின்றது. உண்மையில், பிரம்மசாரி சொல்வதுபோல, துக்க மேலீட்டால் உதயனன் விழுந்து புரளுகிறான். திடீரென எழுந்திருக்கிறான். வேதனைப்பட்டு அவன், ''ஓ, வாஸவதத்தே, ஓ, அவந்திராஜன் குமாரி! ஓ என் ஆருயிரே, ஓ என் அருமை மாணவகீ'' என்று கூவுகிறான். இந்தக் காட்சி நாம் நாடகத்தைப் படித்து முடித்த பின்னரும் நம் மனத்தைவிட்டு நீங்காது, உதயனனோடு நாமும் சேர்ந்து,

அலைபட உள்ளம் அதிர்வித்த
அன்பு மறக்கும் தரமாமோ?
நிலைகெட மீண்டும், புதிதாக
நினைவெழ நெஞ்சில் நுழையாதோ?
இடர்மிக அடிமைச்சிறு குழியில்
இழிவுறும் உள்ளச் சுனம்தீர
வடிவது விழியின் நீரன்றோ?
மற்றொரு மாற்றிங் குளதேயோ?

என்று சொல்வோம். வாஸவதத்தையின் மீது அவனுக்கு இருந்த ஆசை மிக அதிகம். பொய்யாகவேனும் அவள் இறந்து போனாளென்னும் வர்த்தமானம் கேட்டவுடன் அவனுக்குப் பரமதுக்கம் மேலிட்டது. அதனால் அவன் நர்மதா நதிக்கரையில் விட்டிருந்த ''கோஷவதி'' என்னும் தன் அற்புத வீணையையும் மறந்தான்.

''ஸ்வப்ன வாஸவதத்தம்'' நான்காம் அங்கம் நான்காம் சுலோகத்தில் வாஸவதத்தையையும் பத்மாவதியையும் உதயனன் ஒப்பிட்டுப் பார்க்கின்றான். அந்த ஒப்பனை எல்லாக் காலத்திற்குமுரிய உண்மையாகும். வெளிப்படையாகக் காரணமொன்று மில்லாமலே சிலர் நம் மனத்தைக் கவருகிறார்கள்; வேறு சிலர் அவர்கள்மீது நமக்கு ஒருவித மான திருப்தி உண்டாகும்படி செய்கிறார்கள். நான்காம் அங்கத்து 4(a) சுலோகம் உத்தம ஹிந்து மனைவியின் லட்சணத்தை அற்புதமாகவும் அழகாகவும் வர்ணிக்கின்றது. அவள் ராஜாத்தியேயாயினும் நாட்டுப்புறத்துக்காரியாயினும் கணவனுக்குப் பணிவிடை செய்வதே அவளுக்குரிய உத்தம தருமமென்றும், அப்படி பணிவிடை செய்து கொண்டிருக்கிறவளே நற்கதி யடைவளென்றும் இச் சகவார்த்தைகள் அதில் சொல்லப்பட்டிருக்கின்றது.

ஆனால், பத்மாவதியின் விஷயத்தில் தயாவீரமாகவும் நாஜூக்காகவும் உதயனன் நடந்துகொள்கிறான். அஃது அவனுடைய பெருந்தன்மையைக் காட்டுகின்றது. ''ஸ்வப்ன வாஸவதத்தம்'' நான்காம் அங்கம் 8-ஆம் சுலோகம் இதை விளக்குகின்றது. 7-ஆம் சுலோகத்தில் அவன் காச மலர்களின் பூந்தாது விழுந்ததனால் தன் கண்களில் நீர் பெருகுகின்றதெனச் சொல்வதும் பத்மாவதியின் மனத்திற்கு ஆயாசம் உண்டாகாமதிருக்குமாறு செய்யும் பொருட்டேயாம்.

ஆனால், உதயனன் வெறும் ஸ்திரீலோலனே யல்லன், யுத்தஞ் செய்ய வல்லான், சத்திரிய வீரனாகப் போர் புரிவான், தீரர் களுள் தீரனாக விளங்குவான். கிருத்திரம யானை வலையிலகப்பட்டுக் கொண்டபோது அவன் பின்னிட்டோட முயலாமல், அணிவகுத்து நின்ற சத்ருப்படையில் விழுந்தடித்துக் களைத்துச் சோர்ந்து விழுமளவும் போர் புரிந்தான். விழுந்த பின்னும் அந்த ஓராளிடத்துச் சத்துருக் களுக்கு எவ்வளவு அச்சமிருந்ததென்பது அவன் நினைவு தெளிந்த வுடனே அவர்களெல்லாரும் சிதறி நாலாபக்கங்களிலும் ஓடிப்போனார் களென்பதனால் தெரிகின்றது. ''ஸ்வப்ன வாசவதத்தம்'' ஐந்தாம் அங்கம் 13-ஆம் சுலோகமும் இவனுடைய சௌகரியத்தை விளக்குகின்றது. சில பதாதி யாட்களுடன் மாத்திரம் அவன் பெரிய ஆண் யானையைப் பிடிக்கப்போனதும் அவனது துணிவைக் காட்டுகின்றது. உள்ளே சர்ப்ப மிருப்பதனால் நீராழி மண்டபத்திற்குள் வரவேண்டாமென்று விதூஷகன் சொல்லியபோது அவன் அமைதியாகப் புன்சிரிப்பு சிரித்துக் கொண்டு அவ்விடத்திற்கு ஓடிப்போய் அஃதென்னவென்று உற்றுப்பார்த்து, காற்றிலசைந்தாடும் மலர்மாலையெனத் தெளிந்து, விதூஷகனைக் கேலி செய்கின்றான். பெரும் தீரமில்லாதவனெவனும் இந்திய சர்ப்பம் இருக்குமிடத்தினண்டை விரைந்து செல்லான். ஏனெனில், அதனண்டை போனால் சாவு நிச்சயமென்று எல்லாருக்கும் தெரியும்.

அவனுக்கிருந்த மற்றொரு விசேஷகுணம் என்னவெனில், வனக்கிரீடாப் பிரயமும் வேட்டை விருப்பமும் அருஞ்செயல் நோக்கமுமே யாகும். மிக்க பலமும் பராக்கிரமுமுள்ள ஆண் யானைகளைத் தன்னந் தனியே போய்ப் பிடிப்பதில் அவனுக்கு பிரியமதிகம். அவன் வேட்டை யாடிப் பிடித்தவை, மருந்திட்டு மயக்கிய புலிகளல்ல, காட்டானைக ளென்று சொல்லிய பழக்கப்பட்ட யானைகளல்ல. விந்திய மலை யிலுள்ள அடர்ந்த காடுகளிற் புகுந்து மிகக் கொடிய யானைகளையும் சிங்கங்களையும், வேட்டையாடுவான்; அங்ஙனம் வேட்டையாடப் போகையில் தன்னந் தனியே போவான். இங்ஙனம் செய்யத்தக்கவன் தீரமும் பலமும் திறமையும் வாய்ந்தவனாயிருக்க வேண்டும். சமயோ சித புத்தியும் யுக்தியும் சகனசத்தியுமுடையவனாயிருக்க வேண்டும்.

ஏனெனில், இந்நாளிலுள்ளதைக் காட்டிலும் அந்நாளில் இளைப்பாறு வதற்கான காய்கனிகள் பானவகைகள் முதலியன இருந்தனவென்று சொல்வதற்கு இடமில்லை.

எல்லாரிடத்தும் அவன் அன்புடனும் தாட்சண்யத்துடனும் விவகரிப்பான்; கீழ் உத்தியோகஸ்தர்களிடத்தும் வேலைக்காரர்க ளிடத்தும் அதுபோலவே நடந்து கொள்வான். அவர்களைத் தயாளமாக மெச்சிப் பேசுவான். உதாரணமாக ''ஸ்வப்ன வாஸவதத்தம்'' 6-ஆம் அங்கம் 18-ஆம் சுலோகத்தில் யௌகந்தராயணரைப் பற்றி அவன் சொல்லிய மிகப் பெருந்தன்மையான வார்த்தைகள் அவர் செய்த அருங்காரியங்களுக்கெல்லாம் போதியவளவு ஈடுசெய்து அவரைத் திருப்திப்படுத்தும். பத்மாவதிக்கு இஷ்டமில்லாதிருக்க அவளைத் தன் பக்கத்திலுட்கார்ந்து உஜ்ஜைனியிலிருந்து வந்த தூதர்கள் சொல்லும் வார்த்தையைக் கேட்கும்படி அவன் கட்டாயப்படுத்தியதும் அவ னுடைய இந்தத் தன்மையையே காட்டும். வாஸவதத்தையின் மீது அவனுக்கிருந்த ஆசையைப் பற்றி வேண்டியவளவு சொல்லியிருக்கிறோ மாதலால், அதை மறுபடி வற்புறுத்த வேண்டியதில்லை. ''ஸ்வப்ன வாஸவதத்தம்'' ஆறாம் ஆங்கம் 6, 8, 9-ஆம் சுலோகங்களில் மகா சேனன் மீதும் ராணி அங்காரவதியின்மீதும் தனக்குள் அன்பை அவன் காட்டுவதும் இதனையே குறிக்கும். ருமண்வானனுக்கு இந்தச் சூழ்ச்சியெல்லாம் தெரியுமென்று கேள்விப்பட்டபோது ருமண்வான் எவ்வளவு வஞ்சகமுடையவன் என்று விளையாட்டாகச் சொல்லிக் குற்றங் காணாதிருக்கின்றான். கிருத்திரம யானையைப் பிடிப்பதற்காக அவன் அழைத்துக் கொண்டுபோன 20 ஆட்களுள் ஹம்ஸகனைத் தவிர மற்றெல்லாரும் மாண்டு போனார்கள். ஆலோசனையில்லாத தளகர்த் தனைபோல அவ்வாட்களை நடத்தாமல் அவன் அவர்களில் ஒவ்வொரு வரையும் பெயரிட்டு, வீட்டு பெயர் குறித்து விளித்து உற்சாகப் படுத்திப் போர்புரியச் செய்கிறான்.

ஆரியதர்மத்தின் மீது அவனுக்கு குருத்துவம் அதிகம். தர்ம விதியை மீறி அவன் நடக்கமாட்டான். உதாரணமாக, ஆவந்திகை என்பவள் வாஸவதத்தையே என்று பல காரணங்கள் தோன்றிய போதிலும், அவன் வாஸவதத்தை யென்று ருஜுவாகிற வரையில் அவன் அவளைப் பார்க்கவில்லை.

ஆரிய மன்னர்களெல்லாரையும் போல, அனாதிபரம்பரை யாக ஹிந்துக்களுக்கு வந்துள்ள நிதியாகிய வேதத்தின் விஷயத்தில் அவனுக்குப் பக்தியும் விசுவாசமும் உண்டு. அதை அவன் பெரிதும் ஆதரித்து வந்தான். லாவாணகம் என்னும் ஊரை வேதகலா நிலைய

மாக்கினான். அவ்விடத்துக் கல்வியையும் சிக்ஷையையும் வியந்து பிறநாட்டாரும் கூட்டங் கூட்டமாக வந்து அங்கே வேதசாஸ்திர பாரா யணங் கேட்பாராயினார். சென்னை மாகாணத்திலுள்ள **புதுக்கோட்டை** என்னும் சிறிய சமஸ்தானம் வடமொழி வல்லமையைப் பரீட்சித்துப் பரிசளிப்பதனால் பெயர் பெற்றிருக்கிறதெனின், வத்ஸராஜனுக்கு இந்தப் பெருமை இருந்ததென எவரே நம்பமாட்டார்?

பெரிய ஆரிய மன்னரெல்லாரையும் போல உதயனனும் லலிதகலாவிநோதி. சமுத்திரகுப்தனென்னும் சக்கரவர்த்தி தன் நாட்டு நாணயங்களில் வீணையும் கையுமாகவே தன் உருவத்தைப் பதிப்பித் திருந்தான்; அதுபோல வத்ஸராஜனும் வீணாகான நிபுணனாக இருந் தான். ஸ்ரீகிருஷ்ணன் வேணுகானத்தினால் கோக்களை மயக்கி வசப் படுத்தினான். தான்சேன் (Tansein) என்பவன் தன் கானத்தினாற் காட்டு மிருகங்களை மயக்கினான்; அதுபோல வத்ஸராஜன் தன் வீணையினால் யானைகளை அடக்கினான்; இப்படிப்பட்ட காரியங்கள் சாத்தியமென்று நம்பாமல், மரண கிரணங்களே கொல்லும் தன்மை யுள்ளவை, விஷவாயுவே அழிக்கும் தன்மையது, வெடிகுண்டுகளே நொறுக்குந் தன்மையவையென்று நம்புவது மூர்க்கத்தனமாகும். வீணையின் மீது அவனுக்கிருந்த ஆசை வாஸவதத்தையின் மீதிருந்த ஆசைக்குச்சற்றே குறைவாகும். இது "ஸ்வப்ன வாஸவதத்தம்" 6-ம் அங்கம் 1, 2, 3-ஆம் சுலோகங்களினால் தெரிகின்றது. அதில் தந்தி அறுந் திருக்கிறதென்று கண்டவுடன் உடனே அதை ஒரு கைதேர்ந்த வேலைக் காரனிடம் அனுப்பிப் பழுதுப் பார்த்துக்கொண்டு வரச் செய்தான். பீதோவன் (Beethoven) என்னும் செவிடனுக்கு பியானோ (Piano) வாத்தியம் எவ்வளவு சாதகமாயிருந்ததோ அவ்வளவு வத்ஸராஜ னுக்குத் துக்க காலத்தில் அவனுடைய வீணை சாதகமாயிருந்தது. பெரிய வித்துவான்கள் தங்கள் அரிய எண்ணங்களை எவ்வளவு போற்று வார்களோ, பெரிய போர்வீரர்கள் தங்கள் வெற்றிகளை எவ்வளவு பாராட்டுவார்களோ, பெரிய கலைஞர்கள் தங்கள் கருவிகளைப் போற்றுவார்கள்.

வத்ஸராஜன் மானிடனாய் விவகரித்தானேயல்லாமல் வேறு பல ராஜகுமாரர்களைப் போலப் பொம்மையாகவேனும் கைப்பிள்ளை யாகவேனும் பிறரால் ஆட்டிவைக்கப்பெறவில்லை. விதூஷகனோடு அவன் செய்த சம்பாஷணையெல்லாம் சாமானிய மானிடனொருவன் மற்றொருவனோடு பேசும் பான்மையாக இருந்ததேயல்லாமல், ராஜ சமஸ்தானங்களில் நடக்கிற பெருமரியாதைப் பாங்காக இருக்கவில்லை; அவன் தன் மனப்போக்கின்படி பேசினானேயல்லாமல், பிறர் சொல்லிக் கொடுத்த வார்த்தையை ஒப்பிக்கவில்லை. விதூஷகனைக்

கொண்டு கதைகள் சொல்லச் செய்து கேட்பான். அது அரசர்களை யும் நகரங்களையும் பற்றிச் சொல்லும் விவரங்களைத் திருத்துவதற்கே யாகும்.

மலர்களையும் இயற்கையழகையும் மகிழ்ந்து அவன் ஆனந் திப்பவன். உயிருள்ள எதனிடத்தும் அவன் அன்புடையவனாவன்; அஃது உண்மைக் காதலனது இயல்பாகும். நான்காம் அங்கம் 3-ஆம் சுலோகம் அபரிமித வருத்தம் தரத்தக்கது; தேனீக்களுள்ளும் காதலர் களின் உணர்ச்சி உட்பொங்கி எழுவதை வர்ணிக்கின்றது. வாஸவதத் தையை நினைக்கும்பொழுது அவன் நிஜமான கண்ணீர் உகுக்கின் றானே அல்லாமல் மாயஜாலக் கண்ணீர் உகுக்கவில்லை.

அவனுக்கு மனநூற் புலமையும் உண்டு. பத்மாவதியின் தன்மையையும் வாசவதத்தையின் தன்மையையும் அவன் கூறு கூறாகப் பகுந்துப் பார்க்கிறான். அவர்களில் எவள் சிறந்தவளென்று அவனுடைய அபிப்பிராயத்தைச் சொல்லும்படி விதூஷகனைப் பலவந்தமாகக் கேட்கிறான். அந்த முறை சரியான முறையல்ல வென்று உடனே உணர்ந்து மன்னிப்பு கேட்டுக்கொண்டு நட்பு முறையிற் சொல்லும்படி கேட்கிறான்; உலகத்தில் நற்குண நற்சீலமுள்ளவர் களையும் வித்தை விநயமுள்ளவர்களையும் காண்பது எளிது. ஆனால், அவர்களைக் கொண்டாடுகிறவர்களைக் காண்பது அரிது என்று அவன் சொல்லும் வார்த்தைகள் எந்நாளும் நிலைத்திருக்கத்தக்கவை. நான்காம் அங்கம் 2(a) என்னும் ஸ்லோகத்தில் ஸெபாலிதக் கொடி வீட்டிலுள்ள கருங்கல் திண்ணையைத் தொட்டுப் பார்த்து அது சூடா யிருக்கக்கண்டு பத்மாவதி அங்கிருந்து அப்போதே நீங்கியிருக்க வேண்டு மென்று ஊகிப்பதனாலும், நீராழி மண்டபத்து மஞ்சத்திற் படுக்கை கசங்காமல் தலையணை அசங்காமல், தலைவலி மருந்துகளின் கறை படியாமல் இருப்பதையும், நோயாளியின் மனத்திற்கு இனிமையூட்டத் தக்க வஸ்துக்கள் வைத்திராததையும், நோயாளி அவ்வளவு சீக்கிரத் தில் படுக்கையை விட்டெழுந்து போயிருக்க முடியாதென்பதையு மெண்ணின் பத்மாவதி அங்கு வரவேயில்லையென்று ஊகிப்பத னாலும் அவனுடைய மனநூற் புலமை வெளிப்படுகின்றது.

பிறர்மீது அவன் அன்புடையவனாக இருக்கிறானென்பது மாத்திரமேயல்ல, பிறரும் அவன்மீது அன்புடையவர்களாக இருக் கிறார்கள். அவனைத் திரும்பக் கொண்டு வரவேண்டுமென்னும் ஆவல் அவனுடைய தாயாருக்கு அதிகமாயிருக்கின்றது. அவனைச் சிறையி னின்றும் விடுவிப்பதற்காக யௌகந்தராயணரும் ருமண்வானும் விதூ ஷகனும் நினைக்கொணா வீரச் செயல்கள் செய்தார்கள். கணவன்

மீதும் அவனுடைய க்ஷேமநலத்தின்மீதும் தனக்கிருந்த ஆசைப் பெருக்கால் வாஸவதத்தை மாதர் செய்தற்கரிய அருமையான தியாக புத்தி மேற்கொண்டு பெருங்கஷ்டங்களுக்குள்ளாகி, தன் கணவன் மற்றொருத்தியின் மணாளனாவதற்கும் மனங்கொண்டாள்.

பத்மாவதியும் அவன்மீது அன்பாகவே இருந்தாள்; வாஸவ தத்தையின் மீது அவளுக்கு உள்ள அதிக அபிமானத்தைக் கண்டு பொறாமைப்படாமலிருந்தாள். அவனிடத்து வெறுப்பைக் காட்டா திருந்தாள். அரண்மனையைச் சேர்ந்தவன் எவனோ ஒருவன் தான் கண்டெடுத்த வீணையைக் கொண்டு வந்து சுலபமாகக் கொடுத்து விட்டான். மகாசேனன் முதன் முதலில் உதயனனுக்குப் பொல்லாத பகைவனாயிருந்தான்; அவனுடைய சௌகரியம் முதலான குணங் களையெல்லாங் கேட்டபின் பகை தவிர்த்து நட்பு கொண்டான். ஜயில் காவலனான சீவகன் என்பவனும் உதயனன் வெளியே போவதற்கு இடங்கொடுத்தான். அந்த சௌகரியம் சட்டத்தின்படி செய்யக்கூடாது. ஆனால், ஜயில் அதிகாரிக்கு இஷ்டமிருந்தால் அப்படிப்பட்ட வசதி அமைக்கலாம். இங்ஙனம் முன்னாளிலும் அமைத்து வந்தார்கள். இந்நாளிலும் அமைக்கின்றார்கள்.

''நல்லானை எல்லாரும் நண்ணுவர்'' என்பது தமிழ்ப் பழமொழி. 'அன்புடையானுக்கு எல்லாரும் அன்பாயிருப்பர்' என்பது ஆங்கிலப் பழமொழி. இதற்கு உதயனனே ஏற்ற சான்றாவன். துரைத்தன விவகாரங்களைக் கவனியாதிருந்தபோதிலும் வேட்டை யில் மிஞ்சிய பிரியமுடையவனாயிருந்த போதிலும், அவன் இந்திய ரனைவருக்கும் பிரியமானவனாக இருந்தான்; எல்லோருக்குமே பிரியமானவனாயிருப்பவனென்று நான் சொல்வேன். அவனுடைய பெயருக்கு ஏதோ ஒரு மகிமை இருக்கின்றது. அதனால் இவ்விரண்டு நாடகங்களேயல்லாமல் அவனைக் கதாநாயகனாகக் கொண்டு எத்தனையோ நாடகங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. உதாரணமாக, ''ரத்னாவளி'', ''பிரியதரிசை'', ''வத்ஸராஜ சரித்திரம்'', ''உன்மத்த வாஸவதத்தம்'' என்பவைகளைச் சொல்லலாம். தூரத்திலுள்ள கேரள தேசத்தில் ஒரு நூறு சிந்துகளில் நாயகனாயிருப்பவனுக்கு, வத்ஸ ராஜனைப் பின்னிட்டு உதயனன் எனப் பெயரிட்டிருக்கிறார்கள். தச்சோளி தேனன் என்பவன் வீரச் செயல்கள் பல செய்தவனாகவும் சிங்கார லீலைகள் பல செய்தவனாகவும் பாடப் பெற்றிருக்கிறான். அந்தக் கதை முழுதும் வத்ஸராஜனான உதயனனது கதையையே கேரள தேசத்துச் சந்தர்ப்பங்களுக்கும் ஆசாரங்களுக்கும் ஏற்றவாறு எழுதினார்களென லாம். பெரிய நல்லுதாரணமாயிருந்தாலொழிய ஒருவனை இவ்வாறு பாராட்ட மாட்டார்கள்.

# பிரத்யோதன் (மகாசேனன்)

பிரத்யோத மகாசேனன் என்பவன் வத்ஸராஜனாகிய உதயனனைப் போலல்லாமல் வேறுதன்மை வாய்ந்தவன். சரஸ குண முள்ள உதயனனைப் போலல்லாமல் அவன் படாடோபப் பிரியன். இழிவாக அடிமையைப் போல் மற்றவர்கள் தன்னிடம் நடக்க வேண்டுமென விரும்புகிறவன். சுற்றுமுற்றுமுள்ள அரசர்கள் தன் குதிரையின் பாத தூளியை சிரமேற்கொண்டு கிரீடத்தில் அணியப் பார்த்துப் பெருமை பாராட்டுகிறவன், தன் கட்டளைகள், காட்டுத் தீயைப் போல எங்கெங்கும் வியாபித்து நிறைவேறப் பெறுவதில் பெரு விருப்புடையவன். சதுரராகிய யௌகந்தராயணருடைய ஆலோசனை களையும் உதயனன் எளிதில் ஏற்காதிருந்தான். பத்மாவதியை கலி யாணஞ் செய்து கொள்ளுமுன் வாஸவதத்தை இறந்துபோனாளென்று சொல்லி அவனை ஏமாற்ற வேண்டியதாயிற்று. மகாசேனனோ தன் னுடைய பிரதான மந்திரியாகிய பரதாரோகனுக்கு அஞ்சி நடப்பவன். மந்திரிகளின் சொல்லைக் கேட்டு அரசியல் விவகார காரணங்களை முன்னிட்டு அவன் தன்னுடைய 16 மனைவியர்களையும் மணந்தனன் போலும்.

''யௌகந்தராயண சபதங்க''ளின் இரண்டாம் அங்கத்தில் உதயனனை அன்புடன் பாராட்டுவது பரதாரோககனுக்கு இஷ்ட மில்லை; அவனைத் தன் வழிக்குக் கொண்டுவர வேண்டும் என்று மகாசேனன் சொல்லுகின்றான். ஆனால், இப்படிப்பட்ட சந்தர்ப்பங் களிற் பெரும்பாலும் நேர்வதுபோல, மூன்றாம் அங்கத்தில் உதயன னுக்கு விலங்கிட்டிருப்பதைக் காண்கிறோம். அஃதாவது, பரதாரோக கனுடைய இஷ்டமே மேம்பட்டது. மகாசேனனுடைய எண்ணம் ஈடேற வில்லை என்பதாம். இது, ஆருணியை எதிர்த்துப் போர்புரிய உதயன னுக்குச் சகாயமாக மகாசேனன் போகவில்லை என்பதனாலும் தெரிகிறது. அந்த ஆருணி என்பவனுக்குப் பரதாரோககன் இரகசிய மான உட்கையாயிருந்தனன் போலும். அல்லது, அவனுடைய ஆதரவு ஆருணிக்கு இருந்ததுபோலும். ஆயினும், சாமானியக் கொள்கைகளின் படி பார்க்குமிடத்து மகாசேனன் அந்தரங்கத்தில் நல்லவனென்று உபகாரபுத்தியுள்ளவனென்றுமே சொல்லவேண்டும். அவன் தன் ராணி யினிடத்து வாத்ஸல்லியமுடையவனாயிருக்கிறான், சத்துருக்களின் விஷயத்தில் நேர்மையாக நடக்க விரும்புகிறான், அங்காரவதி தற்கொலை செய்துகொள்ளப் போகையில் ஓடிப்போய், வாசவ தத்தையை முன்னராகவே உதயனன் சத்திரியனுக்குரிய காந்தர்வ முறைப்படி விவாகஞ் செய்துகொண்டு விட்டானாதலால் வெட்கப் படக் காரணமில்லை என்று சொல்லித் தடுக்கிறான்.

அவனுடைய நகரத்தின் பெரும்பாகத்தை யௌகந்தராயணன் தீயிட்டுக் கொளுத்தியதைப் பாராட்டாமல் அவன் வாஸவதத்தையின் படத்தையும் உதயனன் படத்தையும் வைத்து ஆரவாரத்தோடு விவாக உற்சவத்தைக் கொண்டாடுகிறான், நடந்த காரியம் நடந்து போயிற்றென்று சமாதானப்படுத்திக் கொள்கிறான். அவனுக்குக் கௌரவ உணர்ச்சி அதிகமாயிருக்கின்றது.

''யௌகந்தராயணர் சபதங்கள்'' என்னும் நாடகத்தில் மூன்றாமங்கத்திற்கும் நான்காமங்கத்திற்கும் இடையில் யௌகந்தராயணருடைய சூழ்ச்சியினால் **நளாகிரி** என்னும் யானை வெறிகொள்ளும்படி செய்யப்பட்டது. அப்போது அதனை உதயனன் தன்னுடைய **கோஷவதி** என்னும் வீணை வாத்தியத்தாற் சாந்தப்படுத்தும் பொருட்டு அவனைச் சிறையினின்றும் விடுவிக்கிறார்கள்; அதற்குப் பிறகு வாஸவதத்தைக்கு அவனைக் கொண்டு வீணை கற்பிக்கச் செய்கிறான். இந்த விஷயம் ''ஸ்வப்ன வாஸவதத்த''த்தின் இறுதியில் கஞ்சுகியின் மூலமாகவும் பணிப்பெண்ணின் மூலமாகவும் ராணி அங்கராவதி சொல்லியனுப்புகிற வர்த்தமானத்தினால் தெரிகிறது. யானையை அடக்கிச் சாந்தப்படுத்தியபின் உதயனனை அவன் மறுபடி சிறையில் வைக்கவில்லை; பெருந்தன்மை இல்லாத வேறொருவன் அவனைத் திரும்பச் சிறைப்படுத்தியிருப்பான். உதயனனுடைய காயங்களுக்குச் சிகிச்சை செய்து அவனுடம்பைத் தேற்றும் பொருட்டு அவன் கவலைப்படுவது அவனுடைய நற்குணத்தைக் காட்டுகின்றது.

அவன் சத்ருக்களின் விஷயத்தில் நேர்மையாக நடக்கிறான். பரத வம்சத்து அரசர்களை வருணித்துச் சொல்லுமளவில் அவர்களுடைய பெருங்கீர்த்தியை அவன் சிறிதுங் குறைக்கவில்லை. தகுதியான மருமகனைத் தேடுவதில் அவனுக்குள்ள கொள்கைகள் சிறந்தனவாயிருக்கின்றன. எவ்வளவு ஜாக்கிரதையாக வரனைத் தேடிப்பிடித்து கலியாணஞ் செய்தாலும் ஒவ்வொரு விவாகத்தின் கதியும் தலைவிதியின் மீதே பெரிதும் பொறுத்திருக்கின்றதென்று அவன் சொல்லும் திருத்தமொழி எந்நாட்கும் சரதமாகும்:

''ஆழ வமுக்கி முகக்கினு மாழ்கடலில்
நாழி முகவாது நானாழி - தோழி
நிதியுங் கணவனு நேர்படினுந் தந்தம்
விதியின் பயனே பயன்''

அவன் கூரிய அறிவுள்ளவன். பின்பு, நாம் வருத்தப்பட வேண்டியிராத இடம்பார்த்து மகளை கலியாணஞ் செய்துகொடுக்க

வேண்டுமென்று அங்காரவதி குறிப்பில்லாமற் சொல்லித் தப்பித்துக் கொள்ள அவன் இடங்கொடுக்கவில்லை. ஹிந்து தாய்மார் வயது வாய்ந்த தங்கள் புதல்வியரை கலியாணஞ் செய்வித்துக் கொடுக்கா திருப்பின் குன்றிப் போகிறார்கள்; ஆனால் கலியாணஞ் செய்து கொடுத்தபின் அப்புதல்வியர் தம்மைவிட்டுப் பிரிந்து போவார்களே என்னுமெண்ணம் வந்தவுடன் பெரிதும் துக்கிக்கிறார்களென்று அவன் சொல்வதும் அவனுடைய நுண்ணறிவைக் காட்டுகின்றது.

சாதாரணமாயுள்ள இந்திய அரசர்களைப் போன்றவன் மகாசேனன்; உதயனனோ அதனினும் உயர்தரமான அரசர்களுக்கு உதாரணமாவன். அவன் 'கோஷவதி' என்னும் வீணையைப் பற்றி கவலைப் பட்டுக் கஷ்டப்படவேயில்லை. அதற்குப் புதிய தந்தி போட்டு வாசிக்க வேண்டுமென்று அவன் ஆசைப்படவே இல்லை; அதனால் அவனுக்கு உணர்ச்சி பேதம் உண்டாகவில்லை; அதை வைத்துக் கொள்ளத் தகுதியானவரொருவரைப் பார்த்துக் கொடுக்க வேண்டுமென்னும் ஒரே கவலையே கொண்டிருந்தான்; அவனுக்கும் ஒருவிதமான இயற்கைப் பேதம் இருந்தது. முதற்பிள்ளை அரசியல் விவகாரத்தில் தேர்ந்தவனேயன்றிச் சங்கீதப் பிரியமுள்ளவனல்லவென்று ஒதுக்கி விடுகிறான்; இரண்டாம் குமாரன் மற்பயிற்சியில் மனங்கொண்டவனேயன்றி, லலிதகலா விரோதியென்று அவனையும் நீக்கினான்; அவ்வீணையை தன் மகள் வாஸவதத்தைக்குக் கொடுக்கிறான். அதே பித்துப்பிடித்தவளாய் அவள் நாள் முழுதும் வீணையே வாசித்துக் கொண்டிருப்பாளென்று அவளுடைய தாயார் சொல்லியதற்கு அவன் இந்தியத் தந்தைமார் பெரும்பாலரைப் போல, 'அவள் வாசித்துக் கொண்டிருக்கட்டும். மாமனார் வீட்டிற்குப் போனால் இவ்வளவு தாராளமாக அங்கு வீணை வாசித்துக் கொண்டிருக்க முடியாது' என்று அவன் பதில் சொல்லுகிறான். உதயனன் காதலனாகக் காண்கிறானே யல்லாமல் அவனிடத்தில் தந்தைக்குரிய தன்மை காணப்படவில்லை; மகாசேனனிடத்தில் தந்தைக்குரிய தன்மைகள் விளக்கமாகத் தோன்று கின்றன. அங்காரவதியினிடத்தும் அவனுடைய உறவு முறை கணவனாகவும் குடும்ப பதியாகவும் இருந்தது. அவள் அவனுக்கு அடுத்த படியாகத் தலைமை வகித்திருந்தாள்.

## வாஸவதத்தை

வாஸவதத்தை என்னும் நாடக பாத்திரம் எந்நாளும் ஞாபகத்தி லிருக்கத் தக்கதொன்றாம். அவளிடத்திருந்த பெருங்குணம் யாதெனில், கணவனுக்கும் தனக்கும் அபேதம், கணவனிடத்தேதான் ஐக்கிய மானவள் என்னும் பாவனையும், அவனுக்காகத் தன்னுடைய ஸர்வ

சொத்தையும் பரித்தியஜிக்கச் சித்தமாயிருப்பதுமேயாம். அது ''ஸ்வப்ன வாஸவதத்தம்'' நான்காம் அங்கம் 4 (a) என்னும் சுலோகத்திற் காணப் படுகின்றது. சீதாதேவியின் காலத்திருந்து இற்றைநாள் வரையிலுள்ள உத்தம ஹிந்து மனைவி பாவனையை அது குறிக்கின்றது. மேனாட்டார் இந்தப் பாவனையை உள்ளபடி அறிந்து மகிழமாட்டாதவராவர்; வாஸவதத்தையின் தன்மை அவர்களுக்குப் புலப்படாது. ஒரு நாகரிக முறையின்படி சிறப்பெனத் தோன்றுவது மற்றொரு நாகரிக முறையின் படி இழிவெனத் தோன்றும். அஹிம்சா தர்மத்தை அனுஷ்டிக்கிறவன் இந்தியாவில் கௌரவிக்கப்படுவான், ஜர்மனியில் இகழப்படுவான். மிதபானி மேனாட்டில் 'நற்கலப்பு' எனக் கொண்டாடப்படுவான், இந்தியாவிலோ 'குடிகாரன்' என ஒரேயடியாகத் தூற்றப்படுவான். ஒரு தேசத்தைக் காப்பாற்றும் பொருட்டேனும், உலகத்தையே காப்பாற்றும் பொருட்டேனும் ஒருவன் மற்றொருத்தியை மணம் புரிவ தற்கு இசையாத பெண்டிர் வீரம் மிக்கவளென மேனாட்டிற் கொண் டாடப்படுவள்; இந்தியாவிலோ, இந்தப் பரமத் தியாகம் செய்கிற மனைவியே வீரமாதெனப் புகழப் பெறுவாள். ஆனால், 1914-1918 வரையில் நடந்த மகாயுத்தத்தினாலும், இப்பொழுது நடந்துகொண் டிருக்கிற மகாயுத்தத்தினாலும் உலகம் முழுதும் மேலும் மேலும் ஒன்றித்துக் கொண்டிருக்கின்றது. இப்போது ஜனங்களுடைய கொள்கை களெல்லாம் புரண்டு போயிருக்கின்றன. மேற்சொல்லிய வீரக்கொள்கை கள் ஒன்றுக்கொன்று எதிரிடையாயிருப்பினும், அவை இரண்டும் வீரமேயெனக் கொள்வார். இந்நாளில் பலர் ஒவ்வொரு நாட்டிலும் இருப்பார்களென்று நான் நிச்சயமாகச் சொல்வேன். அவ்விரு திறத் தாரும் புகழுக்குரியவர்களென்றே நினைப்பார்கள்.

ஜலவாயு என்பது வேறு, பிராணவாயு என்பது வேறு. இவ் விரண்டு வேறு வேறு பதார்த்தங்களும் ஒன்றுசேர்ந்து இணைபிரியாத பிராணாதாரமாயுள்ள ஜலமாகின்றன. மனிதனுடைய சூழ்ச்சியினா லல்லாமல் அந்த ஜலத்தை வேறு வேறாகப் பிரிக்கமுடியாது. அதுபோல, பன்னிரண்டு வயது வரையில் ஒரு குடும்பத்தில் வளர்ந்த பெண்ணை முகமறியாத அந்நியன் ஒருவனுக்கு கலியாணஞ் செய்து கொடுத்து அவனோடு பிணைத்தபின் அவள் அந்தப் புருஷனைத் தவிரத் தனக்கு வேறுகதியில்லையென நினைக்கிறாள், தனக்கு அவனே உயிரெனக் கொள்கிறாள், அவனுடைய லாப நஷ்டங்களே தன்னுடைய லாப நஷ்டங்களெனப் பாராட்டுகிறாள். தாய் தந்தையர் சகோதரர் ஆகிய இவர்களெல்லாம் அவர்களுக்குப் பெயர் மாத்திரத்தில் உறவினர்களா யிருக்கிறார்களேயல்லாமல், அவர்களை யெல்லாம் அவள் பழைய சங்கதியென மறந்து போகிறாள். கணவனே அவளுக்குக் கடவுளாகி றான், மற்றெல்லாமுமாகிறான். இதுவே ஹிந்து குலத்தின் அநாதிப்

பெருமை. இந்த முறைப்படி வாழ்ந்து இதனாலுறும் நற்பயனை அனுபவித்தவர்களே இவ்வதிசயமான விஷயத்தைக் கொண்டாடு வார்கள். இந்த ஏற்பாட்டினால் விளையும் நற்பயனை அனுபவித்துள்ள நான், இந்த முறையை வெறுங் கொள்கையாகப் பார்க்கும்போது இதனில் எத்தனை தோஷங்கள் தோன்றினும், இதுவே உத்தமமான தென்று தீர்மானமாகச் சொல்வேன். தான் வேறு கணவன் வேறு என்று நினையாமல் தானே அவன், அவனே தான் என்று மனைவியானவள் ஐக்கிய பாவனை பாராட்டுவது மிகவும் உயர்தரமான தன்மையாகும். அவளுடைய இந்தக் கொள்கைக்காக அவளுக்குக் கணவன் பெருங் கடமைப்பட்டிருக்கிறான். அந்தக் கடனை அவன் ஒருநாளும் தீர்க்க முடியாது. ஜலம், வாயு முதலான நன்மைகளுக்கு நாம் இயற்கைக்கு எவ்வளவு கடமைப்பட்டிருக்கிறோமோ, அந்தக் கடனை எப்படித் தீர்க்க முடியாதோ அது போலவேயாகும். இதுவும் ஆகையால், இந்தியாவிலுள்ள கோடிக்கணக்கான மக்களும் வாஸவதத்தையை, உதயனன் மேற்சொல்லியவாறு புகழ்வதுபோல, உத்தம மனைவி யென்று பெருமையுடன் பாராட்டுவார்களென்பது நிச்சயம்.

இஃது இங்ஙனம் இருக்க வாஸவதத்தை வெறும் ஸூத்திரப் பிராயமாக இயங்குகிறவளல்ல. மானிடர்க்குரிய உணர்ச்சிகள் தனக் கும் உளவென அவள் காட்டுகின்றாள். எங்ஙனமெனின், ''ஓ, என்ன அக்கிரமம்! பெருந்தன்மையுள்ள என் கணவரும் வேறொருத்திக்கு உரியவராயினர்'' எனக் கூவுகின்றனள். மற்றும், வாஸவதத்தையின் மணமாலையைத் தொடுக்குமளவில் 'ஸபத்னீமர்த்தனம்' என்னும் தழையைச் சேர்க்காமல் அறவே தவிர்த்து, 'அவிதவாகரணம்' என்னும் தழையை மாத்திரம் தாராளமாகச் சேர்க்கின்றாள், பத்மாவதியை உதயனனுக்கு விவாக வாக்குதத்தம் செய்திருக்கிறார்களென்று கேட்ட வுடனே அவள் மிக்க கலக்கமுறுகின்றனள்; அதற்காக உதயனன் அங்கே வரவில்லை, வேறு காரியமாக வந்திருக்கையில் விவாகம் செய்துகொள்ள இசையும்படி பத்மாவதியின் தந்தை அவனை வேண்டி னான் எனத் தாதியின் மூலமாகக் கேட்ட பின்னரே அவள் கலக்கம் நீங்கிச் சமாதானமெய்தினள். கணவன் பொருட்டு அவ்வளவு தியாகஞ் செய்ய அவள் ஏற்கெனவே இசைந்தவளாக இருந்தும், அதற்குப் பின்னும் அவள் சில வேளைகளில் விசனப்படுகிறாள். உதாரணமாக, ஸ்வப்னக் காட்சியில், 'என் மீது கோபங்கொண்டிருக்கிறாயா' என்று உதயனன் கேட்டதற்கு அவள், 'இல்லை, இல்லை, துக்கமாகவும் இனிமையற்றுமே இருக்கின்றேன்' என்கின்றாள். இதற்காக அவள்மீது குற்றஞ் சொல்லக்கூடாது. மானிட வர்க்கத்திற்காகத் தன்னையே பலிகொடுக்க சுவாமியினிடம் ஏசு கிறிஸ்து ஒப்புக்கொண்டு வந்திருந்த போதிலும் சிலுவையில் அறையப் பெற்றபோது 'கடவுளே! கடவுளே!

இவ்விக்கட்டான நிலைமையில் என்னை ஏன் கைவிட்டீர்?' என அலறி இருக்கின்றார். மனிதனாய்ப் பிறந்த கடவுளுக்கும் அப்படிப் பட்ட துன்பலேசம் இருக்கும். அப்படியிருக்க வாஸவதத்தையோ, நல்ல யுவப்பிராயத்திலுள்ளவள், தன் சம்மதத்தோடேயாயினும் கணவனை விட்டுப் பிரிந்தவள். அப்படிப்பட்டவளுக்குத் துக்கம் இருக்குமென்று சொல்லவும் வேண்டுமோ. ஸ்வப்னத்தில் உதயனன் வாஸவதத்தையை நோக்கி, விரசிகையைப் பற்றி நினைத்துக் கொண் டிருக்கிறாயாவென வினவியபோது, 'வெட்கக்கேடு! இவ்விடத்தும் விரசிகையா?' என்று அவள் இகழ்ந்து கூறியதனால் அவளுக்கு இயல் பாயுள்ள பெண்தன்மை விளங்குகின்றது. தவச்சாலையில் அவளைப் பணியாட்கள் வழியை விட்டு அகலச் சொன்னபோது அவள் கோபங் கொண்டு வழிவிடும்படி தன்னையும் கட்டளையிடலாமா' என்று அவள் யௌகந்தராயணரைக் கேட்கின்றாள்.

அவள் மிகுந்த புத்திசாலி, தன்னையறியாமல் அவள் தன்னைக் காத்துக்கொள்ளுமாறு பேசிய வார்த்தைகளைச் சமத்காரமாகப் பொருட் படுத்திச் சமாளித்துக் கொள்கிறாள். உதாரணமாக, ''ஸ்வப்ன வாஸவ தத்தம்'' இரண்டாம் அங்கத்தில், உதயனன் மிக அழகாயிருக்கிறா னென்று அசதி மறதியாக அவள் சொல்லிவிடுகிறாள். அவளுக்கு எப்படித் தெரியுமென்று பத்மாவதி வினவியவுடன், 'உஜ்ஜைனி யில் எல்லாரும் அப்படிச் சொல்லிக் கொள்கிறார்கள்' என்று சாதுரிய மாகப் பதில் சொல்லுகிறாள். உஜ்ஜைனிக்காரர் அவனை அடிக்கடி பார்த்திருந்து அவனுடைய முக்கியமான இந்த லட்சணத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கக் கூடுமென்று அவள் அந்தப் பதிலைக் கேட்டுத் திருப்தியடைந்தாள்.

பின்னும், உதயனனுக்கும் பத்மாவதிக்கும் விவாக வாக்கு நிச்சயம் ஆகிவிட்டதெனக் கேள்விப்பட்டபோது அவள் தன்னை யறியாமலே, 'என்ன தகாத காரியம்?' என்று கூவுகிறாள். அப்படிச் சொல்வதற்கு அர்த்தமென்னவென்று வினவியபோது, 'வாஸவதத்தைக் காக அரசன் எவ்வளவு பெருந்துயருற்றான், அத்தனையையும் எவ் வளவு சீக்கிரத்தில் மறந்துவிட்டான்' என்று நினைத்துக் கொண்ட தாகச் சொன்னாள். அதுபோலவே செபாலிகக் கொடி வீட்டில் அவள், 'பத்மாவதியைக் காட்டிலும் வாஸவதத்தை உதயனன் மீது பிரேமை வைத்திருந்தாள்' என்று வாய் தவறி சொல்லிவிட்டாள். பத்மாவதி கேட்டபோது அதற்கு, 'அவளுக்கு அன்பு குறைவாயிருப்பின், அவள் தன் உற்றார் உறவினரைத் துறந்து தன் தந்தையின் சத்துருவுடன் கள்ளத்தனமாக ஓடிப்போயிருக்க மாட்டாள்' என்றாள்.

மற்றவர்களின் விஷயத்தில் அவள் மிகவும் தாட்சண்யம் பாராட்டி நடந்துகொள்கிறாள். தனக்குச் சிறிது தூரத்தில் தன் கணவன் கண்ணுங் கண்ணீருமாக இருக்கையில் வாஸவதத்தையின் பொருட்டு அவள் அவ்விடம்விட்டு நீங்கிப் போவதாகச் சொல்லிய போது வாஸவதத்தை நான் மாத்திரம் திரும்பிப் போகிறேன். நீ இவ் விடத்திலேயே இருந்து உன் கணவனை ஆற்றித் தேற்று' என்று சொல்லுகிறாள். அதுபோலவே யௌகந்தராயணருடைய சூழ்ச்சி யினால் துன்புறுகிறவள் தானேயாயினும் அந்தச் சூழ்ச்சியைக் கெடுத்துப் பங்கப்படுத்தக் கூடாதென்று அவள் ஆவலும் அக்கறையும் கொண்டிருந்தாள். தன்னைச் சேட்டியாகப் பாராட்டி நடத்திய குற்றத் தைச் பத்மாவதி மேற்கொள்ளக் கூடாதென்று சொல்லி, 'எழுந்திரு, எழுந்திரு, ஏந்திழாய்! குற்றமேதேனும் உளதெனின், அது ஒரு காரணமும் இல்லாமல் நீ எனக்கு நமஸ்காரம் செய்ததேயாகும்' என்கின்றாள். பணிப்பெண்களோடு அவள் சரசமாகப் பழகுகிறாள். உயர்குலத்து மாதர் தாழ்ந்தவரிடம் அவ்விதமே நடந்துவருவார்கள். சில நவோதயர்களைப் போல் அதனால் தமது கௌரவமேனும் மதிப்பேனும் குறையுமென்று அவள் அஞ்சவில்லை.

அவளிடத்து ஜனங்கள் பிரியங்கொள்வதற்கு வேறு குணப் பெருமைகளும் அவளுக்கு உண்டு. பலகாரங்கள், பக்ஷியங்கள் முதலி யன செய்து வேண்டுவோர்க்கு ஈவதில் அவள் பிரியமுடையவள். ஆனதனாலேயே, பத்மாவதியைக் காட்டிலும் அவள் சிறந்தவளென வஸந்தகன் சொல்லுகிறான். மாதர் செய்யத்தக்க காரியங்களுள் முக்கிய மானது மடைப்பள்ளிக் காரியமே என்பது எல்லாருக்கும் தெரியும். அந்தக் காரியத்திலும் வாஸவதத்தை கைதேர்ந்தவள்.

## பத்மாவதி

வாஸவதத்தையும் பத்மாவதியும் பிரேமிக்கத்தக்கவர்களே யாயினும் அவர்களின் தன்மை வேறு வேறாகும். அவள் கணவனிடத்து அன்புடையவளே. ஆனால், அவனுடைய குற்றங்குறைகளைக் கவனி யாதவளல்ல. உதாரணமாக, 'இப்பொழுது என் பிரியநாயகர் வஸந்தக னாக நடிக்கின்றார்' என்கிறாள். அதாவது, விதூஷகனைப் போலப் பேசுகின்றார் என்பதாம். அவள் நாகரீகமிக்கவள், பந்தாட்ட முதலான விறுவிறுப்பான வியாயாமங்களில் பிரியமுடையவள்; வாஸவ தத்தையோ, பந்தாட்டத்தைக் காட்டிலும் வீணாவாத்தியத்தில் ஆசைக் கொண்டவள். வாஸவதத்தை வாய்தவறி மொழிந்த மூன்று வார்த்தை களுக்கும் அவள் சொல்லிய சமாதானத்தைக் கேட்டு எளிதிற் சமாதான

மடைந்ததனாற் பத்மாவதி அவளைக் காட்டிலும் கபடமற்றவள், சூதற்றவள்.

அவளுடைய மனம் களங்கமற்றது, தாராளமாகவும் தயாள மாகவும் நம்புந்தன்மையுடையது, விரிமனம் வாய்ந்தது, நிர்மல மானது. அடிமுதல் நுனிவரையிற் பரிசுத்தமானது. எவரிடத்தும் அவளுக்குப் பகையேனும் மனஸ்தாபமேனும் இல்லை. தனக்காக எவரும் கஷ்டப்பட அவள் விரும்பவில்லை. தனக்கு நேர்ந்த தலை நோயைக் குறித்து எல்லாரும் கடிபிடி செய்வதைப் பார்த்து அவளுக்காக அமைக்கப்பட்ட அறைக்குப் போகவில்லை. கடிபிடியென்றால் அவ ளுக்குப் பிடிக்கவில்லை. ஆட்ட பாட்டங்களிற் பிரியமுள்ள ஆங்கில மாது, **மால்லிஸன் மாது** (Mrs. Mollison) என வைத்துக்கொள் வோம் கடிபிடியை எவ்வளவு வெறுப்பளோ அவ்வளவு பத்மாவதியும் வெறுத்தனள் என்பதாம். பணிப் பெண்களோடும் அவந்திகையோடும் அவள் விவகரித்து வந்த முறை மிக ஒழுங்காயிருந்தது. இளகிய மனத் தோடும் அன்போடும் தாக்ஷிண்யத்தோடும் அவள் அவர்களுடன் தாராள மாக நடந்து கொண்டாள். அவள் தன் கீழ் வேலைக்காரிகளுக்குத் தாராளமான ஸ்வதந்திரம் கொடுத்திருந்தாள். அதனாலே பணிப்பெண் அவளெதிரில், 'உதயனனுக்கு மரியாதையே தெரியவில்லை. பத்மா வதியைவிட இறந்துபோன மனைவியான வாஸவதத்தையே சிறந்த வளெனப் புகழ்ந்து பேசுகிறார்' என்று சொல்லுமளவு துணிவு கொண்டாள். ஆயினும், அவள் சொல்லுவது தவறு என்று திருத்தி, 'உதயனனுக்கு மரியாதை தெரியவில்லை என்பதன்று. இறந்துபோன பின்னும் வாஸவதத்தையின் நற்குணங்களை நினைத்துப் பாராட்டுவ தானால் அவர் பெரிய மரியாதை காட்டினார்' என்று அவள் பதில் சொன்னாள். இங்ஙனம் திருத்தியதனால் அவளை நோக்கி வாஸவ தத்தை, 'என் அன்பே! நீ சொல்லிய வார்த்தை உன்னுடைய உயர்குலப் பிறப்பிற்கு மிகவும் பொருத்தமாயிருக்கின்றது' என்று சொல்வதற் காயிற்று.

தேகாரோக்கியம் மிக்கவர்கள் பலரையும் போல பத்மாவதிக் கும் சமத்காரமும் நளினமும் நிரம்ப இருந்தன. உதாரணமாக, கொடி வீட்டிலிருக்கையில் வாஸவதத்தையின் கண்களில் நீர் பெருகியது. அதற்குக் காரணம் அவள் காசமலர்ப் பூந்தாதுகள் படிந்ததனாற் கண் ணீர் வந்தது என்றாள். உதயனன் முகத்திற் படிந்திருந்த கண்ணீரைத் துடைக்கத் தாமரை இலையில் வஸந்தகன் நீர் கொண்டுவரும்போது பத்மாவதி எதிர்ப்படவே, காசமலர்ப்பூந்தாது விழுந்ததனால் அரசன் கண்ணில் நீர் பெருகியது, அதைத் துடைக்கப் போவென்று அவளுக்குச் சொல்லுகிறான். பின்னர், அரசனும் கண்ணீருக்குக் காரணம் அதையே

சொல்லுகிறான். இந்த அசட்டுக்காரணத்தைக் கேட்டுப் கோபப்படாமல் பத்மாவதி, 'தயாவீரம் மிக்க யஜமானனுக்கு ஏற்ற தயாவீரமுள்ள வேலைக்காரனே நேர்ந்தான்' என்று பரிகாசமாகச் சொல்லி விட்டு விடுகிறாள். கேட்டுக் கேட்டுக் கசந்துபோன இந்த அசட்டுக் காரணத்தை மூன்றாம் முறை அரசன் வாய் மூலமாகக் கேட்ட பின்னும் அவள் அரசனை ஒன்றும் சொல்லவில்லை. அவளுடைய மனத்தின் பெருந் தன்மையை அவனியோ ரனைவரும் கொண்டாடுவர்.

உஜ்ஜைனியிலிருந்து வந்த தூதர்கள் உதயனனைப் பார்க்கையில், அரசனுடைய பக்கத்தில் வாஸவதத்தைக்குப் பதிலாகத்தான் உட்காருவதற்குப் பத்மாவதி காட்டிய ஸங்கோசம் அவளுக்குக் கௌரவமும் பெருமையும் தருகின்றது.

வாஸவதத்தைக் குள்ளளவு தந்திரம் பத்மாவதிக்குத் தெரியாதெனினும், அவளுக்குள்ளளவு புத்திசாலித்தனம் பத்மாவதிக்கும் உண்டு. உதயனனுடைய உருவப் படத்தை வாங்கி அவனோடு அதை ஒத்துப்பார்த்துப் பின்பு, அவந்திகையே வாஸவதத்தையோ அல்லவோ வென்று அவள் நிச்சயப்படுத்திக் கொண்டதனாலே அவளுடைய புத்தி சாலித்தனம் விளங்குகின்றது. உதயனனுடைய கண்ணில் நீர் வந்ததற்குக் காரணம் காசமலர்ப் பூந்தாது விழுந்ததேயென்று கூறிய உதவாத சாக்குப்போக்கான வார்த்தையினால் அவள் ஏமாந்து போகவில்லை. தன்னைக் காட்டிலும் வாஸவதத்தை சிறந்தவளென்று உதயனன் புகழ்ந்து பேசியபொழுதும் அவள் ஏமாந்திருக்கவில்லை. ஏனெனில், அதற்கு முன்னரேயே அவள் ஊகித்திருக்க வேண்டும்.

அவள் தெய்வபக்தி உள்ளவள், தாராளமாகத் தானதருமங்கள் செய்பவள், அவளுடைய கட்டளைப்படி தவச்சாலையிலுள்ள துறவிகளையெல்லாம் விளித்து எவரெவருக்கு என்ன வேண்டுமென்று கஞ்சுகி கேட்பது, தன் கணவனுடைய படத்தையும் வாஸவதத்தையின் உருவப்படத்தையும் வாங்கிப் பார்த்து வந்தனஞ் செய்ய வேண்டுமென்று அவள் விரும்புவது, தவச்சாலையில் அவள் ஒருநாள் தங்கியிருப்பது ஆகிய இவையெல்லாம் அவளுடைய பக்தியையும் சீலத்தையுங் காட்டுகின்றன. அவளுக்கு அதிகாரப் பிரியமு மில்லை, தானே ஆதிக்கம் வகிக்க வேண்டுமென்னும் ஆசையுமில்லை, தன் குடும்பத்திலுள்ள மற்றவர்களைப் போல அவளும் தேசாசார சட்டத்து ஒழுங்கை வற்புறுத்த வேண்டியவளேயாயினும், அவள் ஏவியபடி கஞ்சுகியானவன் அங்குள்ள துறவிகளெல்லாரும் தன் இஷ்டப்படி வேண்டியவளவு மலர்களைக் கொய்து கொள்ளலாம், நீரை உபயோகித்துக் கொள்ளலாம், விறகு எடுத்துக் கொள்ளலாம், புல் அறுத்துங்

கொள்ளலாமென்று சொல்லுகிறாள். அவளுடைய இந்தப் பெருந் தன்மையையும், சாமானியச் சில்லறை சர்க்கார் உத்தியோகஸ் தர்கள் 'முகாம்' இறங்கியிருக்கிற பங்களாக்களிற் செய்யும் நிர்ப்பந் தங்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால் அவளுடைய பெருந்தகைமை நன்கு வெளிப்படும்.

## அங்காரவதி

ராணி அங்காரவதியைப் பற்றி அங்கங்கே கொஞ்சமே நமக்குத் தெரிகின்றது. ஆனால், தெரிகிற விஷயங்கள் இனிமையா யிருக்கின்றன. அவளுக்கு வாஸவதத்தையின் மீது ஆசை அதிகம். இந்தியத் தாய்மார்க ளெல்லாரையும் போலவே தகுந்த வரனைத் தேடி அவளைக் கலியாணஞ் செய்து கொடுக்கவேண்டுமென்று மிகக்கவலைப் படுகிறாள். ஆயினும், விவாகம் ஆகிவிட்டால் அவள் தன்னை விட்டுப் பிரிந்து போவாளேயென்று நினைத்துத் துக்கிக்கிறாள். தன் மகளுக்கு உத்தமமான கணவனைத் தேடிப்பிடிக்க விரும்புகிறாள். உதயனனுடைய குண விசேஷங்களைப் பற்றிக் கேள்விப்பட்டவுடனே, அவனே தனக்கு மருமகனாகத் தக்கவனென்று நிச்சயித்துக் கொள் கிறாள். அப்படி நேருவது கஷ்டமென்று ஆரம்பத்தில் தோன்றிய போதிலும் தன் எண்ணமே நிறைவேறும்படி கடைசியிற் செய்கிறாள். வத்ஸராஜன் வருகிறானென்று தெரிந்தவுடனே அவள் அரசனோடு செய்து கொண்டிருந்த சம்வாதத்தை நிறுத்திவிட்டு அங்கிருந்து நீங்கு கிறாள். தன் மகள் மிகச் சிறுபிள்ளை; கலியாணத்தைப் பற்றி அவளைக் கேட்டுத் தொந்தரவு செய்வது சரியன்று எனத் தன் கணவனுக்குச் சொல்லிப் போகிறாள். அவளுடைய அபிப்பிராயம் இன்னதென்று மகா சேனனுக்கு ஒருவாறு ஜாடையாகத் தெரிகின்றது. ஆனால், அது ஜாடை மாத்திரமே, வத்ஸராஜன் தங்களுடைய சத்துருவென்று ஞாபகமிருக்கட்டுமென அவளை எச்சரிக்கின்றான்.

ராணி அங்காரவதி மானத்தையே பெரிதாகப் பாராட்டு கிறவள். உதயனனோடு வாஸவதத்தை ஓடிப் போனாளென்று கேள்விப் பட்டாள். அவளை அவன் விவாகம் செய்துகொண்டானென்று அவ ளுக்குத் தெரியாது. அதனால் தனக்கு மானக்கேடு வந்ததென்று நினைத்து அவள் தற்கொலை புரிந்துகொள்ளப் பார்க்கிறாள். அவளைத் தடுத்து மீட்கிறான். வாஸவதத்தையை உதயனன் விவாகம் செய்துகொண்ட பின்னரே அவளை யழைத்துக் கொண்டு போனானென்று அங்கார வதிக்கு உறுதி கூறி அவளைச் சமாதானப் படுத்துகிறான். பரதா ரோககனுக்கு யௌகந்தராயணர் சொல்லிய வர்த்தமானத்தைக் கொண்டுவந்த தூதன் மூலமாக, அவர்கள் இருவருக்கும் விவாகம்

நடந்துபோன விஷயத்தை, மகாசேனன் தெரிந்துகொண்டிருந்தான். விவாகம் செய்து கொள்வதற்கு முன்னால் பரத வமிசத்தரச னெவனும் ஒரு கன்னிகையின் முகத்தைப் பார்க்கமாட்டான், அவளுக்குப் பாடஞ் சொல்லிக் கொடுக்கவும் மாட்டானென்று அந்தத் தூதன் வாயிலாக மகாசேனன் கேட்டிருந்தான்; அல்லது, பரதர்களின் வழிவகை யெல்லாம் தனக்குத் தெரியுமாதலால் தானாகவே அதை ஊகித்திருக் கவும் கூடும்.

கஞ்சுகியின் மூலமாகவும் பணிப்பெண்ணின் மூலமாகவும் உதயனனுக்கு அங்காரவதி சொல்லியனுப்பிய வர்த்தமானம் உருக்க மாகவும் அன்பு கூர்ந்ததாகவும், பெருந்தகைமையாகவும் இருந்தது. இந்தியாவில் மனைவியின் தாயார் கொண்டாடப் படுகிறாளென்பதை யும், இங்கிலாந்தில் வெறுக்கப்படுகிறாளென்பதையும், இந்தியாவிற் கணவனுடைய தாயார் வெறுக்கப்படுகிறா ளென்பதையும், இங்கி லாந்திற் கொண்டாடப் படுகிறார்களென்பதையும் இந்தச் சந்தர்ப் பத்திற் குறிப்பது தகுதியாகும். ஆகையால், உதயனனது மனைவி யின் தாயாராகிய அங்காரவதி அன்புடையவளாகவும், ஸரஸகுண முடையவளாகவும் பிரேமைக் குரியவளாகவும் சொல்லப்பட்டிருக் கிறாள். பதினாறு சக்களத்தி ராணிகளுக்குத் தலைவியாகவும், உஜ்ஜைனி நகரத்துக்கே அதிஷ்டான தேவதையைப் போன்ற பெருந் தகையாகவும் இருக்க வேண்டுமானால் அவள் நல்ல சாமர்த்திய சாலியாய் இருக்க வேண்டும்.

## யௌகந்தராயணர்

யௌகந்தராயணருடைய தன்மை இவ்விரண்டு நாட கங்களினாலும் விளங்குகிறபடி மிக மேன்மையாயிருக்கின்றது. அதில் மிக முக்கியமான அமிசம் என்னவெனில், அரசியல் நோக்கத்தின் பொருட்டே எதையும் அவர் துறக்கச் சித்தமாயிருப்பதேயாம். ஆனால், இங்கே தன் அரசனும் நாடும் பராதீனப்படாமல் ஸ்வதந்திர மாயிருக்க வேண்டுமென்னும் பெருநோக்கமே அவர் கொண்டிருந் தார்; லோகோக்திக் கதையிற் சொல்வதுபோல, பிறநாடுகளை வென்று தன் எஜமானனுடைய ஆட்சிக்கு உட்படுத்த வேண்டுமென்னும் இழி நோக்கு அன்று. திருஷ்டாந்தமாக, துராகிருத ஆட்சி கொண்டவன் கையினின்று வத்ஸநாட்டை மீட்கும் பொருட்டு அவர் உதயன னுடைய சுகபோகத்தையும் வாஸவதத்தையின் சுகபோகத்தையும் இரக்கமின்றிச் சிறிதுகாலம் கெடுக்கின்றார்; ஆனால், அவர் தனக்கும் எவ்விதமான இன்பமும் சுகமும் இல்லாமற் செய்துகொண்டா ரென்பதை நாம் நினைக்க வேண்டும்; தாம் மாத்திரம் ஆனந்தமனு

பவித்துக் கொண்டிருந்தாரென்பதில்லை. உதயனனைப் பலமனை யாளனாக்க இசைந்தாரெனின், தாமே பைத்தியக்காரனாவதற்கும் இசைந்தார். தம் நாட்டின் மீது அவர் வைத்திருந்த பேரபிமானம், ஜெர்மனியின் மீது பிஸ்மார்க் (Bismarck) வைத்திருந்த அபிமானத் திற்கும், இங்கிலாந்தின் மீது சாதம் (Chatham) வைத்திருந்த அபிமானத்திற்கும் ஒப்பாகும்.

அவர் கற்றறிவில்லாத ஜனநாயகரல்ல, குருட்டுத்தசையாக அபிமானத்தினால் பெரிய அதிகாரப் பதவி பெற்றவருமல்ல. அவர் பரம்பரையாக மந்திரி குமாரர், அக்காலத்திலிருந்த அரசியல் விவகார நூல்களையெல்லாம் ஆய்ந்தவர். பரதாரோககன் போலி யானை முதலிய தந்திரங்களினால் அரைகுறையான சூழ்ச்சிகளெல் லாம் பங்கப்பட்டனவென அவனை ஏசுகின்றார். அதற்கு மாறாக தான் செய்த எதிர்ச் சூழ்ச்சிகளெல்லாம் நன்கு நிறைவேறியதைக் குறித்துப் பெருமை பாராட்டுகின்றார். தமது அறிவுக் கூர்மையி னாலும் நெடுநாட் பழக்க விசேஷத்தினாலும் தாம் அடைந்த வெற்றியைத் தாராளமாக வெளியிட்டுப் பாராட்டுகின்றார்.

தம் அரசனை விடுவிப்பதற்காக வெகு புத்திசாலித்தனமாய் அவர் வழிவகை அமைக்கின்றார்; வெகு விரைவில் அவ்வழி வகை களைத் திருத்துகின்றார். அரசனைச் சிறையினின்று விடுவிப்பதற்கும், வாஸவதத்தையை அந்தப்புரத்தினின்று வெளியேற்றுவதற்கும் வேண்டிய வாறு சூழ்ச்சியை மாற்றியமைக்கின்றார்; மிக்க திறமையுடன் உஜ் ஜைனி நகரம் முழுமையிலும் தமது உளவாட்களால் நிரப்புகின்றார்; அந்நகரத்தைக் கௌசாம்பியெனவே ஆக்கிவிட்டார்; மதில்களையும் மாடங்களையும் மாத்திரமே மாற்றவில்லை; யானைகள் தறித்தெறித்து வெறித்தோடுமாறு யுக்திகள் செய்கிறார்; மகாசேனனுடைய ஆட்களை தந்திரமாகத் தம் வசப்படுத்திக் கொள்கிறார்; தமது ஒற்றர்களின் மூல மாக அவ்வப்போது அங்கங்கே நடக்கும் சங்கதிகளையெல்லாம் தெரிந்துகொள்கிறார். இவையெல்லாம் அவர் அக்காலத்து அரசியல் விவகாரங்களில் நன்கு தேர்ந்தவரெனத் தெரிவிக்கின்றன.

ஆனால், அவர் வெறும் அரசியல் தந்திரியேயல்ல. உல கத்துப் பெரிய அரசியல் தந்திரிகளெல்லாரையும் போல அவரும் அரிய போர்வீரர். அவருடைய அரசியல் தந்திரம் சூதுகளையே ஆதார மாகக் கொண்ட ஊசற் காரியமன்று. அவர் போர் செய்யவல்லார், நன்றாகவும் போர் புரிவார். தன்னந்தனியே நின்று அவர் மகாசேன னுடைய படையினரோடு பொருது, வாஸவதத்தையுடன் தம் அரசன் வெளியேறுமளவும், அச்சுறுத்தி அவர்களைத் தூரத்திலே நிற்கச்

செய்தார். யானைக்கொம்பினால் தமது வாள் இரண்டாக முறிந்து போன போதினும் அவர் போர் தவிர்த்தாரில்லை. தீரமாகவே விவகரித்தார்; பிடிபட்ட பின்னும் கருணை வேண்டவில்லை. போரில் தோற்ற சத்துருவுக்கு அரசமுறை நூலில் என்ன தண்டனை விதிக்கப் பட்டிருக்கிறதென்று பரதாரோககன் வினவியதற்கு அவர் அச்சம் சிறிதுமின்றி, 'மரணதண்டனையே' என்று கூசாமற் கூறினர்.

தமது கடமையைப் பற்றியும் பிறருடைய கடமையைப் பற்றியும் அவருக்கு உயர்தரமான கொள்கை உண்டு. எனவே, அவரவரும் தத்தம் கடமையைச் சரிவரச் செய்ய வேண்டுமென்பது அவருடைய கருத்து. அவர் உறக்கங் கொண்டிருக்கையில் பிடிபட்டபோது, அரசன் சிறைபட்டுச் சொல்லியனுப்பிய வர்த்தமானத்தைக் கேட்டு, அரசனுடைய அன்னத்தை உண்டு அவனளித்த கௌரவத்தை ஏற்றுப் பெரும்பதவியும் வாய்ந்ததற்குப் பிரதியாக அவர் ஒன்றும் செய்ய வில்லையென்று அரசன் அபிப்பிராயப்படுவதாக அவனுடைய தூது மொழியைப் பொருட்படுத்திக் கொண்டார். வத்ஸராஜனுக்கு நேர்ந்த துர்கதியை நினைந்து அரண்மனையில் ராணி வாசத்து ஸ்திரீகள் ஓலமிட்டழுவதனால் மந்திரிமார்கள் திறமையற்றவர்களென்றும் உபயோகமற்றவர்களென்றும் அவர்கள் வெளிப்படையாகத் தெரிவிக்கிறார்களென்று அவர் சொன்னார். அரசனை விடுவிப்பேனென்று கடுமையான சபதங்கள் செய்தார், ஊக்கத்தோடு மனத்தை அவ்வழியே நிறுத்தி அக்காரியத்தைச் சாதித்தார். அதைச் சாதித்தபின் 'வெற்றி பெற்றேன்' திருப்தியடைந்தேன், அமைதி வாய்ந்தேன், பகையையும் அச்சத்தையும், அகௌரவத்தையும் போக்கிவிட்டேன். தன் தந்தையைக் கொன்றவனை அசுவத்தாமன் கொன்று அடைந்த ஆனந்தம் அடைந்தேன்' என்று அவர் சொன்னார். தமக்குண்டான சந்தோஷத்தை அவர், வனம்புகும் முனிவர்களுக்கும், தம் வேலைகள் எல்லாம் முடித்தபின் இறப்பவர்களுக்கும், எதற்காகவும் பச்சாதாபப்பட வேண்டியிராமல் இறப்பவர்களுக்கும் உண்டாகத்தக்க சந்தோஷத்திற்கு ஒப்பிட்டுக் கூறுகின்றார்.

தம்மைப் பார்க்கவரும் ஜனங்களைத் தடுக்காமல் வரவிடும்படி உஜ்ஜைனிப் படைவீரர்களுக்கு அவர் சொன்னார். மந்திரிமார் தம் அரசனுக்காகவும் தேசத்திற்காகவும் எவ்வளவு கஷ்டம் அனுபவிக்க வேண்டுமென்று தெரிந்து, அவர்கள் அங்ஙனம் செய்யத் தீர்மானித்தாலும் தீர்மானிக்கட்டும், அல்லது, மந்திரிபதவியே வேண்டாமென்று விட்டொழித்தாலும் ஒழிக்கட்டும் என்று அவர் மொழிந்தார். இவ்வாறு அவனுடைய அபிப்பிராயத்தில் மந்திரியாயிருப்பவன் அதிகாரத்திற்கும் ஐசுவரியத்திற்கும் ஆசைப்படுவது நிந்தியமாகும்;

குடியரசுக் கொள்கை நிரம்பிய இந்நாளில் இதை நாம் வற்புறுத்திக் கொள்வோமாக.

கடமையின் விஷயத்தில் அவர் இவ்வித அபிப்பிராயங் கொண்டவராதலால், அவர் தம் விஷயத்திற்போலப் பிறர் விஷயத் திலும் மிகக் கண்டிப்பாக இருப்பர், தண்டிப்பர். கிருத்திரம யானை யைப் பிடிப்பதற்கு அரசன் தனியே போக விரும்பியபோது, ருமண் வான் என்ன செய்துகொண்டிருந்தானென்று அவர் தெரிந்துகொள்ள விரும்பினார். அரசனோடு போகாமல் ஏன் பிரிந்து வந்தாயென்று ஹம்ஸகனை அவர் கேட்கின்றார். தம் கடமையைப் பற்றி இவ்வித மான உயர் நினைவு கொள்ளாமல் அரசன் வழுவியபோது அவனையும் கண்டித்தார். கால் விலங்கு கலீரென ஒலித்துக் கொண்டிருக்கையிற் சிங்காரச் சேஷ்டைகள் செய்வது வெட்கமா யிருக்கவில்லையோ வென்று அரசனை ஏசுகின்றார்.

ஆனால், வஸந்தகன் ஆலோசனை சொல்லியதுபோல அரசனை, அவன் தலைவிதிபோல நடக்கட்டுமென்று, கைவிட மாட்டார். நண்பர்களாகிய தம்மை நம்பினவன் நல்லகாலம் இன்ன தென்றும் கெட்டகாலம் இன்னதென்றும் தெரியாதிருக்கையில் காமத் தினாலும் கவலையினாலும் அவனுக்குக் கண் தெரியாமலிருக்கை யில் அவனை கைவிடலாகுமோ என்று கேட்கின்றார்.

அவருக்கு வீரமும் தீரமும் இருந்தன, தம் கடமையைச் சரிவர நிறைவேற்ற வேண்டுமென்னும் உணர்ச்சியும் அதிகமாயிருந்தது. அங்ஙன மிருந்தும், எவனுக்காக இவ்வளவு பாடுபடுகிறோமோ அவ்வரசன் இவைகளைப் பற்றி என்ன நினைப்பானோ என்னும் அச்சமும் அவ ருக்கு உள்ளூர இருந்தது. அது 'ஸ்வப்ன வாஸவதத்தம்' 6- ஆம் அங்கத் தில் 15-ஆம் சுலோகத்தில் வெளிப்படுகின்றது.

பரதவம்சமென்பது இந்தியாவின் ராஜகுலங்களுள் முதன்மை யானது. அதன்மீது யௌகந்தராயணருக்கு அபிமானம் அதிகம். ''யௌ கந்தராயண சபதங்கள்'' என்னும் நாடகம், நான்காம் அங்கம் 17-ஆம் சுலோகமும், ''ஸ்வப்ன வாசவதத்தம்'' ஆறாம் அங்கம் 16-ஆம் சுலோ கமும் இதனை அழகாகத் தெரிவிக்கின்றன. இவ்வபிப்பிராயங்கள் சாமானியமானவைகளே யாயினும் இவற்றின் அழகைக் கண்டு இந்தியனெவனும் மனமுருகாதிரான்; அந்த உத்தம மன்னர்களுக்குரிய விசேஷமான பெரிய லக்ஷணம் என்னவெனில் பிறர்மனை விழை யாமையாம்; இந்தக் குணம் துஷ்யந்தனுக்கும் மிகுதியாக உண்டென்று காளிதாசனும் காட்டியிருக்கின்றான். உதயனனுடைய முன்னோர்களான

பரத மன்னர்களைப் பற்றிச் சொல்லுமளவில் அவர்கள் வேதசாஸ் திராபிமானிகள், அவைகளினாற் கொண்டாடப் பெற்றவர்கள், பிரஜை களினாற் பிரேமிக்கப்பட்டவர்கள் என்று மகாசேனன் வர்ணிக்கின் றான். யௌகந்தராயணர் தமது அரசர்களைப் பற்றி வீண்பெருமை அடிக்கவில்லையென்று இதனால் தெரிகின்றது.

தலைமை வகித்த ஜனங்களை நடத்துகிற மகா புருஷர் களெல்லாரையும்போல யௌகந்தராயணரும் தமது ஆட்களின் விஷ யத்தில் தாக்ஷிண்யமுடையவராய் இருந்தார். அவ்வாட்களும் அவருக்கு நல்ல விசுவாசம் பாராட்டும்படி செய்யவல்லார். உதாரணமாக, வழி வெகுதூரமிருப்பினும் அவரிடத்து அவனுக்குள்ள ஆசையானது அவனை இன்னும் அதிகதூரம் போகச்செய்யுமென்று சாதாரண வார்த்தா வாக்கனான சாலகன் என்பவன் சொல்லுகின்றான். அவர் பொருட்டு ருமண்வானும், வஸந்தகனும் முறையே பிக்ஷுவாகவும், பிச்சைக்காரனாகவும் வேஷம் போட்டுக் கொள்கிறார்கள். உதயன னுடைய க்ஷேமத்தின் பொருட்டே அவர் உழைக்கிறாரென்று நன்றாகத் தெரிந்து கொண்டதனாலே அவருடைய கொடிய சூழ்ச்சிக்கு மனமார உடன்படுகிறார்கள். அவருடைய கீழ் உத்தியோகஸ்தர்கள் மீதும் வேலைக்காரர்கள் மீதும் அவருக்குப் பெரிய ஆகர்ஷண சக்தி இருக் கிறதென்று இதனால் தெளிவாகின்றது. மேதை என்பது ஒரு பங்கு ஈசுவரப் பிரேரணையும் 99 பங்கு அதன் கசிவினால் அமைந்திருப்பது போல காந்தாகர்ஷண சக்தியென்பது 99 பங்கு தாக்ஷிண்யமும் 1 பங்கு சொல்லொணா வசீகரணத்தினாலும் அமைந்துள்ளது.

சாலகனை அவர் கொஞ்சம் ஒய்வுற்றிருக்கச் சொல்லுகிறார்; ஹம்ஸகனை உட்காரச் சொல்லுகிறார், வக்கணை முறைதப்பி தம்மை ஹம்ஸகன் பெயரிட்டழைத்ததற்குச் சமாதானம் சொல்லு கிறார், மகாராணி தாயாரையும் அவளுக்குள்ள மாதுரு வாத்ஸல்யத் தையும் கருத்துடன் பாராட்டுகின்றார், சங்கதியை அவ்வம்மைக்கு மெதுவாக வெளியிடுவதற்கு நயமான வழியையும் வார்த்தையை யும் விஜயைக்குக் கற்பிக்கிறார்.

''யௌகந்தராயண சபதங்கள்'' முதலாம் அங்கம், 3-ஆம் சுலோகமும், மூன்றாம் அங்கம், 7-ஆம் சுலோகமும் தெரிவிப்பது போல சிநேக பாவனையும் அவருக்கு உயர்தரமாக இருந்தது. மகா ராணித் தாயாரும் அவருக்கு வர்த்தமானம் அனுப்பியபோது அவர் மந்திரியாவதற்கு முன்னால் நண்பராயிருந்தவர். ஆதலின், தனக்கு மற்றொரு குமாரராவர், அவர் தம் குமாரனைத் திருப்பிக் கொணர்ந்து தன்னிடம் சேர்க்க வேண்டும் என்றே சொல்லினள். இந்த விஷயங்

களினால் அக்காலத்தவர்கள் உறவு முறையைக் காட்டிலும் நட்பு முறையே பலமான பந்தம், மக்களின் நண்பர்கள் மக்களைப் போன்ற வர்களே என்னுங் கொள்கைகளை உறுதியாகக் கொண்டிருந்தனர் என்று தெரிகிறது.

அரசனுடைய பிரதான மந்திரி யானமையினாலும், அரச னுடைய கௌரவத்தையும் பிரதிஷ்டையையும் அதிகாரத்தையும் காப்பாற்றும் விஷயத்தில் மிக்க பிடிவாதமுள்ளவரானமையினாலும், தவச்சாலையில் மகதராஜனுடைய வேலைக்காரர்கள் அங்கிருந்தவர் களை வாங்கிப் போம்படி சொல்லியபோது அவருக்கு நியாயமாகவே கோபம் வந்தது, (''ஸ்வப்ன வாஸவதத்தம்'', 1-ஆம் அங்கம், 3-ஆம் சுலோகம்) வழியைவிட்டு ஒதுங்கும்படி ஜனங்களுக்குச் சொல்லுகிற வர்கள் தாமே நன்னெறியினின்றும் வழுவிப் போகிறார்களென்று, அவர் மனத்தில் உறுத்துமாறு சொல்லுகிறார்.

அவர் தன்னயங் கருதி ஒன்றும் செய்யவில்லை. தமக்குப் பெருமை வேண்டுமென்றாவது, பிறர் பொருளை ஆக்கிரமிக்க வேண்டுமென்றாவது, தமக்குச் செல்வம் வேண்டுமென்றாவது அவர் விரும்பவில்லை. ''ஸ்வப்ன வாஸவதத்தம்'', 1-ஆம் அங்கம், 9-ஆம் சுலோகம் அவருடைய நோக்கையும் போக்கையும் உள்ளபடி அறி விக்கின்றது. பலவான்கள் எல்லோரையும்போல அவருக்குத் திடீ ரெனக் கோபம் வரும். அவரை, பங்கமுற்றுப் பெட்டிக் கூடைக்குள் அடங்கியிருக்கிற ஆக்கிரஹமிக்க பாம்பு என்று பரதாரோகதன் வர்ணித்திருக்கிறான். உதயனனைப் பிடிக்க மகாசேனன் செய்த சூதினால் அவருக்கு உண்டான கோபம், உஜ்ஜைனியிலுள்ள வீடுகள் பலவற்றிற்கு அவர் தீ வைத்ததனால் தெரிகின்றது.

ஆனால், அவருக்குச் சிறந்த நல்லுணர்ச்சிகளும் உண்டு. அன்பு காட்டும் விஷயத்தில் அவர் ரோஷம் மிக்கவர். எவருடைய வீடுகளை அவர் தீயிட்டுக் கொளுத்தினாரோ அவர்கள், அவ்வீடுகள் இன்னும் எரிந்து கொண்டிருக்கையிலேயே அவருக்குத் தங்கக் கிண் ணத்தைப் பரிசளிக்க வந்தார்கள். அந்தப் பரிசைக் காட்டிலும் மரணமே சிறந்ததாகும் என்று அவர் சொல்லியிருக்கிறார். (''யௌகந்தராயண சபதங்கள்'', 4-ஆம் அங்கம், 22-ஆம் சுலோகம்) இந்தக் கூற்று, மார்லோ என்பவர் எழுதியுள்ள ''பிரேமையினாற் 'கொல்லுண்ட மாது'' என்னும் நாடகத்தை ஞாபகமூட்டுகின்றது. அவருக்குத் தயாள குணமும் உண்டு. யானைக் காட்டில் ருமண்வான் தனக்குத் தோன்றிய ஆலோசனையைத் தைரியமாக ஒளிக்காமல் அரசனுக்குச் சொல்லி யதைக் குறித்து அவனை மெச்சி, அவனைப்போலத் தாமும் தாராளமாக

விவகரிக்க விரும்புகிறார். இவருடைய தயாளகுணத்தை மற்றோரிடத்தில் இன்னும் அதிகமாக ''ஸ்வப்ன வாஸவதத்தம்'' 1-ஆம் அங்கம், 15-ஆம் சுலோகத்திற் காட்டியிருக்கிறார். அதுவும், ருமண்வான் இன்னும் மந்திரி ஸ்தானத்திலிருந்து விவகரித்துக் கொண்டிருக்க, அவர் தவ வேடத்தில் மறைந்தொழுகுகையிற் சொல்லியுள்ளார்.

அவர் உத்தமபாவனையுள்ளவரென்றே, அஃதாவது நன்மையே விளையுமென்னும் நம்பிக்கையுள்ளவரென்றே சொல்ல வேண்டும். 'முயற்சி திருவினையாக்கும்' என்னும் கொள்கையினர். ஆயினும், விவேகிகள் எல்லோரையும் போல, சில வேளை விதியே மதியை வென்று முயற்சியை வீணாக்குமென்று உணர்ந்தவர். அவருடைய சுயேச்சையும் ஆள்வினையாக்கத்தில் நம்பிக்கையும் ''யௌகந்தராயண சபதங்கள்'', 1-ஆம் அங்கம், 18-ஆவது சுலோகத்தினாலும், உதயனனை விடுவிக்க அவர் செய்யும் முயற்சிகளினாலும் வெளிப்படுகின்றன. ஆனால், 1-ஆம் அங்கம் 1-ஆம் சுலோகத்தினாலும் ஹம்ஸகனை நோக்கி 'விதிவலிது' என்று சொல்வதினாலும் அகம்பாவனையும் தோன்றுகின்றது.

பஞ்சதந்திரத்தில் இரண்டு கதைகள் உள. அவற்றுள் 'விதியோடு போராடி வென்ற நெசவுக்காரன் என்பது ஒன்று. மற்றது 'எல்லாம் விதி வசமே' என நம்பினவன் என்பதாம். இவ்விரண்டு கதைகளையும் யௌகந்தராயணர் படித்தவரென்று தெரிகிறது. முதற்கதையில் மதிப்பினால் விதி வெல்லப்படுகின்றது. இரண்டாம் கதையில் விதியின் வலி தோன்றுகின்றது. *(21)**

மூட பக்தியான காரியங்களில் அவருக்குப் பெரிய நம்பிக்கை இல்லை. ஆனால், வழக்கமாயுள்ள ஆசார விவகாரமென்பதனையும், அதுவும் மூட பக்தியினாலாகு மென்னுங் காரணத்தைக் கொண்டு, அவர் தவிர்க்கவில்லை. திருஷ்டாந்தமாக சத்துருக்களினின்றும் பூதங்களினின்றும் முதலானவைகளினின்றும் உதயனனைக் காக்கும் பொருட்டு ரக்ஷாஸூத்திரம் உண்டாக்கவும் சுமங்கலிகள் அதை ஆசீர்வதிக்கவும் அவர் உடன்படுகிறார். ஆனால், இக்காலத்தவரைப் போல, அந்த ரக்ஷாஸூத்திரத்தை ஒரு சுமங்கலி மாத்திரமே தொட்டு வாழ்த்தி யிருப்பினும் போதும், அதை உடனே அனுப்பவேண்டும் என்று மகாராணித் தாயாரைக் கேட்டுக் கொள்கிறார்.

---

★ நான் எழுதியுள்ள ''பஞ்சதந்திர-ஹிதோபதேசக் கதைகள்'' என்னும் புத்தகத்தில் 22-ஆம் கதையையும் 21-ஆம் கதையையும் பார்க்க.

ஜோதிஷப் பயன்களின் விஷயத்தில் அவருக்கு நம்பிக்கை அதிகமாயிருந்ததாகத் தோன்றுகிறது. பத்மாவதி என்பவள் வத்ஸ ராஜனுக்கு மனைவியாவளென்று **புஷ்பகன் பத்ரகன்** முதலான பிரபல ஜோஸியர்கள் சொல்லிய வார்த்தையை ஆதாரமாகக் கொண்டே அவர் அவ்விவாகம் நடந்தேறுவதற்கு வேண்டிய யுக்திகளையும் சூழ்ச்சிகளை யுஞ் செய்தார். இதைத் தாங்கிப் பேசும் பொருட்டு, அந்தச் சோதிடக் கூற்று பலித்தது; ஆகையால் யௌகந்தராயணர் செய்தது பிசகென்று சொல்வதற் கில்லாததாயிற்று; ஏனெனில், அந்தச் சோதிடத்தில் மாத் திரம் அவர் நம்பிக்கை கொண்டாரேயொழிய, தவறிப்போன மற்ற சோதிடங்களை நம்பவில்லை. 'ஜுலியஸ் ஸீஸர்' (Julius Ceasar') என்னும் நாடகத்தில் 'ஐட்ஸ்-ஆவ்-மார்ச்' ("Ides of March')ஐப் பற்றி எச்சரிக்கையாயிருக்கும்படி சோதிடர் சொல்லிய வார்த்தையை 'ஜுலியஸ் ஸீஸர்' கவனிக்காதிருந்தது குற்றமென ஷேக்ஸ்பியர் சொல்வதாகத் தோன்றுகின்றது.

மாறுவேஷம் பூண்பதில் அவர் கெட்டிக்காரர்; வத்ஸராஜ் யத்துப் பெரிய பிரதான மந்திரியாகிய அவர் உஜ்ஜைனித் தெருக்களில், 'மிட்டாய் வாங்கவில்லையா' எனக் கூவிக்கொண்டு மிட்டாய்த் தட்டுங் கையுமாக வெறுக்கத்தக்கப் பைத்தியக்காரனாகத் திரிய வல்லார். அற்பகுணமுடையவர்களைப் போல அவர் தம் உத்தியோக தோரணையிலே இறுகிக் கல்லாய்ப் போகவில்லை; அங்ஙனமின்றி எவரெவருக்கு எப்படியிருக்க வேண்டுமோ அப்படி இருக்கவல்லவர். இது விவேககதி வலியின் குறியாம்.

அவருடைய அறிவு க்ஷௌரக்கத்தியைப் போலக் கூர்மையா யிருந்தது, அதனால் செம்மட்டியைப் போலக் கனமாகவும் இருந்தது. பரதாரோககன் சொல்லியது ஒவ்வொன்றையும் உடனே கண்டித் தெறிந்தார்; மகாசேனனுடைய சைனியத்தைக் குறித்துச் சமத்கார மாகவும் கடுமையாகவும் பேசினார்; நகை திருட்டுப் போனபின் நகைப்பெட்டியைப் பத்திரமாக மகாசேனனுடைய மந்திரிமார் காத்துக் கொண்டு, அடிமரம் வெட்டுண்டபின் கிளைகளைக் குறித்துக் கவலைப்படுகிறார்களென்று கேலி பண்ணினார். **சாஹு சத்திரபதி**யின் பிரதான மந்திரியாகிய பேஷ்வா **பாஜிராவ்** - I என்பவன், 'அடி மரத்தை வெட்டு, கிளைகள் தமக்குத் தாமே விழுந்துபோம்' என்று சொல்லியது யௌகந்தராயணருடைய கூற்றின் எதிரொலியேயாம். வத்ஸராஜனைத் திரும்பப் பிடித்துவிட்டார்களென்று யௌகந்தராய ணருக்குச் சொல்லியபோது அவர் அதை நம்பாமல் அந்த வார்த்தை உண்மையாயிருக்க முடியாதென்பதற்கான கெட்டி நியாயங்களை எடுத்துக் கூறினார். அதுபோலவே, வாஸவதத்தையை எடுத்துக்

கொண்டுபோக விரும்புவது மகாசேனன் தனக்குச் செய்த சூதுக்குப் பலமாகப் பழிவாங்கும் பொருட்டே என்று உதயனன் சொல்லிய போலி நியாயத்தைக் கேட்டு அவர் ஏமாறவில்லை.

இம்மைக் காரியங்களை அவர், பாரமார்த்திக நோக்கத்தால், அவற் றிற்குரியவளவே மதித்திருந்தார். அதற்குத் திருஷ்டாந்தம் ''ஸ்வப்ன வாஸவதத்தம்'' முதலாம் அங்கம் 4-ஆம் சுலோகத்தில் காணலாம்.

அவர் பீகரமான வடிவம் வாய்ந்தவர், சாதிக்கும் சங்கற்ப முடையவர், தெளிவான கம்பீரக் குரலுடையவர். அவரை எதிர்க்க எவரும் துணியார். அரண்மனையாட்களுள் துணிவு மிக்கவன் விதூ ஷகனே. விதிப்படி நடக்கட்டுமென வத்ஸராஜனை விட்டுவிடும்படி அவன் ஆலோசனை சொல்லியபோது, வாய்திறந்து பேச முடி யாதவாறு யெளகந்தராயணர் சொல்லிய மறுமொழியைக் கேட்டு வாயடைத்து வாளா நின்றான். அப்படிப்பட்ட ஆலோசனை சொல் வதற்கு ருமண்வான் துணியவில்லை. உலகத்தில் சில பிரபல புருஷ வியக்திகள் இருக்கின்றார்கள்; அவர்கள் அரசராகவோ, பிரபுக்க ளாகவோ, குடியரசுக் கொள்கையினராகவோ, பொதுவுடைமைக் காரராகவோ இருக்கலாம்; தம்மை எதிர்ப்பவர்களை அவர்கள், சாலை செப்பனிடும் எஞ்சினைப் போல, நசுக்கவல்லவர்களா யிருக் கிறார்கள். அப்படிப்பட்டவர்களுள் யெளகந்தராயணரும் ஒருவர் என்பதிற் சந்தேகமில்லை.

அங்க ஒழுங்குகளை அமைக்குஞ் சக்தி இயற்கையிலே அவ ருக்கு வாய்த்திருந்தது. ஆதலின், அவர் உஜ்ஜைனியிலிருந்து வத்ஸ ராஜனை விடுவிக்க வகை அமைத்தார், லாவாணகத்தில் தீயிட்டெரிக்க ஏற்பாடு செய்தார், வாஸவதத்தையைப் பத்மாவதியிடம் ஒப்படைத் தார், இவை போன்ற பல காரியங்களுஞ் செய்தார். மனஸ்தத்துவ ஆராய்ச்சி அவருக்கு இருந்ததென்று சொல்லவேண்டியதே இல்லை. அதனால் , வாஸவதத்தையைப் பத்மாவதி நன்றாகப் பராமரிப்பவள், தான் சொல்லிய சொல்லுக்குப் பின்வாங்க மாட்டாள், வத்ஸராஜன் மனைவியை இழந்தவுடன் மகதன் தன் மகளை அவனுக்கு விவாகம் செய்விப்பன், வத்ஸன் தன் ராஜ்யத்தைத் திரும்ப கைக்கொள்வதற்குத் துணைபுரிவன் என்று அவர் தெரிந்திருந்தார். மகாராணித் தாயாருக்கு அந்தத் துக்கச் செய்தியை எப்படிச் சொல்ல வேண்டுமென்று விஜயைக்கு அவர் புத்தி சொல்லுகிறார்; மகாசேனனுடைய சைனியத் திற்குற்ற பலக்குறைவு இன்னதென்று பகுத்தறிந்து ''யெளகந்தராயண சபதங்கள்'' முதலாம் அங்கம் நான்காம் சுலோகத்திலும் இன்னும் பல இடங்களிலும் சரியாகக் கூறுகின்றார்; இவைகளினால் அவருக்குள்ள

உள் நூற்புலமை வெளிப்படுகின்றது. தேவதைகளேயானாலும், அங்கீ கரிக்கப்படாவிடின் அவர்களை ஜகத்தோர் அவமதிக்கிறார்களென்று சொல்வதனால் மானிடரியல்பையும் சரிதையையும் அவர் நன்குணர்ந்த வரென்று தெரிகிறது.

ஆழ்ந்த உட்கிளர்ச்சியும் வீரச்செய்கையும் உள்ளவர்களெல் லாரையும் போல அவரும் மனோ வேகமுற்றவர். வத்ஸராஜனுக்கு நேர்ந்த விபத்தை ஹம்ஸகன் மூலமாகத் தெரிந்தவுடனே அவர்தம் உயிரை மாய்த்துக்கொள்ள நினைத்தார். சபதங்கள் செய்வதனாலும் அவர் மனோவேகமுற்றவரென்று தெரிகிறது.

அவர்தம் குற்றங்குறைகளையும் உணர்ந்தவராவர். ஹம்ஸ கனிடம் தம்மை இகழ்ந்து பேசியதனாலும், ''யௌகந்தராயண சப தங்கள்'' நான்காம் அங்கம் 22-ஆம் சுலோகத்தினாலும் மற்றுமுள்ள வாக்கியங்களினாலும் இது தெரிகின்றது.

மானிடர்க் கியல்பாயுள்ளது போல அவருக்குப் புகழ்ச்சி விருப் பமும் ஜனாமோதப் பிரியமும் இருந்தன. தெருவில் அலைந்து திரிந்து கொண்டிருந்த வெறுப்புக்கிடமான பைத்தியக்காரனென்று மாத்திரமே ஜனங்கள் கருதாவண்ணம், அவர்கள் தாராளமாகத் தம்மைப் பார்ப் பதற்கு விடும்படி உஜ்ஜைனிப் படையாட்களுக்கு அவர் சொன்னார். தம்மை புத்திரனென்று மகாராணித் தாயார் மதித்துக் கூறியதற்கும், பொதுவாக ராஜாங்க சபைக்கல்லாமல் பிரத்யேகமாகத் தமக்கு உதயனன் தூதனுப்பியதற்கும் அவர் மிகச் சந்தோஷப்பட்டார். முதற் சபதம் செய்யுமுன், மகாராணித் தாயார் என்ன சொன்னாளென்று விஜயையைக் கேட்டதனாலும், உதயனன் என்ன சொன்னானென்று ஹம்ஸகனைக் கேட்டதனாலும் இது தெரிகின்றது.

உதயனன் சிறைப்பட்டானென்று கேட்டவுடன் துக்கம் மூண்டு அவர் ''யௌகந்தராயண சபதங்கள்'' முதலாம் அங்கம் 11-ஆம் சுலோ கத்திற் பிரலாபிக்கின்றார்; அங்ஙனம் உதயனன் பிடிபட்டதை விஜயைக் குக் கூற மாட்டாமல் முதலில் திகைக்கின்றார்; இன்னதென்று தெரியாத படி, 'அப்படித்தான், அப்படித்தான்' என்று உளறுகிறார். அஃது அவ ளுக்கு விளங்கவில்லை; துக்க உணர்ச்சியின் மேலீட்டால் அங்ஙனம் கூறுகின்றார்; இவைகளினால் உதயனன் மீது அவருக்கு இருந்த அன்பு வெளிப்படுகின்றது. ஆனால், அவர் தயை நாடுவோரல்லர், முகமன் பேசுவோரல்லர், இச்சகம்பாடி யல்லர். சிறைப்பட்டிருக்கையில் அரசன் அசந்தர்ப்பமாகச் சிங்கார வேட்கை கொண்டதைப் பற்றி அவர் ருமண்வானனுக்கும் வஸந்தகனுக்கும் தெரிவித்த தமது அபிப்பிரா

யத்தினாலே இது விளங்கும். ருமண்வானே அடிக்கடி அரசனிடம் போய்வந்து விவகரித்துக் கொண்டிருந்தானேயல்லாமல், வெடுக்கென வெள்ளையாகப் பேசுந்தன்மையுள்ள இந்த முதன் மந்திரியல்ல.

'யௌகந்தராயண ரென்னும்' நாடக பாத்திரத்தில் பாஸன் பெரிய மந்திரியையும் பெருந்தன்மையான மனிதனையும் அமைத் துள்ளான். அவரை **சந்திரகுப்தனுக்கு** மந்திரியாயிருந்த **சாணக்கிய ருக்கு** ஒப்பிடலாம். அவரை மனத்தில் வைத்துக்கொண்டே பாஸன் இந்நாடகப் பாத்திரத்தை அமைத்ததாகத் தோன்றுகின்றது.

## ருமண்வான்

ருமண்வான் என்பவன் மிக்க ராஜபக்தியுள்ள மந்திரி. அவ னொருவகையிற் சிறந்த திறமையாளன். யௌகந்தராயணருக்குள்ள கம்பீரமான புருஷாகிருதியும் அறிவுக்கூர்மையும் அவனுக்கு இல்லை; ஆனால், அவனுக்குப் புத்தி வைபவம் இல்லையென்று சொல்லலாகாது; பார்க்கப் போனால் இரவும் பகலும் அபஜய முற்றவர்களுக்கு ஒரே மாதிரியாக இருப்பினும், உண்மை யுரைக்கின் பகலைக் காட்டினும் இரவு மிகக் கேடானது என்று அவன் யௌகந்தராய்ணருக்குச் சொல்லு கிறான். காலத்தை வீண் போக்கிக்கொண்டு வேலையில்லாத வேளை யில் அரசன் காதற் கூத்தாடிக் கொண்டிருப்பதைக் காட்டிலும் அவர் தமது சூழ்ச்சிகளை மாற்றிக்கொண்டு அரசனைச் சிறையினின்று விடுவிப்பதற்கும் வாஸவதத்தையை அந்தப்புரத்தினின்றும் பிரித் தெடுப்பதற்கும் ஒரே யுக்தி செய்ய வேண்டுமென்று அவன் யௌகந்த ராயணருக்கு மெதுவாக ஆலோசனை சொல்லுகிறான். இவைகளி னால் அவனும் புத்திசாலியென்று தெரிகிறது. ''ஸ்வப்ன வாஸவதத்தம்'' முதலாம் அங்கம் 14, 15-ஆம் சுலோகங்களில் பிரம்மசாரியும் யௌ கந்தராயணரும் சொல்லுகிற வார்த்தையினால் ருமண்வானுக்குள்ள ராஜபக்தி திறம்பட தோன்றுகின்றது. வாஸவதத்தை தீயினால் இறந்து போனாளென்று கேட்டு அரசன் துக்கித்துக் கொண்டிருக்கும் காலத்தில் உடனிருந்து அவனைத் தேற்றுவதற்காக தெரிந்தெடுக்கப்பட்டவன் அவனே. அந்த ஸ்தானத்தில் யௌகந்தராயணரேனும் விதூஷகரேனும் இருந்து அவ்வளவு நன்றாக நிர்வகிக்க முடியாது. வாஸவதத்தை இறந்து போனது பொய்க் கதையென்பது தனக்குத் தெரியுமென்று அரசனுக்குச் சிறிதும் ஜாடையாக அறிவிக்காமலே அவன் சலியாமல் அரசனிடத்து விவகரித்துக் கொண்டிருந்தான் என்பதனாலே அவன் எளிதில் வழி விடாத ஆழ்ந்த கருத்தினனென்று தெரிகிறது. லோகோக்தி கதையின் பிரகாரமும் யௌகந்தராயணருடைய நடவடிக்கையும் கோபாலகனுடைய நடவடிக்கையையும் பார்த்தே வாஸவதத்தை சாகவில்லை யென்று

உதயனன் அனுமானிக்கிறானே யல்லாமல், ருமண்வானைப் போன்ற இரண்டாந்தரத்து ஆட்களுக்கு இரகசியங்களை வெளியிடாமல் மர்ம மாகக் காக்குஞ்சக்தி அதிகமாயிருக்கிறதென்பது உண்மையே. இங்கி லாந்திலும் மற்ற நாகரிக தேசங்களிலுள்ள சிவில் சர்விஸ் உத்தி யோகஸ்தர்களுக்கு இது முக்கியமாயுள்ள லக்ஷணமாகும்.

மர்மங் காத்து வஞ்சிக்கிறானென்று வெளிக்குத் தோன்றிய போதிலும் அவன் பயபக்தியோடும் தன்னயம் பாராட்டாமலும் இருந் தானென்று அரசனே ஒப்புக்கொள்கிறான். அந்தச் சூழ்ச்சிக்கு அவனும் உட்கையாயிருந்தானென்று யௌகந்தராயணர் சொல்லியபொழுது அரசன் அதைப் பிரமாதப்படுத்தாமல், 'ருமண்வான் என்ன படுகள்ள னாய் இருக்கிறானே!' என்று வேடிக்கையாகப் பேசிப் பூசுகின்றான்.

## வஸந்தகன்

இந்திய இலக்கியங்களில் எங்கெங்கும் விளங்கும் மேன்மை யான விதூஷகர்களுள் வஸந்தகனும் ஒருவனாவான். இவன் ''அவிமார கத்தில் வருகிற சந்துஷ்டனைப் போன்றவனல்ல; 'சாருதத்த'த்தில் வருகிற மைத்ரேயனைப் போன்றவனுமல்ல, அவ்விருவரினும் வேறானவன். பாஸனுடைய மற்றெல்லா விதூஷகர்களையும் போல இவன் வெறுங் கோமாளியல்ல, விகடகவியுமல்ல,' ஆனால் 'தமாஷாக விவகரிக்கும் உற்சாக புருஷன்.' விதூஷகர்களெல்லாரையும் போல அவனும் வாழ்க்கையின் சுபங்களையெல்லாம் கொண்டாடுகிறவன், அழகைக் கண்டு ஆநந்திப்பான்; சாக்கோலமும் சோர்வும் சுடுகாடும் அவனுக்குப் பிடிக்காது; பரிகரிக்க முடியாத பயன்களை நினைத்து வருந்தித் தரையிற் புரண்டுருளுவது அவனுக்குப் பிடிக்காது. துய ருற்றுத் திரிந்து தெய்வம் கைவிட்ட நிலைமையிலிருந்த அரசன் மகத ஸம்ஸ்தானத்தில், சித்ராலங்காரக் கற்கள் பொதிந்த குளிப்பறையில் நீராடி திவ்வியமான உண்டி வகைகள் அருந்தி ஹம்ஸதூளிகா மஞ்சத்திலமர்ந்து பெருவாழ்வு வாழ்வதைக் கண்டு அவன் ஆநந்தக் கூத்தாடுகிறான். பத்மாவதியைக் காட்டிலும் வாஸவதத்தையை அவன் மெச்சிப் பேசியது அவள் அவனுக்கு வேண்டிய மட்டும் இனிய தின்பண்டங்கள் கொடுத்துக்கொண்டிருந்ததனாலேயாம்.'' அங்ஙனம் பிறருக்கு அளிப்பது ஒருவருடைய நற்குணத்தைக் கண்டறிவதற்கான நற்குறியேயாம். ஏனெனில், அவன் மாத்திரமேயல்ல, காசினியோ ரனைவரும் கவலைப்படுவது வயிற்றின் பொருட்டே. வயிறு குளிர்ந் தால் வானவர்க்கும் உள்ளங் குளிரும். இது விதூஷகன் விஷயத்தில் மாத்திரமே யல்லாமல் நம் எல்லோர் விஷயத்திலும் உண்மையே.

ஆனால், விதூஷகன் வெறும் சாப்பாட்டு ராமனேயல்ல, வேறு நற்குணங்கள் அவனிடம் இல்லை என்னலாகாது. அவன் நன்றாக மாறுவேஷம் போட்டு அதற்கேற்றவாறு நடிக்கவல்லான். உதாரணமாக, ''யௌகந்தராயண சபதங்கள்'' 3-ஆம் அங்கத்தில் பிச்சைக்கார வேஷம் பூண்டு மோதகங்களைப் பற்றி அவன் சுவைக்கச் சுவைக்கப் பிதற்றுகிறான். சிவபிரானைத் திருடனென்கிறான். அவன் சொற்களினால் அவனுக்குள்ள புராண ஞானமும் வர்ணபரீக்ஷையும் சித்திரகலாப் பயிற்சியும் வெளிப்படுகின்றன.

எதையும் தெரிந்துகொள்ள வேண்டுமென்னும் அவா அவனுக்கு அதிகம் உண்டு. பத்மாவதியைப் புதிதாக மணங்கொண்ட உதயனனை நோக்கி அவன், 'பத்மாவதி நல்லவளா, வாஸவதத்தை நல்லவளா?' என்று கேட்கிறான். அரசன் அதற்குப் பதில் சொல்லுகிற வரையில் வற்புறுத்துகிறான். அரசன் தன் மனச்சார்பை ஜாடையாகக் குறிப்பிடுவதைக் கொண்டு திருப்தியடையாமல் வெளிப்படையாக வாயாரச் சொல்லும்படி கட்டாயப்படுத்துகிறான். இதனால் பத்மாவதிக்கு அருவருப்பு உண்டாவதையும் அவன் பாராட்டுவதில்லை. அவன் நல்ல மத்திவர்த்தியாக இருந்தான். அங்கங்கே இருக்கும் தன் ஆட்சிக்காரர்களுக்கு நடுவேயிருந்து யௌகந்தராயணருக்கும் ருமண்வானுக்குமுள்ள ரகசிய சமாசாரப் போக்கு வரவும், அரசனுக்கும் அவருக்குமுள்ள வர்த்தமான விநிமயமும் இடையறாது நடைபெறுமாறு காத்துக்கொண்டிருந்தான். பிராமணருக்கிருந்த செல்வாக்குக் காலம் கழிந்துபோய்விட்டது என்னும் உணர்ச்சி அவனுக்கு இருந்தது. (அவ்வுணர்ச்சி அந்தக்காலம் முதல் இந்தக் காலம் வரையில் அவர்களுக்கு இருக்கின்றது). வடமொழி நாடகங்களில் விதூஷகர்கள் இருக்க வேண்டியதுபோல அவனும் பிராமணனே. இதற்குக் காரணம் என்னவெனில் உயர் குலத்தவ னல்லாதவனெவனும் அரசனோடு சரஸமாக நெருங்கிப் பழகமுடியாது. அவன் அஹிம்ஸா விரதமுடையவனாயிருக்க வேண்டும். ஆதலின், அரசப்பட்டத்தைக் கவரும் நோக்கம் சிறிதுமில்லாதவனெனத் தக்கவனாயிருக்க வேண்டும்.

அவன் இச்சகம்பாடியல்ல, முகமன் பேசுபவனும் அல்ல. அரசனோடு சரிசமமாக விவகரிக்கும் தன்மை பூர்ணமாக வாய்ந்தவன். இஃது எல்லாக் காலத்திலும் அருங்குணமெனக் கொண்டாடத் தக்கதே. அவன் இளநெஞ்சுடைய பயங்காளி யன்று. அரசனோடு விவகரிக்கையில், பலவந்தம் பண்ணினால் தன்னிடம் அரசன் எதுவும் சாதிக்க முடியாதென்று எதிர்த்துச் சொல்லி நயமாகக் கேட்டுக்கொள்ளும்படி செய்கிறான். வேலைக்காரர்களுடன் அவன் தாராளமாக விவகரிப்பான். அவர்கள் தன்னை மதித்துக் கௌரவித்துப் பாராட்டும்படியும் செய்வான்.

அஃதோர் அருங்குணமே. பணிப்பெண்கள் அவனுடன் பேசும் பாங்கே இதற்குத் திருஷ்டாந்தமாம். அவனுக்கு வெறுப்புங் கோபமுங்கூட ஒவ்வொருபோது வருகின்றன. வத்ஸராஜனை அவன் விதிப்படி யாகட்டுமென்று விட்டுவிடுமாறு யௌகந்தராயணருக்குச் சொன்னான்.

ஹாஸ்ய ரஸமும் அவனுக்கு நன்றாக இருக்கின்றது. அவன் சொல்வது இன்னதென்று தெரியவில்லையென யௌகந்தராயணரும் ருமண்வானும் கேட்கையில் அவன் மறுக்க வொண்ணாதவாறு, 'என் எண்ணங்கள் முதலில் எனக்கே தெரியும், பிறகே உங்களுக்குத் தெரியும்' என்று மறுமொழி கூறுகின்றான். வத்ஸராஜனை விடுவிக்க முடியாவிடினும் இனித் தங்கள் வாழ்நாளை உஜ்ஜைனியிற் கழிப்பதே நன்றென்று யௌகந்தராயணர் சொல்லியபோது, 'அவர்கள் ஏன் அப்படிச் செய்கிறார்களென்று தரணியோர் தெரிந்துகொண்டால் புகழ்ச் சிக்கு இடமாகும்' என்று அவன் நளினமாக நவிலுகின்றான். ஆத்திரங் கொண்டு யௌகந்தராயணர், 'வத்ஸராஜனது வேலைக்காரர்கள் தரணி மாந்தரின் திருப்தியின் பொருட்டு ஒன்றும் செய்வதில்லை, தம் யஜமானனைத் திருப்தி படுத்தும் பொருட்டே பாடுபடுகிறார்கள்' என்றும் மடித்துக் கூறியபோது, 'அவர்கள் படும் பாடுகளை யஜமான னும் உணர மாட்டான்' என்றும் அவன் படீரென பகர்ந்தான். சுருக்கிச் சொல்லின், 'கிங்லீயர்' (King Lear) இல் உள்ள விதூஷகனோடு ஒப் பிட்டுப் பார்த்தாலும், உலகத்திலுள்ள எந்த நாடகத்து விதூஷக னோடு ஒப்பிட்டுப் பார்த்தாலும் இந்நாடகத்து விதூஷகன் சளைக்க மாட்டான்.

## பரதாரோகன்

அரசியல் விவகாரங்களில் தேர்ச்சியுள்ளவனாகப் பெருமை யடித்துக் கொள்ளும் மந்திரியாக பரதாரோகன் வர்ணிக்கப்பட் டிருக்கிறான். ஆனால், காரியத்தில் மற்றவர்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது அவன் அவ்வளவு பெருமை மேற்கொள்வது தகா தெனத் தெரிகிறது. மகாசேனனிடத்து அவனுடைய வாக்கு மேம்பட்டு விளங்கியது. உதயனனைப் பிடிப்பதற்குச் செய்த சூது அவனுடைய யுக்தியேயாகும். ஆனால், யௌகந்தராயணர் நியாயமாக எடுத்துக் காட்டுவதுபோல, போலியானைத் தந்திரத்தினால் உஜ்ஜைனிக்குத் தீமையே விளைந்ததன்றி நன்மை விளையவில்லை. எங்ஙன மெனின், வாஸவதத்தையை எடுத்துக்கொண்டு வத்ஸராஜன் ஓடிப் போய் விட்டான், உஜ்ஜைனியிலுள்ள வீடுகளிற் பாதியைச் சுட் டெரித்துப் போனான். பரதாரோகன் செய்த யானைச் சூதையே திருப்பி அவன்தலைமீதடித்து அவனைத் திகைக்கப் பண்ணினான். மூன்றாந்தரத்து

ஆட்களைப் போலப் பரதாரோககன் தனக்கு வருமென்று எண்ணின பயன்களை மாத்திரமே கருதினான், அவனுடைய செய்கைகளினால் விளையக்கூடிய பயன்களையெல்லாம் கருதிக் கவனிக்கவில்லை. யௌகந்தராயணரோடு செய்த வாக்குப்போரிலும் அவன் எல்லா விடத்தும் தோற்றுப்போனான். ஆனால், பெரியாரான அம்மந்திரியாருக்குத் தான் மிகத் தாழ்ந்தவனென்று தெரிந்துகொள்ளுமளவு புத்தி அவனுக்கு இருந்தது. உண்மையில் அவன் தயங்கி தடுமாறிக் கொண்டே அவரைப் பார்த்துப் பேசப்போனான். தனக்குக் கிடைத்த அவமான மத்தனையும் வருமென்றே எதிர்பார்த்திருந்தான். தான் தோல்வி யுற்றதைத் தெரிந்துகொள்ளுமளவு சாமானிய விவேகமும் அவனுக்கு இருந்தது. யௌகந்தராயணருக்கு இட்டிருந்த தளையை நீக்கக் கட்டளையிட்டான்; வத்ஸராஜனிடத்துக் காட்டிவந்த பகையைத் தவிர்த்து நேசங்காட்டினான், முடிவில் மகாசேனனுடைய வழிக்கு வந்தான், உள்ளூரச் சம்மதமில்லாவிடினும் வத்ஸராஜனுடைய படத் தையும் வாஸவதத்தையின் படத்தையும் வைத்து நடத்திய கலியாணக் கொண்டாட்டத்தில் அவனும் கலந்துகொண்டிருக்க வேண்டும். ஆருணி வத்ஸராஜ்யத்தை ஆக்கிரமித்துக் கொண்டதனால் அவன் களிகொண் டிருக்க வேண்டும், உதயனனுக்கு உதவி செய்யாமல் மகாசேனனைத் தடுத்திருக்க வேண்டும்.

## பரபத்தியக்காரர்கள்

இந்த நாடகங்களிற் சொல்லப்பட்டிருக்கிற உஜ்ஜைனி பர பத்தியக்காரர்களும், மகதத்துப் பரபத்தியக்காரர்களும் இனிமையான வர்கள், கௌரவமானவர்கள், கற்றறிவாளர்கள். ஸம்பிரதாயத்தின் படி, அவர்கள் வயது முதிர்ந்த பிராமணர்களாயிருக்க வேண்டும், கல்வியாளராயிருக்க வேண்டும்; ராஜபக்தி, நல்ல யோக்கியதை, விவேகம், சாந்தம், வாய்மை உடையவர்களாகவும், விருந்தோம்பு முறை, ஒழுக்க முறை தெரிந்தவர்களாகவும் இருக்க வேண்டும். மகா சேனனுடைய கஞ்சுகியாகிய பாதராயணன், தன்னுடைய யஜமானன் விஷயத்திலும் தேசத்தின் விஷயத்திலும் பேரபிமானங் கொண்டவ னாகவும், இளவரசியின் விவாகம் முதலான யஜமானருக்குரிய சொந்த காரியங்களில் சிரத்தையுள்ளவனாகவும் காட்டப்பட்டிருக்கிறான். ராஜ ஸமஸ்தானத்துக்கு வருகிறவர்கள் வேறு வேறு அந்தஸ்தி னராயிருப்பார்கள். அவரவரையும் அவரவருடைய அந்தஸ்துக்குத் தக்கபடி உபசரித்துக் கௌரவிப்பதில் அவன் கெட்டிக்காரன். ஒழுக்க முறை சிறிதும் தவறாமல் நடக்கப்பார்க்கிறவன். வத்ஸராஜன் பிடிபட்ட வுடன் அதை மகாசேனனுக்கு அறிவிக்கும்போது அவனுக்கிருந்த உள்ளக்கிளர்ச்சியினால் முறைப்படி அரசனுக்கு வாழ்த்துக் கூறாமற்

சங்கதியை மாத்திரம் அறிவித்த குற்றத்திற்காகத் தன்னை மன்னிக்கும் படி அரசனைப் பணிந்து கேட்டுக்கொள்கிறான். மகாசேனன் என்ன சொல்லி எவ்வளவு தடுத்திருந்தபோதிலும் இவ்வொழுக்க முறை வழுவைப் பாதராயணன் பெருங்குற்றமாகக் கருதினானானமையின், அதற்கு அபராதமாக அரசனுடைய பாதம் பணிந்து மன்னிப்பு வேண்டா திருக்க மாட்டான். கம்பீரமாகப் பெருமை பாராட்டியவன். கோஷ வதி என்னும் வீணையை மகாசேனனிடம் கொடுக்கிறான். வத்ஸ ராஜனுடைய நிலைமையைச் சாமர்த்திய சாதுரியமாக யெடுத்துரைக் கிறான். முதியோனாயிருந்தும் விரைவாகவும் திறமையாகவும் அங்கு மிங்கும் போய் வர்தமானம் சொல்லி வருகிறான்; கௌஸாம்பிக்கு அவன் வந்ததைப் பெருமையோடும் படாடோபத்தோடும் அறி வித்தான். மகாசேனன் அனுப்பிய வர்த்தமானத்தைக் கேட்பதற்கு உதயனன் ஆசனத்தை விட்டெழுந்து நின்றபோது அமர்ந்திருந்து கேட்கும்படி அவனுக்குச் சொல்லுகிறான். ஆனால், உதயனன் அங்ஙனம் மரியாதையாக எழுந்து நின்றதில் அவனுக்கு மிக்க திருப்தி; வைதேகி வமிசத் தோன்றலுக்குச் செய்யத்தக்க பெருமையான காரியம் அதுவேயென்று உதயனனைத் துதிக்கின்றான். லௌகிக ஞானம் அவ னுக்கு நிரம்ப உண்டு. வாஸவத்தையை மணப்பதற்குப் பலர் தூது அனுப்பியிருக்க அவர்களுள் எவரையும் ஒப்பாமல் எவரையும் மறுக் காமல் மகாசேனன் தயங்கிக் கொண்டிருக்கையில், அவளை மணப் பதற்குரியவன் இன்னும் தூதனுப்பவில்லை போலுமென்று சொல்லு கிறார். மற்றும், ''ஸ்வப்ன வாஸவதத்தம்'', 4-ஆம் அங்கம், 10-ஆம் சுலோகத்தில், ''வேளை வந்தபின் மரணத்தை எவரே தடுக்க முடியும்? தாம்பு அறுந்தபின் யாரே குடத்தைக் காக்கவல்லார்? பருவத்துக்கேற்ற படி மரங்களும் மனிதர்களும் அழிவதையும் முளைத்தலையும் எவரே தடுப்பதற்காகும்?'' என்று அவன் பழுத்த ஞானத்தினால் வினவு கின்றான். ''யௌகந்தராயண சபதங்கள்'', 4-ஆம் அங்கம், 21-ஆம் சுலோகத்தைப் பார்த்தால், 'மனமார்ந்த களிப்பிலும் சிறிது துன்பம் அடங்கியிருக்கின்றது' என்று ஷெல்லி (Shelley) சொல்லிய பிரசித்த மான வாக்கியம் ஞாபகத்திற்கு வருகின்றது.

மகதத்துப் பரபத்தியக்காரனும் பொதுவான கஞ்சுகியினத்திற் சேர்ந்தவனே. ஆனால், ஒருவர்க்கொருவர் சிறிது வித்தியாசம் இருக் கின்றது. பரதராயணனைப் போல அவனும் தன் அரசன்மீதும் இளவரசி யின் மீதும் பேரபிமானமுள்ளவன்; அவர்கள் ஒருபோதும் நியாய சட்டத்திற்கு விரோதமாக நடக்க மாட்டார்களென்று சாற்றுகின்றான். தங்கள் இளவரசி அத்தவச்சாலைக்கு வந்திருப்பதனால் வித்தியாசம் பாராட்டமாட்டார்கள். ஆச்சிரமத்திலுள்ள துறவோர் முதலாயினோர் தத்தம் இஷ்டப்பிரகாரம் வேண்டியவளவு புல்லும் விறகும் நீரும் எடுத்து

உபயோகித்துக் கொள்ளலாமென்று அவர்களுக்குச் சொல்லுகிறான். பாதராயணனைப் போலல்லாமல், கடுமையாக அதிகாரங் காட்டுவதைப் பொறுக்க மாட்டாதவனாய் இருக்கிறான். அதிகப் படாடோபமும் அதிகார பாங்குமில்லாத அரசனிடம் உத்தியோகஞ் செய்வதனால் அவனுக்கு இந்தத் தன்மை வளர்ந்தது போலும். ஆச்சிரமத்துக் காவலர்கள் அங்கு வந்திருப்பவர்களை ஓதுங்கி போம்படி சொல்லி அரசனுக்குக் கெட்ட பெயர் வருவிக்காதிருக்க வேண்டுமென்று அவர்களுக்குச் சொல்லுகிறான். பிரம்மசாரி அவ்விடத்திற்கு வந்து உள்ளே போகலாமா கூடாதாவென்று தயங்கி தயங்கி நிற்கையில், ஆச்சிரமமென்பது எல்லோருக்கும் பொதுவான இடமானமையின், தாராளமாக உள்ளே போகலாமென்று அவனுக்குச் சொன்னான். தான் முன்னாலேயே அவ்வாச்சிரமத்திற்கு வந்திருந்தமையின் தான் அளிக்கத்தக்க ஆதித்தியத்தை ஏற்க வேண்டுமென்று பிரம்மசாரிக்குச் சொல்லுகிறான். கண்யம்மிக்க ஜயவந்தியைச் சரியாக வரவேற்று பாதராயணன் உபசரிக்கின்றான். எனினும், பிரம்மசாரியை அழைத்து விருந்தளிக்க மாட்டான். இயற்கை அழகெல்லாம் மகாசேனனைச் சிறப்பிக்கும் பொருட்டே ஏற்பட்டுள்ளனவென்பது பாதராயணனுடைய அபிப்பிராயம்; ஆனால், மகதத்துப் பரபத்தியக்காரனோ இயற்கை வனப்பை அனுபவித்து ''ஸ்வப்ன வாஸவதத்தம்'' முதலாம் அங்கம் 16-ஆம் சுலோகத்தில் ஆனந்திக்கின்றான். மகதத்து கஞ்சுகிக்கும் அறிவு நிரம்ப உண்டு; அவ்விஷயத்திற் பாதராயணனுக்குச் சிறிதும் தாழ்ந்தவனல்ல. பணத்தைக் கொடுத்தாலும் கொடுக்கலாம், உயிரையுங் கொடுக்கலாம், பெரிய புண்ணியப் பயனையும் 'கொடுத்துவிடலாம், அவையெல்லாம் எளிதே; ஆனால், கணவனாற் கைவிடப்பட்ட யுவதியை இரவும் பகலும் கட்டிக்காப்பது எளிதன்று, மிகக் கஷ்டமான காரியம்' என்று அவன் சொல்லுகிறான். விஷயங்களை அவன் அலங்காரப்படுத்திச் சொல்லவல்லான், பயன்படுமாறும் எடுத்துக் கூறவல்லான். உதாரணமாக, 1-ஆம் அங்கம் 8-ஆம் சுலோகத்தைக் காண்க. யௌகந்தராயணர் உருமாறித் துறவிக்கோலத்தோடு அலைந்து திரிவதைக்காண விரும்புகிறேனென்று அவன் சொன்னான். அப்படி பாதராயணன் சொல்லியிருக்க மாட்டான். அந்தத் துறவியை யௌகந்தராயணரென்று தெரிந்திடாவிடிற் சொல்லியிருக்க மாட்டான். அங்ஙனந் தெரிந்திருப்பின், ''யௌகந்தராயண சபதங்கள்'' 4-ஆம் அங்கம் 21-ஆம் சுலோகத்திற்போல மரியாதையாக மொழிந்திருப்பன்.

மகதத்துக் கஞ்சுகி தன் யஜமானன் சொல்லியனுப்பிய வர்த்தமானத்தைப் பெருந்தன்மையோடு திறமையாக எடுத்துரைப்பன்.

திருஷ்டாந்தமாக ''ஸ்வப்ன வாஸவதத்தம்'' 5-ஆம் அங்கம் 12-ஆம் சுலோகத்தைப் பார்க்க. மொத்தத்தில் பாஸகவியின் பரபத்தியக் காரர்கள் ஓட்ஹவுஸி (Wodehouse) லுள்ள உயர்தரமான 'பட்லர்' களைப்போல, ஒருவரையொருவர் போன்றவர்களாகவும், ஆனால் ஒருவரில் ஒருவர் வேறுபட்டவர்களாகவும் நமக்குத் தோன்றும்.

## சில்லரைப் பாத்திரங்கள்

இந்நாடகங்களிலுள்ள சில்லரைப் பாத்திரங்களுக்கும் ஒவ்வொரு தனிவியக்தியும் தனியழகும் இருக்கின்றன. திருஷ்டாந்தமாக, லாவாணகத்தில் இருந்துவந்த பிரம்மசாரி, ஊர்க்குருவியைப் போல, ஒருவாயிலாகப் புகுந்து மற்றொருவாயிலாக வெளியேறுகின்றான். ஆனால், வாஸவதத்தையின் மீது உதயனனுக்கிருந்த ஆசையை அவன் தெளிவாகக் கூறும்படி பாஸன் செய்கிறான். தீப்பட்டுக் கருகிய அவளுடைய ஆபரணங்களைக் கட்டித் தழுவிக்கொண்டு அரசன் தரையிற் புரளுவதையும் சிரத்தையோடு ருமண்வான் அவனைக் காத்துக் கவனிப்பதையும் அவன் விவரமாகக் கூறுகின்றான். அதோடு நில்லாமல் தவச்சாலையை அந்தப் பிரம்மசாரி பிரீதியுடன் உருக்கமாக வர்ணிக்கும்படி செய்கிறான். (''ஸ்வப்ன வாஸவதத்தம்'' 1-ஆம் அங்கம் 12-ஆம் சுலோகம்) மாதரைக் காண்பதிற் பிரம்மசாரிக்குள்ள கூச்சத்தையும் அவன் அவர்களைப் பாராமல் தவிர்ப்பதையும், 'ஸ்திரீகளும் இங்கே இருக்கிறார்களே' என்று அவன் கூவுவதனால் அறிக. பூர்வத்து இந்தியப் பிரம்மசாரிகள் எல்லோரையும் போல அந்தப் பிரம்மசாரியும் அவசியத்திற்கதிகமாக அங்கிருந்து காலங் கடத்த விரும்பவில்லை; உயர் பதவியிலுள்ள உத்தியோகஸ்தனாகிய பரபத்தியக்காரனோடு சிறிது நேரம் பேசிக்கொண்டிருப்போமென்றும் ஆசைப்படவில்லை, அக்காலத்து மாதர்களுள் அழகிற் சிறந்த அவ்விரு யுவதிகளை கண்ணெடுத்துப் பார்க்கவும் அவன் மனம் கொள்ளவில்லை; ஆனால், தான் தவச்சாலையுட் புகுவதற்கு அவர்கள் தடையாயிருந்தனரென மாத்திரம் தெரிவிக்கின்றான். உதயனனைப் பற்றிய கிளைச் சம்பவத்தால் தனக்கு உண்டான தீப்பயன் என்னவெனில் தன்னுடைய சாஸ்திராத்தியயனத்திற்கு விக்நமேற்பட்டதேயாகும், அதனால் அவ்வூரைவிட்டுத் தான் நீங்கவேண்டியதாயிற்றென்று அவன் குறிப்பிட்டுச் சொல்லுகிறான். இறந்துபோன ராணி அரசனுடைய அன்பில் இன்னும் உயிர்த்திருக்கின்றாளெனவும், வத்ஸராஜன் புறப்பட்டுப் போனபின் லாவாணகம் நாடுபோலில்லாமற் காடுபோலாயிற்றெனவும் கூறுவதனால், மானிடரியல்பை அவன் நன்கு ஆய்ந்தவனெனத் தெரிகின்றது.

காத்ரசேவகனுக்கும் தனிவியக்தியொன்று இருக்கின்றது. 'பத்ர வதியின் அங்குசத்தை அடகு வை'த்திருக்கிறேன், கழுத்து மாலையும் அடகு, மணியும் சவுக்கும் துவை' என ஒவ்வொன்றாக முறையே சொல்லிக்கொண்டு வந்து கடைசியிற் பத்திரவதியையும் பிணை வைத்திருக்கிறேனென்று அழகாகக் கதை சொல்லுகிறான். அர்த்தமில்லாமல் வாய்க்கு வந்தவாறு பிதற்றுகிறான், அஸல் குடிவெறியனைப் போல நடிக்கின்றான், குடிகாரன் பாடத்தக்க பலமான வெறிப் பாட்டு பாடுகிறான்; வாஸவதத்தையுடன் வத்ஸராஜன் ஓடிப் போனானென்று கேட்டவுடன் குரலும் கோலமும் சரேலென மாறி மகாசேனனுடைய உண்மைக் காவலனை நோக்கி, 'நான் குடிவெறியனல்ல, யௌகந்தராயணருடைய உளவாள், என் நண்பர்களை விளிப்பேன், அவர்கள் நாகசர்ப்பங்களைப் போலச் சீறி வருவார்கள் என்று குத்திச்சொல்லி போர்க்கறையான வீரம் மிக்க பாடல்களைப் பாடுகிறான். (''யௌகந்தராயண சபதங்கள்'' 4 ஆம் அங்கம், 2, 3, 4 - ஆம் சுலோகங்கள்) இவைகளையெல்லாம் பார்த்தால் அவன் 'பக்கா' ஒற்றன், நல்ல போர்வீரன் என்று தெரிகிறது. இவ்விரண்டு தன்மைகளும், ஒருங்கே பொருந்தியிருப்பது பெருஞ்சிறப்பென சென்ற மகா யுத்தத்திற்குப் பின்னும் இப்பொழுது நடக்கும் மகாயுத்தத்திற்குப் பின்னும், அரிய விசேஷமெனக் கொண்டாடப் பெறுவதாகும்.

ஹம்ஸகனும் தனி வியக்தியாகவே இருக்கின்றான். அவன் வத்ஸராஜனுக்கு உற்றசேவகன். யானைக்காட்டில் நிகழ்ந்த சம்பவங்களை அவன் உயிர்க்களையோடு உரைத்திருக்கிறான்; அதனால் அவனுடனிருந்து நாம் அவைகளைக் கண்கூடாக் காண்பதுபோல இருக்கின்றது, அவன் அடங்கி ஒடுங்கி நடக்கிறவனாகவுமில்லை, இழிவாகப் பணிந்து நடக்கிறவனாகவுமில்லை; ஆதலால், தமக்கு உதயனன் வர்த்தமானம் சொல்லியனுப்பியதற்குக் காரணம் அவர் தின்ற உப்புக்கு ஏற்றவாறு உழைக்கவில்லை, பெற்ற பெருமைக்கு ஏற்றவாறு பாடுபடவில்லை என்பதேயென்று அவர் சொல்லிய போது ஹம்ஸகன், 'அந்தக் காரணத்தினாலேயே இருக்கலாம்' என்று துணிந்து கூறுகின்றான். பதாதியாள் வந்து வத்ஸராஜனுக்குச் சொன்னானென்று யௌகந்தராயணர் ஊகித்தபோது, 'கண்திறந்தே வத்ஸராஜன் வலையில் வீழ்ந்தனனா?' என்று அவரை வினவுகிறான். தாழ்ந்த உத்தியோகஸ்தர்களுக்கு அவ்வளவு தாராளமான ஸ்வதந்திரம் கொடுக்காததனாலே இந்தியாவானது சீர்கெட்டு இழிநிலைமைக்கு வந்துளது.

துவாரபாலகியான விஜயைக்கும் சொந்த வியக்தியொன்று அளிக்கப்பட்டிருக்கின்றது. வத்ஸராஜன் சிறைப்பட்டானென்னும்

துக்கச் செய்தியை அவள் கேட்டவுடனே, அதைப்பற்றி மகாராணித் தாயாருக்கு அறிவிக்கும்படி அவளுக்குச் சொல்லியபோது, அவள் ஸூத்திர புருஷனைப்போல ஓடிப்போய்ச் சொல்லாமல், 'சரி' போய்ச் சொல்லுகிறேன், என் தௌர்பாக்கியம் எத்தன்மையது!' என்று சொல்லுகிறாள். இங்ஙனம் மானிட ஸ்வபாவத்திற்குரிய உணர்ச்சியைக் காட்டுகின்றாள். அதுபோலவே துக்கம் மீதூர்ந்து யௌகந்தராயணர் விஷயத்தை வெளியிடமாட்டாமல் தத்தளித்துத் தடுமாறி, 'அப்படித்தான்,' 'அப்படித்தான்' என்று சொல்லியபோது அவள் அவரை நோக்கி, 'சுவாமி, சொல்லுங்கள், சொல்லுங்கள்' என்று கேட்கிறாள். அவளும் அத்தனை பெரிய பிரதான மந்திரியுடன் தாராளமாக விவகரித்துக்கொண்டிருந்தாளே யொழிய வெறும் ஸூத்திரப் பிராயமாக வாசற்காக்கும் பணிப்பெண்ணாக இருக்கவில்லையென்று இதனால் தெரிகின்றது.

''வாஸவதத்தை''யில் வருகிற வாஸவதத்தையின் பணிப்பெண்களுக்கும் தனி வியக்திகள் இருக்கின்றன. அவர்கள் சுருசுருப்பாய் இருக்கிறார்கள், சரஸிகளாயிருக்கிறார்கள், காவியாலங்காரங்களிற் பிரியமுடையவர்களாயிருக்கிறார்கள். உதாரணமாக, அவர்களுளொருத்தி வாஸவதத்தையை மப்பினால் மூடப்பட்ட பிறைச்சந்திரனாகவும், உதயனனை கரும்புவில்லும் புஷ்பபாணமுமில்லாத மன்மதனாகவும் வருணித்துக் கூறுகின்றனள். தாதிகளைப் பற்றியும் ஒன்றும் சொல்லாதிருக்க முடியாது, வாஸவதத்தையின் மரணத்தைக் குறித்து உதயனன் பெருந்துயர் காட்டி உடனே பத்மாவதியை மணக்க மனங்கொண்டதைக் குறித்து வாஸவதத்தை அதிசயப்பட்டபோது அவளை நோக்கிப் பத்மாவதியின் தாதி, 'வேதசாஸ்திரங்களிற் கூறப்பட்ட பவித்திரமான தத்துவங்கள் பெரியாரின் மனத்திற் பதிந்துள்ளன, ஆகையால் அவர்கள் பெருவிபத்துகளினிடையிலேனும் ஆறுதலடைகிறார்கள்' என்று சொல்லுகிறாள். விஷயங்களை உள்ளபடி அறியும் நுண்ணறிவும், அவை நிகழ்ந்தபின் அறிவுக் கூர்மையும் அவளுக்கு இருக்கின்றன. 'உதயனன் ராஜகிருகத்திற்கு வேறு காரணமாக வந்தார், மகதத்தரசனே தம் மகளை விவாகம் செய்து கொள்ளும்படி அவரைக் கேட்டுக்கொண்டான்' என்று சொல்லி அவனைத் தேற்றுகிறாள். ஐசுவரியம், அழகு, பெருந்தன்மை ஆகியவெல்லாம் உதயனனிடம் ஒருங்கே பொருந்தியிருந்தமையின் மகதத்தரசன் அங்ஙனம் கேட்டுக்கொண்டார் என்கிறாள்.

வாஸவதத்தையின் தாதி பத்மாவதியின் தாதிக்குச் சிறிதும் பின்போனவளல்ல. இரண்டு பரபத்தியக்காரர்களையும் போல இரண்டு தாதிமார்களும் ஒரே இனவகையைச் சேர்ந்தவர்களே. உதயனன்

பெருந் துக்கம் பாராட்டுவதற்காக அவனை அதட்டி, வாஸவதத்தையின் படத்தை தற்பெருமையோடு ஒருவிதமான புருஷாகாரமும் பாராட்டிக்கொண்டு எடுத்துப்போய் பத்மாவதிக்குக் காட்டுகிறாள். இக்காலத்துத் தூதர்களுக்குள்ள முழுத்திறமையோடு, அங்காரவதி சொல்லியனுப்பிய வார்த்தையை உதயனனுக்குச் சொல்லுகிறாள். பிரதான நாடக பாத்திரங்களின்மீது பாஸகவி எவ்வளவு அபிமானம் வைத்திருந்தனனோ அவ்வளவு அபிமானம் இந்தத் தாதிகளின் மீதும் பணிப்பெண்களின் மீதும் வைத்திருந்தானென்பதில் ஐயமில்லை. இவனுடைய நாடகங்களின் அமைப்பில் பெரிய பாத்திரங்களைப் போலவே சிறிய பாத்திரங்களும் தத்தமக்குரிய காரியங்களை அழகுறச் செய்கிறார்கள்.

''ஸ்வப்ன வாஸவதத்தம்'' முதலாம் அங்கத்தில் வருகிற தவத்தியைப்பற்றி நமக்குச் சிறிதே புலப்படுகிறதாயினும் அவள் இனிமையான மாது. மாநிலத்தில் உயர்ந்தோர் அரசருமல்லர், போர் வீரருமல்லர், ஸாதுக்களும் ஸித்த புருஷர்களும் துறவிகளுமே என்பது இந்தியாவின் கொள்கை. ''துறவிக்கு வேந்தனும் துரும்பு'' என்னும் உண்மையை இந்தியா எப்பொழுதுங் கொண்டாடுகின்றது. இந்தியக் கொள்கையை காத்து ஆதரிப்பன் பாஸன். ஆனதனாலே இளவரசியாகிய பத்மாவதி தவச்சாலைக்கு வந்தபோது பேரூர் தெரியாத அந்தத் தவத்தி உட்கார்ந்தவாறே, மரியாதையாக எழுந்து நில்லாமல, வாவென்றழைக்கிறாள். பத்மாவதியோடு அவள், ஒரு ஸ்திரீ மற்றொரு ஸ்திரீயோடு பேசுவதுபோல, சரளமாகப் பேசுகிறாளேயல்லாமல் ராஜாத்திக்கும் சாமானிய ஸ்திரீக்கும் உள்ள ஏற்றத் தாழ்வைச் சிறிதும் பாராட்டவில்லை; அங்ஙனம் பாராட்டிப் பேசுவது கர்ண கடூரமாயிருக்கின்றது, மனுஷ்ய ஸ்வபாவத்தை அடியோடழித்து விடுகின்றது. தவச்சாலை என்பது வழிப்போக்கர் அனைவருக்கும் ஆதரவளிக்குமிடம், ஆதலால் பத்மாவதி அங்குத் தாராளமாக வரலாமென்று தவத்தி சொல்கின்றாள். இக்காலத்து மாதர்களோ அங்ஙனம் கூறியிருக்க மாட்டார்கள்; தவச்சாலை அரசனுக்கு அதீனமானது, அதற்குள் வந்து காலடியை வைத்து ராஜாத்தி அதனைப் பெருமைப் படுத்த வேண்டும் என்று இக்காலத்தவர்கள் சொல்லியிருப்பார்கள்; அந்தத் தவத்தியோ, பத்மாவதியை வழிப்போக்கர் களிலொருத்தியாக மதித்து உள்ளேவரச் சொல்லுகிறாள், புராதன இந்தியாவில் மானிட தன்மைக்குரிய கௌரவமில்லை, மானமும் தற்பெருமையும் இல்லை, குடியரசுக் கொள்கை இல்லை என்று நினைக்கிறவர்கள் இத்தவத்தியின் மனப்பாங்கை நினைத்து ஆழ்ந்தாலோசிப்பார்களாக! எல்லாருடைய க்ஷேமத்தையும் கருதிக்கொண்டிருக்கும் நல்லாள், அன்புடையாள் என அவளைக் கூறலாம். பத்மாவதியின் விவாகத்தைப் பற்றி

அன்புடன் விசாரிக்கிறாள், சீக்கிரத்தில் அவளுக்கு நல்ல கணவன் வாய்க்க வேண்டுமென்றும், வாஸவதத்தை தன் கணவனுடன் திரும்பக் கூடவேண்டுமென்றும் ஆசீர்வதிக்கின்றாள். கூர்ந்தறியும் நுண்ணறிவும் அவளுக்கு இருக்கின்றது. ஆவந்திகையென்னும் ஏழைப் பெண்ணாக உருமாறியிருப்பினும், அவள் முகத்தைப் பார்த்து அவள் ராஜஸ்திரீ யாக இருக்க வேண்டுமென்று ஊகித்துச் சொல்லுகிறாள்.

மானிடப் பிறவிகளுக்குத் தனித்தனி வியக்தியளித்ததோடு நில்லாமற் பாஸகவி விருக்ஷங்களுக்கும் தவச்சாலைகளுக்கும் கருவி களுக்கும் தனி வியக்தி அளிக்கின்றான். ராஜகிருகத்திற் கருகிலுள்ள தவச்சாலை தனியே வர்ணிக்கப்பட்டிருக்கின்றது. கோஷவதி என்னும் வீணை மிகச்சிறப்பாக வருணித்து துதிக்கப் பட்டிருக்கின்றது. (''யௌ கந்தராயண சபதங்கள்'' இரண்டாம் அங்கம் 12-ஆம் சுலோகத்திலும், ''ஸ்வப்ன வாஸவதத்தம்'' 6-ஆம் அங்கம் 1, 2, 3 - ஆம் சுலோகங் களையும் காண்க) அதனால் இற்றைநாள் நாடகங்களில் மானிட பாத்திரங்களுக்கு உள்ளதைக் காட்டிலும் அதற்கு மேன்மையான வியக்தி இருக்கின்றது. பாஸகவியினுடைய மாத்திரைக் கோலின் கைவரிசை இத்தன்மையதாகும். இவனுடைய நாடகங்களிலுள்ள பலவகையான இனிய பாத்திரங்களைப் பற்றி பாஸன் புகழ்ந்து பேசியிருப்பது அதிசயமாமோ!

சுபம்! சுபம்!! சுபம்!!!

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113.

### அண்மை வெளியீடுகள்

| | |
|---|---|
| தொல்காப்பியப் பொருளதிகாரம் ஆங்கில மொழிபெயர்ப்பு | 40.00 |
| சங்க இலக்கியம் கவிதையியல் நோக்கு சிந்தனைப் பின்புல மதிப்பீடு | 110.00 |
| நாடகமேடை நினைவுகள் | 160.00 |
| தமிழின் பா வடிவங்கள் | 35.00 |
| உலகத் தமிழாராய்ச்சி நிறுவன | |
| சுவடி விளக்க அட்டவணை (சித்த மருத்துவம்) | 75.00 |
| சுவடி விளக்க அட்டவணை (இலக்கியம்) | 70.00 |
| சுவடி விளக்க அட்டவணை (மெய்யியல் - நா.புறவியல்) | 70.00 |
| அரசினர் கீழ்த்திசைச்சுவடி நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி - I | 110.00 |
| ஆளும் தமிழ் | 28.00 |
| பொருள் புதிது | 35.00 |
| புதிய அமைச்சகம் புரிந்த பணிகள் | 10.00 |
| சின்னணைஞ்சான் கதை | 75.00 |
| தொல்காப்பியம் இலக்கியக் கோட்பாடுகள் | 110.00 |
| இயற்கை மொழியாய்வு-தமிழ் | 75.00 |
| சூடாமணி நிகண்டு: ஒரு சொல் பல்பொருள் விளக்கம் | 65.00 |
| தமிழ் நாடகமேடை முன்னோடிகள் | 40.00 |
| இராசேந்திரன் (நாடகம்) (ம.ப.) | 50.00 |
| தமிழ் வள்ளல் பாண்டித்துரையார் | 25.00 |
| பாணினியின் அஷ்டாத்தியாயி-தமிழாக்கம் - பகுதி 1 | 95.00 |
| பாணினியின் அஷ்டாத்தியாயி-தமிழாக்கம் - பகுதி 2 | 60.00 |
| பாணினியின் அஷ்டாத்தியாயி-தமிழாக்கம் - பகுதி 3 | 90.00 |
| தேவநேயப் பாவாணரின் மொழியியல் - வரலாற்றுக் கொள்கை (அ.சொ.) | 35.00 |
| தமிழ்த் தூது (ம.ப.) | 20.00 |
| யாப்பருங்கலம் (ம.ப.) | 170.00 |
| முல்லை | 25.00 |
| பரணர் | 85.00 |
| திராவிட மொழியின் மூவிடப் பெயர் (ம.ப.) | 40.00 |
| பாஸ மகாகவியின் இரட்டை நாடகங்கள் | 36.00 |
| Persona in Tolkappiyam | 50.00 |
| Studies in Tamil Prosody and Poetics | 45.00 |
| Tamil India | 40.00 |

---

**பிரதிமா ஸ்வப்ன வாசவதத்தம் ரூ. 55.00**